2870

T.N.L.A. Debates

Official Report

Vol IXI

No 3

3, July 1985


D 1
V211,31 N85
N85.11.3il
136412

597/86

தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

2870

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, 1985 ஜூலை 3—தொகுதி XI-எண். 3.
Wednesday, the 3rd July 1985—Volume XI-No. 3.


சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600009
Legislative Assembly Departmen., Fort St. George,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

136412
சென்னை-600 008.

## உள்ளடக்கம்.

3—7—1985


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 365—403 |
| 2. தகவல் கோரல் : | |
| கோட்டையில் பறக்கின்ற தேசியக் கொடி குறித்து | 403—405 |
| 3. கவன ஈர்ப்புகள் : | |
| (அ) ஊராட்சி ஒன்றிய மகப்பேறு உதவியாளர்கள் துணைச் செவிலியர்கள் உண்ணா நோன்பு போராட்டம் நடத்துவது | 405—410 |
| (ஆ) பவானிசாகர் அணையின் நீர் பிடிப்புப் பகுதிக்கு மேலே உள்ள அரசு நிலங்களில் சாகுபடி செய்கிற விவசாயிகள் வெளியேற்றப்படுவது | 410—413 |
| 4. அறிக்கை அளித்தல் : | |
| பொது நிறுவனங்கள் குழு | 413 |
| 5. வரவு-செலவுத் திட்டம், 1985–86, வாக்கெடுப்பு—தொடர்ச்சி. | 414—503 |
| கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை மற்றும் | |
| கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்—தொடர்ச்சி. | |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 477—502 |
| திரு. செ. செம்மலை | 414—423 |
| திரு. அ. ரகுமான்கான் | 424—439 |
| திரு. கூடலூர் இ. வி. வேலு | 440—450 |
| *திரு. கோ. வீரய்யன் | 451—459 |
| திரு. டி. எம். வெங்கடாசலம் | 459—461 |
| *திருமதி டி. யசோதா | 462—477 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 503—504 |


டி2 A 197—1

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1985, ஜூலை 3, புதன்கிழமை.**

**ஆனி 19, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு 2016**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றம் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு''.

செயலுக்கு உரிய கருவியும், ஏற்ற காலமும், செய்யும் வகையும், செய்யப்படும் அரிய செயலும் சிறப்படையச் செய்ய வல்லவன் அமைச்சன்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டப் பணிகள்.

*474*—

(*வினா எண் 198)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு (R.L.E.G.P.) எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) 1985–86 ஆவது ஆண்டிற்கு எடுத்துக் கொள்ளும் திட்டப் பணிகள் முடிவு செய்யப்பட்டுவிட்டனவா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) தலைவர் அவர்களே, 1984–85ல் ரூ. 321.072 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இல்லை.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 1985–86வது ஆண்டுக்கு ஆர்.எல்.ஈ.ஜி.பி. கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ்

மத்திய அரசு நிதி ஒதுக்கியிருக்கிறதா ? அல்லது இனிமேல்தான் ஒதுக்கப்போகிறதா ? அப்படியானால் எவ்வளவு நிதி தமிழகத்திற்கும் கோவை மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஒதுக்கிய தொகை ஏறத்தாழ 53.40 கோடியாகும். இந்த ஆண்டு சுமார் 41 கோடி ரூபாய்தான் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அது போதாது என்று சொல்லி மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். இன்னும் முடிவான பதில் எதுவும் வரவில்லை. வந்தபிறகு தான் மாவட்டத்திற்கு இவ்வளவு என்று பிரிக்க வேண்டும்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் பணிகளை எடுத்துக் கொள்ளுகிறபோது, மலை வாழ் பகுதிகளின் மேம்பாடு திட்டத்திற்கும், நலிந்த மக்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்குமான வேலை திட்டங்களை எடுத்துக் கொள்ளுகிறபோது, ஒரு ஒன்றியத்திற்கு இவ்வளவு என்று ஒரே மாதிரியாக, ஒன்றிய வாரியாக ஒதுக்காமல், அந்தந்த ஒன்றியங்களின் தேவைக்கேற்ப, அதிகப் பணம் ஒதுக்க அரசு பரிசீலனை செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இதற்கு என்று ஒரு சில விதிமுறைகளை வகுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் வேளாண்மை பொறியியல் துறை, கசிவு நீர்க்குட்டைகள் மற்றும் தடுப்பணைகள் கட்டும் பணியில் ஈடுபடுகிறது. சிறு பாசனத் துறை, சிறு பாசன வேலைகளை மேற்கொள்ளுகிறது. நெடுஞ்சாலை ஊரக பணித்துறை, சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கும் பணியில் ஈடுபடுகிறது. ஊரக வளர்ச்சித் துறை, கூட்டு வீடுகள் கட்டும் பணியில்—தாழ்த்தப்பட்ட மக்களுக்காக — ஈடுபட்டிருக்கிறது. இது தவிர வேறு பணிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால், மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவேண்டும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு பணம் குறைந்திருக்கிறது என்றும் அது குறித்து மத்திய அரசாங்கத்திற்கு அதிகம் கேட்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் வேளாண்மைத் துறை கசிவு நீர்க் குட்டைகளைக் கட்டி வருவது பற்றியும் சொன்னார்கள். அது உண்மையும் கூட. சில இடங்களில் கால்வாய் போன்றவைகளைக் செப்பனிடும்போது—உதாரணத்திற்கு பாலாறு, புரந்தலாறு திட்டத்தின் கீழே லைனிங் போடுகிற நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள் அரிசன மக்கள்,





அருந்ததியர்கள் வகுப்பைச் சேர்ந்த மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையிலே உள்ள மக்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக் கூடிய முறையிலே இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு செய்து வந்த திட்டத்திற்கே இன்னும் 17 கோடி ரூபாய் நமக்குத் தேவைப்படுகிறது. இந்த ஆண்டு ஒதுக்கீடு 41 கோடி ரூபாய் என்று நான் தவறுதலாகச் சொல்லிவிட்டேன். இந்த ஆண்டு ஒதுக்கீடு 34.57 கோடி தான். அது சென்ற ஆண்டு மிச்சமாக இருக்கும் திட்டத்திற்கே பாதி தேவைப்படும். ஆகவே இந்த ஆண்டில் புதிய திட்டங்கள் எதுவும் எடுக்க முடியாது போய்விடும் நிலை இருக்கிறது என்று சொல்லி 15 நாட்களுக்கு முன்பு இங்கே வந்திருந்த, இந்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சந்துலால் சந்தர்க்கர் அவர்களிடம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களிடம் சென்ற ஆண்டு பணிகளுக்கே இன்னும் 17 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அந்த நிலையில் இந்த ஆண்டு புதிய வேலைகளையும் எடுக்க முடியாது இந்த 37 கோடி ரூபாயில். ஆகவே அதிக நிதி வேண்டும் என்று விளக்கி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர் தமிழக அரசின் பணிகளை பாராட்டிவிட்டு, டெல்லிக்கு சென்று பதில் எழுதுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கிருந்து இன்னும் பதில் வரவில்லை. பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இடையில் அரசு கடிதம் எழுதுவதாகவும் இருக்கிறது.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஒதுக்கீடு 41 கோடி ரூபாய் என்றால், எந்தெந்தப் புதிய பணிகளுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு, திட்டப்பணிகளை மேற்கொள்ளும்போது, நிதி பற்றாக்குறை உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு, அவைகளின் தேவைக்கேற்றவாறு நிதியைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 53.40 கோடி ரூபாய் கொடுத்தார்கள். இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு 34.57 கோடி ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு எடுத்துக் கொண்ட வேலைகளை முடிப்பதற்கே இன்னும் கூடுதலாக 17 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. புதிய வேலைகளை எடுப்பது என்பது இந்த நிலையில் இயலாதது. சென்ற ஆண்டு வேலைகளை முடிப்பதற்கே பணம் தேவையாக இருக்கிறது என்று மத்திய அரசுக்கு விளக்கி கடிதம் எழுதியிருக்கிறோம். அத்தோடு தமிழகத்திற்கு வருகை தந்த மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சந்துலால் சந்தர்க்கர் அவர்களிடமும், நிலைமையை விளக்கிச் சொல்லியிருக்கிறோம். தமிழக அரசின் சாதனைகளை பாராட்டியதோடு, டெல்லிக்குச் சென்று அது குறித்து ஆவன செய்வதாக உறுதி

அளித்துச் சென்றிருக்கிறார்கள். இதை நான் முன்பே குறிப்பிட்டேன். அங்கிருந்து பதில் வந்ததற்குப் பிறகுதான், மாவட்டங்களுக்கும், பிறகு ஒன்றியங்களுக்கும் எவ்வளவு பிரிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. பொ. உத்திராபதி :** தலைவர் அவர்களே, இந்த கிராமப்புற வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின் கீழ், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் 5 கோடி ரூபாய் அளவில் ரோடுகள் அமைக்கும் வேலைகள் எல்லாம் எடுக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு மத்திய சர்க்கார் குறைவாக 37 கோடி ரூபாய்தான் கொடுப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். ஆகவே மத்திய சர்க்கார் போன ஆண்டு கொடுத்ததை விட இந்த ஆண்டு குறைக்கிறார்களே, இதை அமைச்சர் அவர்கள் நேரிடையாக டெல்லிக்குச் சென்று அந்தத் தொகையைப் பெறுவதற்கு முயற்சிப்பார்களா? இன்னொன்று, இந்த நிதியை ஒதுக்குகிற போது மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் வேலையை செய்து முடிக்க வேண்டுமென்று கடைசி நேரத்தில் நிதியைக் கொடுத்து நிர்ப்பந்தம் செய்கிறபோது, பல நேரங்களில் நிதியைத் திருப்பியனுப்புகிற பழக்கம் இருக்கிறது. குறிப்பாக காவிரியில் தண்ணீர் வந்தால் கூட குறிப்பிட்டநேரத்தில் வேலை முடியாமல் இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு கால அளவை நிர்ணயிக்காமல் நிதியை கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இது காலாவதியாகிற தொகை அல்ல. எப்போதும் வேலை முடிக்கக் கூடிய தொகையாகும். சென்ற ஆண்டு 53·40 கோடி அளிக்கப்பட்டு, இந்த ஆண்டு 34·57 கோடி ரூபாய் தான் அளிக்கப்படும் என்று தெரிவித் திருக்கிறார்கள். மத்திய அமைச்சர் அவர்கள் சென்னை வந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்தார்கள். முதலமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சரிடம் இந்தக் குறையை எடுத்துச் சொல்லி, சிறப்பாக வேலைகளைச் செய்து முடித்திருக்கிற தமிழகத்திற்கு கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும் என்றும் இந்த ஆண்டு புதிய வேலைகள் எதுவும் எடுக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் டெல்லி சென்று இதனை பரிசீலிப்பதாக சொல்லி இருக்கிறார்கள். தேவையென்றால் டெல்லி சென்று வருவதில் ஆட்சேபணை இல்லை. இப்போது கடிதம் எழுதுவதாக இருக்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு எடுக்கப்பட்ட வேலைகள் சாலை அபிவிருத்தி வேலைகள் அல்லது சாலைகள் அமைப்பது போன்றவை ஆகும். அவைகளை பஞ்சாயத்து யூனியனில் செய்ய முடியவில்லை. ஹைவேஸ் துறையில் தான் செய்யப்பட்டது. இந்தப் பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு போதுமான பணம் இல்லாமல் இருக்கிற காரணத்தால் ஹைவேஸ் டிபார்ட்மெண்டில்





எடுத்துச் செய்வதில் காலதாமதம் ஆகிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன்கள் சில வேலைகளை, சாலைகள் அபிவிருத்தி அல்லது சாலை அமைத்தல் போன்ற வேலைகளை செய்வதற்கு அனுமதியளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இது கொள்கை பிரச்னை. ஏற்கனவே, நெடுஞ்சாலைத் துறை தான் சாலைகள் பராமரிக்கிறப் பணிகளை செய்ய வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தான் முடிவு எடுக்க வேண்டும்.

475—(*வினா எண் 1599)—**திரு. டி. ஆர். வேங்கடரமணன் மற்றும் திரு. மா. கதிர்வேலு :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்தில் 1984-85-ல் எவ்வளவு ரூபாய் செலவிடப்பட்டது?

(ஆ) என்ன இனங்களில் அவை செலவழிக்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே (அ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்தில் 1984–85 ம் ஆண்டு ரூ. 297·82 இலட்சம் செலவிடப்பட்டது.

(ஆ) சமூகக் காடு வளர்ப்பு, சிறுபாசனம், குடிநீர் வசதிகள் கிராமச் சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள், வீட்டுத் தொகுதிகள் சாக்கடைகள், குழந்தைகள் காப்பகங்கள், இன்னும் பிற பணிகளில் செலவழிக்கப்பட்டன.

### பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகள்.

476—(*வினா எண் 1899)—**திரு. மு. தங்கமணி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வானொலி மூலம் ஒலிபரப்பும் கல்வி ஒலிபரப்பை கேட்பதற்கு வசதியாக ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் வானொலி பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. மு. தங்கமணி :** தலைவர் அவர்களே, வானொலி மூலம் கல்வி ஒலிபரப்பை கேட்பதற்கு ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 3

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அரசிடம் அப்படி ஒரு திட்டமில்லை. ஆனால் இப்போது அந்தப் பள்ளிகளில் சீரமைப்பு மாநாடு மூலமாக பல்லாயிரக்கணக்கான பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வானொலிப் பெட்டிகள் இல்லாத 4,208 ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளுக்கு 4,208 ட்ரான்சிஸ்டர்களை 1981-82 ம் ஆண்டில் 'யூனிசெப்' நிறுவனம் மூலமாக இலவசமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 9-10)

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானொலி மூலம் கல்வியை ஒலிபரப்பும் திட்டம் ஒரு நல்ல திட்டம். இருந்தாலும் இந்தக் கல்வி ஒலிபரப்பு, பாடத்திட்டத்தோடு கூடிய ஒரு கல்வி ஒலிபரப்பாக இருந்தால்தான் அது மாணவர்களுக்கு பயன் அளிக்கக்கூடியதாக இருக்கும். எனவே அப்படி வானொலி மூலம் கல்வி ஒலிபரப்புகிறபோது, கல்வித் துறையை கலந்துகொண்டு, அந்த லிபரப்பு நிகழ்ச்சிகளைத் தயாரிக்கிறார்களா என்று அறிவதோடு, அப்படி இல்லை என்றால், அப்படிப்பட்ட முயற்சியை கல்வித்துறை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித்துறையை கலந்து கொண்டுதான் பல்வேறு நிகழ்ச்சிகளை அவர்கள் தயாரிக்கிறார்கள். மாணவர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரியர்களுக்கும் கூட தேவையான பாடங்களை நடத்துவதற்கு வானொலி உதவி செய்து வருகிறது. நம்முடைய தமிழ்நாடு கல்வி பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம் மைசூரில் உள்ள மொழியியல் நிறுவனத்தோடு சேர்ந்து தமிழ் ஆசிரியர்களுக்காக, தொடக்கப்பள்ளியில் தமிழைச் சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களுக்காக சிறப்புப் பயிற்சி திட்டத்தை வானொலி மூலமாக நடத்தி வருகிறார்கள். இப்போது திறந்த வெளி பல்கலைக் கழகத்தின் மூலமாக கல்வி பயிலுகின்றவர்களுக்கும் வானொலி பயன்படுத்தப்பட்டு வருகிறது. பல்கலைக் கழகம் தன்னுடைய திறந்த வெளிப் பிரிவுக்கும் இந்த வானொலி மற்றும் டி வி-யைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே பெருமளவிற்கு இந்த வானொலியைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். 1-ஆம் தேதிதான் இந்த நிகழ்ச்சிகள் துவங்கியிருக்கின்றன.

**திரு. ஆர். தியாகராஜன் :** தலைவர் அவர்களே, வானொலியில் கல்வி சொல்லிக் கொடுப்பதை விட, தற்போது டி. வி-யின் விலை மிகவும் குறைந்தவிலையில் இருப்பதால்—டி. வி.-மூலமாகச் சொல்லிக் கொடுத்தால், அந்தப் படத்தில் இருக்கக் கூடியவர்கள் அதைச் சொல்லிக் கொடுக்கும்போது, பாடத்தைக் கேட்கிறவர்களுக்கும் அது ஆர்வத்தை உண்டாக்கும். எனவே அப்படிப்பட்ட திட்டம் அரசுக்கு ஏதாவது உண்டா?



1985 ஜூலை 3]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, டி.வி.யை நாம் பயன்படுத்தி வருகிறோம்.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மாறி வரும் இளைய சமுதாயத்தில் கல்வி ஒலி பரப்பில் குறிப்பாக இளைய சமுதாயம் இந்தியைக் கற்றுக்கொள்ள ஆசைப்படுகிறது. 'கானா காயியே' என்று சொல்லக்கூடிய வார்த்தையையும், மற்றும் 'ஆப்கா நாம்' என்று சொல்லுகின்ற கேள்விகளைக் கேட்டு, அதற்குப் பதிலையும் அவர்கள் சொல்லுகின்ற அளவிற்கு இன்றைக்கு மாறியிருக்கிறார்கள். எனவே கல்வி ஒலிபரப்பில் இந்தி மொழியை ஒலி பரப்ப அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அந்தப் பொறுப்பை தமிழக அரசு ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானொலி மூலம் கல்வி ஒலிபரப்பு என்பது குறிப்பிட்ட நேரத்திலேதான் அதைக் கேட்பதற்கு வசதியாக இருக்கும். எனவே அந்தப் பேச்சுக்களை டேப் எடுத்து, மற்றும் அறிஞர் பெருமக்களுடைய பேச்சுக்களை டேப் எடுத்து, அதன் மூலமாக மாணவர்களுக்குக் கல்வியை போதிக்கிற வசதியைச் செய்து தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பள்ளிகளில் இப்போது டேப் ரிக்கார்டர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நாம் சொல்லியிருக்கிறோம். இதுபோன்ற முக்கியமான நிகழ்ச்சிகளை டேப் செய்து பின்னால் போட்டுக் காண்பிக்குமாறு நாம் ஏற்கனவே அவர்களிடம் சொல்லியிருக்கிறோம்.

**ஆலந்தூர் பகுதியில் தொழிற் பயிற்சிக் கல்லூரி.**

*477—(* வினா எண் 1917)*—**திரு. ம. ஆபிரகாம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் பகுதியில் அரசினர் தொழிற்பயிற்சிக் கல்லூரி (பாலிடெக்னிக்) அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. ம. ஆபிரகாம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதி சென்னையை ஒட்டியிருக்கிற ஒரு தொகுதியாகும். மிக வேகமாக வளர்ந்து வருகிற ஒரு பகுதியாக இருந்து வருகிறது. மக்கள் பெருக்கம் அதிகமாக உள்ள அங்கு, சென்னை மாநகரத்திற்கு வந்து போவதற்கு பேருந்துகளுக்கும் நெருக்கடி ஏற்படுகிறது. எனவே இப்படி

வேகமாக வளர்ந்து வருகிற இந்த நகர்ப் புறத்திலே உள்ள மக்களின் குறையைப் போக்குகின்ற வகையில், இதுபோன்ற பாலிடெக்னிக்குகளை அமைக்க அரசு இனி மேலாவது ஒரு முயற்சியை எடுக்குமா ? என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூரிலே திறக்க அரசிடம் இப்போது திட்டம் இல்லை. அதோடு தமிழகத்திலே வேறு எங்கேயும் அரசின் சார்பிலே திறப்பதாகவும் இல்லை. தனியார்கள் யாராவது முன் வந்தால், அதைப் பொறுத்து பரிசீலனை செய்யலாம்.

## தனி மின் அணுவியல் பாடம்.

478—(* வினா எண் 1573)—திரு. சா. துரைசாமி மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிலையங்களில் 'தனி மின் அணுவியல்' பாடத்தை ஏற்படுத்த அரசு ஆய்வு செய்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மின்னணுவியல் பாடம் (Electronics) பொறியியற் கல்லூரிகளில் பட்டப் படிப்பு அளவிலும், பாலிடெக்னிக்குகளில் டிப்ளமோ அளவிலும் நடத்தப்பட்டு வருகிறது. இது தவிர மேநிலைப் பள்ளி தொழிற் பிரிவில் வீட்டு மின் அணு சாதனங்கள் பராமரித்தலும் பேணுதலும் என்ற பாடமும், வானொலி, தொலைக் காட்சி பழுது பார்த்தலும் பராமரித்தலும் என்ற பாடமும் வைக்கப்பட்டுள்ளன. மின் அணுவியல் பாடத்தை மேநிலை வகுப்பில் விருப்பப் பாடங்களில் ஒன்றாக வைக்கலாமா என்பது குறித்தும் அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தொழில் கல்வியை வலியுறுத்தி பாட திட்டத்தில் ஒரு பாடமாக சேர்த்து இருக்கிறார்கள். வளர்ந்து வருகின்ற இந்த விஞ்ஞான யுகத்தில் எல்லோரும் பயன்படுத்துகின்ற எலக்ட்ரானிக்ஸ் மற்றும் அது சம்பந்தப்பட்ட பொருட்களின் தன்மையை உணர்ந்து வேலை வாய்ப்பை ஏற்படுத்த மற்ற துறைகளில் படித்து வருகின்ற மாணவர் சமுதாயம் அந்த நிலையில் முன்னேறக்கூடிய வகையில் முன்பு வைத்து இருந்தார்களே விருப்பப் பாடம், அந்த நிலையில் 10-வது வகுப்பிலிருந்து இந்த தனி மின் அணுவியல் திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்பதையும் அதே நேரத்தில் இன்றைக்கு கல்லூரிகளில் கூட அந்த நிலை இல்லாமல் இருக்கிறது. கல்லூரிகளில் கூட இந்த தனி மின் அணுவியல் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா எனவும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-வது 12-வது வகுப்பில் தொழில் கல்வி பிரிவில் எலக்ட்ரானிக்ஸ் பாடம் சம்பந்தப்பட்ட தொழில் கல்வி பயிற்சியை நாம் தந்து கொண்டு இருக்கிறோம். அதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கிறது. அதற்கு மேலாக 10-வது, 9-வது, 8-வது வகுப்புகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாழ்க்கை கல்வித் திட்டத்தில் இது போன்ற இது சம்பந்தமான பயிற்சியை தருவதற்கு பல்வேறு பள்ளிகளும் முயற்சிகளை மேற் கொள்ளலாம். அதிலே எந்த விதமான தடையும் இல்லை. அதற்கு அரசு நிச்சயமாக ஆதரவு தரும்.

கல்லூரியைப் பொறுத்த வரையில் இது பல்கலைக் கழகத்தின் பொறுப்பு ஆகும். கல்லூரிகளில் இருக்கின்ற பாட பிரிவுகளில் எலக்ட்ரானிக்ஸ் திட்டத்தை கொண்டு வர முடியுமா ? அதற்கான சாத்திய கூறுகள் இருக்கிறதா ? என்பதைப் பற்றி நாம் பல்கலைக் கழகத்திடம் கேட்டு இருக்கிறோம். அதைப் பற்றி கருத்துக்களை பெற்றதற்குப் பிறகு பல்கலைக் கழகங்களுக்கு இது போன்ற வேலை வாய்ப்புள்ள தொழில் சம்பந்தப்பட்ட பிரிவுகளையும் கலைக் கல்லூரிகளில் ஏதாவது ஒன்றிரண்டில் இதை ஆரம்பிக்க முடியுமா என்பதைப் பற்றியும் நாம் யோசனை சொல்லிக் கொண்டு இருக்கிறோம். சொல்லவும் இருக்கிறோம். அப்படி அது வெற்றி பெறுமானால் கலைக் கலலூரிகளில் எலக்ட்ரானிக்ஸ் பிரிவு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

திரு சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. இந்த பிளஸ் 1, பிளஸ் 2, படிப்பில் இந்த தனி மின் அணுவியல் திட்டம் நடப்பு நிதி ஆண்டில் பாட திட்டமாக சேர்க்கப் படுமா ? அல்லது அது இன்னும் பரிசீலனையில் இருக்கிறதா ? நடப்பு நிதி ஆண்டில் இந்தத் திட்டத்தை சேர்த்தால் மாணவர்களுக்கு அது ஒரு சரியான பலனாக இருக்கும் என்று கருதி நடப்பு நிதி ஆண்டிலேயே இதை பாட திட்டத்தில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் பிரிவில் இது ஏற்கெனவே பாடமாக வைக்கப்பட்டு இருக்கிறது. அது பல பள்ளிகளில் இருக்கிறது. நிறைய பள்ளிகளில் வைக்கலாம் அதற்கு எந்த விதமான தடையும் இல்லை. அந்த நிர்வாகமும், தலைமை ஆசிரியர்களும் இதில் ஆர்வம் எடுத்து இதைச் செயல் படுத்தலாம்.

இப்போது பரிசீலனையில் இருப்பது, 4 விருப்பப் பாடங்களில் ஒரு விருப்பப் பாடம் தொழில் கல்வி சம்பந்தப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது. அந்தக் கருத்தை நாம் இப்போது சொல்லி சென்ற ஆண்டில் இருந்து கம்யூட்டர் சம்பந்தப்பட்ட ஒரு பாடத்தை பல பள்ளிகளில் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த கம்யூட்டர் சையன்ஸ் நடத்த முடியாது அல்லது வேறு

ஏதாவது திட்டம் நடத்த முடியும் என்று வருகிற பள்ளிகளில் நாம் இந்தஎலக்ட்ரானிக்ஸை வைக்கலாம் என்ற யோசனையை சொல் லிக்கொண்டு இருக்கிறோம். அது குறித்து நாம் பரிசீலனைச் செய்து கொண்டு இருக்கிறோம். அது இந்த ஆண்டு நிறைவேறும் என்று நான் நம்புகிறேன்.

**திரு. க. இரா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில் இந்த எலக்ட்ரானிக்ஸ் பாடம் நடத்துவதற்கு ஆசியர்களை நியமிக்கிறபோது அதில் பார்ட் டைம் ஆசிரியர்களை நியமிக்க இருப்பதாக அறிகிறேன். அவர்களுடைய சம்பள விகிதங்கள் என்ன ? நிரந்தரமான ஆசிரியர்களை நியமிக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர ஆசிரியர்களுக்கு 150 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. சென்ற ஆண்டில் இருந்து அதை 300 ரூபாயாக உயர்த்த முடிவு செய்து அவ்வாறு தரப்படுகிறது. பகுதி நேர ஆசிரியர்களைப் போடுவதுதான் நல்லது. காரணம் நாம் இந்தத் தொழில் கல்வி பிரிவுகளை நடத்தும்போது இது தேவையில்லை, வேறு ஏதாவது நடத்த வேண்டும் என்று நினைத்தால் கூட நடத்துவதற்கு அது சாத்தியமாக இருக்கும். அது மட்டும் அல்ல, தொழிலில் ஈடுபட்டு இருக்கிறவர்களே தொழில் கல்வி தருகிறார்கள் என்பதுதான் உயர்ந்த வகையான தொழில் கல்விப் பயிற்சியாக இருக்க முடியும். ஆகவே, நிரந்தர மான ஆசிரியர்களைப் போடுவதைவிட இது நல்லது என்று நாம் கருதுகிறோம். நடந்து கொண்டு இருக்கிற தொழிலோடு தொடர்பு இருப்பதற்கும் இது வாய்ப்பாக இருக்கிறது. ஆகவே தான் நாம் பகுதி நேர ஆசிரியர்களை அதிகமாக ஊக்குவித்து வருகிறோம். அது நடைமுறையில் இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

(முற்பகல் 9—20)

**திரு. அ. பிரணவநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளி களாக உயர்த்தப்பட்ட பல பள்ளிகளில் இதுவரை முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் யாருமே நியமிக்கப்படாமல் மாணவர்கள் படிப்பதற்கு முடியாமல் விழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரைக்கும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் போடப்பட்டிருப்பதாகவும், பாடம் சொல்லித் தந்து கொண்டிருப்பதாகவும்தான் தெரிய வருகிறது. அப்படி ஏதாவது ஒரு குறிப்பிட்ட பள்ளியில் ஆசிரியர் இல்லை என்றால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.



**திரு. மு. பாண்டுரங்கன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான் நாடு மின் அணுவியலில் மிகச் சிறந்து விளங்குவதாகத் தெரிகிறது. அந்த அளவு படிப்பை தமிழகத்தி லுள்ள மாணவர்களுக்கு எல்லாம் சொல்லிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஆசை எல்லோருக்கும் இருக்கிறது. அந்த ஆசை நிறைவேறுவதற்காகத்தான் இப்போது சிறுகச் சிறுக, ஒவ்வொரு நிலையிலேயும் அத்தகைய பாடங்களை நாம் புகுத்தி வருகிறோம்.

**திரு. மா. மணிமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் கற்பித்துக் கொண்டிருக்கின்ற பகுதி நேர ஆசிரியர்கள் பல ஆண்டுக்காலமாக, தங்களுடைய வேலை நிரந்தரம் இல்லாமல் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு சர்வீஸ் ஆகிவிட்டிருக்கிறதே தவிர, ஊதிய உயர்வோ, பென்ஷன், கிராஜுவிட்டி வசதி இல்லாமல் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். பகுதி நேரம் என்பதுகூட, காலையிலிருந்து மாலை வரை பள்ளி இருக்கவேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து, பகுதிநேர ஆசிரியர்களை முழுநேர ஆசிரியர் களாக்கி, ஊதியத்தைச் சீர்செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் ஆசிரியர்களுடைய நன்மையை மட்டும்தான் பார்க்கிறோமே தவிர, மாணவர்களின் நலனைப் பற்றியும் பார்க்கவேண்டும். மாணவர்களின் நலனைக் கருதித்தான் பகுதிநேர ஆசிரியர்கள் தேவை என்று கருதிகொண்டு வந்திருக் கிறோம். நிரந்தர ஆசிரியர்களைப் போட முடியாது என்ற காரணத்தினால் அல்ல. பகுதிநேர ஆசிரியர்களைப் போடுவ தற்குக் காரணம், தொழிற்சாலைகளிலே பணி புரிகின்றவர்கள் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் சொல்லித் தருவதன் மூலம் கிடைக்கிற தரமான பயிற்சியும், அறிவும் நிரந்தரமான ஆசிரியர்களின் மூலம் நிச்சயம் கிடைக்காது. அந்த வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பது ஒரு காரணம். இன்னொன்று, கிராமப்புறங்களிலேயும், மற்ற இடங்களிலேயும் இருக்கின்றவர்கள் ஒரு தொழிற் கல்விப் பிரிவை ஆரம்பிக்கிறார் கள். மாணவர்கள் வரவில்லை என்றால், நிரந்தரமான ஆசிரியர் களை நாம்தான் வைத்துகாப்பாற்றிக் கொண்டு இருக்க வேண்டும். தவிர, மாணவர்களும் அதில் சேர முடியாத நிலை இருக்கும். தொழில் கல்வியின் வேறு பிரிவைக்கூட ஆரம்பிக்க முடியாத நிலையும் இருக்கும். இதுபோல், வீணான சிரமங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இந்த இரண்டு காரணங்களினால் தான் பகுதிநேர ஆசிரியர்கள் தேவை என்று கருதி வைத்திருக் கிறோமே தவிர, நிரந்தரமான ஆசிரியர்களை போடக்கூடாது என்பது அல்ல.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்தில் எம்.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயன்ஸ் படித்து முடித்துவிட்டு, வேலை இல்லாத பட்டதாரிகள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் ? பி. இ. எலக்ட்ரானிக்ஸ் படித்து முடித்து விட்டு எத்தனை பட்டதாரிகள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது தனியாக வேலைவாய்ப்பு பற்றிய அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வி.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டிலே ஏராளமான அளவிலே தொழில் நுட்பக் கல்லூரிகள் துவக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், பல கல்லூரிகளில், தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற சிறந்த ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினாலே அதிலே பயிலுகின்ற மாணவர்களுக்குத் தரமான பயிற்சி கிடைப்பது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட கல்லூரிகளைக் கண்டுபிடித்து தொழில் நுட்பப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களை நியமிக்கும் வற்புறுத்தலை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது குறித்துத் தொழில் கல்வி இயக்குநர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். குழுக்கள் சென்று பார்வையிடுகின்றன. அத்தகைய குறைபாடுகளைக் களைய வேண்டும் என்று சொல்லி வருகிறார்கள்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்தில் பெரும்பாலான பள்ளிகளில் சயன்ஸ் போன்ற பாடத்திட்டங்களுக்குத் தேவையான உபகரணங்கள் இல்லாமலும், அதற்கான அமைப்புள்ள கட்டிடங்களும் இல்லாமலும் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? இன்றைக்கு அதனால் மாணவர்களுக்கு வெகுவாக அத்தகைய படிப்பு பாதிக்கப்படுகின்றது என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி இருந்தும்கூட, சயன்ஸ் ஹால் போன்றவைகளைக் கட்டி, உபகரணங்களை அளித்து, அந்தப் பாடத் திட்டங்களை நல்ல முறையிலே மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பதற்கு அரசு வழிவகை காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மேல் நிலைக் கல்வியைக் கொண்டு வந்ததே மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சியில்தான். அதைக் கொண்டு வந்த பிறகு, ஒவ்வொரு பள்ளியிலேயும், பரிசோதனைச் சாலை இருக்கவேண்டும் என்ற ஒரு திட்டத்தை நிறைவேற்றியதன் மூலமாக நூற்றுக்கணக்கான பள்ளிகளில் அந்தப் பரிசோதனைச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சாதாரண கிராமங்களில்



கூட, அந்த லேபரட்டரி விங் என்பது பெரிய கட்டிடமாக இருக்கும். அந்த முறையில் கடந்த 5, 6 ஆண்டுக் காலமாக தீவிர முயற்சி எடுத்து பரிசோதனைச் சாலைகளை அமைக்க ஏற்பாடு செய்து வருகிறோம். அதுமட்டுமல்ல. 9-வது, 10-வது வகுப்புகளிலேகூட இந்த சயன்ஸ் பாடத்தில் பரிசோதனையை கட்டாயமாக்குவதற்கு நாம் திட்டமிட்டிருக்கிறோம். ஆகவே, அதை நிறைவேற்றுவதற்காக நாம் பரிசோதனைச் சாலைகள், அதற்கான கருவிகளை ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிகளிலும் தருவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகிறோம். ஆகவே விஞ்ஞான பாடம் நல்லமுறையிலே சொல்லித்தர வேண்டுமென்பதிலே இந்த அரசு தீவிர அக்கறை கொண்டிருக்கிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

479—(*வினா எண் 2179)—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அரசு வழங்கும் மான்யம் எவ்வளவு ?

(ஆ) மற்ற பல்கலைக் கழகத்திற்கும் அதற்கும் நிதி ஒதுக்கீட்டில் வேறுபாடு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, (அ) தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அரசு, பராமரிப்பு மான்யம், கட்டிடங்கள் கட்டுவதற்கான மான்யம், மற்றும் இதர திட்டங்களுக்காக 1981–82-ம் ஆண்டில் ரூ. 40 இலட்சங்களும், 1982–83-ம் ஆண்டில் ரூ. 171.27 இலட்சங்களும், 1983–84-ம் ஆண்டில் ரூ. 167.58 இலட்சங்களும், 1984–85-ம் ஆண்டில் ரூ. 191.77 இலட்சங்களும் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ) : வேறுபாடு உள்ளது. இப்பல்கலைக் கழகம் தானாக நிதி வசதி பெற வசதி இல்லை. ஆனால், சென்னை, மதுரை-காமராஜ், அண்ணாமலை, பாரதியார் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகங்கள் தானாகவே தேர்வுக்கட்டணப் போன்ற பலவித கட்டணங்கள் மூலம் வருவாய் பெற வாய்ப்பு உள்ளது. இந்த வருவாயினைக் கருத்தில் கொண்டு, துண்டு விழும் தொகையை மட்டும் ஈடுகட்ட மான்யம் வழங்கப்படுகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்படுவதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற நிதி கட்டிடப்

பணிகளுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றதா அல்லது தமிழ் வளர்ச்சிக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அந்த நிதி எந்தெந்த தலைப்புகளில், என்னென்ன பணிகளுக்குச் செலவிடப்படுகின்றது ? அப்படிச் செலவிடுகின்ற நேரத்தில், இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட தஞ்சைக்கு வந்து, தமிழர்களின் வீர விளையாட்டுக்களான ஜல்லிக்கட்டு, சிலம்பாட்டம், பாடல்கள், நடனங்கள் போன்ற கலாச்சார விழாவினைத் துவக்கி வைத்தார் கள். அடுத்த ஆண்டு, இதை இன்னும் விரிவான முறையிலே தமிழ் கலாச்சாரத்தைப் பரப்புவதற்குஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டுக்கு ரூ. 191·77 இலட்சம் தரப்பட்டிருக்கிறது. தொடர் செலவினம் தற்காலிக பராமரிப்பு மானியம் 70 இலட்சம், தொடரா செலவினம் குறிப்பிட்ட திட்டங் களுக்கு 5 இலட்சம், நிலங்களைக் கையகப்படுத்த 11·77 இலட்சம், கட்டிடங்கள் கட்ட105 இலட்சம் என்று இப்படி நாம் 1984–85ஆம் ஆண்டுக்கு 191·77 இலட்சங்களைத் தந்திருக்கிறோம். தமிழ்ப் பல்கலைக் கழகம் அதனுடைய அதிகாரத்தின்கீழ் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அது மட்டு மல்ல.தமிழ் வீர விளையாட்டு, கலாச்சார சம்பந்தப்பட்ட துறை யிலே அவர்கள் கவனம் செலுத்தி, அதற்கான முயற்சிகளை மேற் கொண்டு வருகிறார்கள். இந்த அடிப்படையிலே சென்ற ஆண்டு ஜல்லிக்கட்டு போன்ற வீர விளையாட்டுகள் இடம் பெற்று, அதிலே கிராமிய கலைக்கும் இடம் தந்து வருகிறார்கள். அரசும் அதை விரும்புகிறது. இந்த முயற்சிக்கு அரசு ஆதரவு தருகிறது. இன்னும் விரிவான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டியது தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பொறுப்பு.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு வேறு ஏதேனும் தனியார் நிறுவனங்கள், வெளிநாட்டு அமைப்பு கள் நிதி உதவி செய்துள்ளதா? அப்படி இல்லையென்றால், அப்படிப் பெறுவதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக் குழு நிதி உதவி தருவதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நிதி உதவி கிடைப்பதற் கான வாய்ப்பு இருக்கிறது. வேறு பல நிறுவனங்களிடம் பெற அவர்கள் முயற்சியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசின் பல்வேறு துறைகளோடு தொடர்பு கொண்டு, பல்வேறு ஆராய்ச்சி நடத்துவதற்கு பணம் பெற்று வருகிறார்கள். குறிப் பாக, பழங்குடி மக்கள் ஆராய்ச்சிக்காக அவர்கள் நீலகிரியில் ஒரு மையத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். மத்திய அரசின் உதவி யோடு அதை ஆரம்பித்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.





திரு. கு. சுப்பராயன் : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங் களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியில் லைப்ரரிக்காக புத்தகங்கள் கொள்முதல் செய்கிற பணிக்குத் தகுதியும் பொருத்தமும் உள்ள தமிழ்நாட்டு நிறுவனங்கள் இருந்தும் பாரதியார் பல்கலைக் கழகம் கர்நாடக மாநிலத்திலேயே தொடர்ந்து கொள்முதல் செய் வதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது குறித்த விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போடவும்.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, தஞ்சையிலே பல்கலைக் கழகக் கட்டடங்கள் கட்டுவதற்காக எவ்வளவு மதிப்பீடு செய்யப்பட்டது? இப்போது எந்த அளவுக்கு வேலை முடிந்திருக் கிறது? மேலும் அது முடிவதற்கு எவ்வளவு தொகை தேவைப்படும்? எப்போது அந்த வேலை முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பல்கலைக் கழக கட்டடப் பணிகள் என்பது ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள்ளே முடியக்கூடிய ஒன்றல்ல. தொடர்ந்து நடை பெறக் கூடியது. பல்வேறு திட்டங்களுக்காகப் பல்வேறு கட்டடங் கள் கட்டப்பட்டு வருகின்றன. மதுரை–காமராசர் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதிலேயிருந்து இன்றுவரை அங்கே கட்டடங்கள் கட்டப்பட்டு திறக்கப்பட்டு வருகின்றன. அவ்வப் போது தேவைப்படுகிற புதிய திட்டங்களுக்குத் தேவைப்படுகிற கட்டடங்களையும் கட்டிக் கொண்டு வருகிறார்கள். ஒரு பல்கலைக் கழகத்திற்குஇவ்வளவு தான் கட்டடம் என்று சொல்லிவிடமுடியாது குறைந்த பட்சத் தேவை என்ற முறையில் கட்டடங்கள் அங்கே கட்டப்பட்டு வருகின்றன. அதற்காக சென்ற ஆண்டு 105 லட்ச ரூபாயும், 1983–84 ஆம் ஆண்டில் 102 லட்ச ரூபாயும், 1982–83 ஆம் ஆண்டிலே 80 லட்ச ரூபாயும் இப்படி ஏறக்குறைய 3 கோடி ரூபாய் அளவுக்கு வேலைகள் நடந்து இருக்க வேண்டும். தொடர்ந்து அங்கே வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு பகுதியாக கட்டிக் கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கும்பகோணம் வழக்கறிஞர் சங்கக் கட்டடம்.

480—(* வினா எண். 1465)—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகர வழக்கறிஞர் சங்கத்திற்காக புதியக் கட்டிடம் கட்ட சென்னை உயர்நீதி மன்றம் பரிந்துரை செய்த திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, (அ) இத்திட்டத்தை 1986—87 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது.

(ஆ) ரு. 5.05 இலட்சம்.

(இ) 1986—87 இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் இக்கருத்துருவைக் கொண்டு வருவதற்கு, உரிய நேரத்தில், வரைபடம் மற்றும் மதிப்பீட்டுடன் கூடிய கருத்துருவை அனுப்பி வைக்கும்படி, சென்னை உயர்நீதி மன்றத்திடம் கேட்கப் பட்டுள்ளது. 1986—87 இரண்டாம் பகுதித் திட்டத்தினால், இக்கருத்துரு சேர்க்கப்பட்ட பின், இத்திட்டத்தினைச் செயல் படுத்த அரசு ஆணையிடும்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைகள் பழுது பார்க்க தனி நிதி ஒதுக்கீடு.

481-(* வினா எண் 761)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழுதுபட்ட சாலைகளைப் பழுது பார்ப்பதற்கென்று தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) ஆண்டுதோறும் சாலைகள் பழுது பார்த்து பராமரிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்நிதியை அதிகப்படுத்துவது அவ்வப்போது ஏற்படும் நிதிநிலைக்கேற்ப, செய்யப்படுகிறது.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, புதிதாகப் போடப் படுகிற சாலைகளுக்கு நாம் ஒதுக்குகிற நிதிக்கும் அதே சமயத்திலே போடப்பட்ட சாலைகளைப் பழுதுபார்ப்பதற்காக ஒதுக்குகிற நிதிக்கும் விகிதாச்சாரத்திலே அதிக வேறுபாடு இருப்ப தாக நான் அறிகிறேன். இப்போது பல திட்டங்கள், ஆர். எல். இ. ஜி. பி., என். ஆர். இ. பி. போன்ற திட்டங்கள் மூலமாக நிறைய சாலைகளைப் போடுகிறோம். பழுதுபார்ப்பதற்காக ஒதுக்கப்படுகிற நிதி குறைவாக இருக்கிறது. ஆகவே சாலை களிலே ஓடிக்கொண்டிருக்கின்ற வாகனங்களுக்காக மோட்டார்





வெகிக்கிள்ஸ் டாக்ஸ் என்ற முறையிலே பணத்தை வசூலிக்கி றோம். அந்த வரியிலிருந்து குறிப்பிட்ட சதவீதத்தை அதற் கென ஒதுக்கி அந்தச் சாலைகளை பழுதுபார்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சாலை களைப் பராமரிப்பதற்கு எவ்வளவு தேவை என்பதைப் பார்த்து ஓரளவுக்கு அதற்கு ஏற்ப ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முழுமையான அளவுக்குத் தேவையான அளவுக்கு அது இருக் கிறதா என்றால் நிதிநிலைமை காரணமாக கொஞ்சம் பற்றாக் குறையாக இருப்பது உண்மைதான். நாம் மோட்டார் வெகிக் ஸ் டாக்ஸிலிருந்து பெறக்கூடிய வருவாய் முழுவதையும் அதற்கே ஒதுக்கிவிடுவது என்பது சிரமமான காரியம். காரணம் அப்படி வருகிற வருமானத்திலிருந்து பல பொது நன்மைகளுக்கு செலவழிக்கவேண்டியிருக்கிறது. எனவே நிதிநிலைமைக்கு ஏற்ப எதிர்காலத்திலே அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, பல ஊராட்சி ஒன்றியச் சாலைகள் ரூரல் ரோட்ஸ் என்ற திட்டத்தின் கீழ் எடுத் துக்கொள்ளப்பட்டு அவைகள் தார் சாலைகளாக மாற்றப்பட்டு நெடுஞ்சாலைத் துறையிடம் அவை ஒப்படைக்கப்படாமல் பழுது பார்ப்பதற்காக நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இரண்டும் கெட்டான் நிலையிலே ஆயிரக்கணக்கான மைல் நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப் படாமல் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அந்த ரோடுகளை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்துப் பழுதுபார்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப் பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏதோ ஒரு வகையிலே அதற்காக பணத்தை ஒதுக்கி சாலைகளைப் போட்ட பின்பு யார் பராமரிப்பது என்பதிலே பிரச்சினை இருந்தது உண்மை. ஆனால் ஏதாவது ஒரு இடத்தில் இருந்தாக வேண்டும். பஞ்சாயத்திலோ அல்லது ஹைவேசிலோ இருந்தாகவேண்டும் என்ற முடிவு சம்பந்தப்பட்ட துறைகளில் இருக்கின்ற அதிகாரிகள் மூலம் பேசப்பட்டிருக்கிறது. வருகின்ற காலங்களில் ஏதாவது ஒரு துறையிலேவைத்து பராமரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய வரி உயர்ந்திருக் கிறது. வருவாய் உயர்ந்திருக்கிறது. போக்குவரத்துக் கட்டணம் உயர்ந்திருக்கிறது. ஆனால் என்ன காரணத்தினாலேயோ தெரிய வில்லை இந்தச் சாலைகள் மட்டும் மிகவும் க்ஷீணித்த நிலையில் சமீப காலமாக இருப்பதைக் கண்டு நான் வருத்தமடைகின்றேன். அண்மைக் காலங்களில் அந்தச் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்ற காரணத்தினால் எங்களைப் போன்ற பொதுப் பணி யிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் மக்களைச் சந்திக்க இயலாமல்

இருக்கிறோம். அந்தப் பகுதிகளில் பேருந்துகள் அதிகமாகச் செல்வதற்கு ஏற்பாடு செய்கின்றபொழுது அண்மைக் காலங்களில் அந்தச் சாலைகள் அதிகமாகப் பழுதுபடுவதற்கான காரணங்கள் என்ன? ஏன் அதற்குத் தகுந்த நிதி ஒதுக்கப்படவில்லை? கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்சப்பட்டிருக்கிறது? யுத்த கால அடிப்படையில் இதுசம்பந்தமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் உணர்வுகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. விலைவாசி உயர்வைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் போன்றுதான் இதற்கும் ஜல்லி, அதற்கான சம்பளம், தார் ஆகிய இவைகளின் விலையும் உயர்ந்துதான் இருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நான் கருதுகிறேன். மற்றவைகளின் விலை உயர்ந்து அதிக வருமானம் வருகின்ற பொழுது இதைச் செய்வதற்கான பணம் அதிகமாகக் கிடைத்துவிடும் என்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால், இந்தச் செலவினங்களும் அதிகமாக உயர்வதன் காரணமாக, அதிகமாகப் பணம் ஒதுக்குகின்ற பொழுது அந்தப் பணம் இதில் போய் விடுகிறது. யுத்த கால அடிப்படையில் இதை எடுக்க வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில்தான் இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டு வருகிறது. இந்த ஆண்டு பராமரிப்புக்காக 33 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வருங்காலங்களில் நிச்சயமாக இவைகளெல்லாம் மனத்தில் வைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு நல்ல எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகரவர்களே, இத்தச் சாலைகளிலே ஓடுகின்ற வாகனங்கள் 2,500 கோடி பெறுமானம் உள்ள எரிபொருட்களைப் பயன்படுத்துவதாகவும், இப்பொழுது சாலைகள் பள்ளம் மேடாகவும், குண்டு குழியாகவும் இருப்பதால் இவ்வளவு செலவாகிறது என்றும், இவைகள் நல்ல சாலைகளாக இருந்தால் இதிலிருந்து 500 கோடி ரூபாய்களை மிச்சப்படுத்த முடியும் என்றும் ரோடு சர்வே என்ற அந்த இயக்கம் அறிவித்திருக்கிறது. அப்படியிருக்க, பராமரிப்புக்கு என்றே ஒதுக்கப்பட்ட பணம் வேறு துறைகளுக்குத் திருப்பி விடப்படுகிறது என்ற குற்றச்சாட்டு பரவலாகப் பேசப்படுகிறதே, அதில் உண்மை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, நிச்சயமாக அதிலே உண்மை இல்லை. காரணம், பராமரிப்புக்காக ஒதுக்கப்படுகின்ற பணம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. அந்தப் பணமே போதவில்லை என்று மீண்டும் அரசாங்கத்தைக் கேட்கின்ற நிலையில் தான் இருக்கிறதே தவிர வேறு எந்தப் பக்கமும் திருப்பிவிடுவதற்கான வாய்ப்பு இல்லை. அடுத்து





இந்த எரிபொருட்களை மிச்சப்படுத்துவதைப் பற்றிச் சொன் னார்கள். எரிபொருளை மிச்சப்படுத்த அதற்கேற்ற வகையில் வரியை உயர்த்தி ஏதாவது செய்ய முடியுமா என்று நினைக்கின்ற பொழுது அதிலே பல பிரச்னைகளைப் பலரும் எழுப்பு கின்றார்கள். நான் ஏற்கனவே சொன்னபடி சாலைகளைச் சரிப் படுத்துவதற்கான நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்படும்.

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து அமைச்சராகவும், நெடுஞ் சாலைத் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்பு மிகு அமைச்சரவர்கள் இங்கே கருத்துக்களைச் சொல்லுகின்ற பொழுது ரோடு பராமரிப்புக்குக் குறைவான தொகைதான் ஆண்டுக்கு ஒதுக்சப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். முன்பெல்லாம் இப்படிப்பட்ட ரோடுகளில் பலயிடங்களில் சின்னஞ் சிறிய குழிகள் விழுந்தால் ரோடு கேங்க் கூலிகள் என்று சொல் லப்படுகின்றவர்கள் அதைச் சரி பார்ப்பார்கள். இப்பொழுது அப்படிப்பட்ட கேங்க் கூலிகள் இந்த ரோடுகளைப் பராமரிக் கிறார்களா இல்லையா ? முன்பெல்லாம் காணப்பட்டதைப் போல அப்படிப்பட்ட ரோடு இருக்கின்ற பகுதிகளில் கேங்க் கூலிகள் ஒருவரையுமே, தற்பொழுதெல்லாம் பார்க்க முடியவில்லை. புதிய புதிய பஸ்களைக் கிராமப்புறங்களில் விடுகின்ற நேரத்தில், சிலயிடங்களில் சாலை வசதிகளைச் செய் வதில் இடைஞ்சல்கள் ஏற்படுவதால் அந்தப் பேருந்துகளை நிறுத்திவிடுகின்ற சூழ்நிலையும் ஏற்படுகின்றது. எனவே, இந்த இரண்டு துறைகளையும் மேற்கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள் கிராமப்புற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் பஸ்கள் தொடர்ந்து செல்கின்ற வகையில் ரோடுகளை சரி செய்வதற்கும், ஆங்காங்கு உள்ள பள்ளம், குழிகளை நிரப்புவதற்கும் கேங்க் கூலிகள் மூலம் தக்க நடவடிக் கைகள் எடுத்து, உடனடியாக அந்தக் காரியத்தைச் செய்வதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, ஒரு தவறான கருத்து வெளியிலே வந்துவிடக் கூடாது என்பதற் காகத் தெளிவாக்க ஆசைப்படுகிறேன். நிதி போதவில்லை என்பது உண்மைதான். ஆனால் அரசாங்கம் பணமே கொடுக்க வில்லை என்பதைப்போல வெளியிலே பேசக்கூடாது. காரணம், பல பொதுக் காரியங்களை நாம் செய்கின்ற சூழ்நிலை இருக் கிறது. அரசாங்கம் ஒவ்வொரு காரியத்திற்கும் பணத்தை ஒதுக் குகிறது. ஆகவே, மொத்தத்தில் நிதிநிலைமையில் பிரச்னை இருப்பதால் கொஞ்சம் போதாத நிலைமை இருக்கிறதே தவிர, அரசாங்கம் பணத்தை ஒதுக்கவேயில்லை என்பதைப் போன்ற பிரச்சனை நாளைக்கு வெளியிலே வரக்கூடாது. கேங்க் கூலிகளைப் பற்றிச் சொன்னார்கள். தற்போது நட வடிக்கை எடுக்கப்பட்டு பலயிடங்களிலே பணிகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். இதன் காரணமாக, நாங்கள் போகின்ற

பொழுதெல்லாம் கூட டிரெயின், மற்றவைகளில் போவதற்குப் பதிலாக ரோடு வழியாகச் செல்ல வேண்டுமென்ற உணர்வில் செல்லுகிறோம். அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதைப்போல ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம். அதன்படி மூன்று பிரிவுகளாக இந்தப் பாதைகள் பிரிக்கப்பட்டு, மிக மோசமான சாலைகள் என்றும், நடுத்தரமாக உள்ள சாலைகள் என்றும், ஓரளவிற்கு சுமாராக உள்ள சாலைகள் என்றும் பிரித்தெடுத்து படிப்படியாகச் செய்து முடித்துவிட வேண்டுமென்ற உணர்வில் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9–40)

திரு. செ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாவட்டத்தைச் சேர்ந்த நெடுஞ்சாலைத் துறையினுடைய சாலைகளில் 7, 8 ஆண்டுகளாகப் 'பேச்' போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதிகாரிகளைக் கேட்டால், நிதி நிலைமை போதவில்லையென்று கூறுகிறார்கள். அந்த, அந்த மாவட்டத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு போட்டு, அந்தச் சாலைகளுடைய பராமரிப்பு முறையாக நடக்கிறதா என்பதைக் கண்டறிந்து அந்தக் குழுவின் மூலமாக அரசு கவனத்திற்குக்கொண்டுவர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லா உரிமைகளும் இருக்கின்றன. குழு ஒன்று போட்டுத்தான் தனியான முறையில் கேட்க வேண்டுமென்பது அல்ல. இப்பொழுதே நீங்கள் பார்த்து எந்தக் கருத்தை அரசுக்கு எழுதினாலும் அதன் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலைகள் பராமரிப்பு, செப்பனிடுவது போன்ற காரியங்களுக்கு அதிகமான பணம் செலவாவதைக் குறைப்பதற்கு மாற்று ஏற்பாடாக பல இடங்களிலே அதிகமான வளைவுகள், சாலைகளிலே இருப்பதனாலே அங்கே செல்வதற்குத் தூரம் அதிகமாக இருக்கிறது, நேரமும் அதிகமாக ஆகிறது. வாகனங்களிலே செல்லும்போது எரிபொருளும் அதிகமாகச் செலவாகிறது. ஆகவே, அதை நிரந்தரமாக மாற்றுவதற்கு அந்த வளைவுகளை நேராக்கி, தூரத்தைக் குறைத்துவிட்டால், சாலைகளையும் சரியாகச் செப்பனிடலாம், குறைந்த செலவிலும் அவைகளைப் பராமரிக்கலாம். ஆகவே, வளைவாக இருக்கிற, அதிகமான தூரத்திலே இருக்கிற சாலைகளை நேராக்க அரசாங்கம் தனி கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த வளைவுகளை எல்லாம் நேர்ப்படுத்தினால் பராமரிப்பதற்குச் சுலபமாக இருக்கும். ஆனால் நேர்ப்படுத்துகிறபொழுது நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அதிகமான செலவுகள் ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். எங்கெல்லாம் மோசமான சாலைகள் இருக்கின்றனவோ அவைகளை யெல்லாம் சரிப்படுத்தியதற்குப் பின்புதான் வளைவுகளை எல்லாம் நேர்படுத்த முடியும்.

செங்கோட்டை திருச்செந்தூர் பேருந்து பணி.

482 (*வினா எண் 810)—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டையிலிருந்து திருநெல்வேலி, ஸ்ரீவை. குண்டம். குரும்பூர், அடைக்கலாபுரம் வழியாக திருச்செந்தூருக்கு பேருந்து விடும் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இந்த வினா வருகிற பொழுது அது சம்மந்தமான செயற்குறிப்பு இல்லாமல் இருந்தது, தற்போது இரண்டு பேருந்துகளை அந்த வழித் தடத்திலே விடுவதற்கான செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு பஸ்கள் விடுவதற்கு பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள் அதிகமாக இருப்பதன் காரணமாக, அங்கே ஆசிரியர் பயிற்சி நிலையம், அநாதைகள் பராமரிப்பு நிலையம், சிசுக்கள் பராமரிப்பு நிலையம் முதியோர் இல்லம் போன்ற பொது நிறுவனங்கள் இருப்பதன் காரணமாக, பொதுமக்கள் அங்கே அதிகமாக வருவதன் காரணமாக, அந்த வழித்தடத்தில் உடனடியாக இரண்டு பேருந்துகள் இயக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அங்கே ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக செய்யப்படும்.

திருப்பூர்—காங்கேயம் நெடுஞ்சாலை.

483 (*வினா எண் 1181)—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1985 ஜுலை 3

திருப்பூர் to காங்கேயம் நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்ட சாலை திருப்பூர்—படியூர் சாலை, மற்றும் கோபி—தாராபுரம் சாலை என்ற இரு பிரிவுகளைக் கொண்டது. இவற்றில் கோபி—தாராபுரம் சாலை அகலப்படுத்தப்பட்டு இருவழிச் சாலையாக நல்ல நிலையில் உள்ளது. மற்றொரு சாலையான திருப்பூர்—படியூர் சாலையை அகலப் படுத்தும் பணி அரசின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**திரு. கு. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர்—காங்கயம் சாலையில் கடந்த ஓராண்டுக் காலத்திற்கு முன்னர் செய்து கொண்டிருந்த பணி பாதியிலே நிறுத்தப் பட்டிருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? நிறுத்தப்பட்டிருக்கிற பணியை உடனடியாகத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் பற்றி பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கு. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அதே போல், திருப்பூர் மங்கலம் ரோடு, திருப்பூர் பெருமாநல்லூர் ரோடு, திருப்பூர் தாராபுரம் ரோடு ஆகிய ரோடுகளும் பள்ளம் நிறைந்ததாகவும் குறுகியதாகவும் விபத்துக்கு வாய்ப்பளிக்கின்ற பாதைகளாக இருப்பதால் அவற்றை அகலப்படுத்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, பள்ளம் நிறைந்ததாக இருப்பதாகச் சொன்னால், முதலிலே அது சரி செய்யப்படும். அதற்குப் பிறகு அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது எல்லாம் பாதைகளை அகலப் படுத்துவதை விட்டுவிட்டு, அங்கே இருக்கிற பள்ளங்களை மூடுகிற 'பாச் ஒர்க்' களிலே அதிகமாக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதனால் ரோடுகள், அம்மை வார்த்த முகத்தில் அரிதாரம் பூசியதைப் போல் காட்சியளிக்கின்றன. ஆகவே, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ரோடுகளை ரினியூவல் செய்ய வேண்டுமென்ற கொள்கைக் குறிப்பினை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் நிதிநிலையை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். எந்தத் துறையிலும் கூடுதலாக வரி போடுவதற்கு, அதை அனுமதிப்பதற்கு பலர்



1985 ஜுலை 3]

தயாராக இல்லை. இந்த நிலையில் எந்த அளவுக்கு முடியுமோ அதை அரசு செய்துகொண்டிருக்கிறது. 5 ஆண்டுக்கு ஒருமுறை செய்ய வேண்டுமென்றால் அரசின் வருமானம் இதைப்போல இன்னும் இரண்டு மடங்கு உயரவேண்டும். ஒவ்வொரு துறையிலும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. நிதிநிலைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்

### லஸ்—மயிலாப்பூர் பாலம்.

484—(*வினா எண். 1362)—**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் லஸ் பகுதியில் இருந்து மயிலாப்பூருக்கு செல்லும் சாலையில் உள்ள பாலத்தை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம், பக்கிங்காம் கால்வாயின் மீது ராமகிருஷ்ணா மடம் சாலையில் அமைந்துள்ள குறுகலான பாலமாகும். இதனைக் கட்ட திருத்திய மதிப்பீடு 1983ல் ரூ. 58·40 லட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசின் நிதி நிலைமை காரணமாக இப்பால வேலை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**திருமதி பா. வளர்மதி :** தலைவரவர்களே, திருவான்மியூர் செல்லும் சாலையிலும் மயிலாப்பூர் குளம் பேருந்து நிலையத்திலும் அதிகமாக பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. நிதி தள்ளி வைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நெரிசல் அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு வரும் நிதியாண்டிலாவது இந்த பாலத்தை விரிவு படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, வேலை தான் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. நிதி தள்ளிவைக்கப்படவில்லை. வசதி இல்லாத காரணத்தால்தான் பேருந்துகள் அங்கே நின்றுகொண்டிருக்கின்றன. போக்கு வரத்துக் கழகத்திற்கும் பேருந்துகள் போக சிரமம் இருக்கிறது என்பது தெரியும். வருகிற நிதியாண்டில் பணம் எவ்வளவு இருக்கிறது என்பதைப் பார்த்து, நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி பா. வளர்மதி. தலைவரவர்களே :** அப்படியானால் அந்தத் திட்டம் எப்போது தொடங்கும்? லஸ் பகுதியிலிருந்து சாந்தோம் செல்லும் வழியில் கச்சேரி சாலை அருகில் ஒரு சிறிய பாலம் இருக்கிறது. போக்குவரத்து நெரிசல் காரணமாக அடிக்கடி அங்கே விபத்து ஏற்படுகிறது. அந்தப் பாலத்தையும் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

[1985 ஜுலை 3

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, நிதிவசதி
சரியாக ஆகும்போது எடுத்துக்கொள்ளப்படும். எப்போது பணி
தொடங்கும் என்று கேட்டார்கள். எப்போது என்று சரியாகச்
சொல்ல முடியாது. வேறு ஒரு பாலத்தையும் சொல்லியிருக்
கிறார்கள். அதுபற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் (பேரவைத்
துணைத் தலைவர்) : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பாலங்கள்
சாலைகள் அமைப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பது பற்றியும்
நிதிநிலை பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்
டார்கள். நிதி நெருக்கடியைத் தவிர்க்க போக்குவரத்துக் கழகத்
திலிருந்து நிதி பெறுவதோ அல்லது "ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்
பரேஷன், அமைத்து அதன் மூலமாக தேசிய வங்கிகளிடமிருந்தோ
அல்லது உலக வங்கியிடமிருந்தோ கடன் பெற்று சாலை, பாலங்
கள் அமைக்கும்பணி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, நிதிநிலை
காரணமாக பல பணிகள் நின்றுகொண்டிருக்கின்றன என்று
அடிக்கடி சட்டமன்றத்தில் சொல்லப்படுவதால் மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.
எங்கெல்லாம் வேலை தடைபடுகின்றதோ அதுதான் இங்கே
வருகிறது. ஆனால் நூற்றுக்கணக்கான வேலைகள் நடந்து கொண்
டிருக்கின்றன. அவை சட்டமன்றத்திற்கு வராது. நிதி வசதி
இல்லாமல் எங்கே வேலை நடைபெறாமல் இருக்கிறதோ அதை
இங்கே சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஒரு தனிக் கழ
கம் ஆரம்பித்து பணம் பெற முடியுமா என்று கேட்டார்கள். ஏற்
கெனவே இந்த அரசால் 150 கோடி ருபாய்க்கான திட்டம் ஒன்று
தயாரிக்கப்பட்டு உலக வங்கி கடன் பெற அனுப்பிவைக்கப்பட்டி
ருக்கிறது. அதுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அதற்கு
முன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்
போன்று தனிக்கழகம் ஆரம்பிக்கமுடியுமா என்று பரிசீலனை
செய்து கொண்டிருக்கிறோம். இடையிலே பல பிரச்சனைகள்
உருவாகியதன் அடிப்படையில் அந்தப் பரிசீலனை தள்ளி
வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த பக்கிங்காம்
கால்வாய் ஒரு காலத்தில், நாட்டில் சாலைப் போக்குவரத்து
இல்லாத காலத்தில், போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்பட்டு
வந்தது. இன்றைக்குக்கூட அந்தக் கால்வாயில் வடபகுதி போக்கு
வரத்திற்கு பயன்படுகிறது, தென்பகுதி சுத்தமாகச் செயல்பட
வில்லை. மத்திய நேவிகேஷன் துறை ஒன்று இருக்கிறது. அங்கி
ருந்து பணம் பெற்று உடனடியாக தென்பகுதியை சீர் செய்து,
போக்குவரத்திற்குப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா ?



1985 ஜுலை 3]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்தக்
கால்வாய்க்கு மேலே இருக்கிற பாலம் பற்றிய கேள்வி இது.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதுபற்றி தற்போது
குறிப்பு இல்லை. அவர்கள் தனியாக ஒரு கேள்வி போட்டால்
நானும் அதுபற்றி விரிவாகத் தெரிந்துகொண்டு, ஆய்வு செய்து,
ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்று பார்க்கலாம்.

(முற்பகல் 9–50)

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, சென்னையில் கிண்டி கத்திப்பாரா சாலை என்பது அசோக்
பில்லரை இணைக்கின்ற மிக முக்கியமான பிரதான சாலை நேஷன
ஹைவேஸ். சென்னை மற்றும் பல வெளியூர்களிலிருந்தெல்லாம்
பயணிகள் அந்த வழியாகவருகிறார்கள். அப்படிப்பட்ட சாலையை
நேஷனல் ஹைவேஸ் பராமரிக்கின்ற முறை இருந்தாலும்கூட
தெரு விளக்குகள் பொருத்தப்படவில்லை. இதனால் பல
விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதுபற்றி மாநகராட்சியிடம்
கேட்டால் ஹைவேஸ் துறையினர் செய்யவேண்டும் என்கிறார்கள்.
ஹைவேசிடம் கேட்டால் மாநகராட்சியினர் செய்ய வேண்டும்
என்று சொல்கிறார்கள். இப்படி இரண்டும் கெட்டான் நிலையில்
இருக்கின்ற அந்த சூழ்நிலையை மாற்றி உடனடியாக நடவடிக்கை
எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே,
சாலைகளைப் பொறுத்த வரையில்நெடுஞ்சாலைத்துறை பராமரித்
தாலும் அதன் இரு பக்கங்களிலும் விளக்குகள் போடுவதைப்
பொறுத்தவரையில் நகராட்சிதான் செய்யவேண்டும். சென்னை
யைப் பொறுத்தவரையில் மாநகராட்சிதான் செய்யவேண்டும்.
எனவே, சம்பந்தப்பட்ட துறைக்கு வேண்டுமானால் மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள எண்ணத்தின் அடிப்படை
யில் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளலாம். எனவே,
நெடுஞ்சாலைகளில் விளக்குப் போடுவதைப் பொறுத்தவரையில்
மாநகராட்சியினர்தான் செய்யவேண்டும். அதாவது லோக்கல்
பாடிஸ்தான் அதைச் செய்வார்கள்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே,
ஆயிரம்விளக்கு, நந்தனம் பகுதியில் இருக்கின்ற பாலம் மிகவும்
சீர்கேடான நிலையில் இருக்கின்றது. எனவே அந்தப் பாலத்தை
புதிதாகக் கட்டுகிற குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்
களே, ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மிகத்
தீவிரமாக வேலை செய்யக் கூடியவர்கள். அவர்கள் நிச்சயமாக
இது சம்பந்தமாகக் கடிதம் எழுதியிருப்பார்கள். அதைப் பார்த்து
நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே விழுப்புரத்தைப் பொறுத்தவரையில் இரண்டு பக்கத்திலேயும் இரயில் போக்குவரத்து இருக்கின்றது. அதாவது, திருவண்ணா மலையிலிருந்தும் இரயில் போக்குவரத்து இருக்கின்றது. திருச்சி பக்கத்திலிருந்தும் இரயில் போக்குவரத்து இருக்கின்றது. இந்தக் காரணத்தால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் ஒரு மணி நேரத்திற்கு மேல் நின்று போகவேண்டியதன் காரணத் தால் தாமதம் ஏற்படுகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதிப்பற்றாக்குறை என்ற காரணத்தைச் சொல்லாமல் அங்கே மேம்பாலம் கட்டுவதற்கான ஏற்பாட்டை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சு.முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி இல்லை என்றாலும் நிறைய இடங்களில் மேம்பாலம் கட்ட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அவ்வாறு கட்டவேண்டியதைப்பொறுத்த வரையில் மத்திய அரசு பாதிப்பணத்தை முதலில் கொடுக்க வேண்டும். எனவே அந்த நிலையில்தான் தற்போது இருந்து கொண்டு இருக்கிறதே தவிர நம்முடைய அரசில் எந்தவிதமான தாமதமும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். மத்திய அரசைப் பொறுத்தவரையில் அவர்களும் நிதிநிலைமைக்கு ஏற்பத்தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுக்கிக் கொண்டிருக்கி றார்கள். மொத்தமாக ஒவ்வொரு ஆண்டிலும் ஒதுக்கீடு செய்வ தில்லை. இதைப் பொறுத்தவரையிலும் அந்தப் பட்டியலில் சேர்த்து நாம் கேட்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

## பேருந்துகளுக்கான உதிரி பாகங்கள் தயாரிப்பு

485—(*வினா எண் 1858)— திரு. ஏ.எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு போக்குவரத்துக் கழகங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய உதிரி பாகங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இல்லை.

## பெரியார் மாவட்டத்தில் வீட்டு வசதித் திட்டங்கள்

486—

(*வினா எண் 1979)—திரு. ச. பாலகிருஷ்ணன், டாக்டர் அ.பொன்னுசாமி மற்றும் திரு. யு.பி. மாதையன்: மாண்புமிகு வீட்டு





வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் எந்த எந்த ஊர்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டப்பட்டு வரு கின்றன ?

(ஆ) எந்த எந்த ஊர்களில் இதற்கென நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, (அ) பெரியார் மாவட்டத்தில் ஈரோடு, பெருந்துறை, கோபிசெட்டிபாளையம், கருங்கல் பாளையம் மற்றும் பெரும் பள்ளம் ஓடை ஆகிய பகுதிகளில் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

(ஆ) கொல்லம்பாளையம், பெருந்துறை ரோடில் உள்ள நிலம், நசயனூர் ரோடில் உள்ள நிலம், பெரியசெமூர், ஈரோடு, சூரம் பட்டி, பவானி, வில்லாசம்பட்டி மற்றும் ஊராட்சிக் கோட்டை பகுதிகளில் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன.

டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தின் மத்தியில் அமைந் துள்ள பெருந்துறை நகரத்தில் சேட்டலைட் டவுன் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தற்சமயம் அது பரிசீலனை யில் இல்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்கின்றபோது நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று தடை யுத்தரவு வாங்கிவிடுகிறார்கள். அதனால் வேலை பாதிக்கப்படு கின்றது. அப்படிப்பட்ட தடையுத்தரவுகளிலிருந்து இந்த நில ஆர்ஜிதத்திற்கு விதிவிலக்கு கொடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர் களே, இதற்கான விடையையும் அவர்கள் முதல் பாதியிலேயே சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்திற்கு செல்கின்ற வழக்குகளைப் பொறுத்தவரையில் எவ்வளவு விரைவாக அந்த வழக்குகளை முடிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு முடிப்பதற்கு உரிய வேலை கள் நீதித்துறையின் மூலம் செய்யப்பட்டு வருகின்றன.

487—(*வினா எண் 1651)—திரு. பு. கோ. நாராயணன் : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

[1985 ஜூலை 3

(ஆ) ம் எனில், அத்திட்டத்தை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிலம் கையகப்படுத்தப்படும் பணி முடிவடைந்ததும் வீடுகள் கட்டும் பணி துவங்கப்படும்.

**திரு. பு. கோ. நாராயணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் இதுவரை எத்தனை மனைகள் வந்துள்ளன ? குறைந்த வருமானம் உள்ள ஏழைகளுக்கு இந்தத் திட்டத்தில் வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத்தலைவர் அவர்களே, பொதுவாக நிலங்கள் எடுக்கின்ற பிரச்சினை முடிந்ததற்குப் பிறகு தான் பொது மக்களுக்கு மனுக்கள் கொடுப்பதற்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. பொதுவாக அந்த வழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. பெரியார் மாவட்டம் பவானியைப் பொறுத்த வரையில் குறைந்த வருவாய் உள்ள பிரிவினர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தையும் நடைமுறையில் அரசு மேற்கொள்ள இருக்கிறது. பொதுவாக எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி., எச்.ஐ.ஜி. என்ற மூன்று வகையிலும் சேர்ந்து 240 வீடுகளை ரூ 150 லட்சம் செலவில் கட்டுவதற்கு அரசு முடிவெடுத்திருக்கிறது.

**திரு. பு. கோ. நாராயணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டுப் பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வருகிறது. அதனால் இதன் அவசியத்தை உணர்ந்து இதற்கு முன் உரிமை கொடுத்து துரிதப்படுத்தி அந்த வீடுகளைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஊர் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடவில்லை. இருந்தாலும் அவருடைய சொந்தத் தொகுதி என்ற அடிப்படையில், நிலம் கையகப்படுத்தியவுடன், விரைவாக அந்தத் திட்டத்திற்கு முன் உரிமை அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சொந்தத் தொகுதி அல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி.

**திருச்சி மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.**

488—(*வினா எண் 1287)—**திரு. க. சோலைராசு மற்றும் திரு. செ. இரத்தினவேலு :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம் எங்கெங்கு செயல்படுத்தப்படுகின்றது ?



1985 ஜூலை 3]

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம் கீழ்க்கண்ட கிராமங்களில் செயல்படுத்தப் படுகின்றன:—

அதிரெட்டிபாளையம், ஈச்சம்பட்டி, பொய்யூர், தரகம்பட்டி. குப்பிச்சிபாளையம், மேலமாத்தூர், அங்கராயநல்லூர், கத்தாளம்பட்டி, ஸ்ரீரங்கம், வேலாயுதம்பாளையம், தொட்டியம், தொரமங்களம், வேப்பூர், நச்சலூர், ஓலைப்பாடி, நன்னை. வரகூர், கல்லை, ஆந்தூர், காடூர், கொளத்தூர், செங்காட்டுப்பட்டி.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் எத்தனை வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும், மருங்காபுரி தொகுதியில் நடப்பு ஆண்டில் வீடுகளைக் கட்ட அரசு உத்தேசித்து இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நடப்பு ஆண்டில் 1,776 வீடுகளைக் கட்ட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. இரத்தினவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் வகையில், எந்தெந்த அடிப்படையில் முன் உரிமை அளித்து அரசு அவர்களுக்கு உதவி வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்காக முதலிலே நிலம் ஆர்ஜிதம் செய்து, பட்டா கொடுக்கப்பட்டவைகளுக்கு முன் உரிமை கொடுத்து, வீடு கட்டுகின்ற திட்டத்தை அரசு பயன் படுத்துகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெள்ளாற்றின் குறுக்கே அணை.**

489—(*வினா எண் 936)—**திரு. ஆர். தியாகராசன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1985 ஜுலை 3

(அ) தொழுதூர் அணைக்கு மேற்கில் வெள்ளாற்றின் குறுக்கே புதிய அணை கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) இதனால் வெலிங்டன் நீர்த்தேக்க பாசனம் பெருமளவு பாதிக்கப்படும் என விவசாயிகள் ஆட்சேபிப்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) வெள்ளாற்றில் தொழுதூர் அணைக்கு மேல் கொரக்கவாடி அணையருகே கொரக்கவாடி நீர்த் தேக்கம் அமைக்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது. பணி தொடங்கப் பெறவில்லை.

(ஆ) இதுவரை எந்த ஆட்சேபணையும் வரவில்லை. மேலும் இத் திட்டம் வெள்ளாற்றில் பருவ மழையின்பொழுது வீணாக ஓடி கடலில் கலக்கும் நீரை மட்டிலுமே சேமிக்க வழிவகை செய்கிறது. இதனால் வெலிங்டன் நீர்த் தேக்கத்தின் நீர்ப் பாசன உரிமை பாதிக்கப் பெறாது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெலிங்டன் ரிசர்வாயர் என்பது ஒரு பெரிய நீர்த் தேக்கம். அதிலே ஏற்கெனவே பாசன வசதியை 16 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பெற்று வருகின்றன. இப்போது அதிலே 8 ஆயிரம் ஏக்கருக்கு கூட தண்ணீர் பாய்வது இல்லை. இந்த நிலையில் மேலே அணையைக் கட்டித் தடுத்து விட்டால் கீழே உள்ள அந்த நீர்ப்பாசன நிலங்கள் பெரிதும் பாதிக்கப்படும். ஒவ்வொரு அணையைக் கட்டும்போதும் அரசு, உபரியாக வருகிற தண்ணீரைத்தான் தேக்குவதற்கு கட்டப் படுகிறது என்று சொல் கிறார்களே தவிர, கொஞ்சமாக தண்ணீர் வந்தாலும்கூட அதைத் தடுத்து நிறுத்தி விடுகிறார்கள். அதனால் கீழே உள்ள பாசன நிலங்களின் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அதனை கருத்தில் கொண்டு அந்த அணையிலிருந்து தொடர்ந்து வெலிங்டன் நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் வருவதற்கு என்ன வழிவகை அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஜுலை 3]

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, அரசு இந்தத் திட்டத்தைத் தீட்டி செயல்படுத்தும் போது எந்த நோக்கத்திற்காக இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறதோ, அந்த நோக்கம் நிறைவேறுகிற வகையில் செயல்படுத்தி வருகிறது. மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல வெள்ளத்தைத் தடுப்பதற்கு, வெள்ளக் காலங்களில் கடலில் வீணாகக் கலக்கிற தண்ணீரை எடுத்து பாசன வசதி உருவாக்கித் தரவேண்டுமென்ற நோக்கத்தில் அமைக்கப் படுகிற திட்டத்தை வேண்டுமென்றே வழக்கமாக இருக்கிற ஆயக் கட்டுகள் பாதிக்கப்படுகிற அளவிற்குத் தண்ணீரைத் தேக்கி திசை திருப்புகிற எண்ணம் இந்த அரசிற்கு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த முறையில் வெலிங்டன் நீர்த் தேக்கத்தில் போதுமான தண்ணீர் வருகிறதா, இல்லையா என்பதை நாம் பார்க்காமல் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளப் போவதில்லை. வீணாகக் கடலில் தண்ணீர் கலக்கா மல் அந்தத் தண்ணீரை எடுத்து பயனுள்ள வகையில் உபயோகிக்க இந்தத் திட்டம் ஆய்விலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அடிப்படையிலே ஆய்வு முடிவுகள் வருமானால் திட்டம் நிச்சயமாக மேற்கொள்ளப்படாது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. மீண்டும் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதைபோல மணிமுக்தா நதியில் மூன்று அணைகள் கட்டப்பட்டு உபரியாக வருகிற தண்ணீரைத் தடுக்கிறோம் என்று அப்போது தெரிவித்தார்கள். இப்போது அந்த அணையின் கீழேயுள்ள பகுதிக்கு தண்ணீர் வரவில்லை. கிட்டத்தட்ட 14 ஆயக் கட்டுகள் பாதிக்கப் பட்டுள்ளன. ஆகவே, வெலிங்டன் நீர்த் தேக்கத்திற்குக் கீழே இருக்கிற விவசாயிகளின் நிலைமையைக் கருத்தில் கொண்டு வெள்ளக் காலத்துலே தான் தண்ணீரைத் தடுக்க வேண்டும். மற்ற காலங்களில் தண்ணீரைத் தடுக்கக் கூடாது என்பதற்கான விதிமுறைகளை அரசு வகுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப்போல இன்னும் உறுதியாகச் சொல் கிறேன். வீணாகக் கடலில் கலக்கிற தண்ணீர் இருக்குமானால் அந்தத் தண்ணீரை இந்தத் திட்டத்தின் வாயிலாக பயன்படுத்த அரசு முன்வரும். மணிமுக்தா நதியில் கட்டப்பட்ட அணையைப்

பற்றிச் சொன்னார்கள். அந்த விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் தரப்பட்டிருக்கிற பயன் செலவு விகிதத்தைக் கணக்கிலே பார்த்தால் 0.42 : 1 என்ற அளவிலே இருக்கிறது. ஆகவே இதற்கு மேலும் விளக்கம் சொல்லத் தேவையில்லையென்று நினைக்கிறேன். அந்த முறையில் இந்தத் திட்டம் ஆய்வுக் கட்டத்திலே, ரம்ப நிலையிலே இருக்கிறதே தவிர, வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. தங்கராசு: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது கொரக்கவாடி அணைக்கட்டுத் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்விலே இருப்பதாகச் சொன்னார்கள். தொழுதூரில் வெள்ளாற்றின் பருவமழைக் காலங்களில் அதிகப் படியான தண்ணீர் வந்து ஏறத்தாழ முக்கால் பங்கு தண்ணீர் வீணாகிறது. மங்களூர் தொகுதியின் மேற்குப் பகுதி மிக வறட்சியானப் பகுதியாக இருப்பதால் கொரக்கவாடி அணைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மக்கள் அதிகமான அளவில் கோரிக்கை விட்டிருக்கிறார்கள். வெலிங்டன் நீர்த் தேக்கத்திற்குத் தொழுதூரிலிருந்து அணைக்கட்டு மூலமாக கால் பாகம் தண்ணீர் தான் செல்கிறது. மீதியுள்ள முக்கால் பாகம் தண்ணீர் வீணாகிற காரணத்தால், அந்தக் கொரக்கவாடி அணைக் கட்டும் திட்டத்தை அந்த வறட்சியான பகுதியில் இருக்கிற மக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு இந்த நிதியாண்டிலே அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காகத்தான் பொதுப் பணித்துறை ஆய்வுப் பிரிவென்று ஒன்றை வைத்து, எந்தவொரு பகுதிக்கும் அநியாயம் இழைக்கப்படக் கூடாது என்ற நோக்கத்திலே ஆய்வுகளை ஒழுங்காக நடத்தி வருகிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஆய்வுப் பிரிவைப் பற்றி, எவ்வளவோ கொடூரமான, கருணையற்ற விமர்சனங்கள் எல்லாம் இங்கே செய்யப்பட்டிருக்கின்றன என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த ஆய்வுப் பிரிவுகளின் முடிவுகள் தான் இறுதி முடிவுகளாக இருக்கும். அந்த அறிக்கையின் அடிப்படையில்தான் அரசு யாருக்கும் பாதகமற்ற முடிவை எடுக்கும்.

கட்டனூர் கண்மாய்.

490—(*வினா எண் 988)—திரு. மு. பிச்சை: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டைத் தொகுதியில் கட்டனூர் கண்மாயை உலக வங்கியின் துணை கொண்டு மேம்பாடு செய்யும் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் எந்த ஆண்டு வேலை துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே. (அ) மற்றும் (ஆ): கட்டனூர் கண்மாயை ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பின் உதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் சேர்க்கும் திட்டம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை. தலைமைப் பொறியாளர் (சிறு பாசனம்) அவர்கள் நடப்பாண்டில் இந்த ஏரியிலும் ஏரியின் வரத்துக் கால்வாயிலும் அணைக்கட்டிலும் உள்ள சிறு சிறு குறைபாடுகளைப் பழுது பார்க்க மதிப்பீடு தயாரித்து விரைவில் செப்பனிட தல அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் நிலத்தடி நீர் ஆய்வு.

491—(*வினா எண் 1564)—திரு. க. சோலைராசு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலத்தடி நீர் ஆய்வு மூலம் திருச்சி மாவட்டத்தில் ஏதேனும் ஆய்வு நடத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், மருங்காபுரி தொகுதியில் ஆய்வு நடத்த அரசிடம் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மருங்காபுரி தொகுதியிலும் நில நீர் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை தாலுக்காவில் எத்தனை இடங்களில் இப்படிப்பட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, மருங்காபுரியைப் பொறுத்தவரையிலும், அது மணப்பாறை, தாலுக்காவிலே மட்டும் வருகிறதா அல்லது வேறு எந்தப் பகுதியில் வருகிறது என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. மருங்காபுரியைப் பொறுத்தவரையிலும் 13 இடங்களில் பார்வைக் கிணறுகளையும் 9 துளைக் கிணறுகளையும் அங்கே உருவாக்கி அங்கே இருக்கக்கூடிய நீர் தாங்கியின் தன்மைகளைக் கண்டறியவும் நில நீர் கொடுக்கும் திறன் பற்றி ஆராயவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

திரு. க. சோலைராசு: பேரவைத் தலைவர் அவர்களே, நில நீர் எடுப்பின் மூலமாக ஆராயப்படுகிறபோது, மருங்காபுரித் தொகுதியினுடைய நீர் எத்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது? அதாவது வெள்ளை, கருப்பு, பழுப்பு என்று அது எந்த நிறத்தில் உள்ளது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில நீர் பரப்பில் இருக்கக்கூடிய தண் ணீர் 80 விழுக்காடுகள் இருந்தால், கருமைப் பகுதியாக அந்த ஊராட்சி கருதப்படுகிறது. அதைப்போன்று, 60 விழுக்காட்டிற் கும் 80 விழுக்காட்டிற்கும் ஊடே இருக்குமானால், அந்த ஊராட்சி ஒன்றியம் பழுப்புப் பகுதியாக பிரித்து வைக்கப்பட் டிருக்கிறது, மருங்காபுரியைப் பொறுத்தவரையில் 60 விழுக்காட் டிற்கும் கீழே இருக்கிற காரணத்தால், வெண்மைப் பகுதியாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

**திரு. குமரி அனந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில நீர் ஆய்வு அதிகப் பணச் செலவை ஈர்க்கின்ற ஒன்றா? அதிக நேரத்தை எடுத்துக்கொள்கின்ற ஒன்றா ? அப்படியில்லை யாயின் எங்கெங்கே குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறதோ, நீர்ப் பற்றாக்குறை இருக்கிறதோ, அந்தப் பகுதியில் குறிப்பாக, இந்த ராதாபுரம் தொகுதி—மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய சொந்தத் தொகுதியாகும்—தற்போது என்னைத் தேர்ந்தெடுத்தத் தொகுதியாக இருக்கிற, அந்தப் பகுதியிலே எல்லாம் உடனடி யாக ஆய்வு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் ஆய்வு தமிழகத்தைப் பொறுத்தவரை யிலும் இன்றியமையாத, தவிர்க்கமுடியாத ஒன்றாகும். காலதாம தத்தைப் பற்றியோ அல்லது ஆகும் செலவைப் பற்றியோ, கவலைப்பட்டுக்கொண்டிருந்தால் மேலே இருக்கவேண்டிய நீர் இல்லாத சூழ்நிலையில், நிலத்திற்கு அடியிலே இருக்கிற நீரை நம் பித்தான் நம்முடைய தமிழகம், தன்னுடைய பாசனப் பணிகள், குடிநீர்ப் பணிகள் உள்ளிட்டு பல்வேறு காரியங்களைச் செய்யவேண்டியிருப்பதால், அத்தகைய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல அவர்களை இன்று தேர்ந்தெடுத்திருக்கின்ற, அன்று என்னைத் தேர்ந்தெடுத்து ராதாபுரம் தொகுதியில் ஏற்கனவே அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அந்தப் பகுதியில் மட்டு மல்லாமல், தமிழகம் முழுவதும் நடைபெற்றுக்கொண்டு இருக் கிறது. இன்னும் சொல்லப்போனால் எங்கெங்கே தண்ணீர் தட் டுப்பாடு இருக்கிறதோ, அங்கே இந்த ஆய்வுகளை ஆரம்பத்தில் செய்யச் சொல்லி, தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிற இடத்திலே ஆழ் குழாய்களைப் போடக்கூடிய நேரத்திலே, வரக்கூடிய ஆய்வு அறிக்கையை தயாரித்துவிட்டு, அதற்குப் பிறகு, அந்தக் குழாய் களை எல்லாம் அடைத்துவிடாமல் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கச் சொல்லியிருக்கிறோம். அந்த முறையில் ஊராட்சி மன்றங்களில், ஆழ் குழாய் கிணறுகள் ஒப்படைக்கசப்பட்டு, அதன் வாயிலாக நன்மைகள் பல பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. சு. சிவராஜ் :** தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடத்தில் நீர் ஆராய்ச்சி மேற் கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் தான் என்னிடம் விவரம் இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், விடை கிடைக்கும்.

**அவிநாசிப் பகுதிக்கு பவானி ஆற்று நீர்.**

*492—(*வினா எண் 1630)*—**திருமதி பி. லட்சுமி :** *மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—*

*பவானி ஆற்று நீரை அவிநாசிப் பகுதியில் உள்ள ஏரி, குளங் களில் வறட்சிக் காலங்களில் நிரப்புகிற திட்டம் அரசின் பரிசீ லனையில் உள்ளதா ?*

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 10-10)

**திருமதி பி. லட்சுமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள கால்வாய்களை நவீனப் படுத்தி, தண்ணீரை சேமித்து அப்படிச் சேமித்த நீர் அவிநாசிக்குக் கொண்டு வரப் படுமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனைதான் என்றாலும் இப்போது எவ்வளவுதான் சேமித்தாலும் தேவையான அளவுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. பாண்டியாறு - புன்னம்புழா தண்ணிரை பவானிக்குத் திருப்பி விடக்கூடிய சாத்தியக் கூறுகளை இன்று இந்த அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது. அத்தகைய சூழ்நிலை உருவாகுமானால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிவோடு இந்த அரசு கவனிக்கும்.

**திருமதி பி. லட்சுமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி ஒரு பிற்தங்கிய வறட்சிப் பகுதி ஆகும். ஆகவே, திருப்பூர் வரை வரும் பரம்பிக்குளம் கால்வாயை அவிநாசிப் பகுதிக்கு நீட்டிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே அது பல விரிவாக்கம், விஸ்தரிப்பு களைப் பெற்று 18 மாதங்களுக்கு ஒரு முறை என்று இருந்த

முறையை மாற்றி இப்போது 24 மாதங்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடலாம் என்ற யோசனையில் அரசு இருக்கிறது. அதை எதிர்த்து பழைய ஆயக்கட்டுதாரர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள். அந்த முறையில் ஏற்கனவே விஸ்தரிக்கப்பட்டு அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் விடுவதில் சிரமம் இருக்கக்கூடிய சூழ்நிலையில் புதிதாக இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தாலுக்காவும், பல்லடம் தாலுக்காவின் வடபகுதிகளும் கடுமையான வறட்சியினால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு நிலத்தடி நீர் இல்லாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் நிலைமையின் அவசரத் தேவையைக் கணக்கில் கொண்டு பவானி ஆற்றின் நீரை அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய குளங்களில் குட்டைகளில் தேக்கி வைக்சக்கூடிய திட்டத்தை மீண்டும் அக்கறையோடு மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. எச. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல் பவானி ஆற்றைப் பொறுத்தவரையில் இப்போது இருக்கக்கூடிய அந்த பவானி சாகர் அணைக்கட்டில் உள்ள பவானி பாசனத்தில் கொடிவாரி மற்றும் காலிங்கராயன் கால்வாய்களின் வாயிலாக அந்த அணைக் கட்டுகளின் வாயிலாக நிலங்கள் பாசனம் பெற்று வருகின்றன. கொடிவாரி அணைக்கட்டின் வாயிலாக 49 ஆயிரம் ஏக்கராவும், காலிங்கராயன் அணைக்கட்டின வாயிலாக 39,100 ஏக்கரும் பாசன வசதியைப் பெற்றுக்கொண்டு வருகின்றன. இது நீங்கலாக லோயர் பவானி புராஜெக்ட் என்று சொல்லக்கூடிய அந்த திட்டம் 1954 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு அதன் வாயிலாக 1 லட்சத்து 97 ஆயிரம் ஏக்கர் டிரை கிராப்ஸ் என்று சொல்லக்கூடிய புஞ்சைப் பயிர்களும், 10 ஆயிரம் ஏக்கர் நஞ்சைப் பயிர்களும் பயன்பெற்று வருகின்றன. இந்தப் பாசனங்களுக்குத் தேவையான அளவுக்குத்தான் தண்ணீர் இருக்கிறது. இந்த எல்.பி.பி. திட்டத்தின் வாயிலாக கோபிசெட்டி பாளையம், பவானி, ஈரோடு மற்றும் தாராபூர் பகுதிகளை உள்ளடக்கிய பெரியார் மாவட்டமும், கரூர் தாலுக்காவை உள்ளடக்கிய திருச்சி மாவட்டமும் பயன்பெற்றுக்கொண்டு வருகின்றன. ஆகவே, இந்த நிலையில் இதை நீட்டிப்பதற்கு தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லோயர் பவானி அணைக்கட்டு திட்டம் நிறைவேற்றப் படுகிறபோது அது அப்பர் பவானி என்றுதான் முதலில் பரிசீலனையில் இருந்தது. அப்பர் பவானியாக கட்டியிருந்தால் அவிநாசி, மேட்டுப்பாளையம், கோவை தாலுக்காவில் வறட்சி



136412
சென்னை-600 008.

யான பகுதிகள் பயன் பெற்று இருக்கும் என்று கருத்து சொல்லப் படுகிறது. அது எப்படி இருந்தாலும் பவானியிலிருந்து இந்த பவானி ஆயக்கட்டில் இருக்கிற நிலங்கள் பாதிக்காத அளவில் வெள்ளக் காலங்களில், மழைக் காலங்களில் அதிகமாக உபரியாகச் செல்கிற நீரை மட்டும் தேக்கி அவிநாசி, மேட்டுப்பாளையம், கோவை, ஆகிய வறட்சியான பகுதிகளுக்கு வருடத்தில் — ஒவ்வொரு மாதமாக — இரண்டு மாதங்கள் குளம் குட்டைகளை நிரப்புவதற்குக் குறைந்தபட்ச திட்டத்தை அந்தப் பகுதியின் நிலையைக் கருதி அரசு பரிசீலிக்குமா ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான ஆய்வை நடத்துவதற்கு உத்திரவை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதுபோல், ஒவ்வொரு முறையும் வெள்ளப் பெருக்கு இருப்பதாக நாம் சொல்லிக் கொண்டாலும் கூட உண்மையில் வெள்ளப் பெருக்கு இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிய தனியாக ஒரு துறையே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. மேலும் இந்த பவானியைப் பொறுத்தவரையில் எல்.பி.பி. பொருத்தவரையில் அங்கே அப்பர் பவானி என்று இருந்து இருக்கவேண்டும். அங்கே தேவையான பாசன வசதிகளை உருவாக்கித் தரவேண்டும். இப்போது அப்படி இல்லாவிட்டாலும் கூட வெள்ளக் காலங்களில் வரக்கூடிய தண்ணீரை குளம் குட்டைகளில் தேக்கி வைக்கக்கூடிய அளவுக்கு நிலமைகளை உருவாக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எனக்குத் தரப்பட்டு இருக்கின்ற விவரங்களின் அடிப்படையில் பவானி அப்படிப்பட்ட சூழ்நிலையை தன்னகத்தே உருவாக்கிக் கொள்ளவில்லை. எந்த நேரத்திலும் அடக்கமாகத்தான் உள்ளாள் என்று தெரிகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பாவனி ஆற்றிலிருந்து எத்தனை இனங்கள் பாசனம் பெற்று வருகின்றன என்பதை அமைச்சரவர்கள் விவரமாகச் சொன்னார்கள். ஆண்டு தோறும், இதுபோன்ற பிரச்சினைகள், எழுப்பப்பட்டு கீழ் பவானி அணையிலிருந்து வேறு பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுவதற்கு கோரிக்கை வைக்கப்பெற்று, ஏற்கனவே பாசனம் பெற்றுக்கொண்டிருக்கிற அந்தப் பகுதி மக்கள், விவசாயப் பெருமக்கள் அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அரசு கூட சொல்லிக் கொண்டிருக்கும் : ஒன்றுக்குமேல் இப்போது வேண்டாம் : இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம். அதிகம் பெறுவது ஆபத்து என்று எல்லாம் அரசு சொல்லிக் கொண்டிருக்கிறது. அது இந்த விவசாயத் துறையிலேகூட பொருந்தும் என்று கருதுகிறேன். ஏற்கனவே பாசனம்பெற்று வருகின்ற கீழ் பவானி பாசன விவசாயிகளும், கடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் விவசாயப் பெருமக்களும் நிம்மதியாக வாழ்வதற்கு, நம்பிக்கை இருப்பதற்கு, அரசு தெளிவான அறிக்கையை வைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

V2/11, 31
N85-11-31

[1985 ஜூலை 3

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். தற்போது பவானி பேசினுக்கு உள்பட்ட ஆயக்கட்டுப் பகுதிகளுக்குத் தேவையான தண்ணீரை, கேரள ஆயக்கட்டுகளுக்கு 0.5 டி.எம்.சி.யும், முன்பே சொன்னதுபோல, முடிவேரி அணைக்கட்டு பகுதிகளுக்கு 18.4 டி.எம்.சி. காலிங்கராயனுக்கு 12.9 டி.எம்.சி.யும், லோயர் பவானிக்கு 36 டி.எம்.சி.யும் ஆக, 67.8 டி.எம்.சி. இந்த பவானி பேசினிலே தற்போது எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் எடுக்க வழி இல்லை என்று பலமுறை நான் சொல்லிவிட்டேன். ஆக்கப் பணிகளைப் பொறுத்தவரையில், இரண்டுக்குமேல் எப்போதும் இருக்கலாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

## அனந்தன் கால்வாய்.

*493*—(*வினா எண் 1800)—**திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், அனந்தன் கால்வாய் சிமெண்ட் தளம் இடும் பணி முடிவடைய இருப்பதனைத் தொடர்ந்து முட்டம் கால்வாய், இரட்டக்கரை கால்வாய் ஆகியவைகளிலும் சிமெண்ட் தளம் இடும் பணியை மேற்கொள்ளும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. யா.சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இந் ச் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனைப்போல், சிற்றாறு பட்டினங்கால் சேனலில் ஷட்டர்கள் எல்லாம் பழுது பார்க்கப்படாத நிலையும், சிமென்ட் தளங்கள் பழுதுபட்ட நிலையில் இருக்கின்றன. அவைகளைச் சரி செய்து, அந்தத் தண்ணீர் ஒழுங்காகக் கிடைக்க அரசு வழி வகை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய பாசனக் கால்வாய்களை நவீனப்படுத்தக்கூடிய பணிகளில் ஈடுபட்டிருக்கக்கூடிய இந்தத் துறை, ஏற்கனவே நவீனப்படுத்தப்பட்டு இருக்கின்ற சிற்றாறு பட்டினங்கால் கால்வாயில் இருக்கக்கூடிய பழுதுகளை நீக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்து இருக்கின்றன. மேற்கொண்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அனந்தன் கால்வாய் வேலை ஏறத்தாழ முடியக்கூடிய தருவாயிலே இருந்து கொண்டு இருக்கிறது. அது மட்டும் அல்ல. கோதையாறு மாடர்னைசேஷன் ஸ்கீமை இம்ப்ளிமெண்ட் பண்ணுவது என்ற



1985 ஜூலை 3]

கருத்தும் அரசு வைத்திருக்கிறது. ஆகவே, கோதையாறு மாடர்னைசேஷன் ஸ்கீமுடன் சேர்த்து இந்த மீதியுள்ள கால்வாய்களை எல்லாம் இரட்டக்கரை போன்ற கால்வாய்களில் உள்ள வேலைகளைத் துவங்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைத்போல், முட்டம், இரட்டக்கரை ஆகிய கால்வாய்களில் சிமென்ட் தளம் இடும் பணியை அரசு மேற்கொள்ளக்கூடிய அந்த எண்ணம் இருந்தாலும் கூட, அத்தகைய பணிகளைத் தொடர்ந்து சேர்த்து மேற்கொள்ளத்தான் 34 கோடியே 54 இலட்சம் செலவில் ஒரு திட்டத்தைத் தயாரித்து அதனை கோதையாறு மேம்பாட்டு திட்டம் என்ற பெயரில் அரசுக்கு துறை அனுப்பியிருக்கின்றது. அரசின் பரிசீலனையில் அந்தத் திட்டம் இருக்கின்றது. அதற்கு நடுவிலே மறுபடியும் ஒரு சில விவரங்கள் கோரி தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களிடத்திலே அந்தத் திட்டம் இருந்து கொண்டிருக்கின்றது. விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(முற்பகல் 10-20)

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல்கோரல்.

### கோட்டையில் பறக்கின்ற தேசியக் கொடி குறித்து

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நமது நாட்டினுடைய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காப்பதிலே தேசிய கீதமும் தேசியக் கொடியும் பெரும்பங்கு வகிக்கின்றன. நாட்டினுடைய புகழையும், பெருமையையும் பறைசாற்றுவதில் தேசிய கொடியை நாம் பெரிதும் மதிக்கிறோம். அந்தத் தேசியக் கொடியைப் பாதுகாப்பது என்பது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும் என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆனால் தமிழகத்தின் தலைமைச் செயலகம் அமைந்திருக்கின்ற நமது கோட்டையில் நெடிதுயர்ந்த கொடிக் கம்பம் இருக்கிறது, அதன் உச்சியிலே பறக்கின்ற நமது தேசியக்கொடி, தாயின் மணிக்கொடி கிழிந்திருக்கிறது என்பதை நான் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆரஞ்சு வண்ணத்தின் ஒரு கோடியிலே துணி கிழிந்தும், பச்சை வண்ணத்தில் துளை ஏற்பட்டும் இருப்பது கீழேயிருந்து பார்த்தாலே தெரிகிறது. இன்று காலையில் கொடியேற்றிய

பிறகுதான் இந்தக் கிழிசல் ஏற்பட்டிருக்கும் என்று சொல்வதற் கில்லை. காலையில் பார்த்திருந்தாலுங்கூட இதை மாற்றியிருக்க லாம். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன், உடனடியாக அந்தக் கொடியை மாற்றவேண்டும்: எதிர்காலத்தில் இதுமாதிரி நிகழாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள் என்பதை யும் தெரிவிக்கவேண்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இந்தக் கோட்டையிலே பறக்கின்ற தேசியக் கொடியைப் பற்றிய பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கொடிக் கம்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், கொடியை நாள் தோறும் ஏற்றி முறைப்படி இறக்குகின்ற பொறுப்பும், இராணு வத்தைச் சார்ந்தது. இராணுவத்தினுடைய முழுப் பொறுப்பிலே இருக்கின்ற ஒன்று. இந்த மாநில அரசுக்கும் அதற்கும் தொடர்பு இல்லை என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே பிரச்னையைக் கிளப்பியிருப்பதன் காரணமாக, இந்தச் செய்தியை அந்த இராணுவத் துறையினுடைய தலைமை அதிகாரிக்குக் கொண்டு சென்று, அதற்கான தக்க ஏற்பாடுகளைச் செய்யும்படி யாக அரசு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

Mr. SPEAKER: The defect has been rectified. இப்பொழுது, போட்டாகிவிட்டது. ஏற்கனவே ஒருமுறை எழுப்பப்பட்டு அதற்கான ரூலிங் கூட இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நாம் சொன்னபிறகுதானே செய்திருக்கிறார்கள். எதிர்கலேத்தில் நடக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

Mr. SPEAKER: This will not come under point of order. இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. ஏற்கனவே இதுபற்றி ரூலிங் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பொ. உத்திராபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். தஞ்சை மாவட்டத்தில் ஜூன் மாதம் 12-ம் தேதி திறந்துவிடப்பட வேண்டிய தண்ணிர் ஒரு மாதத் திற்குப் பின் தங்கி விட்டது. நான்கு மாதங்களாக விவசாயிகள் பட்டினியால் வாடுகிறார்கள். ..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்கள் இருக்கிறார்கள், அதுபற்றி எழுதிக் கொடுங்கள். இது பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வராது. (குறுக்குடு) இதுபற்றி என் அறையில் வந்து பேச வேண்டும்.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நமது சட்டமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கும் காலம் காட்டியானது கடந்த இரண்டு நாட்களாகவும், இன்றும் நம்முடன் ஒத்துழைப்புத் தராமல் வேலை நிறுத்தம் செய்கிறது......





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திடீரென்று லோ வோல்டேஜ் ஏற்பட்டு விடுகிறது. இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஒரு வார காலமாக குமரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்த காரணத்தினால் 200-க்கும் மேற்பட்ட குடிசைகள் கடலோரப் பகுதியிலே கெட்டு விட்டிருக்கின்றன. இது குறித்து......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என் அறையிலே வந்து கேட்க வேண்டும்.

### 3. கவன ஈர்ப்புகள்.

(அ) ஊராட்சி ஒன்றிய மகப்பேறு உதவியாளர்கள், துணைச் செவிலியர்கள் உண்ணா நோன்பு போராட்டம் நடத்துவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, வி. தங்கவேலு, பொன் முத்துராமலிங்கம், பி. கே. எம். முத்துராமலிங்கம், கு. சுப்பராயன், கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் துணைச் செவிலியர்கள் பல கோரிக்கைகளை முன் வைத்து 24-6-1985 முதல் சென்னை உழைப்பாளர் சிலை அருகில் தொடர் உண்ணாவிரதம் இருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மகப்பேறு உதவியாளர், துணைச் செவிலியர்கள் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து, 24—6—1985ஆம் தேதி முதல் உண்ணாவிரதம் இருந்து, பிறகு உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்கள்.

(1) பணிமூப்பு அடிப்படையில் சுகாதார மேற்பார்வையாளர் பதவி வழங்கப்படவேண்டும்.

(டாக்டர் எச்.வி. ஹண்டே) [1985 ஜுலை 3

(2) இரண்டு கட்ட பேச்சு வார்த்தையைக் குறை நீக்கி அரசாணையாக வெளியிடுக.

(3) சுகாதார பார்வையாளர் பயிற்சிக்கு நேரிடைத் தேர்வை ரத்து செய்க.

(4) ஆயாக்களின் பதவி மற்றும் பணி தொடர்ந்து கொடுக்கவும்.

(5) பணி இட மாறுதல்களை ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் மாறுதல் செய்க.

(6) வழங்கப்பட்டு வந்த நிரந்தர பிரயாணப்படியை தொடர்ந்து வழங்குக.

(7) ஊதிய விகிதத்தை பயிற்சி கால தன்மையின் நிர்ணயம் செய்க.

(8) சிறப்பு ஊதியம் (Special Pay) வழங்குக.

(9) நோய் இடர்ப்பாடு ஊதியம் (Risk Allcwance) வழங்குக.

(10) எங்கள் வாரிசுக்கு மருத்துவத்துறை படிப்பிற்கு 10 சதவிகித இடம் ஒதுக்கீடு செய்க.

(11) தமிழ்நாடு பொது சுகாதாரத்துறை துணை விதி 26-ஐ மாற்றி அமைக்கவும்.

(12) தீண்டாமை ஒழிப்புச் சட்டம் போன்று எங்களது பாதுகாப்பிற்கும் பொருந்தும் வகையில் கொண்டு வரவேண்டும்.

பல்நோக்கு சுகாதாரத் திட்டத்தின் கீழ் சமவெளிப் பகுதியாக இருந்தால் 5000 மக்கட்தொகையுள்ள பகுதிக்கு ஒரு துணை சுகாதார நிலையமும், மலைவெளிப் பகுதியாக இருந்தால் 3000 மக்கட் தொகையுள்ள பகுதிக்கு ஒரு துணை சுகாதார நிலையமும் அமைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். இந்நிலையத்தில் ஒரு பெண் சுகாதாரப் பணியாளரும், ஒரு ஆண் சுகாதாரப் பணியாளரும் பணியாற்றுவர். இவர்கள் கிராம மக்களின் அனைத்து சுகாதார நலன்களையும் பேறுவர். இத்திட்டம் அரசு ஆணை எண் 1936 சுகாதாரம் நாள் 29—9—1982-ன் படி தமிழகத்தில் செயல்பட ஆணையிடப்பட்டது. அதன் படி, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றிய 2814 மகப்பேறு உதவியாளர், துணைச் செவிலியர் அரசு தரப்பாக்கப்பட்டு, பெண் சுகாதார பணியாளராக, பல்நோக்கு சுகாதார திட்டத்தில் ஈர்த்துக் கொள்ளப்பட்டனர். அத்திட்டத்தில் அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டது. ஆனால், மேற்கண்ட சங்கம், அரசாணையை எதிர்த்து. உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து தடை உத்தரவு பெற்றது, வழக்கில் தோல்வியுற்றது. உடனே சங்கம் மேல் முறையீடு (Wirt appeal) வழக்கு தொடர்ந்து, தடை உத்தரவு பெற்றது. வழக்கு இன்னும் முடிவு பெறவில்லை.



(டாக்டர் எச்.வி. ஹண்டே)

1985 ஜுலை 3]

இதற்கிடையில், சங்கப் பிரதிநிதிகளுடன் 8—8—1984-ம் தேதி, மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் அவர்களும், 25—9—1984 ம் தேதி இரண்டாம் செயலாளர் அவர்களும் அவர்களது கோரிக்கைகள்பற்றி பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அப்போது எடுத்த முடிவுகளின் அடிப்படையில், சில கோரிக்கைகள் மீது அரசு ஆய்வு செய்து கொண்டு இருக்கிறது. இந்நிலையில் தாங்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அரசுக்கு முறையான முன்னறிவிப்பு ஏதும் இன்றி உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். மேலே கண்ட கோரிக்கைகள் எண் 10, 11, 12 ஆகியவை புதியதாக எழுப்பப்பட்டவை. இவைகள் பற்றி இயக்குநரின் குறிப்புரை பெற்றபின் ஆய்வு செய்யப்படும்.

இச் சங்கம், உயர்நீதி மன்றத்தில் பல்நோக்கு சுகாதாரத் திட்டம் செயல்படுவதற்கு எதிராகத் தடை உத்தரவு பெற்றுள்ளதால், இவர்கள் எழுப்பியுள்ள கோரிக்கைகள் ஆய்வு நிலையில் உள்ளன. இவைகள் மீது இறுதியான ஆணை ஏதும் அரசால் தற்பொழுது வெளியிட இயலவில்லை.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற பதிலானது திருப்திகரமாக இல்லை, மகிழ்ச்சியாகவும் இல்லை. அதே நேரத்திலே, அந்த செவிலியர்கள் கொடுத்திருக்கிற கோரிக்கைகளைப் பற்றி எந்தவித விளக்கமும் அதிலே கொடுக்கப்படவில்லை. அதிலே, அரசுத் துறை உத்தியோகத்தில் இருக்கக்கூடிய 4,000-க்கு மேற்பட்டவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை உங்கள் முன்பு நான் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மகப்பேறு உதவியாளர்கள், துணைச் செவிலியர்கள் ஆகியோர்களுக்குப் பணிமூப்பு அடிப்படையில் புதிய திட்டத்தில் சுகாதார மேற்பார்வையாளர் என பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டும். கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களில் உள்ள மகப்பேறு உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்திருப்பது போன்று கொடுக்கப்பட வேண்டும். 1954-ல் பொதுச் சுகாதாரத் துறையில் இருந்தவர்களை எந்த ஒரு தகுதி அடிப்படையிலும் கருத்தில் கொள்ளாது அவசியத்தை முன்னிட்டு துப்புரவு ஆய்வாளர் பயிற்சிக்கு(—)ஓராண்டு பயிற்சிக் காலத்திற்குப் பதிலாக குறுகிய கால பயிற்சி கொடுத்து துப்புரவு ஆய்வாளர், சுகாதார ஆய்வாளராக அமர்த்தியது போன்று இங்கே இவர்களையும் அமர்த்த வேண்டும். தகுதியில்லாத அடிப்படை சுகாதார ஆய்வாளர், அதாவது, unqualified basic health inspcter-க்கு மேற்பார்வையாளர் பயிற்சி குறுகிய காலம் கொடுத்து சுகாதார மேற்பார்வையாளர் என புதிய திட்டத்தில் பதவி உயர்வு வழங்கப்பட்டு இருப்பது போன்று வழங்கப்பட வேண்டும்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியாகக் கேட்க வேண்டும். இன்னும் 4 பேர்கள் கேள்வி கேட்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கும் கொஞ்சம் பாக்கி வையுங்கள்.

திரு வி. தங்கவேலு : அவர்களுக்கு ஊதிய அடிப்படையில் இருக்கிற வித்தியாசங்களைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஊதிய அடிப்படையில இருக்கிற வித்தியாசங்களையும் மற்றும் இந்த மாற்றல் சம்பந்தமாக, அந்தந்த யூனியனுக்குள்ளேயே செய்வார்களா என்பதையும் அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது எந்தவிதமான விவரத்தையும் நான் சொல்வதற்கில்லை. ஏனென்றால், இந்தச் சங்கம் முதலிலே ஹைகோர்ட்டிலே போய் ரிட் போட்டது. அதற்குப் பிறகு அங்கே தோல்வி அடைந்து இப்பொழுது உயர் நீதிமன்றத்திற்கு அப்பீலில் போயிருக்கிறார்கள். The matter is sub-judice. ஆகவே, எந்த விளக்கத்தையும் நான் சொல்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த விவர அறிக்கையைப் பார்த்தேன். ரிட் அப்பீல் இன்றையதினம் உயர் நீதிமன்றத்திலே இருந்து கொண்டிருப்பதாகவும் 10, 12 கோரிக்கைகள் ஆய்விலே உள்ளதாகவும் தெரிவித்து இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து சமரசமாகப் பேசி உரிய கோரிக்கைகளை நிறைவேற்ற முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக கோர்ட்டுக்குப் போன நேரத்தில், அவர்களை அழைத்து நாம் பேசுவது கிடையாது, எந்த அரசாங்கமும் பேசுவது கிடையாது. இருந்தாலும் அவர்களை நாம் அழைத்துப் பேசி இருக்கிறோம் என்பது நம்முடைய உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன்.

திரு பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு, சங்கத்தினர் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருந்தாலும், நாங்கள் அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறோம் என்று கூறி இருப்பதற்கும் அதன்படி நடந்து கொண்டதற்கும் நான் நன்றி சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கொடுத்திருக்கிற, 10, 12 கோரிக்கைகளைப் போல், இன்னொரு கோரிக்கையும் நம்முடைய நடைமுறையிலே இருக்கிற பிரச்சனையாக இருக்கிற காரணத்தாலே நான் அவர்களுடைய சார்பிலே எடுத்துக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு அந்தத் துணைச் செவிலியர்கள் மற்றும் மகப்பேறு உதவியாளர்கள் கட்டாயமாக 3 முதல் 5 நபர்களைக் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதற்குக் கொண்டு வந்து தர வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆட்களைப் பிடித்துத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிற காரணத்தாலோ, என்னவோ இன்றைக்கு ஒரு மருமகள் அறுவை சிகிச்சைக்குச் சென்ற நேரத்திலே மாமியார் அந்த நிலைக்கு ஆளாக்கப்படுகிற நிலை இருக்கிறது. எனவே, வயது முதிர்ந்த மூதாட்டிகளுக்கு அறுவை





சிகிச்சை செய்கிற அந்தப் பிரச்சினைகள் எல்லாம் வருகின்ற நிலைமை இருக்கிறது. அந்த முறைக்கு மாறாக இன்னும் நல்ல முறையிலே அந்தக் குடும்பநலத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு, எடுத்துச் சொலவதற்கு அமைச்சர் அவர்கள் சில புதிய திட்டங்களைச் சொல்வார்களா?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நாம் இப்போது பெரிய மாநிலங்கள் என்று சொல்லக்கூடிய மாநிலங்களில் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய திட்டத்தைப் பொறுத்த வரையில் நாம் எப்படிச் செயல்படுத்துகிறோம் என்பதை மத்திய அரசுக்கு அனுப்புகிறோம். மத்திய அரசு என்ன செய்கிறது என்றால், ஒரு குழு அனுப்பி, நாம் கொடுத்த புள்ளி விவரங்களை 'ராண்டம் செக்கிங்' செய்கிறார்கள். அது மட்டுமல்ல. மத்திய அரசினுடைய பல்வேறு கொள்கைகளை நாம் சரியான முறையிலே எப்படி அமுல்படுத்துகிறோம் என்று கண்காணித்து பரிந்துரை அனுப்புகிறார்கள். அந்த வகையில் மத்திய அரசு நாம் செய்து வருகிற பணியைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறது, மனத் திருப்தி அடைகிறது.

திரு. கு. சுப்பராயன் : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் சமவெளியில் 5,000 மக்கள் தொகை, மலைவாழிடங்களில் 3000 மக்கள் தொகை என்ற அளவில் நிர்ணயித்து அங்கே ஒரு சப் சென்டர் அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு தமிழ்நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டிருக்கிறதா? அதைப்போன்று, சங்கப் பிரதிநிதிகள் எந்தவிதமான முன் அறிவிப்பும் கொடுக்காமல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் 8-8-84 மற்றும் 25-9-84 ஆகிய தேதிகளில் பேச்சுவார்த்தை நடத்தியும், அதிலிருந்து 10 மாதங்கள் ஆகியும் ஆக்க பூர்வமான பதில் அரசாங்கத்திலிருந்து கிடைக்கவில்லை என்பதால் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இந்த நிலைமை ஏற்பட்டிருந்தாலும் ஒரு முன் உதாரணம் ஏற்படுத்துகிற வகையில் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துபேசி அவர்கள் மீது போட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் பெற்று மனிதாபிமான அடிப்படையில் அவர்களுடைய கோரிக்கைகளை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அவர்களுடைய சங்கப் பிரநிதிதிகளை 8-8-84 அன்று மக்கள் நல் வாழ்வுத் துறைச் செயலாளரும், 25-9-84 அன்று இரண்டாம் செயலாளரும் (செகன்ட் செக்ரட்டரி) அழைத்துப் பேசியிருக்கிறார்கள். அதற்கிடையே அவர்கள் உயர்நீதிமன்றத்திற்குப் போயிருப்பதால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. கேஸை வித்ட்ரா பண்ணினால் பேசுவதற்கு வசதியாக இருக்கும். இல்லாவிட்டால் நிர்வாகத்தைப்பற்றி ஒரு தவறான எண்ணம் வந்துவிடும். ஒவ்வொருவரும் கோர்ட்டுக்குச் சென்று, நாங்கள்

கோர்ட்டுக்குப் போனதால்தான் காரியம் நடந்தது, வாக்குறுதி தந்தார்கள் அல்லது வாக்குறுதி தராவிட்டால் உண்ணாவிரதம் இருப்போம் என்ற காரியங்களில் ஈடுபடுவதாக இருந்தால் இந்த இலாகா மட்டுமல்ல, மற்ற இலாகாக்களையும் பாதிக்கும் நிலைமை ஏற்படும் என்பதால் முதலிலே அவர்கள் கேஸை வித்ட்ரா பண்ண வேண்டும், அதற்குப் பிறகு பேச வேண்டும். இருந்தாலும் இங்கே என்னை சந்திப்பதற்கு 4, 5 நாட்களுக்கு முன்னால் வந்தார்கள். தாராளமாகப் பார்க்கலாம் என்று சொன்னேன். சுமார் அரை மணி நேரம் பேசினோம். அவர்களுடைய கோரிக்கைகள் பரிசிலனையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, விவர அறிக்கையில் 24-6-85 முதல் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து, அதை முடித்துக் கொண்டதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உண்ணாவிரதத்தை முடிக்கக்கூடிய நேரத்தில் அமைச்சரோ, அரசோ ஏதேனும் வாக்குறுதி அல்லது அவர்கள் பிரச்சனையை நல்லமுறையில் பரிசீலிப்பதாக உறுதி அளிக்கப்பட்டிருக்கிறதா? மேலும் அமைச்சர் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள். நீண்டகாலமாக பல முயற்சிகள் மேற்கொண்டு, அதற்குப் பலன் அளிக்காத காரணத்தால் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள் என்ற எண்ணத்தோடு இதை ஒரு மனிதாபிமானப் பிரச்சனை என்று கருதி உரிய முறையில் அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுமா? மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளரும் இரண்டாம் செயலாளரும் இந்தப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசியிருக்கிறார்கள். இதை ஒரு பிரஸ்டிஜ் இஷ்யூவாக எடுத்துக் கொள்ளாமல் அமைச்சர் அவர்களே நேரடியாக அவர்களை அழைத்துப் பேசி, இந்தப் பிரச்சனைக்கு ஒரு நல்ல முடிவு ஏற்பட நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். இந்த உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுவதற்கு எந்தவிதமான வாக்குறுதியும் கொடுக்கப்படவில்லை. இரண்டாவதாக இந்தப் பிரச்சனையை நல்லமுறையில் மனிதாபிமானத்தோடு பார்க்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றிருந்தாலும் நான் அழைத்துப் பேசியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

**(ஆ) பவானிசாகர் அணையின் நீர்ப் பிடிப்புப் பகுதிக்கு மேலே உள்ள அரசு நிலங்களில் சாகுபடி செய்கிற விவசாயிகள் வெளியேற்றப்படுவது.**

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பவானிசாகர் அணை கட்டும்போது வெளியேற்றப்பட்ட விவசாயிகள், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான அவ்வணையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் நீர் தேங்காத இடங்களில் பல ஆண்டுகளாக விவசாய சாகுபடி செய்து வருவதை வன இலாகா தடுப்பதோடு, சாகுபடி செய்த பயிர்களை வெளியே





கொண்டுவர இடையூறு செய்து வருவதால், அப்பகுதி விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

பவானிசாகர் அணை கட்டும்போது நீர்த்தேக்கத்தில் நீர்ப் பிடிப்பில் உள்ள விவசாயிகளுக்கு அவர்களது நிலத்திற்கு இழப்பீட்டுத் தொகை அரசால் தரப்பட்டு விட்டது. மேலும் இவ்விவசாயிகளுக்கு பன்னாரி காட்டுப்பகுதியில் தங்க இடமும் விவசாயத்திற்கு நிலமும் தரப்பட்டது.

பவானிசாகர் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு மேலே உள்ள நிலங்களில் மரம் நடுவதற்கு வனத்துறைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அந்நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏற்படாமலிருக்க தடை செய்யப் பட்டுள்ளது. அவ்வாறு வனத்துறைக்குத் தந்த அரசு இடங்களில் விவசாயிகள் பயிர் செய்வதை வனத்துறை தடை செய்துள்ளது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற பதிலில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் இல்லாமல் இருக்கின்ற மற்ற பகுதிகள் வனத்துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்தார்கள். வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகள் சாகுபடி செய்வதற்கு உரிமை கொடுக்கவில்லை. ஏற்கெனவே பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்யக்கூடியவர்கள் அனுமதியோடு சாகுபடி செய்யக்கூடியவர்கள் தங்களுடைய சொந்த நிலமாக வைத்துக் கொண்டிருந்த நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள். அதிலே 3, 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை தண்ணீர் தேங்க வாய்ப்பு இருக்கின்றது. அவ்வாறு தண்ணீர் தேங்காத காலங்களில் மட்டும்தான் அவர்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நிலம் விவசாயத்திற்கு லாயக்கற்ற நிலமாக இருக்கின்றது. லிங்காபுரம், மூலத்துறை, வச்சிராப் பாளையம் போன்ற பகுதிகளில் உள்ள கிராம மக்கள் தங்களுடைய வாழ்க்கையை இதில்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலம் இல்லை என்றால் அவர்களுக்கு வாழ வழியில்லை என்ற நிலையில் அவர்கள் இந்த நிலத்தை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். பொதுப்பணித் துறையைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு எந்தவிதமான தொந்தரவும் கொடுக்காமல் ஆண்டுதோறும் குத்தகைத் தொகையை லீஸாக வாங்கித்

கொண்டு அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அப்படி அனுமதிக்கப்பட்ட இடங்களில் இருக்கின்ற அந்தக் கிராமவாசிகளுக்கு தொடர்ந்து பொதுப்பணித்துறை, வனத் துறை ஆகியவற்றைச் சேர்ந்த பகுதிகளுக்கு இடையூறு இல்லாமல் பார்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏற்கெனவே பொதுப் பணித்துறை அதிகாரிகளோடும் வனத்துறை அதிகாரிகளோடும் கலந்து பேசியிருக்கிறார்கள். ஆனால் அதுபற்றிய விவரம் அமைச்சர் அவர்களின் பதிலில் வரவில்லை. எனவே தொடர்ந்து நடவடிக்கை எடுத்து அந்த விவசாயிகளுக்கும், பொதுப்பணித்துறை நிலங்களுக்கும் ஒரு பாதுகாப்பை பொதுப்பணித்துறை ஏற்படுத்திக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறையைச் சேர்ந்தவர்கள் பணியை மேற்கொள்ளக் கூடிய நேரத்தில் வனத்துறைக்கு உரிய பகுதிகளில் அந்தப் பணிகளை மேற்கொள்ளும்போது வனத்துறையின் ஒப்புதல் இல்லாமல் பணியை மேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். அதைப்போன்று பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான நிலங்களில் பொதுப்பணித்துறையினரின் அனுமதியில்லாமல் ஏலம், குத்தகை போன்ற காரியங்களில் ஈடுபட்டு மற்றும் பணிகளை மேற்கொள்ள வனத்துறையினருக்கு எந்த உரிமையும் இல்லை. எனவே அந்த வகையில் நீர்ப்பிடிப்புப் பகுதிக்கு மேலே உள்ள நிலங்களைத்தான் மரங்களை நடுவதற்காக வனத்துறைக்கு அளித்திருக்கிறோம். அந்த நிலங்களில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் குத்தகைக்கு விடுவதும், வேறு பணிகளில் ஈடுபடுவதும் பொதுப்பணித்துறையைச் சேர்ந்திருக்கக்கூடிய சூழ்நிலைக்கேற்ப மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளாகும். ஆகவே அப்படிப் பட்ட நிலைமைகள் இருந்தால் அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வனத்துறைக்கு எழுதி வனத்துறையினருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் அல்லது அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை உரிய அமைச்சரின் மூலமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. சின்னராசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை, விவசாயிகளுக்கு அனுமதி கொடுக்கின்றபோது ஒவ்வொரு ஏக்கருக்கும் இவ்வளவு குத்தகை என்று நிர்ணயிக்காமல் பயிருக்கு ஏற்ற வகையில் இவ்வளவு என்று நிர்ணயித்திருப்பதால் பல நேரங்களில் அதிகாரிகள்தான் இந்தக் குத்தகையை நிர்ணயிக்கவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. அது விவசாயிகள் மத்தியில் சில நேரங்களில் சங்கடங்களை ஏற்படுத்துகின்றது என்ற வகையில் பயிருக்கு என்ற முறையை மாற்றி ஏக்கராவுக்கு இவ்வளவு குத்தகை என்று நிர்ணயித்து அதனை எளிதாக்கக் கூடிய அளவில் அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குத்தகை நிர்ணயிக்கக்கூடிய நிலைமைகளைப் பொறுத்தமட்டில் மார்க்கெட் நிலவரத்தின் அடிப்படையில்தான் நிர்ணயிக்கிறார்கள். பயிருக்குப் பயிர் மாறுபாடாக இருக்கக்





கூடிய சூழ்நிலையை வேண்டுமானால் மாற்றியமைக்கக் கூடிய வகையில் இருக்கக்கூடிய நிலப்பரப்புக்கு ஏற்ப குத்தகை வசூலிக் கக்கூடிய அளவுக்கு உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க உரிய வழி வகை செய்யப்படும் என்பதைப் பொறுத்தவரையில் உரிய முறையில் நிலைமைகளை எல்லாம் தீர பார்த்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

## 4. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை, பொது நிறுவனங்களின் குழுத் தலைவர் திரு. பி. முசிறிபுத்தன் அவர்கள் அவைக்கு அளிப்பார்.

**திரு. பி. முசிறிபுத்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன் :—

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் முதலாவது அறிக்கை.

(ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1978-79ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை மீதான மேற்படி குழுவின் இரண்டாவது அறிக்கை.

(இ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் தொழில் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் மூன்றாவது அறிக்கை.

[1985 ஜூலை 3

5. வரவு-செலவுத் திட்டம், 1985-86, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை மற்றும்

கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்—தொடர்ச்சி.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

மாநில ஆயத் தீர்வையைப் பற்றி பேசுவதற்கு முன்னால், நேற்றிலிருந்து இதுவரை நடைபெற்ற இந்த விவாதத்தில் பெரும்பாலும் உறுப்பினர்கள் தொட்டுப் பார்க்காத, அல்லது அதிகமாக விவாதிக்காத மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் பற்றி முதலிலே ஒரு சில கருத்துக்களை நான் எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

அதுவும் குறிப்பாக மாநில மத்திய அரசுகளுக்கு இருக்கிற உறவுகளைப் பற்றி ஆராய்வதற்கு சர்க்காரியா கமிஷன் நியமிக்கப்பட்டு அது ஆய்ந்து கொண்டிருக்கிற இந்த வேளையில், அந்தக் கமிஷனுக்கு நம்முடைய அரசினுடைய ஆலோசனைகளாக அல்லது பரிந்துரைகளாக ஒரு சிலவற்றைச் சொல்ல வேண்டும் என்பதற்காக ஒரு சில கருத்துக்களை நான் இந்த மன்றத்திலே மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்து வைக்க விரும்புகிறேன்.

ஜனாதிபதியினால் மைய அரசினுடைய பிரதிநிதியாக அல்லது அவர்களின் மூலமாக இந்த மாநிலத்திற்கு ஆளுநர்களை நியமிக்கிறபோது, அந்தந்த மாநிலங்களைக் கலந்து பேசித்தான் மைய அரசு அவர்களை நியமிக்கவேண்டும் என்பதுதான் கடைபிடிக்கப்படவேண்டிய ஒரு முறையாக இருந்து வருகிறது. ஆனால் இதுவரையில் அந்த மரபு கடைபிடிக்கப்பட்டதாக தெரியவில்லை. அப்படி அது கடைபிடிக்கப்படாததன் காரணமாகத் தான் சில மாநிலங்களிலே இப்படி ஆளுநர்களை நியமிக்கிறபோது சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக மேற்கு வங்கத்திலே பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தரை நியமிக்கிற பிரச்னைகளிலே அரசுக்கும், ஆளுநருக்கும் ஏற்பட்ட மோதல் போன்ற கசப்பான நிகழ்ச்சிகளும், ஆந்திர மாநிலத்திலே ஏற்பட்ட கசப்பான நிகழ்ச்சிகளும், இதை நிரூபிக்கும் முகமாக இன்றைக்கு அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



இருந்தாலும் நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிற ஆளுநர், பிரச்னைகளுக்கு உரியவர்களாக இல்லாமல் இருந்தாலும் அந்த மரபு கடைபிடிக்கப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. எனவே ஆளுநரை நியமிக்கிறபோது அந்தந்த மாநில அரசுகளை கலந்து தான் மைய அரசு நியமிக்கவேண்டும் அல்லது அதன் ஒப்புதலைப் பெற்று நியமிக்கவேண்டும் என்ற ஒரு கருத்தை சர்க்காரியா கமிஷனிடம் நம்முடைய அரசு வலியுறுத்த வேண்டும், அல்லது பரிந்துரையாகக் கொடுக்கவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி மத்திய அரசால் நியமிக்கப்படுகிற ஆளுநர்களுக்கு அரசியல் சட்டத்தினுடைய 356-வது ஷரத்தின்படி சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அதிகாரங்களின்படி மாநில ஆளுநர், யாராவது கொடுக்கின்ற புகார்களை விசாரிக்காமல்கூட, அவர் அதை நம்பி, உண்மை இருக்கும் என்று கருதினால், அந்த மாநில அரசை கலைப்பதற்கு ஜனாதிபதியிடம் பரிந்துரைகளைச் செய்யலாம், அதன்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று அப்படிப்பட்ட ஒரு ஷரத்து அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த ஷரத்து அரசியல் சட்டத்திலே தேவைதானா என்பதையே நாம் இப்பொழுது சிந்திக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு அரசாங்க ஊழியரைக்கூட பதவியிலிருந்து நீக்கம் செய்யவேண்டும் என்று சொன்னால், வாய்ப்பு கொடுத்து, விசாரித்து பிறகு தண்டனை வழங்க வேண்டும் என்பதுதான் இன்றைக்கு நடைமுறையிலே இருக்கிற சட்டப்படியான உரிமைகள். ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற ஒரு மாநில அரசை, நியமிக்கப்படுகிற ஒரு ஆளுநர் நினைத்தால் கலைக்கலாம் என்ற நிலை இருக்குமானால், மக்களுக்கு ஒரு மரியாதை இல்லாமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். எனவே இந்தப் பரிந்துரையை நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் சர்க்காரியா கமிஷனுக்கு கொடுக்கவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல அரசியல் சட்டத்தில் மாநில அரசுகளின் கூட்டுக் கவுன்சில் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு கவுன்சில் இருந்தால்தான் மத்திய மாநில அரசுகளிடையே நல்ல உறவும், ஒத்துழைப்பும் இருக்குமென்று அரசியல் சட்டத்தை உருவாக்கிய மேதைகள் நம்பினார்கள். ஆர்ட்டிகிள் 263-ன்படி மாநிலங்களுக்கிடையே பிரச்னைகளை விசாரிக்கலாம், பொதுவான பிரச்னைகள் குறித்து விசாரித்து ஆய்வு செய்யலாம், இப்படிப்பட்ட பிரச்னைகளில் கருத்துத் தெரிவிக்கவும், பரிந்துரைகள் செய்யவும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தக் கவுன்சிலை அழைத்து பிரச்னைகளைத் தீர்க்க அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த ஆர்ட்டிகிளில் 'If any time it

appears to the President that the public interests would be served by the establishment of a Council charged with the duty of— என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு கவுன்சில் அமைக்கப்படுமானால் மாநிலங்களுக்கிடையே உள்ள எவ்வளவோ பிரச்னைகளை நாம் தீர்த்துக்கொள்ளலாம். ஒகேனக்கல் நீர்மின் திட்டம் தேவையென்று 30 ஆண்டுகளுக்கு மேலாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்னைகள் காரணமாக அது நிறைவேறாமல் இருக்கிறது. அதேபோல காவிரி நதி நீர்ப் பிரச்னை முடிக்கப்படாமல் இருக்கிறது. மேற்கு நோக்கி ஓடி வீணாக கடலில் கலக்கிற தண்ணீரை பயன்படுத்திக்கொள்ள எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை.

அதேபோல நமமுடைய மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தெலுங்கு-கங்கா திட்டம்கூட தாமதப்படுத்தப்படுகிறது. அப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால் அரசியல் சட்டத்தில் சொல்லப்படுகிற மாநில அரசுகளின் கூட்டுக் கவுன்சில் நிச்சயமாக அவசியம். எந்தெந்த ஷரத்துக்களையோ பார்த்து நடவடிக்கை எடுக்கிற மத்திய அரசின் கண்ணில் 356-ம் ஷரத்து படவில்லை. இந்த மாநில கூட்டுக் கவுன்சில் ஆரம்பிக்கிற ஷரத்தான 263-வது ஆர்ட்டிக்கிள் அவர்கள் கண்ணிலே படாமல் போவதற்கு என்ன காரணமென்று தெரியவில்லை. எனவே நம்முடைய அரசினுடைய பரிந்துரையாக, அப்படிப்பட்ட பிரச்னைகளைத் தீர்க்க ஒரு கூட்டுக் கவுன்சில் அமைப்பதற்கு மத்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனவே இந்த மூன்று பரிந்துரைகளை சர்க்காரியா கமிஷனுக்கு நம்முடைய அரசின் சார்பிலே கொடுக்கவேண்டும், பரிந்துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய தலைமைச் செயலகத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு இங்கே போடப்படுகிற சட்டம்தான் இந்த நாட்டினுடைய கடைக்கோடியில் இருக்கிற ஒவ்வொரு குடிமகனுக்கும் போய்ச் சேர்கிறது. எனவே இந்தச் செயலகம் சிறப்பு வாய்ந்த செயலகமாக, இந்த நாட்டை ஆள்கிற செயலகமாக இருந்து வருகிறது. எனவே இந்தச் செயலகத்தில் இப்போது இருக்கிற நிர்வாக அமைப்பு முறையில் சில நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்தால் பணிகளை வேகமாகச் செய்ய முடியுமென்ற கருத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய அரசில் பல துறைகள் இருக்கின்றன. அந்தத் துறைகளுக்கு அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் ஏதாவது விவரத்தை ஒரு துறையிலிருந்து இன்னொரு துறை தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், அந்த விவரத்தைப்





பெறுவதற்கு காலதாமதம் ஆகிறது. அந்த விவரத்தை எளிதில் பெறமுடியவில்லை. அதுமட்டுமல்ல, ஒரு துறையில் இன்னொரு துறையிலிருந்து தகவல் கேட்டு பணியைக் செய்யலாம், திட்டத்தை நிறைவேற்றலாம் என்றாலும் ஒரு துறைக்கும் இன்னொரு துறைக்கும் சரியான சோ-ஆர்டினேஷன் இல்லாமல் இருக்கிறது. இந்தக் குறைபாடு இருப்பதை நம்மால் தெரிந்து கொள்ளலாம்.

அதேபோல ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஒரு துறையிலிருந்து தகவல் பெறவேண்டுமென்றாலும் கூட அது இயலாத காரியமாக இருந்து வருவதை இந்த நேரத்தில் இந்த அவைக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தக் குறைபாடுகளைப் போக்கத்தக்க வகையில், துறைகளிலிருந்து விவரம் பெறுவதற்கு, ஒவ்வொரு துறையிலும் இன்பர்மேஷன்-கம்-பப்ளிக் ரிலேஷன் ஆபீசர்களை தொடர்புகொள்கிற வகையில் நியமித்தால் அப்படிப்பட்ட பணிகளைச் செய்வதற்கும், ஒரு துறைக்கும் இன்னொரு துறைக்கும் தொடர்பு கொள்வதற்கும், அதன்மூலம் பணிகளையும், திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு வசதியாக இருக்குமென்ற கருத்தை இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

அதைப்போல அரசு ஆணைகளை நாம் நிறைய போடுகிறோம். அப்படி அரசு ஆணைகள் போடப்படுகிறபோது, அந்த ஆணைகள் நமக்கு வேண்டும் என்று சொன்னாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அது கிடைக்கக்கூடிய சூழ்நிலை என்பது இப்போது இல்லை. இன்னும் சொல்லப்போனால் ஏற்கனவே போடப்பட்ட அரசுஆணைகள் மீது, ஒரு உத்தரவு போடுவதற்கு அந்த கோப்பு இன்றைக்கு இருக்குமானாலும்கூட, அந்தக் கோப்பிலே அரசு ஆணை மீது முடிவு எடுப்பதற்கு அந்த அரசு ஆணையைப் பெறுவதற்கு, அல்லது பெற்று அதன் மீது முடிவு எடுப்பதற்கு கிட்டதட்ட 2 மாதம், 3 மாத காலம் ஆகிறது என்று சொல்கிறார்கள். எனவே நான் சொல்ல விரும்புவது, இந்த அரசு ஆணைகளை ஒரு குறிப்பிட்ட இடத்திலேயிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள், அல்லது அதிகாரிகள் பெறுவதற்கு வசதியாக ஒரு ஜீ.ஓ. டாட்டா பேங்க் ஒன்றை நம்முடைய செயலகத்திலே ஆரம்பித்தால், அது வசதியாக இருக்கும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் சில முக்கியத் துறைகள் இன்றைக்கு இருக்கின்றன. குறிப்பாக வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டால், அங்கே செயலாளராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்கிறார். அவர்கள் நியமிக்கப்பட்ட பிறகு, வேளாண்மைத்துறையைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும் என்றால், முதலிலேயிருந்து அவர்கள் வேளாண்மைத்துறைப் பற்றி தெரிந்துகொள்ளவேண்டிருக்கிறது. அல்லது அவர் டைரக்டர் ஆப் அக்ரிகல்ச்சர் அவர்களை டிபன்ட் பண்ண

வேண்டியிருக்கிறது. அப்படிப் போடுகிறபோது அவர்களும்
ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாகத்தான் இருக்கிறார்கள். எனவே அ
ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்னதான் திறமையானவர்களாகவும்,
அனுபவம் உள்ளவர்களாகவும் இருந்தாலும், அந்தத் துறையை
பற்றித் தெரிந்து கொள்ளக்கூடிய அந்த வாய்ப்பு அவர்களுக்கு
மிகவும் குறைவாக இருப்பதால், அந்தத் துறையினுடைய மேம்
பாட்டிற்குச் செய்கிற காரியங்களை அவர்கள் துரிதமாக செய்யக்
கூடிய வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. எனவே மைய அரசிலே
இன்றைக்கு ஒவ்வொரு துறையிலேயும் இருப்பதைப் போல, டெக்
னிக்கல் அட்வைசர்கள் என்று இருப்பதாக அறிகிறேன், அதைப்
போல இங்கேயும் ஒவ்வொரு துறைக்கும் குறிப்பாக, இன்டஸ்ட்ரிஸ்,
அக்ரிகல்சர் போன்ற துறைகளுக்குப் போடவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன். என்னதான் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்
அந்தத் துறையை கண்காணித்து, நிர்வகித்து வந்தாலும் அவர்
களுக்கு ஆலோசனை தருவதற்கு டெக்னிக்கல் அட்வைசர்கள்
என்று நியமிக்க அதிலே அவர்கள் நிறைய அனுபவம் பெற்றவர்
களாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்னொன்று. நம்முடைய அரசு உத்தரவுகளைப்
போட்டாலும், அதை நிறைவேற்றுவதிலே காலதாமதம் ஏற்படு
கிறது என்ற குறைபாடு இருக்கிறது. அந்தக் குறைபாட்டை நீக்க
வேண்டும். நம்முடைய இந்தத் தலைமைச் செயலகத்திலே அந்தக்
குறைபாடு இருந்தாலும், பிறகு மாவட்ட நிர்வாகத்திலேயும்,
வட்ட நிர்வாகத்திலும் அது பிரதிபலிக்கும், இன்னும் அதிகமான
காலதாமதத்தை அது உண்டாகும். எனவே நம்முடைய அரசால்
போடப்படுகிற அந்த உத்தரவுகள் உடனடியாக நிறைவேற்று
வதற்கு உரிய சூழ்நிலைகளை நம்முடைய உயர் அதிகாரிகள்
கண்காணித்துச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அதேபோல் அமைச்சர்களைப் பற்றி ஒரு கருத்தை
மட்டும் சொல்லலாம் என்று கருதுகிறேன். அமைச்சர்களைப்
பொறுத்தவரையிலும் என்னுடைய கருத்து, ஆங்காங்கு மாவட்
டங்களில் நடைபெறுகின்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்
களுக்கு அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில்
கலந்து கொண்டால், அந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்தினுடைய
நோக்கம் நிச்சயமாக நிறைவேறும் என்று நான் கருதுகிறேன்.
அமைச்சர் பெருமக்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. சில
அமைச்சர்கள், சில சட்டமன்ற உறுப்பினர்களை தங்களுடைய
சட்டமன்ற உறுப்பினர்கள் என்றும் அந்த மாவட்டத்தினுடைய
சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய அமைச்சர்கள் என்று
சொல்லி இன்றைக்கு வைத்துக்கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்
கிறது. இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், சில
அமைச்சர்கள் சில மாவட்டங்களுக்கு வருவது குறைவாக இருக்
கிறது. சுற்றுப் பயணம் செய்வது மிகவும் குறைவாக இருக்கிறது.
அமைச்சர் பெருமக்கள் தங்களுடைய ஜுரிஸ்டிக்சன் தமிழ்நாடு முழு
வதும் இருக்கிறது என்பதை மனதிலே கொண்டு, அவர்கள் ஆக்க



பூர்வமான பணிகளைச் செய்வதற்கு, சுற்றுப் பயணம் மேற்கொள்
வதன் மூலமாகவோ, அல்லது கண்காணிப்புச் செய்வதன் மூல
மாகவோதான் அங்கே மாவட்டத்தில் இருக்கிற பணியாளர்கள்
அக்கறையோடும் பொறுப்போடும் செயல்படுவதற்கு வாய்ப்பாக
இருக்கும். எனவே அமைச்சர்கள் ஒரு பரந்த கண்ணோட்
டத்தோடு, மாநிலம் முழுவதும் தங்களுடைய துறையினுடைய
பணிகள் செவ்வனே சிறப்பாக நடைபெறுகிறதா என்பதைக்
கண்காணிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர்
நாவலர் அவர்கள் நிதி நிறுவனங்களுடைய கொள்கை விளக்கக்
குறிப்பு ஒன்றை வைத்திருக்கிறார்கள். அந்தக்கொள்கைக் குறிப்
பிலே வங்கிக் கடனைப் பற்றி ஒன்று சொல்லப்பட்டு இருக்கிறது.
வங்கிக் கடனைப் பொறுத்தவரையில் சமுதாயத்திலே நலிந்த பிரி
வினருக்கு உதவுவதில் ஒரு மிகப் பெரிய சாதனையாக இருக்கிறது.
எனவே அதைப் பொறுத்தவரையிலும் நிதி நிறுவன சீர்மைத்துறை
அதைக் கண்காணித்து வருகிறது. அந்தத் துறையினுடைய இந்தக்
கடன் வழங்குகின்ற திட்டத்தை மாவட்ட அளவிலே மாவட்ட
ஒருங்கிணைப்புக் குழுவால் கண்காணிக்கப்படுகிறது. அந்தக் குழு
விற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருக்கிறார்கள்.
அதிலே பிரதிநிதிகளாக வங்கிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும்,
வங்கிக் கடனோடு தொடர்பு கொண்ட மாவட்ட அதிகாரிகள்
அதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆனால் கடன் பெறுப
வர்கள் பெரும்பாலும் கிராமத்திலேஇருக்கிற விவசாயிகள், ஏழை
எளியவர்கள்தான். எனவே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற
அல்லது கண்காணிக்கின்ற அந்தக் குழுவிலே மக்களுடைய பிரதி
நிதிகள் இடம்பெறாதது உள்ளபடியே கவலைதரக் கூடிய ஒன்றாக
இருக்கிறது. எனவே இந்தக் கடன் வழங்குகின்ற திட்டத்தில்
அந்தத் திட்டத்தைக் கண்காணிக்கின்ற மாவட்ட ஒருங்கிணைப்பு
குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்க்கவேண்டும் என்று
நான் நாவலர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாநில ஆயத் தீர்வைத் துறையைப்
பற்றிச் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்
கனவே நேற்றைய தினம் நிறைய உறுப்பினர்கள் பேசியிருந்தாலும்
நான் ஒருசில கருத்துக்களைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.
துணைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் நேரம் கொடுக்கவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு உறுப்பினர்கள்
மிகவும் இந்த மதுவிலக்குக் கொள்கையில் அக்கறை கொண்டு இருப்
பதைப் போல நேற்றெல்லாம் பேசினார்கள்.

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழக
முதலமைச்சர் டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவர்
அவர்கள் இந்த மது விலக்குக் கொள்கையை தீவிரமாக கடை
பிடித்து வருபவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

ஆனால் இந்தக் கொள்கையைப் பொறுத்தவரையில் நமக்குத் தெரிந்த வரையில் எந்த மாநிலமும் இன்னும் சொல்லப்போனால் எந்த நாடும் வெற்றி கண்டதாக நமக்குத் தெரியவில்லை. மேலும் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இதை தன்னுடைய சொந்த கொள்கையாக வைத்து இதை எப்படியாவது அமல் செய்யவேண்டும் என்ற அந்த நம்பிக்கையில் இன்னமும் இருந்து வருகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் மகாத்மா காந்தி அடிகள் அவர்கள் பிறந்த அந்த மண்ணில் கூட இந்த திட்டம் தோல்வி அடைகிற சூழ்நிலை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் குஜராத் மாநிலத்தில் ஒரு கமிஷன் அமைக்கப் பட்டு, உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட அந்தக் சமிஷன் ரிப்போர்ட்டில் பார்த்தால் இந்தத் திட்டத்தை நிச்சயமாக அமல் செய்யமுடியாது, அரசால் அமல் செய்ய முடியாது. வேண்டு மானால் பிரச்சாரம் செய்யலாம் என்று இன்றைக்கு பரிந்துரை கொடுத்து இருக்கிறது. எனவே நான் குறிப்பிட்டுச் சொல்லுவது இதை அரசால் நிச்சயமாக செயல்படுத்த முடியாது, வெற்றி காண முடியாது. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு குடிமகனும் இந்தக் கொள்கையை அமல் செய்ய வேண்டும். அப்படி அமல் செய்தால் தான் இந்தத் திட்டம் வெற்றி பெற முடியும். எனவே நம்முடைய அரசு இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் இன்றைக்கு ஏற்றுக்கொண்டு இருக்கிற இந்தக் கொள்கையின் அடிப்படையில் மக்களுக்கு எவ்வளவு நன்மைகள் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு அரசு கடமைப்பட்டிருக்கிறது என்று சொல்லி இன்றைக்கு இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வந்து மக்களுக்கு வேண்டிய அந்த நல்ல காரியங்களை செய்து கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப் பினர்கள் நன்கு அறிவார்கள்.

இன்றைக்கு கொண்டு வந்து இருக்கக்கூடிய அந்த சட்டமுன்வடிவின்படி இன்றைக்கு நாம் பெற்று இருக்கிற அனுபவம் கள்ளச் சாராயம்—முழுமையாக என்று சொல்ல வில்லை முடிந்த வரையில் ஒழிக்கப்பட்டு அதில் வெற்றி கண்டு இருக்கிறோம். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் முதலாவதாக கள்ளச் சாராயத்தை ஒழித்துவிட்டு பிறகு எந்தத் துறையின் மூலமாவது அந்த வருவாயை சம்பாதிக்கிற வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு இந்தத் திட்டத்தை அமல் செய்தால் அது மக்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும் என்ற அடிப்படையில் இன்றைக்கு நம்முடைய அரசு தீவிரமாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் ஒரு வீட்டில் இருக்கிற ஒரு பழைய வாசற்படியை எடுத்துவிட்டு ஒரு புது வாசற்படியை அமைக்கவேண்டும் என்று சொன்னால் வேறு ஒரு வழியை ஏற்படுத்திவிட்டு தான் அந்த பழைய வாசற்படியை அடைக்கமுடியும். அதைபோல் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து





இருக்கிறோம், ஒரு கொள்கையைக் கொண்டு இருக்கிறோம் என்று சொன்னால் அதற்கு வேறு மாற்று வழியைக் கண்டுகொண்டு, ஏற்படுத்திக் கொண்டுதான் இன்றைக்கு இருக்கிற அந்தக் சூழ் நிலையை மாற்ற வேண்டும். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் நேற்று பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த மது விலக்குக் கொள்கையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு கொண்டு இருக்கிற கொள்கை ஒரு டிஸ்கோ கொள்கை என்று சொன்னார்கள். நான் அவர் பேசிய பிறகு அந்த டிஸ்கோவிற்கு என்ன அர்த்தம் என்று ஆக்ஸ்போர்டு டிக்ஷனரியை பார்த்தபோது அதில் சொல்லப்பட்டு இருக்கிறது. அதிலே Disco Dance என்பதற்கு அர்த்தமாக சொல்லப் பட்டிருக்கிறது "Club or Party where people dance to amplify the recorded music . எனவே அவர் சொன்னது கூட ஒரு வகையில் பொருத்தமான உதாரணமாக இருக்கிறது என்று நான் கருது கிறேன். காரணம், இன்றைக்கு புரட்சித்தலைவர் அவர்கள் இசைக் கின்ற அந்த இசையிலே இன்றைக்கு தமிழக மக்கள் லயித்து இருக்கிறார்கள். அதைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டு இது ஒரு டிஸ்கோ கொள்கை, புரட்சித்தலைவர் கொண்டிருக்கிறார் என்று சொன்னார் என்று கூட இன்றைக்கு கருதுகிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பொன்முத்துராமலிங்கம் அவர்கள் சொல்கிறபோது இன்னொரு கருத்தையும் சொன்னார். மது விலக்குக் கொள்கையை அமல்படுத்துவதில் ஏன் காலதாமதப் படுத்துகிறீர்கள் என்று குறிப்பிட்டு, ஒரு யோசனையையும் அவர் சொன்னார். 36 கோடி ரூபாய் மாதத்திற்கு விற்பனை ஆகின்ற அந்தச் சாராயக் கலவைத் தொழிலை அரசே ஏன் செய்யக்கூடாது என்று கேட்டார்.

முன்பு அவர் பேசுகிறபோது, மதுவிலக்கு கொள்கையை ஏன் இன்னும் அமல்படுத்தவில்லை என்று வருத்தப்படுகிறார். அடுத்து உடனே அரசுக்கு ஒரு ஆலோசனையாக சாராயக் கலவை வேலையை நீங்களே செய்யுங்கள் என்று சொல்கிறார். எனக் குள்ள சந்தேகம். அரசே அந்தக் கலவைத் தொழிலைச் செய்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மது விலக்குக் கொள்கையை ஒருவேளை வற்புறுத்தாமல் விட்டு விடுவாரோ என்று கூட எனக்கு ஐயப்பாடு இருக்கிறது.

[திரு. செ. செம்மலை] [1985 ஜூலை 3

ஆனால், அவருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். அவருடைய தலைவர் கலைஞர் நம்முடைய தமிழகத்தில் மதுவிலக்கை தளர்த்துகிறபோது, ஒரு காரணம் சொன்னார். கொழுந்து விட்டு எரிகின்ற நெருப்பு வளையத்திற்கு எரியாத கற்பூரமாக எத்தனை நாளைக்குத் தான் தமிழகம் இருக்க முடியும் என்று சொல்லி, எனவே தளர்த்த வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று காரண காரியம் சொன்னார். எனவே, மாண்புமிகு பொன். முத்துராமலிங்கம் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். அன்றைக்கு உங்கள் தலைவர் கலைஞர் சொன்ன அதே காரண காரியங்கள் இன்றைக்கும் பொருந்து வதாகத் தான் இருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில், அந்த நெருப்பு வளையம் இன்னும் அணைக்கப்படவில்லை. அணையவில்லை. அணைந்த பிறகு வேண்டுமானால், நீங்கள் எதிர்ப்பார்க்கிற, புரட்சித் தலைவரின் உயிர்க் கொள்கையாக இருக்கிற மது விலக்கை நிறைவேற்றுவதற்கு நாங்கள் நிச்சயமாகப் பாடுபடுவோம் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசுகிறபோது, கூடச் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் மதுவிலக்கை அமல் படுத்தினால் சந்தோஷப்படுவோம் என்று சொன்னார்கள். அந்த எரிகின்ற நெருப்பு வளையம் எரிந்து கொண்டிருக்கிறது. அணைக்கக்கூடிய பொறுப்பு எங்கள் கையிலே இல்லை. மத்திய அரசிடம் இருக்கிறது. எனவே, அதனால் வருகிற வருமானம் 200 கோடி ரூபாயை வேறு வகையிலே எங்களுக்குத் தந்து உதவி னால், அந்தக் கொள்கையை நிறைவேற்றுகின்ற முதல் மாநிலமாக தமிழகமும், முதல் தலைவராக புரட்சித் தலைவரும் இருப்பார் என்பதை இந்த நேரத்திலே நான் உறுதியிட்டுச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பொதுவாக, மத்திய அரசு எதிலுமே ஒரே கொள்கை, அதாவது கல்விக் கொள்கையா ஏக இந்தியாவிலே ஒரு கொள்கை இருக்க வேண்டும். டி.வி.யா? தேசிய நிகழ்ச்சியாக இருக்க வேண்டும், என்று எதிலுமே ஒரு யூனிபார்மிட்டி என்று சொல்கிற அந்த நிலையிலே இருக்கிற அந்த மத்திய அரசு, இந்த மதுவிலக்குக் கொள்கையிலே மட்டும் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது. இல்லை, இல்லை, இது மாநிலத்தின் பிரச்சினை; நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று தட்டிக் கழிப்பது அல்லது அதிலிருந்து விலகிக் கொள்வது என்பது எந்த வகை யிலேயும் நியாயம் அல்ல.

முழுக்க, முழுக்க இது மக்களுடைய நன்மையைக் கருதி என்று அவர்கள் ஏதாவது ஒரு கொள்கையை வகுத்தால் அதை நிறை வேற்றுகிற முதல் மாநிலமாக தமிழகம் இருக்கும் என்று சுட்டிக் காட்ட கடமைப்பட்டு உள்ளேன்.

1985 ஜூலை 3] [திரு. செ. செம்மலை]

இந்தச் சட்டத் திருத்தங்களுக்கு நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அன்றைக்கு தெளிவாக விளக்கங்களைச் சொன்னார்கள். விதிமுறைகள் எல்லாம் வகுக்கப் பட்டிருக்கின்றன. அது பற்றிய ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி வார்த்தையை முடிக்க விரும்புகிறேன்.

சாராயத்தைப் பொறுத்தவரையில் சில விதி முறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். 375 எம்.எல். என்று ஒரு பாட்டில் 180 எம்.எல். என்று பாட்டில் இப்படித்தான் அளவில் கொடுக்கப் பட வேண்டும் என்று இருக்கிறது. தயவுசெய்து, இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இதில் கண்காணிப்போடு இருக்க வேண்டும். அதைக் கடையிலே 'லூஸாக' விற்க அவர்கள் அனுமதிக்கக் கூடாது.

அந்த நிலைமைகளை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும். வருவாய், காவல்துறை அதிகாரிகள் விதிகளுக்குட்பட்டு திறமை யான கண்காணிப்பை செலுத்த வேண்டும். முன்பு ஏலம் எடுக்கிறபோது, அந்த ஏலம் எடுத்தவர்கள், காவல்துறை அதிகாரிகளை, வருவாய்த் துறையினரை நல்ல முறையிலே பயன்படுத்திக் கொண்டார்கள்.

முகவர்களை நியமிக்கிறபோது, அதே கண்காணிப்பை அந்த அதிகாரிகள் முகவர்களுக்கு பயன்படக்கூடிய வகையிலே இருந்து செயல்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

சென்ட்ரல் எக்சைஸ், கஸ்டம்ஸ் போன்ற அந்தத் துறையில் கள்ளக் கடத்தலைக் கண்டுபிடிக்கிற அதிகாரிகளுக்கு பரிசுகள் வழங்கும் திட்டமெல்லாம் இருக்கிறது. அவர்களை ஊக்கப் படுத்தி, அத்தகைய கடத்தல்களைத் தடுப்பதற்காக அது இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரை கள்ளச் சாராயத்தை ஒழிக்கிற பணியிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்திட எந்தவித ஊக்கத் தொகை, பரிசுத் தொகை கொடுப்பதாகத் தெரியவில்லை.

எனவே, திறமையாக செயல்படுத்துகிற அந்த அதிகாரி களுக்கு கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலே பணியாற்றிக் கொண் டிருக்கிற அதிகாரிகளுக்கு அவர்கள் கண்டுபிடிக்கின்ற அந்த வழக்குகளின் தன்மைக்கேற்ப, ஊக்கத் தொகை, பரிசுத் தொகை கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு, ஒரு கடை என்று கொடுத்துவிட்டால், அதற்கு கிளைக் கடைகளை ஆரம்பித்து வியாபாரிகள் விற்கிறார்கள். அது பொது மக்களுக்கு இடைஞ்ச லாக இருக்கிறது. எனவே, அதிகாரிகள், அதுபோன்ற கிளைக் கடைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஆளுகின்ற கட்சியின் சார்பாகப் பேசிய திரு. செம்மலை அவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை எங்களுக்கு எதிராகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த மானியம் மாநில ஆட்சித் தலைவரைப் பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும், தலைமையிடப் பணியாளர்களைப் பற்றியும் ஆகும். அதுபற்றி விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அதைப்போல, மாநில ஆயத் தீர்வை பற்றியும் விவாதம் நடக்கிறது. எங்கள் கட்சியின் சார்பாகப் பேசிய திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் ஏற்கனவே ஆயத்தீர்வை குறித்து எங்கள் கழகத்தின் சார்பாகக் கருத்துக்களை எடுத்துரைத்து இருக்கிறார்கள்.

நான் முதலிலே கோடிட்டுக் காட்ட விரும்புவதெல்லாம், ஆளுநர் பதவி என்பது தேவையற்றது என்பது எங்களது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. அண்ணா அவர்களுடைய கொள்கையும் அதுதான். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தபொழுது இராஜமன்னார் கமிட்டி ரிப்போர்ட்டை சபையிலே வைத்து, அது சார்பாக ஒரு சிபாரிசு செய்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அது என் கையிலே இருக்கிறது. 12-வது பக்கத்திலே ஆளுநர் பதவி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விட்டுச் சென்ற பதவி, ஆளுநர் பதவியை எடுத்து விடுவதற்கு உற்ற தருணம் இதுவே என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. திராவிட முனனேற்றக் கழக சர்க்கார் இருந்தபொழுது தீர்மானமும் போட்டிருக்கிறது.

இப்பொழுது மாநில சுயாட்சி பற்றிய கருத்தில் மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கோருகின்ற ஆந்திர முதலமைச்சர் என்.டி.ஆர். அவர்கள் சர்க்காரியா கமிஷன் முன்பாக அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

அதைப்போல கர்நாடகத்தின் முதல்வராக இருக்கின்ற ஹெக்டே அவர்கள் அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பெங்களூரில் கூடிய மாநாட்டில் கலந்து கொண்ட நம்முடைய முதலமைச்சரவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று குரல் கொடுப்பதாகச் சொன்னார்கள். மாநில சுயாட்சிக் காகத்தான் இந்த ஆட்சி ஏற்பட்டதாகக்கூடச் சொல்லப்படுகிறது. அப்படியென்றால், ஆளுநர் பதவியை அகற்ற வேண்டுமென்று சர்க்காரியா கமிஷன் முன்பு அறிக்கை கொடுக்கவேண்டுமென்பதற்கான தீர்மானத்தை இந்தச் சபையில் அண்ணா வழியில் வந்த இந்த அரசாங்கம் நிறைவேற்றுவதற்கு தயாராக இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

ஆளுநர் பதவி என்பது, வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால், ஆளுநர் பதவி என்பது ஆறாவது விரலைப் போன்றது. ஆட்டுக்குத் தாடி அவசியமற்றது என்ற கருத்தை அண்ணா அவர்களே சொன்னார்கள்.



நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். அமெரிக்க நாட்டிலே மாநிலத்தில் கவர்னர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். ஆனால் நம்முடைய அரசியலமைப்புச் சட்டப்படி, கவர்னரை நியமிப்பது ஜனாதிபதி, மத்திய அரசாங்கம். அதைப் போல அவரை நீக்குவதும் ஜனாதிபதிதான். அதைப்போலவே அவருடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதும் ஜனாதிபதி தான். எனவே, அவர் மத்திய அரசாங்கத்தின் தயவிலே இருப்பவர். மத்திய அரசாங்கம் அரசியல் ரீதியாக எதைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறதோ, நிர்வாக ரீதியாக எதைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறதோ அதை ஆளுநர் மூலமாகச் செய்யலாம். எனவே, ஆளுநர் என்பவர் dancing instrument at the hands of the Centre மத்திய அரசாங்கத்தினுடைய ஏஜண்டாக இருந்துகொண்டிருக்கிறார் என்பது தான் உண்மை.

அது மட்டுமல்லாமல், இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆளுநர் அவர்களைப் பொறுத்தவரையில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால், அவர் அமைச்சரவையைக் கலைக்கலாம், சட்டமன்றத்தை அவர் கலைக்கலாம், அவர் முதலமைச்சரை நியமிக்கலாம். சட்டசபையைக் கலைப்பதாக இருந்தாலும், அமைச்சரவையைக் கலைப்பதாக இருந்தாலும் அல்லது முதலமைச்சரை நியமிப்பதாக இருந்தாலும் ஆளுநருக்கு உள்ள விருப்பத்தின் அடிப்படையில், டிஸ்கிரிஷனரி பவரின் அடிப்படையிலேதான் செய்ய முடியும். ஆனால் டிஸ்கிரிஷனரி பவர்—அவருடைய உள்ளத் தேர்வு என்பதற்கு அரசியலமைப்புச் சட்டத்தில் விளக்கம் இருக்கிறதா என்றால் கிடையாது.

அதுமட்டுமல்ல, அவர் நினைத்தால் சட்டசபையைக் கலைக்கலாம், முதலமைச்சராக யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம்: அதுமட்டும் அல்லாமல் அவர் அமைச்சரவையைக் கலைக்கலாம். அவர் வைத்ததுதான் சட்டம். ஏனென்றால் அவருக்கு டிஸ்கிரிஷனரி பவர் தரப்பட்டிருக்கிறது. இதை எதிர்த்து நீதிமன்றத்திற்குப் போக முடியாது. இப்படிப்பட்ட டிஸ்கிரிஷனரி பவர் ஜனாதிபதிக்குக் கூட இல்லை.

இந்த டிஸ்கிரிஷனரி பவரை வைத்துக்கொண்டு இருப்பதனால் சுதந்திர இந்தியாவில் கடந்த பல ஆண்டுகளாகவே ஆளுநர்களை மத்திய அரசாங்கத்தின் அரசியல் கைப்பாவைகளாக மாறச் செய்திருக்கிறது. அவர்கள் மூலமாக ஜனநாயகப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றி வருத்தத்தோடு சொன்னாலும் அவைகளைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்வதற்கான நேரம் இப்பொழுது இல்லை.

1952ஆம் ஆண்டில் அந்த ஜனநாயகப் படுகொலை இந்தத் தமிழகத்திலேதான் ஆரம்பமானது. அப்பொழுது ஐக்கிய முன்னணி கட்சிக்குப் பெரும்பான்மை இருந்தது: ஆனால் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மை இல்லை. அன்றைக்கு பிரகாசம் அவர்கள் கவர்னராக இருந்தார்கள். ஆனால் பெரும்

பான்மை இருந்த கட்சிக்கு அமைச்சரவை அளிக்கப்படும் வாய்ப்பு அன்றைக்கு தரப்படவில்லை. மாறாக சக்கரவரத்தி இராஜ கோபாலாச்சாரியார் அவர்கள் திடீரென்று நியமிக்கப்பட்டார். மேலவையில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பிறகு நடந்த வற்றை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள் ஆளுநர் நடத்தை யால் ஜனநாயகப் படுகொலைக்கு இடமாக அன்றைக்கு அமைந் தது தமிழகம்தான். அதிலிருந்து ஆந்திரம் சம்பவம் வரைக்கும் சொல்லலாம். ஆகவே, இந்தப் பதவி அகற்றப்படவேண்டும்.

(முற்பகல் 11-10)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே படுகொலையை, 1980-ஆம் ஆண்டு இதே தமிழ்நாட்டிலே செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுடைய கட்சியும் துணை யாக இருந்தது என்பதை இந்த நேரத்திலே நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட் டில் ஜனநாயகப் படுகொலை என்ற காரியத்தைச் செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரைக் கலைப்பதற்கு, கவிழ்ப்ப தற்கு நீங்கள் என்ன முயற்சி எடுத்துக் கொண்டீர்களோ அதே காரணங்கள்தான். ஆகவே, துணைச் சபாநாயகர் அவர்களே, உங்கள் கவனத்திற்கு நான் கொண்டுவருவதெல்லாம்........ (குறுக்கீடுகள்) நான் என்னுடைய பேச்சிலேயே விளக்கமாகவே பதில் சொல்கிறேன். அதையே முழுமையாக விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால், பிறகு மற்ற சப்ஜக்ட்களைப் பேச முடி யாது என்பதால், இப்பொழுது குறுக்கீடு வேண்டாம் என்கிறேன்.

திரு. செ. செம்மலை : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கலைத்தபொழுது இருந்த சூழ்நிலை வேறு, 1980-ல் இருந்த சூழ்நிலை வேறு. திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கலைக்கும்போது நிர்ணயிக் கப்பட்ட அந்தக் காலகட்டம் முடிந்துவிட்ட சூழ்நிலை. ஆனால், அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை, ஆட்சியில் 2½ வருஷம்தான் இருந்தது. அதோடு நாங்கள் குற்றச்சாட்டு கொடுத்தோம்; அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, எடுக்கப்பட்ட நடவடிக் கையே தவிர, நாங்கள் கலைப்பதற்குச் சொல்லவில்லை, குற்றச் சாட்டுக்குப் பெற்ற பரிசு, அல்லது தண்டனை அது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரே கமிஷன் கூட, இப்பொழுது உங்கள் கூட்டணி கட்சியின் சார்பாக, இந்திரா உயிரோடு இருந்த பொழுது, நல்லமுறையில் இருந்தபொழுது, இந்திரா காங்கிரசாரும் மற்றவர்களும் கொடுத்த புகாரின் பேரில் போடப்பட்டு,





இப்பொழுதும் உயிரோடு இருக்கிறது, உங்கள் தலைக்கு மேல் தொங் கிக் கொண்டிருக்கிறது. அந்த விவரங்களுக்கெல்லாம் பின்னால் வருகிறேன், பல பிரச்னைகளைப் பேச வேண்டியிருக்கிறது. அண்ணாவின் கொள்கை ஆளுநர் பதவி தேவை இல்லை என்பது. அதை நிறைவேற்ற இந்த அரசாங்கம் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முக்கியமான பிரச்னை, நம்முடைய முதலமைச்சரும், அமைச்சர்களும் அதைப் போலவே சட்டமன்ற உறுப்பினர்களும் சொத்துக் கணக்குகளைக் காட்ட வேண்டுமென்று பேரவை உறுப் பினர்களுக்கெல்லாம் தாக்கீதுகள் அனுப்பப்படுகின்றன. அமைச் சர்கள் தங்கள் சொத்து பற்றிய விவரங்களையும், குடும்ப உறுப்பினர்களின் சொத்து விவரங்களையும், பதவி ஏற்ப தற்கு முன்பு பிரதமரிடமோ, முதல் அமைச்சரிடமோ காட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

Code of Conduct for Ministers framed in October *1984* reads as tillows : '..A person before taking office shall disclose to the Prime Minister or the Chief Minister as the case may be, the details off the Assets and Liabilities and interests of himself and other members of his family...."

என்ற அளவுக்கு இருக்கிறது. அது மட்டுமல்லாமல், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது குற்றச்சாட்டுகளைச் சொல்லிவிட்டு வெளியேறுகிறபொழுது அல்லது வெளியேற்றப்பட்ட பொழுது அவர் சொல்லியிருக்கக் கூடிய முக்கியமான ஒன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், அதைப் போலவே சட்டசபை உறுப்பினர் கள், மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், அவர் களுடைய உறவினர்கள் எல்லாம் சொத்துக் கணக்குகளைக் காட்ட வேண்டுமென்பது. நான் இப்பொது கேட்டுக்கொள்ள விரும்புவது, முதல் அமைச்சர் தன்னுடைய சொத்துக் கணக்கைக் காட்ட வேண்டுமா, வேண்டாமா ? அப்படிக் காட்டினால்தானே நமக்கு என்ன நிலைமை என்பது விளங்கும். அமைச்சர் பெரு மக்களில் பல பேர்கள் சொத்துக் கணக்குகளைக் காட்டுகிற நிலைமை இருந்தும், ஏன் காட்டவில்லை? மக்களுடைய சந்தேகத்திற்கு அப்பால் இருக்க வேண்டுமென்பதற்காகக் கேட்கிறேன், இந்தச் சொத்துக் கணக்குகளைக் காட்டாததற்கு என்ன காரணம் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

இன்னொன்றும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நம்முடைய முதல் அமைச்சருடைய உடல் நலம் ஆரோக்கியம் பெற வேண்டுமென்பதிலே எந்த விதமான அரசியல் நோக்கத் தோடும் நான் சொல்வதாக உறுப்பினர்கள் குறை சொல்லக் கூடாது. அண்மையிலேகூட ஒருவிழா நடைபெற்றது; அவருடைய செலவு பற்றிய விவரம் அங்கே தெரிவிக்கப்பட்டது. ஆனால் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமநாதன்

முதலமைச்சருடைய மருத்துவத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இங்கே நாங்கள் மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம். அரசாங்கச் செலவு சம்பந்தமாக, அமைச்சர்களுக்குச் செலவழிக்கப்பட்டது சம்பந்தமாக கேட்பதற்கான உரிமை எங்களுக்கு இருக்கிறது.

**திரு. பி. முசிறிபுத்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் சொத்துக் கணக்குப் பற்றிக் கேட்டார்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, அவர்களுடைய தலைவர் கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்து, எதிர்க் கட்சித் தலைவராக இருந்து, இப்போது ஒரு குருப்புக்குத் தலைவராக இருக்கிறார்கள். அவரும், அவரோடு சம்பந்தப்பட்டிருக்கிற பேராசிரியரும் மற்றவர்களும் சொத்துக் கணக்கை ஒப்படைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவரவர்களே, இதே மன்றத்திலே ஒருமுறை கேள்வி கேட்டு பதில் சொல்லியிருக்கிறேன். முதலமைச்சர் வழி காட்டட்டும். அதன்பிறகு எங்கள் கணக்கைச் சொல்கிறோம். முதலமைச்சர் கணக்குக் காட்ட மாட்டார், நாங்கள் கணக்கு காட்ட வேண்டுமா? இதுதான் அண்ணா காட்டிய வழியா? (குறுக்கீடுகள்)

**திரு. பி. முசிறிபுத்தன் :** துணைத் தலைவரவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் ஆண்டவர்கள் தர மாட்டோம். ஆளுபவர்கள் தரவேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களுடைய கணக்கை, அவர்களுடைய தலைவரும் அவரோடு இருந்த மற்ற அமைச்சர்களும் தங்களுடைய சொத்துக் கணக்கை இன்னும் ஒரு வாரத்தில் சபைக்குத் தருவார்களா, தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** இந்தச் சபையில் இருக்கிற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உடல் நலம் குறித்த மருத்துவச் செலவு பற்றி அறிந்து கொள்வதற்கு உரிமை உண்டு.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் திருப்திபடுகிற அளவுக்கு என்னுடைய பதில் உரையில் விளக்கமாகவும் விரிவாகவும் சொல்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஏன் என்று கேட்டால் சத்துணவுத் திட்டத்தில் பல 'ஹெட்ஸ்'களில் செலவுகள் ஒதுக்கப்படுகின்றன. அந்தமாதிரி பல செலவுகள் இதில் ஏற்பட்டிருக்கக்கூடும். மாண்புமிகு நாவலர் அவர்கள் விளக்கமாகச் சொல்கிறேன் என்றார்கள். முதலமைச்சர் சம்பந்தப்பட்ட மருத்துவச் செலவு, விமானச்





செலவு, அவரோடு விமானத்தில் எத்தனை பேர் போனார்கள்? அந்தச் செலவுகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா? உடலிலே புண் ஏற்படாமல் இருக்க பல இலட்சம் ரூபாய் செலவில் பெட் தயாரிக்கப்பட்டச் செலவு, அமெரிக்காவிலிருந்து வந்தபோது அவர் ஏறி வருவதற்காக ஒரு ஸ்பெஷல் பஸ் தயாரிக்கப்பட்டதே, அந்தச் செலவு இதில் வருகிறதா? டாக்டர் ரெட்டி அமெரிக்காவிலிருந்து வந்தாரே, அந்தச் செலவு இதில் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே. நான் விவரமாகவும், விளக்கமாகவும் சொல்கிறேன் என்று சொன்ன பிறகு அதுபற்றி மறுபடியும் திருப்பித் திருப்பி கேட்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன் என்றால்

> "The Government have so far sanctioned a total expenditure of Rs. 74 lakhs and 19 thousands towards the Medical Treatment of the Chief Minister"

என்று போடப்பட்டிருக்கிறது. முதலமைச்சருக்கு செலவழிக்கப்பட்ட மருத்துவச் செலவு 74 இலட்சம்......

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தன்னுடைய பதில் உரையில் விவரமாகச் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் பிறகும் ஏன் இதிலே நேரத்தை வீணாக்குகிறார்கள் என்று தெரியவில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** முதலமைச்சருடைய மருத்துவச் செலவு, மெடிக்கல் ட்ரீட்மெண்ட் டு தி சீப் மினிஸ்டர்....

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாக, விளக்கமாகச் சொல்கிறேன் என்று சொன்னேன். அவ்வப்போது ஏற்படுகிற செலவுகள் இருக்கின்றன. 74 இலட்சம் என்பது அன்றைய அளவுக்கு ஏற்பட்டிருக்கிற செலவு. முற்றும் முடிந்த செலவு அல்ல. அதன் பிறகு ப்ரூக்ளின் மருத்துவமனைச் செலவு இருக்கிறது, மற்ற கணக்குகள் எல்லாம், ஒட்டு மொத்தமான கணக்குகள் எல்லாம் எடுத்து வைக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அரசு பொறுப்பேற்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நாட்டு மக்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறார்கள் என்று சொல்லி, பத்திரிகையில் செய்தி வந்திருப்பதைப் பார்த்திருக்கிறீர்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 3

(முற்பகல் 11-20)

ஆகவே அவ்வப்போது ஏற்படுகின்ற செலவைச் சொல்கிறோம். இன்னும் எம்பஸீ மூலமாக சிலபல செலவுகள் பற்றிய விவரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே இதுவரையில் வந்த செலவு என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, முற்றும் முடிந்த செலவு என்றல்ல. ஏறத்தாழ முடிந்த அளவுக்கு வந்ததை மட்டும்தான் குறிப்பிட்டிருக்கிறேன். இது குறித்து நான் விரிவாகச் சொல்கிறேன் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாவலர் அவர்கள் விளக்கியதற்காக நன்றி. இன்னொரு முக்கியமான பிரச்னை. சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எம்.எல்.சி. ஆகிய இவர்கள் எல்லோரும் ஏதாவது தவறு செய்தால், ஊழல் செய்தால் புகார்களை விசாரிக்க ஒரு குழு போடப்பட்டது. 17—8—84 அன்று கேபினட் மூலம் எடுக்கப்பட்ட டெசிஷன் இது. அதாவது அமைச்சரவையின் முடிவு இது. இந்தக் கமிட்டியினுடைய உறுப்பினர்கள் மாண்புமிகு திரு. காளிமுத்து, மாண்புமிகு திரு. நாவலர், மாண்புமிகு திரு. கே. ஏ. கே., மாண்புமிகு திரு. பண்ருட்டியார் ஆகியோர். இதன் தலைவர் மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இந்தக் குழு பற்றி இந்தச் சபையிலே நான் கேள்வி கேட்டேன். இந்தக் குழுவிலே இருப்பவர்கள் தப்பு செய்தால் அவர்கள் பற்றிய ஊழலை யார் கேட்பது? இது முதல் கேள்வி. இரண்டாவது கேள்வி என்னவென்றால். நீங்களாகவே ஒரு குழுவைப் போட்டுக் கொண்டு அந்தக் குழுவின் மூலம் எம். பி.-க்கள் உட்பட விசாரிப்பதற்கான அந்த ஜூரிஸ்டிக்ஷனை எப்படிப் பெற முடியும்? சட்டம் இல்லாமல் எப்படிப் பெற முடியும் என்று கேட்டேன். அதற்குப் பிறகு நம்முடைய நாவலர் அவர்கள் பதில் சொன்னார்கள். குழு கலைக்கப்பட்டடி......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குழு ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டது. அதுபற்றிய பல்வேறு பிரச்சினைகள், பல்வேறு சூழ்நிலைகள், சட்ட நுணுக்கங்கள் எல்லாம் எழுப்பப்பட்ட காரணத்தால் அந்தக் குழு கலைக்கப்படும் என்று சொன்னேன். கலைக்கப்பட்டு விட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குள்ளாக சட்டமன்றமே கலைக்கப்பட்டு விட்டதன் காரணத்தால் அதுபற்றி சபையில் எடுத்துவைக்கப்பட வேண்டும் என்று எண்ணினாலும் வைக்கப்படவில்லை. ஆனால் அது கலைக்கப்பட்டு விட்டது. இனிமேல் நடைபெறாது. இப்போது அது இருக்கவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஜூலை 3]

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் இந்தக் குழுவைக் கலைத்து விட்டீர்கள், நன்றி. ஏற்கனவே, Public Men Criminal Misconduct Act என்ற ஒரு சட்டம் இருந்தது. சிலபேர் தவறு செய்யலாம். சிலபேர் தவறு செய்யாமலும் இருக்கலாம். அமைச்சராக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் ஊழல்களை அவர்கள் செய்தால், அதாவது அமைச்சர்கள் ஊழல் செய்தாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் ஊழல் செய்தாலும் அதுபற்றிக் கவனிப்பதற்காக Public Men Criminal Misconduct Act என்ற சட்டத்தை உருவாக்கி திரு. வெங்கடாத்திரி என்ற நீதிபதியின் தலைமையின் கீழ் ஒரு கமிஷனைப் போட்டு அந்த நீதிபதியினிடத்திலே புகார் சொல்லலாம் என்று ஏற்கெனவே இருந்த ஆட்சியிலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு ஒரு குழுவை அமைத்தீர்கள். அவ்வாறு அமைத்த குழுவைப் பிறகு கலைத்து விட்டீர்கள். ஆனால் இப்போது அமைச்சராக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்கள் தப்பு செய்தால் அவர்களை விசாரிப்பதற்கு முன்பு ஒரு குழு இருந்தது. உங்களுக்கு வெங்கடாத்திரியைப் பிடிக்கவில்லை என்றால் இன்னொரு தோத்தாத்திரியைப் போட்டுக்கொள்ளுங்கள். ஆனால் நான் கேட்க விரும்புவது என்னவென்றால் அந்தக் கமிஷனைக் கலைத்து விட்டீர்கள், என்ன காரணம்? அப்படியானால் அந்தப் புகார் மீது யார் நடவடிக்கை எடுப்பது? அது ஒரு பக்கம் இருக்கட்டும். குற்றச்சாட்டு சொல்பவர்கள்தான் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும், அவ்வாறு நிரூபிக்காவிட்டால் அவர்கள் தண்டனைக்கு உள்ளாவார்கள், அமைச்சர் தவறு செய்தால் அமைச்சர் தண்டனைக்கு உள்ளாவார் என்று இருந்த சட்டத்தையும் எடுத்துவிட்டீர்கள். அதன் உள்நோக்கம் என்ன? அந்தச் சட்டத்தை எடுக்கின்றபோது மாண்புமிகு நாராயணசாமி முதலியார் அவர்கள் இங்கே சட்ட அமைச்சராக இருந்தார்கள். அவர் சொன்ன ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் அரசாங்கத்தினுடைய கையிலே இருக்கும். காம்ப்ரிஹென்சிவாக ஒரு குறைபாடு இல்லாத ஒரு ஒருங்கிணைந்த வகையில் ஒரு ஆக்ட் கொண்டு வருவோம் என்று ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்தது குறித்து அந்தக் குறிப்பினைப் பார்த்தால் தெரியும். இது பற்றி நான் கேட்பதற்குக் காரணம் குற்றச்சாட்டுக்களைக் களைவதற்கும், அவற்றைக் கண்டு பிடிப்பதற்கும் ஒரு ஃபோரம் இன்றைக்கு உங்களுடைய ஆட்சியில் இல்லை. அது நியாயம் தானா என்று நான் கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. நீங்கள் இன்னொரு காரியம் செய்தீர்கள்.

நீதிபதி திரு. வெங்கடேசன் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு கமிஷன் போட்டீர்கள். அந்தக் கமிஷன் ஒரு புகாரைக் கூட விசாரிக்கவில்லை. கமிஷனைக் கலைத்து விட்டீர்கள். ஆனால் இப்போது வெங்கடேசன் அவர்கள் உங்கள் மீது குற்றச்சாட்டுச் சொல்லிவிட்டு வெளியேறிவிட்டார்.

அவர்தான் ஹவுசிங் போர்டிலே முன்னாள் சேர்மெனாக இருந்தவர். ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். இதுபோன்ற குற்றச்சாட்டுக்களைச் சொல்கின்றபோது உண்மையைக் கண்டு பிடிக்க..

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, திரு. வெங்கடேசன் அவர்கள் தவறு செய்தார்கள் என்று சொல்லி பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்குப் பின்னால்தான் அவர் இந்த ஆட்சி பற்றி குறை கூற ஆரம்பித்திருக்கிறாரே தவிர, பதவியில் இருந்தபோது அவ்வாறு குறை சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இங்கே சில குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டு ராம்பிரசாத் ராவ் கமிஷன் வந்தது எல்லோருக்கும் தெரியும். அதிலே 11 மணிக்கு தீர்ப்பு. 11½ மணிக்கு சட்ட சபையிலே கொண்டு வைக்கிறார்கள், அவசர அவசரமாக. விவாதம் பின்னர் வைத்துக் கொள்வோம் என்று நாவலர் அவர்கள் கூட உறுதி கொடுத்தார்கள். நான் கேட்கிறேன். எங்களுடைய கருத்துக்களை அதிலே எடுத்துச் சொல்லி, ஏறத்தாழ பல லட்சம் ரூபாய் அதிலே கொடுத்திருக்கிறோம் என்று குற்றச்சாட்டு சொல்லி, அது மறுக்கப்பட்டிருக்கிறது.

பல சாட்சிகள் அங்கே விசாரிக்கப்படவேயில்லை. குற்றத்தைச் சொல்லியவர்கள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, குற்றம் சாட்டப்பட்டவர்கள் விசாரிக்கப்படவேயில்லை, என்ற சட்ட ரீதியான விளக்கத்தை எடுத்துச் சொல்லி, எப்படி எப்படி தவறுகள் சட்ட ரீதியாக அந்தக் கமிஷன் ரிப்போர்டிலே நடந்திருக்கிறது என்று எடுத்துச் சொல்லி, அந்தக் கமிஷனின் ப்ரொடெக்‌ஷனிலே, அந்தக் கமிஷனின் பாதுகாப்பிலே யார் யார் எப்படியெல்லாம் தப்பி விட்டார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, அதன் முழு உண்மை நிலவரங்களையும் இந்தச் சட்ட மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களும், மக்களும் புரிந்து கொள்ளும்படியான அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பைத் தராமல் போய் விட்டீர்களே என்று நான் வருத்தப்படுகிறேன்.

கண்ணகியாக இருக்கிறபோது கால் சிலம்பை உடைக்கலாம். சீதையாக இருக்கிறபோது அக்கினிப் பிரவேசம் செய்யலாம். ஆகவே தயவுசெய்து அந்த ரிப்போர்ட்டின் மீது விவாதிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, உண்மை நிலை என்ன என்பதைக் கண்டு அறிய உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினைக்கு வர விரும்புகிறேன். நமது ஜனநாயக வரலாற்றில், சட்டமன்ற நடவடிக்கைகளில் கேள்வி நேரம் என்பது மிகவும் முக்கியமானது. இங்கே கேள்விகளை எல்லோரும் கேட்கிறார்கள். ஆளும் கட்சித் தரப்பிலிருந்தும் கேட்கிறார்கள். எதிர்க்கட்சியிலே இருந்தும் கேட்கிறார்கள். என்ன காரணம்? தொகுதியினுடைய குறைபாட்டுகளை மன்றத்திலே எடுத்துச் சொல்வதன் மூலம், அதிகாரிகளின்





கவனத்திற்கும், அமைச்சர்களின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டு, அங்கே பிரச்னைகள் தீராதா என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் சொல்கிறார்களே தவிர, குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. ஆகவே, அந்தக் கேள்வி நேரம் சட்டமன்றத்திலே மிக முக்கியமான நேரமாகக் கருதப்படுகிறது.

நானும் உங்களை ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். குற்றச்சாட்டாக, யாரையும் குறை சொல்வதற்காக நான் இதைச் சொல்லவில்லை. கேள்வி நேரத்திலே போலீஸ் துறை சம்பந்தமாக—நானும், இன்னும் பலரும் கடந்த 7 வருஷமாக இந்த சட்டசபையிலே உறுப்பினர்களாக இருக்கிறோம். போலீஸ் துறை சம்பந்தமான கேள்விக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்ததே கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் கேட்க விரும்புவது எல்லாம், அதற்கு பதில் அளிக்க இனிமேலாவது முயற்சி செய்யுங்கள் என்றுதான். அப்போதுதான் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இருப்பார்கள், அந்தத் துறையில் ஏற்படும் தவறுகளைக் களைவதற்கு முயற்சிப்பார்கள்.

நேற்று கூட டி. வி-யிலே பார்த்தேன். நமது முதலமைச்சர் அவர்கள்மைக்குக்கு முன்னாலே வந்தார்கள்.பேசினாரா,இல்லையா என்பது தெரியவில்லையே என்று சந்தேகப்பட்டேன். காலையில் பத்திரிகையைப் பார்த்ததும் தெரிந்து கொண்டேன். பேசியிருக்கிறார் என்று. மிகவும் மகிழ்ச்சியான செய்தி. நான் நாவலர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அந்தப் போலீஸ் துறை சம்பந்தமாகக் கேட்கப்படுகிற கேள்விகளுக்கு கூட, முதன் முதலாக முதல் அமைச்சர் அவர்கள் இங்கே பதில் தருகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தாருங்கள். பல பிரச்சினைகள் அதிலே தேங்கிக் கிடக்கின்றன. பல குற்றச்சாட்டுகளை நான் கொடுத்திருக்கிறேன். ஆனால் சிலவற்றிற்கு தான் எனக்கு தபாலில் பதில் வந்திருக்கிறது. நான் சட்டசபையில் தான் கேள்விகளைக் கேட்டேன். ஆனால் எனக்கு தபாலில்தான் பதில் வருகிறது. அப்படியானால் சட்டசபை எதற்கு? 3 ஆயிரம் ரூபாய் செலவும் எதற்கு? நான் இதை யாரையும் குற்றம் சொல்வதற்காக, குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. மக்களுடைய நன்மையைக் கருதித்தான் நாம் எல்லோரும் வந்திருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் சொல்கிறேன். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கான முறையில் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை பற்றிய கேள்விகள் சிலபலவற்றிற்கு இந்த அவையிலே நானே ஏற்கெனவே பதில் அளித்து இருக்கிறேன். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள்

சொல்லுவது போன்ற அந்தத்துறை சம்பந்தபட்ட கேள்விகள் தேங்கியிருக்குமேயானால், அதை நானே வாங்கி, அதற்குப் பதிலையும் சொல்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி இருக்கிறது என்ற முறையில் சொல்கிறார். அதை நானும் அறிந்திருக்கிறேன். என்றாலும் அந்தத் துறையிலே இருக்கிற அமைச்சர் பதில் சொன்னால்தான் சிறப்பாக இருக்கும். ஆகவே நான் மிகவும் நல்ல எண்ணத்தோடுதான் கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து முதலமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில் பதில் அளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யுங்கள்.

அடுத்து, நாங்கள அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதுகிறோம். கடிதம் எழுதினால் அவர்கள் பதில் அளிப்பதே இல்லை. தயவு செய்து பதில் எழுதுங்கள். நாங்கள் என்ன, சொந்த விவரங்களைப் பற்றியா கடிதம் எழுதுகிறோம்? தொகுதிப் பிரச்னை பற்றி, மக்களுடைய தேவைகளைப் பற்றி, குறைகளைப் பற்றி கடிதம் எழுதினால் அதற்கு ஏன் பதில்கூட எழுத மறுக்கிறீர்கள்? நான் சமீபத்திலே, என்னுடைய தொகுதியிலே ஏற்பட்ட ஒரு குறைபாட்டை—சேப்பாக்கம் தொகுதியில் லாக் நகர் என்னும் இடத்தில் பெண்கள் தண்ணீர் பிடிக்கும் இடத்திற்குப் பக்கத்தில் சாராயக் கடைகள் திறந்திருப்பதைக் குறித்து நான் முதலமைச்சருக்குக் கடிதம் எழுதி, அக்னாலட்ஜ்மென்டும் வாங்கி வைத்திருக்கிறேன். ஆனால் இன்று வரையில் என்ன நடவடிக்கை என்பது தெரியவில்லை. இப்படி நிலைமை இருந்தால் நாங்கள் எப்படி தொகுதிப் பிரச்னைகளைத் தீர்ப்பது ?

ஆனால் என்னுடைய தொகுதியிலே கூட்டங்களுக்கு வந்த அமைச்சர்கள், ரகுமான்கானை சட்டசபைக்கு தேர்ந்து எடுத்தீர்களே, அவர் உங்களுக்கு என்ன செய்தார் என்று கேட்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் எதிர்க்கட்சியினைச் சார்ந்தவர்கள், நீங்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் கல்யாணம் அன பெண்கள் மாதிரி. எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் கல்யாணம் ஆகாத இளம் பெண்களைப் போன்றவர்கள். திருமணமான பெண்களைப் பார்த்து, உன் குழந்தை எங்கே என்று கேட்கலாம். அது தவறு இல்லை. ஆனால் கல்யாணம் ஆகாத இளம் கன்னிப் பெண்களான எங்களைப் பார்த்து—உதாரணத்திற்குச் சொல்கிறேன்—குழந்தை எங்கே என்று கேட்கலாமா ?



நீங்கள் தொகுதிக்கு என்ன செய்தீர்கள் என்றால், நாங்கள் சொல்கிற இடத்தில் இருக்கிறோம், கவனப்படுத்துகிற இடத்திலே இருக்கிறோம், பேசுகிற இடத்திலே இருக்கிறோம், மனு கொடுக்கிற இடத்திலே இருக்கிறோம், மந்திரிகளை அழைத்துச் செல்கிற இடத்திலே இருக்கிறோம். நாங்கள் என்னதான் சொன்னாலும் அவற்றை நிறைவேற்றுகிற அதிகாரங்கள் உங்களிடத்தில் தான் இருக்கின்றன. உத்தரவு போடுகிற இடத்தில் நீங்கள்தான் இருக்கிறீர்கள். (மணியடிக்கப் பெற்றது) துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரம் வீணாகிவிட்டது என்று சொல்ல மாட்டேன். நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். சீக்கிரத்தில் முடித்து விடுகிறேன். ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். எங்களுடைய தொகுதிக்கு வருகிற அமைச்சர் பெருமக்கள், நாங்கள் கடிதம் எழுதும்போது பதில் எழுதுங்கள். அல்லது தொகுதிப் பிரச்னைகளைப் பார்த்துத் தீர்ப்பதற்கு அந்த முயற்சியிலே ஈடுபடுங்கள். அரசியல் வேறு, அரசு நிர்வாகத்தை நடத்துவது என்பது வேறு. இது நீங்கள் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். ஆகவே அரசியல் உள்நோக்கத்தோடு தொகுதிக்கு என்ன செய்தீர்கள் என்றால், தொகுதியில் சாக்கடைப் பிரச்னை இருக்கிறது, குப்பை சேர்ந்திருக்கிற பிரச்னை இருக்கிறது, அவற்றையெல்லாம் சீர்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அமைச்சர் பெருமக்கள் தொகுதிக்கு வந்து சட்டமன்ற உறுப்பினர்கள் கூறுகிற குறைகளைப் போக்குகிற விதத்தில் அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்னை. இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் குழப்பத்தை உருவாக்கக்கூடாது. என்ன குழப்பம் உருவாகியிருக்கிறது என்றால், பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு தகவலைச் சொல்கிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் வீடுகளில் ஏதாவது சி.பி.ஐ. அல்லது இன்கம்-டாக்ஸ் ரெய்ட் நடந்திருக்கிறதா ? மாண்புமிகு நாவலர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொறுப்பு வாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சொல்லி இருக்கிறார்கள். அமைச்சர் வீடுகளில் ரெய்ட் நடந்திருப்பதாகவும், இன்கம்—டாக்ஸ் டிபார்ட்மென்ட் அதிகாரிகள் இன்னொரு அமைச்சர் வீட்டில் சென்று விசாரித்திருப்பதாகவும், அதேபோல பாரின் எக்சேன்ஜ் வயலேஷன் அதிகாரிகள் சென்று விசாரித்து இருப்பதாகவும், சில தகவல்கள் திரட்டி இருப்பதாகவும், இன்னும் சொல்லப்போனால் சில தகவல்களை நான் சி.பி.ஐ க்கு கொடுத்தால் எனக்குப் பாதுகாப்பு உண்டா என்று உங்கள் கட்சியைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்த

நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் கொள்கைப் பரபபுச் செயலாளர் கேட்டிருக்கிறார்கள். ஆகவே இதில் விளக்கம் பெற விரும்புகிறேன். நான் அதை நம்புவதா? அமைச்சர் அவர்கள் மறுப்பு தெரிவித்திருக்கிறார். அதை நம்புவதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாரோ வெளியில் சொல்லியிருக்கிறார்கள் என்று இங்கே சொல்வது எப்படிச் சரியாக இருக்கும்?

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள். நேற்றைக்கு நடந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலந்து கொண்டதை டெலிவிஷனில் பார்த்தோம், ரேடியோவில் கேட்டோம், இன்று காலையில் பத்திரிகையில் படித்தோம். நான் கேட்கிற கேள்வியின் சாரம் இதுதான். அமைச்சர்கள் வீடுகளில் அப்படிப்பட்ட சம்பவம் ஏதாவது நடந்திருந்தால் சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான பிரச்னை. உரிமைக் குழு. உங்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை. நான் அதற்குள் நுழைய விரும்பவில்லை. அமைச்சர்களும், நாங்களும் சட்டமன்றத்திலே ஒன்றுதான். நீங்கள் வந்தால் நாங்கள் எல்லாம் எழுந்திருக் கிறோம். நாங்கள் எல்லோரும்தான் உங்களுக்கு மரியாதை செய்யவேண்டும். ஏனென்றால் இந்த சபையினுடைய தலைவர் நீங்கள். இங்கே மெஜாரிட்டி இருப்பதால் அவர்கள் மந்திரிகள். நாங்கள் மெஜாரிட்டி இல்லாததால் உறுப்பினர்கள். ஆகவே அரசாங்கம் நிர்வாகத்தை இயக்குவதற்கு நிலைமை வேறு. சட்டசபையிலே நாங்கள் எல்லோரும் ஒன்றுதான். அவர்கள் மெஜாரிட்டி இருப்பதாலே அமைச்சர்கள்.

நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு அமைச்சர் மீது பிரச்னை உரிமைக் குழுவிற்குப்போய், அந்தப் பிரச்னை அங்கே பேசப்பட்டு, பொய்யான தகவலைத் தந்தார் என்று தெரிந்ததற்குப் பிறகும், எங்களுடைய தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள்மீது [illegible]ழல் குற்றச்சாட்டைச் சொல்லியது தவறு என்று தீர்ப்பு வந்ததற்குப் பிறகும், நான் கேட்க விரும்புகிறேன், இந்த சபையிலே, சபை உறுப்பினர்களால் நியமிக்கப்படுகிற கமிட்டி, அதுபற்றி விவாதிக்க வேண்டாமா? ஆகவே அமைச்சர்களுக்கு ஒரு நீதி, மற்றவர்களுக்கு ஒரு நீதி என்று சொல்லக்கூடாது. காரணம், லாப்ஸ் ஆகும். ஒரு ஆண்டிற்கு முன்னால் சட்டசபை கலைப்பதற்கு முன்னால் வந்த ஒரு பிரச்னையாக இருந்தாலும், அதற்கு மீண்டும் உயிர் இருக்கிறதென்று, நீங்கள் ஒப்புக்கொண்டு, பால்ராஜை 15 நாள் உள்ளே அனுப்பி இருக்கிறீர்கள். ஆகவே அதுபற்றி என்ன நிலைமை என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து ஒன்றை அறிய விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் சுவாமிநாதன் அவர்களின் அறையில் நான் கேள்விப் படுகிறேன். அமைச்சர் அவர்கள் மறுத்தாலும் மறுக்கலாம். இரண்டு சேலைகள் திருடு போய் இருப்பதாகக் கேள்வி. ** **

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, ரகுமான்கான் அவர்கள் ஏதோ உள்நோக்கத்தை வைத்து இங்கே பேசுகிறார்கள். பத்திரிகைகளில் தெளிவாக வந்திருக்கிறது. அவர்கள் கைத்தறித் துறை அமைச்சர் ஆவார்கள். ஆகவே கைத்தறித் துறை அமைச்சர் அவர்களிடம் சாம்பிளாக காண்பித்து, எடுத்துச் செல்லக் கொண்டு வந்ததை வைத்திருக் கிறார்கள். சாம்பிளுக்காகக் கொண்டு வந்தது. கைத்தறி அமைச் சருடைய ரூமிலே அடிக்கடி அதிகாரிகள் இப்படி துணிகளைக் கொண்டு வந்து, இப்படிக் காண்பிப்பதும், பிறகு எடுத்துப் போவது மாக இருக்கிற சூழ்நிலைகள் உண்டு. அந்த முறையிலே சாம்பி ளாக எடுத்து வைத்த 2 புடவைகளைக் காணோம் என்று சொல்லி, பிறகு அதைத் திருடியவர்களைப் பிடித்து, துணியையும் கைப்பற்றி இருக்கிறார்கள். ஆகவே இங்கே கேலியாகவோ, கிண்டலாகவோ, சொல்ல ஆரம்பித்தால், உறுப்பினர் கூட தாக்குப் பிடிக்க மாட்டார்கள். ஆகவே எல்லோரையும் பற்றி எவ்வளவோ சொல்லிக்கொண்டு இருக்கலாம். இச்செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆகவே இதைக் கேலியாகவோ, அல்லது கிண்ட லாகவோ எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** நான் அப்படி குற்றச்சாட்டாக சொல்ல வில்லை. நண்பர் சுவாமிநாதன் அவர்களைப் பற்றி நான் தவறாக சொல்லவில்லை. நாவலர் அவர்கள் அப்படிக் கருதவேண்டாம்.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது, குற்றச்சாட்டாக சொல்லவில்லை, வேடிக்கையாகச் சொன்னேன் என்று சொல்கிறார்கள். இந்த அவை வேடிக்கைக்கு உரிய அவை அல்ல. குற்றச்சாட்டாகச் சொல்லும்போது, அமைச்சர் பெயரைச் சொல்லும்போது, கொஞ்சம் கூட பொறுப்பு இல்லாமல் சாமி நாதன் என்று சொல்வது இருக்கிற இடத்திற்கு தகுதியற்றது. தயவு செய்து தாங்கள் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அமைச்சர் சாமிநாதன் என்று சொல்லட்டும். நண்பர் சாமிநாதன் என்று சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரகுமான்கான் அவர்கள் இதுபற்றித் தவறான பொருள்பட குறிப்பிட்டது நீக்கப் படுகின்றது. இந்த இடத்திலேயிருந்து சொல்லும்போது கூட நாங்கள் மாண்புமிகு உறுப்பினர் என்றுதான் சொல்கிறோம்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1985 ஜூலை 3

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களை கௌரவப்படுத்தாமல் போய்விட்டோம் என்று நீங்கள் கருதினால் அதற்காக நான் வருத்தப்படுகிறேன். நான் அந்த உணர்விலே நிச்சயமாக இருப்பவன் அல்ல. ஆனால் சட்ட ரீதியாக, அல்லது சட்ட விதிகளுக்கு உட்பட்டு, அமைச்சருடைய பெயரைச் சொல்லக்கூடாது என்றால் நாங்கள் ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கிறோம். ஏன் என்றால், அவர்களுடைய பெயரைச் சொல்வது கண்ணியப்படுத்துவது ஆகாது, எனவே இன்ன துறையைச் சேர்ந்த அமைச்சர் என்று சொன்னால் போதும் என்று நாளையிலிருந்து நீங்கள் உறுப்பினர்களுக்கு அறிவுரை சொன்னால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, பெயரைச் சொல்வதிலே எங்களுக்கு ஒன்றும் நஷ்டம் வந்துவிடப் போவதில்லை. நண்பர் சாமிநாதன் என்று சொல்லக் கூடாது. மாண்புமிகு அமைச்சர் சாமிநாதன் என்று சொல்லட்டும். அதிலே தவறு இல்லை. ஆனால் வெறும் சாமிநாதன் என்று சொல்வது பொருத்தமற்றது.

திரு. அ. ரகுமான்கான்: ரோஜாவிற்கு எந்த பெயரிட்டு அழைத்தாலும் அது ரோஜாதான். நாவலர் சொன்னதைப்போல நோக்கம் இல்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்காக ரோஜாவை வேறு எந்தப் பெயரை வைத்து அழைத்தாலும், மொழிக் குழப்பம் ஏற்படும்.

திரு. அ. ரகுமான்கான் : ஆகவே துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு மிக முக்கியமான பிரச்சனையை உங்கள் மூலமாகக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய கேபினெட் டெசிசன், அமைச்சர் பெருமக்கள் எடுக்கக்கூடிய கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி டெசிசன். ஆனால் மோகன்தாஸ் என்கிற ஒரு அதிகாரி பதவி நீக்கம் செய்யப்படுகிறார். முதல்வர் அவர்கள் மீண்டும் வந்து அதை மாற்றுகிறார்கள். ஒரு கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி வேண்டாமா? நிர்வாகம் எவ்வளவு சிக்கலாக இருக்கிறது, பாருங்கள்.

அதேமாதிரி பி.ஏ.க்கள். அமைச்சருடைய பி.ஏ.க்கள் இடத்திலே, முதலமைச்சர் பி.ஏக்கள் இடத்திலேதான் புகார் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஏன் கவர்னர் இடத்திலே கொடுக்சக்கூடாதா? அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள், எம்.எல்.சி.க்களிடத்திலே கொடுக்கக்கூடாதா என்று கேட்டால், கவர்னர் இன்க்ளூட் ஆகிறார். எம்.எல்.ஏ. இன்க்ளூட் ஆகிறார் என்று லேட்டஸ்டாக ஒரு விளக்கம் வருகிறது. எனவே அமைச்சர்கள் எல்லாம் எங்களை குழப்பத்தில் ஆழ்த்தாதீர்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூலை 17] [திரு. அ. ரகுமான்கான்]

அதேபோல் டெல்லியிலே ஒரு சிறப்புப் பிரதிநிதி ஒருவர் இருக்
கிறார்கள். காபினெட் அந்தஸ்திலே இருக்கிறார். கிருஷ்ணா
நிதித் திட்டம் இருக்கிறது, காவிரிப் பிரச்சனை இருக்கிறது, இது
போன்ற திட்டங்களிலே அவர்கள் என்ன முயற்சியை எடுத்து
அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்கள் என்ற விளக்கத்தை நம்
முடைய நாவலர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக உங்களுக்கு எல்லாம் தெரியும். அரசாங்கத்தி
னுடைய தலைமைச் செயலகம் பற்றி இங்கே பேசினார்கள்.
அங்கேயுள்ள ஊழியர்களைப் பற்றிப் பேசினார்கள். நான் இதிலே
ஒரு முக்கியமான பிரச்சனையை சொல்ல விரும்புகிறேன். அமைச்
சருடைய அறையாக இருந்தாலும், முதலமைச்சருடைய அறை
யாக இருந்தாலும், அவர்கள் அரசியல்வாதிகள்தான்.
நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அரசியல் பிரச்
சனைகளை பேசுவதற்கு உரிய இடம் அதுவல்ல. அல்லது
வேறு விஷயமாக இருந்தாலும் அதைப் பேசுவதற்கு உரிய இடம்
அதுவல்ல. ஏன் என்றால், சட்டமன்ற அலுவலகம், கட்சிகளின்
காரியத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற காரணத்தால், அவைகள்
காலிசெய்யப்பட்டு இருக்கின்றன. ஆனால் சென்னைக் கோட்டை
யில் உங்கள் கட்சியைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்,
முன்னாள் கொள்கை பரப்புச் செயலாளர், ஒரு பேட்டியே கொடுத்
திருக்கிறார்கள். அரசியல் விஷயமாக, சொந்த விஷயமாக பேட்டி
வந்திருக்கிறது. நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், அரசாங்க
அலுவலகத்தில் கட்சி பற்றி பேசலாமா? சொந்த விஷயங்கள்
பேசலாமா என்று கேட்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்
கிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் அமைச்சராக
இருப்பவர்கள் கோட்டையில் உள்ள தங்களுடைய அறையில்
கட்சியைப் பற்றிப் பேசலாமா என்று மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் கேட்கிறார்கள். பேசக்கூடாது என்று விதி கிடையாது.
யார் வேண்டுமானாலும், எதைப் பற்றி வேண்டுமானாலும்
பேசலாம். சட்டமன்ற வேலைக்காக ஆஸ்டலில் ஒதுக்கப்பட்ட
இடத்தை கட்சி வேலைக்கு பயன்படுத்துவது என்பது தவறான
காரியம். கட்சி வேலைக்கு பயன்படுத்தவேண்டாம், சட்டமன்ற
வேலைக்கு பயன் படுத்தவேண்டும் என்று சொல்லுகிறோம்.
அமைச்சர்கள் இருக்கும் இடங்களில் அரசியல்வாதிகள் வருகிறார்
கள், எதிர்க்கட்சிக்காரர்கள் வருகிறார்கள்,
பேசுகிறார்கள், பேசுகிறார்கள். இதை எல்லாம் குற்றமாக எடுத்துக்கொள்ள
முடியாது. பேசுவதற்கு உரிமை இருக்கிறது. பேசுவோம்.
பேசத்தான் செய்வோம், தவறு ஒன்றும் கிடையாது.

[1985 ஜூலை 8

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர்
அவர்களால் முன்மொழிந்துள்ள மானிய கோரிக்கை எண். 2
மாநில ஆயத்தீர்வைத் துறை, மானிய கோரிக்கை எண். 9 மாநில
ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்
கள் பற்றிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று, ஒரு சில
கருத்துக்களை உங்கள் முன்னால் நான் தெரிவிக்க விரும்பு
கிறேன்.

எனக்கு முன்னால் இங்கே பேசிய மாண்புமிகு சட்டப்பேரவை
உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்
னார்கள். ஆளுநர் என்பது தேவை அற்ற பதவி, அந்தப் பதவி
மத்திய அரசினுடைய ஏஜென்டாக இருக்கிற பதவி என்ற
உணர்வை இங்கே எடுத்துச் சொல்லி, தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில்
இருந்த நேரத்தில் நாங்கள் தீர்மானம் போட்டோம் என்று
இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். உள்ளபடியே அது
வரவேற்கக்கூடிய விஷயமாக இருந்தபோதிலும், அவர்கள் இன்னும்
ஒன்றையும் சொன்னார்கள். அண்ணாவினுடைய இந்த ஆட்சி
நடைபெறுகிறது. எனவே இப்போது நீங்கள் தீர்மானம் போட
வேண்டும் என்று இங்கே சொன்னார்கள். வேண்டும் என்றால்
பத்திரிகை விளம்பரத்திற்காக இங்கே பேசிக்கொள்ளலாமே ஒழிய,
செயலில் செயல்பட்டதா என்று சொன்னால் செயல்
படவில்லை. காரணம் தி.மு.க. அரசு தீர்மானம் போட்டது,
ஆனால் நடைமுறைக்கு வந்ததா என்று சொன்னால்
நடைமுறைக்கு வரவில்லை. தீர்மானம் போட்டவர்கள், அதன்
மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா? அந்தத் தீர்மானத்தை
வற்புறுத்தினார்களா? அது செயல்வடிவத்தில் வரவேண்டும்
என்பதற்காக மேற்கொண்டு ஏதாவது செயல்பாடுகளைச்
செய்தார்களா என்றால் இல்லை.

உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன், மத்திய அரசு, மாநில
அரசுகள் இந்தியாவில் இருக்கின்றன. குறிப்பிட்ட
நேரத்தில் அரிசி வரவில்லை, காலதாமதமாகத்தான் வருகிறது
என்ற நேரத்தில் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர்
புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசிற்கு நினைவுபடுத்து
கின்ற வகையில்தான், ஒரு முதலமைச்சர் என்றுகூட நினையாத
வண்ணம், இதே சென்னை கடற்கரையில் ஒரு நாள் அடையாள
உண்ணாவிரதம் இருந்தார்கள் என்பது இந்த மாமன்றத்திற்கும்;
நாட்டு மக்களுக்கும் தெரியும். எனவே மாநில அரசைப் பொறுத்த
வரையில், இருக்கிற அதிகாரங்களை பயன்படுத்திக்கொள்வதில்,
இருக்கிற சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்வதில் இந்தியாவி
லேயே முதல் முதலமைச்சராக இருப்பவர்கள் நம்முடைய
இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆவார்கள்.
எனவே கவர்னரை எடுத்து விடலாம் என்று தீர்மானம் போட்டு
விட்டாலும் எடுத்து விடுகிற அதிகாரம் இந்த மாமன்றத்திற்கு
இல்லை. அதைச் செயல்படுத்த வேண்டியது பாராளுமன்றமும்,
இந்தியப் பேரரசும் ஆகும்.



1985 ஜூலை 8] [திரு. கூடலூர் இ. வி. வேலு]

ஆனால் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை விட்டு இறங்கிய பின் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்ற அந்த நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களை அனுப்பி, இப்படி ஒரு சட்டம் தி.மு.க. ஆண்டபோது போட்டு இருந்தோம், அது செயல்பாட்டில் வரவில்லை. எனவே நீங்கள் எல்லாம் பாராளு மன்ற உறுப்பினர்களே, தமிழகத்தில் கவர்னர் பதவி தேவையில்லை என்று மத்திய அரசைப் பார்த்து கூக்குரல் இட்டீர்களா, அல்லது பாராளுமன்றத்தில் ஏதாவது கேள்விக்கணையைத் தொடுத்தீர்களா என்றால் இல்லை. அதைச் செய்யவில்லை. ஆனால் எங்களைப் பார்த்துச் சொல்கிறீர்கள், இன்றைக்கு அண்ணாவினுடைய அரசு நீங்கள் தீர்மானம் போடுகிறீர்களா என்று கேட்கிறீர்களே சரியா? ஒரு விளம்பரத்திற்காகப் பேசுகிறீர்களே ஒழிய செயலில் வரமுடியுமா? எனவே இதை மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

அதற்கு அடுத்து ஒரு கருத்தைச் சொன்னார்கள், இங்கே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் முதலமைச்சர் அவர்களின் சிகிச்சை நிதி பற்றி சாதாரணமாக வெளியில் இருப்பவர்கூட இதைப் புரிந்துகொள்ள முடியும். நாங்கள் எல்லோம் புதியதாக வந்த சட்டமன்ற உறுப்பினர்கள். மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் விவாதத்திலே மிகவும் திறமையானவர் என்று நான் வெளியிலே இருந்தபோது கேட்டு இருக்கிறேன். ஆனால் இங்கே வந்தபோது ஏதோ திறமையாக வாதாடுவார்கள். அதில் இருக்கக்கூடிய சாராம்சத்தை வைத்துக்கொண்டு நம் போன்று வந்து இருக்கிற இளைய சட்டமன்ற உறுப்பினர்கள் அதைப் புரிந்துகொள்ளலாம், அரசியலைத் தெரிந்துகொள்ளலாம் என்று நாங்கள் இருந்தோம். ஆனால் விவாதத்திற்காகப் பேசுகிறார். என்ன சொல்கிறார் தமிழகத்தினுடைய முதலமைச்சருடைய மருத்துவ நிதி பற்றி மீண்டும் மீண்டும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லுகிறார். ஆனால் பத்திரிகையில் படித்து இருக்கலாம், தமிழகத்தினுடைய நிதிநிலையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு முதலமைச்சருடைய மருத்துவ நிதியை எடுத்துக்கொள்வோமானால் அதைப்பற்றி இங்கே விவாதிக்கலாம்? நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. என்ன நிலைமை, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த மருத்துவ நிதியை அரசு கொடுக்கவேண்டாம். $4\frac{1}{2}$ கோடி தமிழக மக்களுடைய இதய தெய்வமாக இருக்கிற புரட்சித் தலைவருக்காக மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். அந்த மக்களே அந்தப் பணத்தை செலுத்தி விடுகிறோம் என்று சொல்லிவிட்ட செய்தியை தினசரி பத்திரிகை யில் பார்த்து இருக்கக்கூடும். எனவே அந்தப் பணம் அரசுக்கு வந்து சேர்ந்துவிட்டது. அது தவறாக செலவு செய்யப்பட்டு இருக்கிறதா? அல்லது முறையாக செலவு செய்யப்பட்டு இருக் கிறதா என்ற கேள்விக்கே இடம் இல்லை. கொடுத்தவர்கள் மக்கள், மக்கள் கேட்பார்கள், ஆகவே, இந்த அரசு கொடுத்து

இருந்தால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டு இருக்கலாம். அதையும் இங்கே உணர்ந்து பதில் சொல்லியிருக்கலாம். எனவே இது வீண் பிரச்சினை, நேரத்தை வீணாக்குகின்ற பிரச்னை.

அடுத்தபடியாக, ஆயத்தீர்வைத் துறையைப் பற்றி ஒரு சில கருத்துகளைச் சொல்லி விடைபெறலாம் என்று கருதுகிறேன். 1984–85 ஆம் ஆண்டு ஆயத் தீர்வை மூலமாக இந்த அரசுக்கு ஒன்பது கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது என்பதை சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாராயத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் மூலம் முறையாக சாராயம் வாங்கி, முறையாக விற்கப்பட்டு, அதிக லாபத்தை இந்த அரசாங்கம் ஈட்டியிருக்கிறது என்று சொல்வதில் உள்ளபடியே பெருமை அடைகிறேன்.

இந்த மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், கள்ளச்சாராயம் காய்ச்சுவது, வெளி மாநிலங்களிலிருந்து சாராயம் கடத்துவது ஆகியவற்றை நிறுத்துவது அயல் நாட்டுப் பானங்களை தவறான முறையில் பயன்படுத்துவதனைத் தடுத்து நிறுத்துவது போன்ற பல்வேறு காரியங்களை, கடுமையான நடவடிக்கை எடுத்து தீய செயல்களை குறைத்து இருக்கிறது.

சென்னையிலும், அதன் சுற்றுப்புறத்திலும் கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் எண்ணிக்கை பெரும் அளவு முன்பு இருந்தது. இன்றைக்கு காவல் துறை மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக அது குறைக்கப்பட்டு இருக்கிறது. அயல்நாட்டுப் பானங்களைக் கடத்திய வாகனங்கள் இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் 104 வாகனங்கள் அரசாங்கத்தினால், போலீசால் பிடிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதைப் பார்க்கிறபோது, இந்த அரசாங்கம் மதுவிலக்குக் கொள்கையிலே எந்த அளவுக்குத் தீவிரமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு தினங்களாக, பல மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிறபோது, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்கு வரும், மது அரக்கனை ஒழிக்கவேண்டும் என்று சொன்னவர், அதைத் தளர்த்தலாமா என்று சொன்னார்கள். நான் சொல்லிக் கொள்கிறேன்—அன்றும், இன்றும், என்றும் மதுவிலக்கை அமல்படுத்துவதிலே தனிப்பட்ட முறையிலே புரட்சித் தலைவர் கிஞ்சித்தும் மாறியவர் அல்ல, தயங்கியவர் அல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், கடந்த கால வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். 1979–ஆம் ஆண்டு எதிர்கட்சிப் பொறுப்பை ஏற்று இருந்தவர்கள் என்ன சொன்னார்கள்? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றச் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, மதுவிலக்குக் கொள்கையை தீவிரப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு அன்றைக்கு



செயல்பட்ட நேரத்திலே, என்ன சொன்னார்கள்? போலீஸ் மாமூல் வாங்குகிறது, போலீசாரே வெல்லத்தை அனுப்பி சாராயம் காய்ச்சச் சொல்கிறார்கள், தமிழ்நாட்டிலே சாராயம் ஆறாக ஓடுகிறது என்று அன்றைக்குச் சொல்லவில்லையா?

எனவே, அதை அப்புறப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு புரட்சித் தலைவர் அவர்கள் போலீசை வைத்து நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லை. அந்த நிலையில்தான் புரட்சித் தலைவர் அவர்கள் 23-3-1979-ல் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதைக் கொண்டு வந்தபோது எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன சொன்னார்கள்?

எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று அன்றைக்குச் சொல்லவில்லையா? இந்த மாமன்றத்திலே அப்படிச் சொல்லவில்லையா? சாராயத்தை ஒழிக்க இந்தச் சட்டம் கொண்டு வரவில்லை, எதிர்க்கட்சிகளை ஒடுக்கத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள், நாடு கடத்துகின்ற சட்டத்தை உருவாக்கி இருக்கிறார்களே, நியாயமா என்று சத்தம் போடவில்லையா ?

அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த கலைஞர் கருணாநிதி வெளிநடப்பு செய்யவில்லையா, அந்தச் சட்டத்தை எதிர்த்து ? இப்படி, சாராயத்தை தடுப்பதற்கான சட்டத்தை அவர்கள் எதிர்த்தார்கள். ஆனால் இன்றைக்குப் பேசுகிறார்கள்; மதுவிலக்கை அமல் நடததுவதற்கு இந்த அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று. இப்படிச் சொல்வது சரியானது அல்ல; முறையானதும் அல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.

அந்தச் சட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்து, சாராயம் காய்ச்சுபவர்கள், திருட்டுச் சாராயம் காய்ச்சுபவர்களை, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாவட்டங்களிலே இருக்கிற சிறைகளிலே பல பேர் அடைக்கப்பட்டார்கள். ஆனாலும் அது ஓய்ந்தபாடில்லை. சாராயத்தை இந்த நாட்டிலேயிருந்து ஒழிக்க வேண்டும் என்று அந்த உணர்வோடு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தும், சாராயத்தை ஒழிக்கமுடியவில்லை.

என்ன நடந்தது ? தமிழகத்தில் திருட்டுச் சாராயம் காய்ச்சுவதற்கு அடிப்படைக் காரணம் என்ன ? 1937-ல் கொண்டு வந்த தமிழ்நாட்டு மதுவிலக்கு சட்டத்தை தூள் தூளாக்கி, 1971–லே சாராயச் சட்டத்தை கொண்டு வந்தது யார் ? 1971-ஆம் ஆண்டு சாராயச் சட்டத்தை கொண்டு வந்து, மதுவிலக்குக் கொள்கையை ரத்து செய்து திட்டங்கள் போட்டார்கள்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கூட வேண்டாம் அது என்று சொன்னார். இராஜாஜி சொன்னார் என்பதற்காக அதைக் கேட்டாரா? கேட்கவில்லை. அதைச் சிந்திக்கக் கூட இல்லை. உடைத்து விட்டார்கள்.

(முற்பகல் 11-50)

பிறகு, ஏழை எளியவர்கள், தாய்மார்கள், குழந்தைகள், பாட்டாளிகள் அனைவரும் குடிக்க ஆரம்பித்தார்கள். குடிக்க சாராயம் டைக்கவில்லையே என்று கள்ளச்சாராயத்தைக் காய்ச்சுகின்ற குடிக்கின்ற சூழ்நிலை தமிழகத்தில் ஏற்பட்டது. அதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? அன்றைக்குத் தமிழகத்தை ஆண்ட முதல்வர் கலைஞர் கருணாநிதி இல்லையா? பணக்காரர்கள் மட்டும் லைசென்ஸ் வாங்கி வைத்துக்கொண்டு குடிக்கிறார்கள். ஆனால் ஏழை எளிய தொழிலாளர்கள் மட்டும் சாராயத்தைக் குடிக்க முடியவில்லை என்று சொல்லி அதன் காரணமாகத் தமிழகத்திலே மதுவிலக்கு ரத்தைக் கொண்டு வந்தவர் அன்றைய முதல்வர். குடிப்பதற்கேற்ற ஆரோக்கியமான சாராயம் இல்லாத காரணத்தினால், கள்ளச் சாராயம் குடிப்பதால் உயிரை இழக்கிறார்கள் 1971ஆம் ஆண்டிலே மதுவிலக்கை ரத்து செய்யவில்லை என்றால் இப்பொழுது இந்த அவலநிலை ஏற்பட்டிருக்குமா? ஆனாலும் கூட முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் என்ன சொன்னார்கள், மதுவிலக்கை ரத்து செய்கிறேன் என்று அவர் சொல்லவில்லை, மதுவிலக்கை சஸ்பென்ட் செய்திருக்கிறேன், நான் டிஸ்மிஸ் செய்யவில்லை என்று சொன்னார்.

எங்களைப் போன்றவர்களுக்கு அப்பொழுது ஒன்றும் புரியவில்லை, ஏதோ ஆங்கிலப்பதத்தில் சொல்லியிருக்கிறார், மதுவிலக்கை சஸ்பென்ட் செய்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார், ரத்து செய்யவில்லை என்று சொல்கிறார் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் இன்றைய தினம் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் அப்படிச் சொல்லவில்லை. மது விலக்கைப் பொறுத்தவரையில் அவர் ஒரு கொள்கையை வைத்திருக்கிறார். தமது உயிரே போனாலும் மதுவிலக்கை ஆதரிக்க வேண்டுமென்ற நிலையில்தான் புரட்சித் தலைவரவர்கள் இருக்கிறார்கள். இந்த நாட்டில் மது இருக்கக் கூடாது என்று அவர் நினைக்கிறார். ஆனால் முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் குடிக்கக் கற்றுக் கொடுத்து விட்ட காரணத்தினால் எண்ணற்ற ஏழை எளியவர்கள் குடிக்க ஆரம்பித்து விட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் கள்ளச் சாராயத்தைக் குடித்து விட்டு இறந்துவிடுகிறார்கள். கள்ளச் சாராயத்தை ஒழித்தால் ஒழிய இந்த நிலைமையைப் போக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. கள்ளச் சாராயத்தைக் குடித்துவிட்டு இறந்தவர்களின் மனைவிமார்கள் விதவைகளாவதை புரட்சித் தலைவரவர்களால் பார்த்துச் கொண்டிருக்க முடியவில்லை.





இந்த நேரத்தில் நான் ஒன்றை நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இந்தியாவை ஆண்ட காலஞ்சென்ற, மரியாதைக்குரிய, மதிப்புக்குரிய, வணக்கத்துக்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 1976-ஆம் ஆண்டு காந்தி ஜெயந்தி தினத்தில் சொன்னார்கள். மதுவை சட்டத்தின் மூலம் அகற்றிவிட முடியாது. பிரச்சாரத்தின் மூலம்தான் அகற்ற முடியும் என்று சொன்னார்கள். அதனாலேயே இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மது குடிப்பதை ஆதரிக்கிறார்கள் என்று பொருளா என்றால் இல்லை. ஆனால் நாட்டில் இருக்கின்ற நிலைமைகள் அப்படி.

1953-ஆம் ஆண்டில் இராமமூர்த்தி கமிட்டி, 1954-ஆம் ஆண்டில் ஸ்ரீமான் நாராயண் கமிட்டி, 1971-ஆம் ஆண்டில் ஜஸ்டிஸ் ஜஸ்வந்த் கமிட்டி, 1976-ஆம் ஆண்டில் சதாசிவம் கமிட்டி ஆகியவைகளெல்லாம் மதுவிலக்கை எப்படி அமல் நடத்தலாம் என்பதற்காகப் போடப்பட்ட கமிட்டிகள். மதுவிலக்கு தோல்வி அடைவது குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டிகள் சொல்லிய பிறகும் கள்ளச்சாராயத்தை நாட்டிலேயிருந்து வெளியேற்ற முடியவில்லை. இதையெல்லாம் சொல்வதால் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் மதுவிலக்குக் கொள்கையில் முரண்பட்ட கொள்கை உடையவர் என்று அர்த்தம் இல்லை.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், டெல்லி நகரத்திலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அங்கே மது அருந்துகிறார்கள். மாண்புமிகு வணக்கத்திற்குரிய ராஜிவ் காந்தி அவர்கள் அதை ஆதரிக்கிறார்கள் என்று பொருளா என்றால் இல்லை அல்லது அவருக்கு அந்தக் கொள்கை இல்லை என்றுதான் சொல்ல முடியுமா? அல்லது அவர் காந்தீயவாதி அல்ல என்று சொல்ல முடியுமா என்றால் அல்ல. ஆனால் நாட்டிலே உள்ள நிலைமைகள் அப்படியிருக்கின்றன.

இதை மனத்திற்கொண்டுதான் இராஜாஜி அவர்கள் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்றால் அரசாங்கப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் கொள்கை வெறியர்களாக இருக்கக் கூடாது. அரசாங்கத்தில் இருப்பவர்கள் நாட்டிலே உள்ள நிலைகளை உணர்ந்து கொள்ள வேண்டும், எது சரி என்று சிந்தித்துப் பார்க்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும் கொள்கை வெறியர்களாக இருப்பது சுலபம், ஆனால் நிர்வாகத்தை நடத்துவது என்பது சிரமம் என்று இராஜாஜி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த வகையில் புரட்சித் தலைவரவர்கள் இந்த மதுவிலக்கைப் பொறுத்தவரையில், எப்படியாவது கள்ளச்சாராயத்தை ஒழித்துவிட வேண்டுமென்று எண்ணி, இராஜாஜி அவர்கள் சொன்னதை மனதிற்கொண்டு. மதுவிலக்குக் கொள்கை என்று மனத்தில் இருந்தால் மட்டும் போதாது. மக்கள் கள்ளச்சாராயத்தைக் குடித்து மாண்டு கிடக்கிறார்கள், அவர்களை

இதிலிருந்து எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்றுதான் இந்த மதுவிலக்கைச் சற்று தளர்த்தியிருக்கிறார்கள். டிஸ்மிஸ் செய்யப்படவில்லை, அதுமட்டுமல்லாமல் சஸ்பெண்டும் செய்யப் படவில்லை, கொஞ்சம் தளர்த்தப்பட்டிருக்கிறது, அவ்வளவுதான். இப்படி இங்கே மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்ததற்குக் காரணம் ஏழை எளியவர்கள், கணவனை இழந்தவர் கள் விதவைத் தாய்மார்கள் ஆகியவர்களை பார்க்கின்றபொழுது, அந்த ஏழை எளியவர்களும், அந்தப் பெண்களின் கணவன்மார் களும் கள்ளச்சாராயத்தினால் இறந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்றபொழுது, அந்த நிலையைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாத காரணத்தினால்தான், கொடூரமாக அந்தக் காட்சிகள் தெரிந்த காரணத்தினால்தான் கள்ளச்சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்ற உணர்வோடு இந்த மதுவிலக்கு தளர்த்தப்பட்டி ருக்கிறது, டிஸ்மிஸ் செய்யப்படவில்லை, சஸ்பெண்ட் செய்யப் படவில்லை. இதை மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப் பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நேற்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத் அவர்கள் பேசினார்கள். புரட்சித் தலைவரவர்கள் இந்த மதுவிலக்குக் கொள்கையில் எப்பொழுதும் தீவிரமாக இருப்பவர்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அவருக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தாழ்மையோடு சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். ஏனென்றால் எங்கள் இதய தெய்வமான எங்கள் தலைவனைப் பாராட்டிச் சொன்னார்கள். அதற்காக நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இந்த ஆண்டு சாராயத் தினால் அதிக வருமானம் வந்திருக்கிறது என்று சொன்னார்கள் அதை இவர்கள் இட்டுக்கட்டிச் சொன்னார்கள். அதாவது, சமரசம் அவர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறார்களே, சாராயத் தினால் அதிக வருமானம் வந்திருக்கிறது என்று சொல்லியிருக் கிறார்களே, அப்படியென்றால் இந்தச் சாராயம் குடிப்பதை ஆதரிப்பதைப்போல் இருக்கிறது என்ற உணர்வுபூர்வமாக இட்டுக் கட்டிப் பேசியிருக்கிறார்கள். டாக்டர் சமரசம் அவர்கள் இதற்காகச் சொல்லவில்லை. ஏற்கனவே சாராய சாம்ராஜ் யத்தை நடத்தியவர்கள் காலத்தில் என்ன நடந்தது, 1974, 1975 வாக்கிலே என்ன நடந்தது? அரசாங்கத்திற்கு முறைப்படி பணம் வந்து சேர்ந்ததா? சட்டங்களைத் தளர்த்தினோம், சாராயத்தைக் குடிக்க விட்டோம், தாய்மார்களைக் குடிக்க விட்டோம், குழந்தைகளைக் குடிக்க விட்டோம், தொழிலாளர் களைக் குடிக்க விட்டோம், விவசாயிகளைச் குடிக்க விட்டோம், ஆனால் வந்த பணம் அரசாங்கத்திற்கு நேரடியாக வந்ததா என்றால் வரவில்லை. அதுதான் குற்றச்சாட்டு. அதைத்தான் ங்கே இப்பொழுது தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் மூலமாக



நேர்மையாக, திறமையாக, உறுதியாக வருகின்றது என்று உறுதியோடு சொன்னார்களே ஒழிய சாராயத்தைக் குடிப்பதைத் தூண்டுவதற்காகச் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப் பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

1974–75–ஆம் ஆண்டு காமதேனு டிரிங்க்ஸ் மூலம், இ.எஸ்.ஐ. பாரி கம்பெனி மூலம், திருச்சி டிஸ்டிலரீஸ் மூலம், சக்தி ஷுகர்ஸ் மூலம், இந்தியன் கெமிக்கல்ஸ் நிறுவனம் மூலம் என்ன நடந்தது? இந்தியன் கெமிக்கல்ஸ் நிறுவனத்திலிருந்து 40 இலட்சம் லிட்டர் சாராயத்தைக் கொடுப்பதற்கு அன்றைக்கு ஆணை பிறப்பித்தது அரசாங்கம். என்ன நடந்தது? 93.5 இலட்சம் லிட்டர் சாராயம் தவறான முறையிலே பயன்படுத்தப் பட்டு, ரூ. 77 இலட்சம் வருமானம் அரசாங்கத்திற்கு இழப்பு அதோடு நிறுத்தினார்களா?

ஈரோடிலே உமா டிரிங்க்ஸ் என்ற நிறுவனம். அப்படி ஒரு நிறுவனமே இல்லை. அதன் பேரில் பினாமியாக 10,000 லிட்டர் சாராவியைக் கொடுத்தார்கள். 28–12–1974-லே ஓரியன்ட் கெமிக்கல்சிலிருந்து ஐதராபாத்தில் பாரமவுண்ட் என்ற நிறுவனத்திற்கு அன்றைக்கு 7,600 லிட்டர் சாராவியைக் கொடுத்து அனுப்பினார்கள். என்ன நடந்தது? போய்ச் சேர்ந்ததா சேரவில்லை. இப்படிப் பல தவறுகள் நடந்தன. அரசாங் கத்திற்குப் பணம் வந்து சேரவில்லையென்புதைத்தான் டாக்டர் சமரசம் அவர்கள் நேற்று சுட்டிக்காட்டினார்கள். இந்த அரசாங்கத்திற்கு அதிக வருமானம் வந்தது, ஏற்கனவே வர வில்லை. இப்பொழுது வந்திருக்கிறது. என்று சொன்னார்கள்.

மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முந்தைய ஆட்சியில் ஏலம் எடுத்தார்கள். தமிழ்நாட்டிலே பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வர வேண்டும். என்ன நடந்தது? சாராயக் கடை ஏலம் எடுத்தவர்கள், கள்ளுக் கடை ஏலம் எடுத்தவர் கள், அரசாங்கம் பணம் கேட்கிறது நாங்கள் கட்ட முடிய வில்லை என்று நீதிமன்றத்திற்குப் போனார்கள். நீதிமன்றம் அரசாங்கத்திற்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கியது. அரசாங்கம் வசூலித்துக்கொள்ளலாம், வசூலிக்கின்ற நேரத்திலே, ஏலம் எடுத்தவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டு வசூலிக்க வேண்டுமென்று நீதிமன்றம் சொன்னது. ஆனால் அப்படி வசூலித்தார்களா? தங்களுக்கு வேண்டியவர்கள் எல்லாம் சாராயக் கடைகளை எடுத்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அவர்கள் பணம் கட்ட வேண்டும் என்று நீதிமன்றம் ஆணை பிறப்பித்தும் அரசாங்கம் அந்தப் பணத்தை வசூல் செய்யவில்லை. என்ன செய்தார்கள்? அதற்குப் பதிலாக அந்தப் பணம் தேவையில்லை யென்று ரத்து செய்து ஆணை பிறப்பித்தது. குட்டி, குட்டி சாராய இராஜாக்களை உருவாக்கி அந்த சாம்ராஜ்ய சக்கரவர்த்தி யாக, சாராய சாம்ராஜ்ய ஏகாதிபதியாக, சக்கரவர்த்தியாக

இருந்தவர்தான் அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதி
அவர்கள். அப்படிச் சாராய, ஏகாதிபதி, சர்வாதிகாரியாக இருந்த
வர்கள் எல்லாம் இன்றைய தினம் இந்த ஆட்சியைப் பார்த்து
குறை சொல்வது என்ன நியாயம் என்பதைக் கேட்க
விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, அன்றைக்கிருந்த ஆட்சியிலே அந்த முதல்வர், அவர்
காலத்திலே, இப்படியெல்லாம் தவறு நடைபெற்றது என்று
மாண்புமிகு அங்கத்தினர் சொல்கிறார். இந்த வாதத்தை
இவ்வளவு அதிகமாக அவர் பேசுவதாலேயே இந்த ஆட்சி
யிலே நடைபெறுகிறது, அதனாலேஅதை நியாயம்
என்று நிலைநிறுத்துவதற்காக அப்படிப்பட்ட ஊழல் இங்கு
நடைபெறுவது நியாயம் என்பதற்காகத்தான் அந்த வாதம்
எடுத்து வைக்கப்படுகிறது என்பது பொருள். எனவேதான்
அந்த அடிப்படையிலேதான் உறுப்பினர் பேசுகிறார் என்று கருத
இடம் இருக்கிறதா அல்லவா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இந்த ஆட்சி சாராயத்திலே தவறு செய்திருக்கிறது
என்பதை உணர்த்துவதற்காக நான் இதைச் சொல்ல
வில்லை. நான் வணக்கத்திற்குரிய மாண்புமிகு பேராசிரியர்
அவர்கள் உள்ளே நுழைவதற்கு முன்னாலே ஒரு கருத்தைச்
சொன்னேன். அதாவது, இங்கே மாண்புமிகு உறுப்பினர்
அப்துல் சமத் குறிப்பிட்ட நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்.
நம்முடைய சமரசம் அவர்கள் இந்த ஆட்சியில் அதிக வருமானம்
வந்திருக்கிறது, ஏற்கனவே வரவில்லையென்று சொன்னார்கள்.
ஆனால் அப்துல் சமத் அவர்கள் என்ன சொன்னார்? இந்த
ஆட்சியினுடைய அதிக வருமானத்தைத் குறிப்பிட்டுச் சொல்
வதற்குக் காரணம், சாராயத்தைக் குடிப்பதைத் தூண்டுவதைப்
போல இருக்கிறது என்று இட்டுக்கட்டினார். அதைக் குறிப்
பிட்டுக் காட்டத்தான் ஏற்கனவே இருந்த ஆட்சியில் தவறான
முறைகளால் வருமானம் குறைக்கப்பட்டிருக்கிறது, இப்பொழுது
அந்த வருமானம் கூடியிருக்கிறது, முறைப்படி நிர்வாகம் நடை
கிறது என்றுதான் பொருள்........

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு உறுப்பினர் விவரங்களோடு பேசுகிற காரணத்
தால் நான் குறிப்பிட விரும்புகிறேன், அன்றையதினம் ஒரு லிட்டர்
சாராயம் என்ன விலை? இன்றையதினம் 1 லிட்டர் சாராயம்
என்ன விலை? அன்றையதினம் மாநில அரசு பட்ஜெட்—வரவு
செலவு எவ்வளவு? இன்றையதினம் மாநில அரசு பட்ஜெட்—வரவு
செலவு எவ்வளவு? அந்த விகிதாச்சாரத்தை மனதிலே வைத்துக்
கொண்டு உறுப்பினர் பேசுவாரானால் அவர் சொல்லுகிற அந்த
வாதம் அந்த அளவு நிலைக்காது.





(நண்பகல் 12-00)

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய பேராசிரியர் அவர்கள்
குறிப்பிட்டுச் சொல்வதற்கு நன்றி தெரிவிக்கிறேன், வரவேற்
கிறேன். அதேநேரத்தில் அவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.
விதி என்று சொல்லும்போது ஒன்றைக் குறிப்பிட வேண்டும்.
மதுவிலக்குக் கொள்கையில் இதுவரையில் எந்த ஒரு ஆலைக்கும்
பாக்கி இருக்கிறது, ரத்து செய்யவேண்டும் என்று ஆணை பிறப்
பிக்கவில்லை. ஆனால் வருமானம் அதிகரித்திருக்கிறது என்று
மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு எடுத்துகாட்ட விரும்பு
கிறேன்.

அதேநேரத்தில் இந்த ஆட்சியின் மதுவிலக்குக் கொள்கை
மற்றியும், மற்றப் பிரச்சனைகள் பற்றியும் இங்கே இருக்கிற
மாண்புமிகு உறுப்பினர்களும் மற்றவர்களும் புரிந்து கொள்ள
வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நான் புதிய உறுப்பினர்.
இருந்தாலும் தெரிந்த விவரத்தைச் சொல்கிறேன். டிஸ்ட்ரிக்ட்
முன்சீப்பாக இருந்தாலும் அல்லது சப் மாஜிஸ்டரேட்டாக இருந்
தாலும் அவர்களைப்பற்றி இங்கே பேசவேண்டுமென்றால், பதில்
சொல்ல முடியாது, பிரச்சனை இருக்கிறது, வேண்டாம் என்று
சொல்கிறார்கள். ஒருநாள் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்
கனி அவர்கள் எலக்ட்ரிசிட்டி போர்டு பற்றி ஒரு பிரச்சனையை
இங்கே எழுப்பினார்கள். அப்போது வணக்கத்திற்குரிய பேராசிரி
யர் அவர்கள் தலைவரைப் பார்த்து, அவையில் இல்லாதவர் பிரச்
சனையைப் பற்றி இங்கே பேசவேண்டாம் என்று கேட்டுக் கொண்
டார்கள். நான் கேட்கிறேன். இந்த அரசாங்கத்திலே உருவாக்கப்
பட்டு, சட்ட அமைச்சரால் உருவாக்கப்பட்டு, மாண்புமிகு முதல
மைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டு வெளியிலே இருக்கிற டிஸ்
டிரிக்ட் முன்சீப்களுக்கு மரியாதை இருக்கிறது. சப்-மாஜிஸ்டிரேட்டு
களுக்கு மரியாதை இருக்கிறது. ஆனால் இந்த மன்றத்திலே இருக்
கிற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தலைவராக, துணைத்
தலைவராக இந்த சட்டமன்றத்திலேயே இருக்கிறவர்களைப்
பார்த்து அவமானப் படுத்திப் பேசுவது, முறைகேடாகப் பேசுவது
அடாவடித்தனமாக இருப்பது எந்தவகையில் நியாயமாக இருக்கும்
என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்னும் எங்கள் ஊர்ப்பகுதியிலே கூறப்படுகின்ற ஒரு சிறு
கதையை மட்டும் இங்கே கூறி என்னுடைய உரையை முடித்துக்
கொள்ள விரும்புகிறேன். அந்தக் கதை என்னவென்றால், ஒரு
ஊரிலே ஒரு இராஜா இருந்தார். அந்த இராஜாவிடம் மக்கள்
எல்லாம் வந்து சொன்னார்கள். எங்கள் பயிர் பச்சை எல்லாம்
காட்டில் இருக்கிற புலி, சிங்கம் போன்ற மிருகங்களால் அழிக்கப்
படுகின்றன. அந்த மிருகங்களை அப்புறப்படுத்த வேண்டும்
என்று. உடனே இராஜாவும் மந்திரியும் அந்த மிருகங்
களை வேட்டையாட காட்டுக்குப் போனார்கள். புலி சிங்கங்
களை எல்லாம் வேட்டையாடினார்கள். நீண்ட நேரம் வேட்டை

யாடிய பின்னால் கொஞ்ச நேரம் இளைப்பாறிக்கொண்டிருந்தார்கள். ஒரு மரத்தின் கீழே ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் அந்த மரத்தின் மேலிருந்து குருவி ஒன்று கத்திக்கொண்டே இருந்தது. அப்போது இராஜா கேட்டாராம். நான் ஒரு மணி நேரம் இளைப்பாறலாம் என்று நினைத்து இங்கே ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறேன், என்னுடைய உடல் நலம் குன்றியிருக்கிறது, ஒரு மணி நேரம் நான் அமைதியாக ஓய்வு எடுக்க வேண்டும், ஆனால் இந்தக் குருவி ஏதோ கத்திக்கொண்டே இருச்கிறது, தொந்தரவாக இருக்கிறதே என்று மந்திரியிடம் சொன்னாராம். உடனே மந்திரி, அது கத்தவில்லை, பேசுகிறது எனக்கு குருவி மொழி தெரியும் என்று சொன்னாராம். அப்படியானால் அந்தக் குருவி என்ன சொல்கிறது என்பதை எனக்குச் சொல் என்றாராம் இராஜா. ''என்னுடைய கையிலே ஒரு பைசா இருக்கிறது, என்னுடைய கையிலே ஒரு பைசா இருக்கிறது'' என்று குருவி சொல்லிக்கொண்டிருப்பதாக மந்திரி சொன்னாராம். உடனே இராஜா சிரித்துக்கொண்டே அந்த பைசா எங்கே இருக்கிறது, போடச் சொல் பார்க்கலாம் என்றாராம். மந்திரி குருவி பாஷையில் இராஜா சொன்னதைச் சொன்னாராம். இதோ போடுகிறேன் என்று சொல்லி குருவி அந்தக் காசை கடாசிவிட்டது. குருவி கடாசிவிட்ட அந்தக் காசை இராஜா தூக்கிக்கொண்டு வந்தாராம். குருவி மீண்டும் கத்திக்கொண்டே இருந்தது. மீண்டும் குருவி ஏன் கத்துகிறது என்று இராஜா மந்திரியைக் கேட்டாராம். இப்போது குருவி கத்தவில்லை, உங்களைத் திட்டுகிறது என்று மந்திரி சொன்னாராம். எப்படித் திட்டுகிறது என்று கேட்டாராம் இராஜா. 'ஒரு காசுக்கு வக்கற்றவன் இந்த நாட்டை ஆளுவது எப்படி' என்று குருவி திட்டுகிறது என்று மந்திரி சொன்னாராம். அதைக் கேட்ட இராஜா அந்தக் காசை கடாசிவிட்டாராம். இருந்தாலும் குருவி கத்திக்கொண்டே இருந்தது. இப்போது குருவி என்ன சொல்கிறது என்று இராஜா மந்திரியைக் கேட்டாராம். மந்திரி சொன்னார், வேறு ஒன்றுமில்லை, எனக்குப் பயந்து காசைக் கடாசிய இராஜா இந்த நாட்டை எப்படிக் காப்பாற்றப் போகிறான் என்று குருவி சொல்வதாக மந்திரி சொன்னாராம்.

இது எதைக் காட்டுகிறது என்றால் இந்த ஆட்சி எதைச் செய்தாலும் குறை சொல்லிக்கொண்டே இருப்பதைத்தான் காட்டுகிறது. இந்த ஆட்சியிலே ஏதாவது குறை ஏற்பட்டால் சுட்டிக் காட்டுங்கள். நல்லது நடந்தால் பாராட்டுங்கள். எதிர்க்கட்சியாக இருப்பதால் எப்போதுமே குறை சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமென்று எண்ண வேண்டாம், அந்தக் குருவியைப் போல நடக்க வேண்டாம் என்று கூறி, அண்ணா நாமம் வாழ்க என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி. முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.



*திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற மாநில ஆயத் தீர்வை, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

குறிப்பாக, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் என்ற 9—வது மானியக் கோரிக்கையில் கூறப்பட்டிருக்கக் கூடிய பல்வேறு பிரச்சனைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக மாநில ஆட்சித் தலைவர் என்ற விஷயத்தில் ஆளுநர் என்பவர் ஒரு மாநிலத்திற்கு பொறுப்பாக மத்திய அரசால் நியமிக்கப்பட்டிருக்கிறவர். அப்படி நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய ஆளுநர் அவர்களால் தமிழ்நாட்டிலும், அதைப் போன்று நாடு முழுவதிலும் ஆளுநர் பொறுப்பைப் பயன்படுத்திக்கொண்டு மத்தியப் பேரரசு தான் விரும்பும்போதெல்லாம், தேவை என்கிறபோதெல்லாம் மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய ஆட்சியைக் கலைத்து, தங்களுடைய அரசியல் தேவையைப் பூர்த்தி செய்கிற சம்பவம் என்பது ஏறத்தாழ 37 ஆண்டு காலமாக நாடு முழுவதும் நடைபெற்றிருக்கிறது.

அதிலே எந்த மாநிலமும் தப்பியதாகச் சொல்லமுடியாது. நம்முடைய தமிழகத்திலே கூட அந்த ஜனநாயகப் படுகொலை என்பது 1952-லே ஒரு தடவை, 1976-ஆம் ஆண்டிலே ஒரு தடவை, 1980-ஆம் ஆண்டிலே ஒரு தடவை என்று மூன்று முறை நடந்திருக்கின்றது. ஆளுநர் அவர்கள் தேவை இல்லை என்று சொல்வதை விட அந்த ஆளுநர் அவர்களின் பணி எப்படி பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய எந்த மாநில ஆட்சிகளையும் தங்களுடைய விருப்பம்போல் பயன்படுத்திக் கொள்வதற்கு. தங்களுடைய ஏஜெண்டாக வைத்துக்கொண்டு மத்தியப் பேரரசு எப்படி இந்த ஜனநாயகப் படுகொலையைச் செய்து வருகின்றது என்பதும் அதற்கு உறுதுணையாக இருந்து வருவது அரசியல் சட்டத்திலே இருக்கக்கூடிய 356-வது பிரிவு என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இங்கே ஒவ்வொரு முறையும் அவ்வாறு கலைக்கின்றபோது அவர்கள் கூறக்கூடிய காரணங்கள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்றால் அவர்களுடைய காரியத்திற்கு நியாயம் கற்பித்துக்கொள்கின்ற வகையில் காரணங்களைச் சொல்கிறார்கள்.

இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். 1952-லே நடந்ததற்கும், 1976-லே நடந்ததற்கும், 1980-லே நடந்ததற்கும் வேறுபாடுகள் இருப்பது பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். வேறுபாடுகள் இருந்தன என்பது உண்மைதான்.

[திரு. கோ. வீரய்யன்] [1985 ஜூலை 3

1976-லே நடந்த அந்த ஆட்சிக் கவிழ்ப்பைப் பொறுத்த
வரையிலே ஏதோ குற்றச்சாட்டுக்களை அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்திருந்த காரணத்தால்
மத்திய அரசு மாநில அரசை அந்தக் குற்றச்சாட்டிற்காக கலைத்
தது என்று சொன்னார்கள். குற்றச்சாட்டைப் பொறுத்தவரை
யில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
கொடுத்தது 1972-ஆம் ஆண்டிலே. ஆனால் ஆட்சி கலைக்கப்
பட்டது 1976-ஆம் ஆண்டிலே. எனவே, அந்தக் குற்றச்சாட்டு
கொடுத்ததற்கும் ஆட்சி கலைக்கப்பட்டதற்கும் சம்பந்தம்
இல்லை. 1975-ஆம் ஆண்டு இந்த நாட்டிலே பிறப்பிக்கப்பட்ட
அவசரகால நிலைமையை தமிழகத்தில் இருந்த மாநில அரசு
ஏற்றுக்கொள்ளவில்லை என்ற காரணத்திற்காகத்தான் அதற்கு
முன்னால் கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டைக் காரணமாகச்
சொல்லி அந்த ஆட்சி கலைக்கப்பட்டது.

1980-ஆம் ஆண்டிலே அதற்கு முன்னாலே இருந்த மத்திய
அரசோடு மாநில அரசு உறவு வைத்திருந்தது என்ற காரணத்
தாலே, அப்போது வந்த காங்கிரஸ் கட்சியோடு உறவு கொள்
ளாமல் இருந்தது என்ற காரணத்தை முன்னிட்டு, மாநில அரசு
ஆட்சிக்கு வந்த இரண்டரை ஆண்டுகள் முடிவதற்குள்ளாகவே
கலைக்கப்பட்டது. இப்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாநில
அரசுகளைக் கவிழ்க்க கவர்னர் என்ற தன்னுடைய ஏஜெண்டை
மத்திய அரசு பயன்படுத்திக்கொண்டு இருக்கின்றது. எனவே
5 கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக் கூடிய சட்ட
மன்றம் சட்டங்களை நிறைவேற்றினாலும் கூட, திட்டங்களை
நிறைவேற்றினாலும் கூட அதற்கு கவர்னரோ அல்லது குடியரசுத்
தலைவரோ கையெழுத்துப் போடவில்லை என்று சொன்னால்,
அவர்கள் அதற்கு மறுத்துவிட்டால் அந்த மக்களுக்காகப் பயன்
படக்கூடிய சட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாத நிலைமையில்
வெறும் மசோதாவாகத்தான் இருக்கவேண்டிய நிலைமை இருக்
கின்றது. அந்த அதிகாரங்களைப் பொறுத்தவரையில் அரசியல்
சட்டப்பிரிவு கவர்னர் மூலமாகத்தான் செய்யவேண்டும் என்று
வழங்கி இருக்கின்றது. அந்த 356-வது பிரிவைப் பயன்படுத்தி
மாநில ஆட்சிகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த மாநில
ஆட்சிகளை அந்த மக்களின் விருப்பத்திற்கெதிராகக் கலைக்கக்
கூடிய நிலைமை இருக்கின்றது. எனவே இந்தப் பிரிவினை நீக்கு
வதன் மூலமாக மக்களின் உணர்வை மாநில அரசு பிரதிபலிக்க
வகை செய்ய முடியும். அந்த வகையிலே வரக்கூடிய காலத்திலே
மாநில அரசு இதனை மாற்றுவதற்கான முயற்சிகளிலும்,
நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.



1985 ஜூலை 3] [திரு. கோ. வீரய்யன்]

அமைச்சர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதக்கூடிய கடிதங்களுக்கு ஒரு பதிலுரை அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதினால் சில அதிகாரிகளிடத்திலிருந்து கடிதம் கிடைத்தது என்று தகவல் வருகின்றதே தவிர அதற்குப் பிறகு எந்த பதிலும் வருவதில்லை. அமைச்சரவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு உரிய முறையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

அதே போலத்தான் அமைச்சர்கள் தொகுதிகளுக்கு வரும் போது அவர்கள் தொகுதிகளுக்கு வரக்கூடிய அந்தச் சுற்றுப் பயணக் குறிப்பை மட்டும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தால் போதாது. சட்டமன்ற உறுப்பினர்களும், அவர்க ளுடன் கலந்து வரக்கூடிய வகையில் ஏற்பாடு செய்து, தொகுதி உறுப்பினர்களுடன் தொகுதிகளுக்கு வரும்போது, அங்குள்ள மக்களோடு சேர்ந்து கலந்து பேச உதவியாக இருக்கும். அந்த வகையில் முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். இன்றைக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே தொகுதிகளில் பாரபட்சம் காட்டப்படுகிறதோ என்ற கருத்து இருக்கிறது. அந்தக் கருத்துக் களுக்கு நிச்சயமாக இடம் தராமலிருக்க அமைச்சர்கள் முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அமைச்சர்களைப் பொறுத்த மட்டில். ஜாதி அமைப்புகள் அல்லது ஜாதி சங்கங்கள் நடத்தக்கூடிய நிகழ்ச்சி களுக்கு அவர்கள் செல்லுகிறபோது, ஜாதிகளுக்கிடையே வகுப்பு வாத எண்ணங்களுக்கும், ஜாதி விரோத கருத்துக்களுக்கும் ஊக்கம ளிக்கின்ற முறையில் இருப்பதோடு, சம்பந்தப்பட்ட அந்த ஜாதி அமைப்புகளுக்கு ஒரு தனி அந்தஸ்து கொடுக்கின்ற வகையிலும் அது அமைந்து விடுகிறது. ஆகவே அப்படி ஜாதிகளின் சார்பாக நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் போவதை அமைச்சர்கள் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இந்த மானியக் கோரிக்கைகளில் முழுமையாக விவாதங்களை நடத்துவதற்கான சூழ்நிலை இல்லாமல் இருப்பதி னாலே, நாடாளுமன்றத்திலே இருப்பதைப் போல ஒவ்வொரு இலாக்காவிற்கும் தனித் தனியாக குழுக்கள் அமைத்தால், அவை பல்வேறு சந்தர்ப்பங்களில் கூடி அந்தந்த துறைகளைப் பற்றி விவாதிக்குமேயானால், எத்தனையோ திட்டங்களை சுலபமாக நிறைவேற்றிட அது உதவியாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கோ. வீரய்யன்] [1985 ஜூலை 3

அடுத்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள். 3 மாதங்களுக்கு ஒரு முறை அது நடத்தப்பட வேண்டும் என்பது ஏற்பாடுகளில் இருக்கிற ஒன்று. அதை 2 மாதங்களுக்கு ஒரு முறை நடத்துவதற்கான முறையிலே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு அந்தக் கூட்டங்களுக்கு அனைத்து மாவட்ட தலைமைப் பொறுப்பிலே இருக்கக் கூடிய அதிகாரிகளும் வருவது என்பது தற்போது கொஞ்சம் கொஞ்சமாக நின்று போய்விட்டது. அவர்கள் தவறாமல் வரக்கூடிய நிலைமையில் ஏற்பாடு செய்யவேண்டும். அத்தோடு கலெக்டர் அழைத்தாலும் கூட, சில தலைமை அதிகாரிகள், தங்களின் துறையில் மிகவும் வேலையிருப்பதாகக் கூறிவிட்டுப் போய்விடக் கூடிய நிலைமை இருக்கிறது.

அது மட்டும் அல்ல, அந்த அபிவிருத்தி கவுன்சிலில் நிறைவேற்றப்படக் கூடிய தீர்மானங்கள் சும்மா ஒரு சம்பிரதாயத்திற்கு நிறைவேற்றப்படுவதாகவே மாறிக்கொண்டு வருகிறது. அந்த நிலையைப் போக்கி. அங்கு நிறைவேற்றக் கூடிய தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, நடைமுறையில் நிறைவேற்றுவதற்கு உத்தரவுகளை பிறப்பிக்கக்கூடிய வகையில் நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாநில மாவட்ட தலைமை அதிகாரிகள் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்கிறபோது, அதன் விவரக் குறிப்புகளும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் அந்த அதிகாரிகளை சந்தித்து தொகுதியின் சிலபல பிரச்னைகளை தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும். அத்தோடு மட்டும் அல்லாது கலெக்டருக்கு நீங்கள் ஏகப்பட்ட பொறுப்புகளைக் கொடுத்து விடுகிறீர்கள். அந்தப் பொறுப்புகளையெல்லாம் அவர்களால் முழுமையாக நிறைவேற்றிட முடியாமல் இருக்கிறார்கள்.

உதாரணமாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், தஞ்சை மாவட்ட கலெக்டர் அவர்களுக்கு, தஞ்சை சரஸ்வதி மஹாலில் இருக்கக்கூடிய நூல் நிலையத்தின் தலைமைப் பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அவரால் அந்த நூல் நிலையத்திற்கு எந்த நேரமும் போக முடியவில்லை. அதனால் கண்காணிப்பு இல்லாமல் பலவிதமான தவறுகள், முறைகேடுகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. கலெக்டர் தான் பொறுப்பாக இருக்கிறார். அவருடைய பொறுப்பிலிருந்து அதை மாற்றி, அந்த தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையம் ஒரு பழம் பெரும் நூல் நிலையம் என்ற வகையில், ஒரு தனி அதிகாரியின் பொறுப்பிலே அதை ஒப்படைப்பதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அதே போல தலைமைச் செயலகத்தில் இருக்கக்கூடிய பணியாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்பதோடு, விடுதியில் இருக்கும் பணியாளர்கள் போதுமான அளவுக்கு இல்லை.



1985 ஜூலை 3] [திரு. கோ. வீரய்யன்]

ஆகவே அந்த எண்ணிக்கையையும் அதிகப்படுத்தித் தருவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஆயத் தீர்வையைப் பொறுத்தமட்டில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இதிலே எனக்கு முன்னாலே நேற்றும் இன்றும் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த மதுவிலக்கு கொள்கையைப் பற்றி நிறைய விவாதங்களை நடத்தினார்கள், அதிலே அந்த முதலமைச்சர் குடிக்கச் சொன்னார்களா அல்லது இந்த முதலமைச்சர் குடிக்கச் சொன்னார்களா என்ற விஷயங்களை எல்லாம் கூட குறிப்பிட்டார்கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூட இந்த மதுவிலக்குக் கொள்கை மிகவும் சரியானது; புனிதமானது என்பது போலக் குறிப்பிட்டார்கள். ஆனால் ஆளும் கட்சித் தரப்பிலேயிருந்து பேசிய டாக்டர் சமரசம் அவர்கள் அமைச்சர்கள் எல்லாம் கூட குறிப்பிடாத வகையில் மிகவும் அழுத்தம் திருத்தமாகப் பேசினார்கள். கூடுதலாக ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்த கெட்ட சாராயத்தை மக்கள் குடிக்கக் கூடாது என்பதற்காக, நல்ல சாராயமாக அவர்கள் குடிக்கவேண்டும் என்பதற்காகத்தான் மதுவிலக்கு கொஞ்சம் தளர்த்தப்பட்டிருக்கிறது என்று கூட சொன்னார்கள். இவைகளையெல்லாம் கேட்கும்போது நமது சட்டப்பேரவை உறுப்பினர்கள் என்ன கற்பனை உலகத்திலே சஞ்சரிக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

நாட்டு மக்களை மாற்ற முயற்சி செய்யவில்லை. இந்திய நாட்டைப் பொறுத்தமட்டில் மதுவிலக்குக் கொள்கை தோற்றுவிட்டது என்ற உண்மையை ஒளிப்பதற்கு ஏன் முயல்கிறீர்கள்? உண்மை சுடும் என்ற காரணத்தினாலா? மதுவிலக்குக் கொள்கை என்பது இந்திய நாட்டில் தோற்றுவிட்டது என்கிற உண்மையைக் கூட ஒளிப்பதற்கான நிலையில்தான் இவர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தான் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்கு என்பதில், கள்ளுக் கடைகளை, சாராயக் கடைகளை, அன்னிய மது பானங்கள் ஆகியவற்றை அரசே ஏலம் விடுகிறது, அல்லது அரசே விற்பனை செய்கிறது என்பதை நிறுத்திவிட்டால், சாராய உற்பத்தி நின்று விடுகிறது, குடிப்பவர்கள் குடிப்பதை நிறுத்திவிட்டார்கள் என்று நீங்கள் எல்லாம் கற்பனை செய்து கொண்டு பேசுகிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

நெருப்புக்கோழி தன்னுடைய தலையை மண்ணில் புதைத்துக் கொண்டு உலகமே இருண்டு விட்டதாக நினைப்பதைப் போல, சாராயக்கடைகளை கள்ளுக்கடைகளை அரசு ஏலம் விடாவிட்டால் சாராய உற்பத்தி நின்றுவிடும், சாராயம், கள் குடிப்பவர்கள் இல்லாமல் போய்விட்டார்கள் என்ற கற்பனையில் இருக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

[திரு. கோ. வீரய்யன்] [1985 ஜூலை 3

தமிழகத்தில் மதுவிலக்கை அமல்நடத்தியதால் தான் எரிசாராயம் தொழிலை நல்லவர்கள் கூட கற்றுக் கொண்டார்கள், பெண்கள் கூட சாராயம் காய்ச்சுகிற தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இளைஞர்கள் கூட மறைமுகமாகக் குடிக்க ஆரம்பித்தார்கள். சாராயம் காய்ச்சுவது என்பது குடிசைத் தொழிலாக மாறியது. சமூகவிரோதிகளை உற்பத்தி செய்தது. மதுவிலக்குக் கொள்கை வராமல் இருந்திருந்தால் சமுதாயம் இந்த கேடுகெட்ட நிலைக்கு ஆளாகி இருக்காது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மது உற்பத்தியாகிறது. எரிசாராயம் ஆறாக ஓடியது, குடிசைத்தொழிலாக அது மாறியது. தங்களுடைய வருவாய்க்கு காவல்துறையைச் சேர்ந்தவர்கள், அனைவருமில்லை, ஒருசிலர் கூட அவர்களே முதல் கொடுத்து சாராயத்தை தமிழகத்திலே காய்ச்ச சொன்னார்கள். பக்கத்து மாநிலங்களில் முழுவதுமாக சட்டப்படி சாராயக் கடைகளில் வியாபாரம் நடந்தது. குடிக்க விரும்பியவர்கள் எல்லாம் பக்கத்து மாநிலங்களில் சென்று குடிக்க ஆரம்பித்தார்கள். இங்கே எரிசாராயம் குடிசைத் தொழிலாக மாறியது. பனை மரங்களிலிருந்து தென்னை மரங்களிலிருந்து கள் இறக்கப்பட்டு வியாபாரம் நடந்தது.

பக்கத்து மாநிலங்களுக்கு வருமானம் சென்றதும் இங்கே கள்ளச்சாராய உற்பத்தி அதிகமாகியது. அரசுக்கு வரவேண்டிய வருமானம் வராமல் போனதும், அதற்குரிய ஈட்டுத் தொகையை கூட மத்திய அரசு கொடுக்க மறுத்ததும், இவைகள் எல்லாம் சேர்ந்து மதுவிலக்கு தோற்றுவிட்ட நிலையில் தமிழகத்தில் சாராயக் கடைகளும், கள்ளுக்கடைகளும் சட்டப்படி திறக்க வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் ஏற்பட்டது. இன்றைக்கு அரசு மதுவிலக்கை அமல்நடத்தி ஏலம் விடுவதை நிறுத்திவிட்டால் சாராயம் கிடைக்கவில்லை, உற்பத்தியாகவில்லை என்று ஆகிவிடுமா? அது நடக்கத்தான் செய்யும். எனவே இதிலே அரசாங்கம் அரைக்கிணறு தாண்டுகிற நிலையில் இல்லாமல், முழுமையாக மற்ற மாநிலங்களைப்போல மதுவிலக்குத் திட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை முறையாக அமல் நடத்துவதற்கான முயற்சிகள் செய்யப்படவேண்டும். சந்தேகங்களோ, கேள்விக் குறிகளோ வராமல் செய்யவேண்டும். அது நேற்றும் வந்தது, இன்றும் வருகிறது, நாளையும் வரும். சாராய வியாபாரத்தை அரசு ஏற்றுக்கொண்டு, சாராய உற்பத்தியை அரசு தனியார்களிடத்தில் ஏன் விட்டிருக்கிறது ? அந்தக் கேள்வி வரத்தான் செய்யும், இதிலே அரசு சரியான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

உற்பத்தி செய்கிற அந்தத் தொழிலையும் அரசே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டுகளில் கடைகளை கொடுத்தீர்கள். உரிய அளவிற்கு சரக்கை கொடுக்காததால் கள்ளச்சாராயம் காய்ச்சுகிற தொழிலை முழுமையாக நிறுத்தமுடியவில்லை. கடைகளை ஏலம் விட்டு



1985 ஜூலை 3] [திரு. கோ. வீரய்யன்]

விட்டு அந்தக் கடைக்கான சரக்கை கொடுக்காவிட்டால் கள்ளச்சாராயத்தைக் காய்ச்சி, அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய சாராயத்தை சேர்த்து கடைக்காரர்கள் வியாபாரம் செய்ய முயற்சி செய்தார்கள். எதிர்காலத்தில், நாளைக்கும் முகவர்கள் கடைகளுக்கு உரிய சரக்கை அவர்களுக்கு கொடுக்காவிட்டால் கள்ளச் சாராயத்தை நிறுத்தமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி காவல் படை வைத்து தடுப்பதாக அறிக்கையிலே கூறி இருக்கிறீர்கள். கார்களில் கடத்தப்பட்டது, பிடிக்கப்பட்டவையாக கூறியிருப்பது, 1982-ம் ஆண்டு 98 கார்கள் பிடிபட்டன; 1983-ம் ஆண்டு 26 கார்கள் பிடிபட்டன: பிறகு 51 கார்கள் பிடிபட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனைப் பார்த்தால் குறைந்துகொண்டே வந்ததைப்போல இருக்கும். ஆனால் அடுத்ததாக இருப்பதைப் பார்த்தால், வேன்கள் பிடிப்பட்டன என்பது 6,7,6 என்று அதிகரித்திருப்பதைப் பார்க்கலாம். கார்களில் சரக்கு எடுத்துச் சென்றால் கொஞ்சமாக கடத்த முடியும். வேன்களில் கடத்தினால் அதிகமாக கடத்தமுடியும் என்ற காரணத்தால் அதிகமாக வேன்களில் கடத்த ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதுதான் தெரிகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வழக்குகளில் காவல்துறை எந்த அளவிற்கு முயற்சி செய்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். காவல்துறையில் இருப்பவர்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களோடு உடன்பாடு செய்து கொண்டு மாதத்திற்கு இவ்வளவு வழக்குகளுக்கு ஆட்களைக் கொடுத்து விடுங்களென்று வழக்குகளைப் பதிவு செய்யக்கூடிய காட்சிகள் தமிழகத்தில் நடந்துகொண்டிருப்பதை பார்க்க முடிகிறது. அரசிற்கு இதுகுறித்து தெரியுமென்று கருதுகிறேன். எனவே கடும்தண்டனை கொடுத்து கட்டுப்படுத்தலாம் என்பது இதிலே முடியாது. அதேபோல சாராயக்கடை என்று போர்டு எழுதி வைத்து அதன் ஓரத்தில், கண்ணுக்குத் தெரியாமல் குடி குடியைக் கெடுக்கும் என்று எழுதிவைத்துவிட்டால் மட்டும் இந்தக் குடியினால் வருகிற விளைவுகளை மக்களுக்கு விளக்கிவிட முடியாது.

(பிற்பகல் 12-20.)

எனவேதான் பெருமளவு குடியின் தீமையை மக்களுக்கு விளக்க வேண்டும். அதற்குரிய தொகையை ஒதுக்கி, அதனுடைய தீமையைப் பற்றி கடுமையான பிரச்சாரம் செய்யப்பட்டு, மக்களுடைய மன உணர்விலே மாற்றம் ஏற்படுத்த வேண்டும், சட்டத்தை மட்டும் கொண்டு, இதைச் செய்துவிட முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. கோ. வீரய்யன்] [1985 ஜூலை 3

அடுத்து, 6,481 சாராயக் கடைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு கடைக்காரர்களும், பல கிளைக் கடைகளை திறந்து இதைப்போல, 2, 3 மடங்கு கடைகள் இருக்கின்றன. ஒவ்வொரு தெருவிற்கு ஒரு சாராயக் கடைகள் என்ற அளவிற்கு இன்றைக்கு இருக்கிறது. ஆகவே நிறைய உபகிளைகளை வைத்துக்கொண்டு நடத்துகிறார்கள். அந்தக் கடைகள் எல்லாம் பல்வேறு பொது இடங்களில், பேருந்து நிலையங்களில், தண்ணீர் தொட்டிக்குப் பக்கத்தில், சினிமாக் கொட்டகைக்குப் பக்கத்தில், மக்கள் அதிகமாக நடமாடுகின்ற இடங்களில் இருக்கின்றன. அவைகளை எல்லாம் தடுத்து, நிறுத்தவேண்டும். அரசாங்கம் விற்பனை செய்வதாகச் சொல்லிவிட்டு, நான் பத்திரிகையிலே பார்த்தேன். 10 ஆயிரம் முகவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்போவதாக செய்தி வருகிறது என்றால், அரசு இந்த விற்பனைக் கழகத்தின் மூலமாக ஆட்களை நியமித்து விற்பனை செய்வது என்பதை விட்டுவிட்டு, முழுவதையும் முகவர்களுக்கு கொடுப்பது என்ற முடிவிற்கு வந்துவிட்டதா? அப்படி வந்தால், நிச்சயமாக அனைத்தும் முகவர்கள் என்றால், 10 ஆயிரம் பேர்கள் என்றால், அது ஒரு நோக்கத்தில் செய்யப்படுகிறது என்ற தவறான கருத்துக்கு இடம் அளிக்கும். ஆளும் கட்சியில் இருக்கின்ற 10 ஆயிரம் பேர்களை முகவர்களாக நியமிக்கிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு ஏற்படுவதற்கு வகை செய்யும். எனவே அந்த நிலைமைக்கு இடம் கொடுக்காமல், இந்த விற்பனைக் கழகத்தின் மூலமாக, அவைகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தக் கள்ளச் சாராயத்தை தடுப்பதற்கு, கடைகளுக்குத் தேவைப்படுகிற அளவை அரசாங்கமே உற்பத்தி செய்து, அந்தக் கடைகளுக்கு கொடுத்து, அந்தக் கடைகளினுடைய எண்ணிக்கையை குறைத்து, அந்தக் கடைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமாகத்தான் இந்தக் கள்ளச்சாராயத்தை ஒழிக்கமுடியும். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு நிர்ணயித்து இருக்கக்கூடிய விலை மிக அதிகமாக இருக்கின்றது. அதைக் குறைக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் கூட இங்கே குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே அத்தனை பொருட்களும் தட்டுப்பாடு இன்றி கிடைப்பதாகக் கூறினார்கள். ஆமாம். சுமார் 60 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும்போது, பொருட்களின் மத்தியிலே அவர்கள் நெருங்க முடியாமல் இருக்கும் போது, தட்டுப்பாடு எப்படி வர முடியும்? ஆட்டுக்கறி கிலோ 30 ரூபாய் என்றால், யார் கறிக் கடைப் பக்கம் திரும்ப முடிகிறது? எனவே ஆட்டுக்கறிக்குத் தட்டுப்பாடு இல்லை. அதைப்போல முட்டையை எத்தனை பேர்கள் சாப்பிடுகிறார்கள்? முட்டை சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், அதற்கும் தட்டுப்பாடு வராது என்பதை அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன்.



1985 ஜூலை 3] [திரு. கோ. வீரய்யன்]

அதைப்போலத்தான் இந்த மதுவிலக்கைப் பொறுத்தவரையில். ஆயத்தீர்வையைப் பொறுத்தவரையில் நிச்சயமாக முழுமையாக சட்டப்படி அமுல்படுத்துவோம் என்பது முடியாது. எனவேதான் மதுவிலக்கு தோற்றுவிட்டது என்பதை தைரியமாக ஏற்றுக் கொண்டு, இந்தச் சாராயக் கடைகளின் எண்ணிக்கையை குறைத்து, கள்ளச் சாராயத்தை ஒழித்து, கள்ளுக்கடைகளை அதிகப்படுத்தி, உற்பத்தியை அரசே ஏற்று, தவறுகளை ஒழிப்பதற்கு முன்வரவேண்டும். அப்போதுதான் கள்ளச்சாராய உற்பத்தியைக் குறைக்க முடியும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. டி.எம். வெங்கடாசலம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டு, மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட, மதுவிலக்கு ஆயத்தீர்வை மானியக் கோரிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பை நல்கிய பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் அரசு மதுவிலக்குத் திருத்தச் சட்டத்தை கடந்த 3 ஆண்டு காலமாக நல்லமுறையில் செயலாற்றி வருகிறது. இந்த திருத்தச் சட்டத்தை எங்களின் வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்ததன் காரணத்தைக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். கள்ளச் சாராயம் தயாரிப்போர், விற்பனை செய்வோர் பிடியில் குடிப் பழக்கம் உள்ளவர்கள் சிக்கி, தமது உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வதை தடுக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்திற்காக இது கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள்.

குடிப் பழக்கம் என்னும் பிணி வந்து அதைவிட முடியாத நிலையில் உள்வர்கள் தினமும் அந்த சாராயத்தை குடித்துதான் ஆக வேண்டும் என்னும் நிலையில் உள்ளார்கள். அவர்களை தடுக்க என்ன முயற்சிகள் மேற்கொண்டாலும் முடியாது என்ற நிலையில் தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதனை எங்களால் உணர முடிகின்றது. மதுவிலக்கைத் தளர்த்துவது ஒருவகையில் வருத்தமான நிலையில் இருந்தாலும் நாட்டில் குடி என்னும் பிணி, நோய் என்று கூட சொல்லலாம். வந்தவர்கள், கள்ளச் சாராயத்தினை குடித்து, உடல் நலத்தினை கெடுத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக இந்தச் சட்ட திருத்தத்தின் மூலம் நல்ல சாராயத்தினை தயார் செய்து முறையாக விநியோகம் செய்து வரும் புரட்சித் தலைவரின் அரசை பாராட்டியாகவேண்டும். இன்னும் எடுத்துக்கொண்டால், இது ஒரு மனிதாபிமான உணர்வு கொண்டு எடுக்கப்பட்ட முடிவு கூட என்று சொல்லலாம். நான் கேள்விப்பட்டுள்ளேன், கிராமங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சும்

போது சல்பேட் என்னும் உரத்தினையும், பேட்டரி செல், யூரியா போன்ற நஞ்சுப் பொருள்களை எல்லாம் போட்டு சாராயம் தயாரிப்பதாகவும் இதனால் மிகவும் கொடுமையான நோய்கள் எல்லாம் வரும் என்று மருத்துவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக் கிறேன். இப்படி பல்வேறு வியாதிகளுக்கு உள்ளாகி பலர் அவதிப் படுவதைத் தடுக்கவும் இந்தத் திருத்தச் சட்டம் தேவையான ஒன்றாகும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவந்ததன் மூலம் கள்ளச்சாராயம் தயாரித்து வந்த சமூக விரோதிகளுக்கு போய் சேரும் நிலையில் இருந்த பணத்தினை, அரசுக்கு கள், சாராய கடைகள் மூலம் சுமார் 200 கோடி ரூபாய் வருமானம் வந்துள்ளது என்று சொன்னால் இந்த நடவடிக்கை இல்லை எனில் இந்தப் பணம் முழுவதும் யாருக்குப் போய்சேரும் என்பதனை சற்று யோசித்துப் பார்த்தாகவேண்டும். கண்டிப்பாக இந்தத் தொகை முழுவதும், சமூக விரோத தீயச் சக்திகளிடத்தில் தான் போய் சேரும்.

இதைத் தடுத்து அரசுக்கு வருமானம் வரச் செய்து அந்தத் தொகையினை நல்ல பல காரியங்களுக்குப் பயன் படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டுகின்றது என்று சொன்னால் இது மிகவும் பாராட்டுக் குரிய செய்தியாகும்.

அது மட்டுமல்லாமல் கள்ளச் சாராயம் காய்ச்சுவோரையும், விற்பவர்களையும் கண்டுபிடித்து இந்த மாநிலத்தில் இருந்தே ஒழித்துவிடுவது அரசின் நோக்கம் என்பதனை நாம் மக்கள் நலம் கருதி வரவேற்றாக வேண்டும்.

இதற்கு முன்பு பேசிய எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள், தடுக்கி விழுந்தால் சாராயக்கடை, கள்ளுக்கடை என்று சொன்னார்கள். ஆனால் இதற்கு எல்லாம் வித்திட்ட வர்கள் யார் என்பதை இந்த நேரத்தில் நினைவு கூறவேண்டும். தமிழகத்தில் மது விலக்கு ரத்துக் கொள்கையை கொண்டுவந்தது தி.மு.க. வின் ஆட்சி காலமாகும் என்பதை குறிப்பிட்டுச் சொல்ல கடமைப்பட்டு உள்ளேன். அந்த நேரத்தில் மது விலக்கை ரத்து செய்யக்கூடாது என்று வன்மையாக எதிர்த்தவர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் தான் என்பதை குறிப்பிட்டுக் கூற கடமைப்பட்டுள்ளேன். மேலும் மதுவினுடைய கொடுமை களையும், தீமைகளையும் விளக்குகின்ற பிரச்சாரக் குழுவின் தலைவராகச் செயல்பட்டார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.





அதேபோல இன்றும் கூட சாராயக்கடை, கள்ளுக்கடை களிலும் அயல் நாட்டு மது பாட்டில்கள் மீதும் 'குடி குடியைக் கெடுக்கும், குடிப்பழக்கம் உடலைக் கெடுக்கும்' என்ற வாசகங் களை வைத்திருப்பதிலிருந்தே புரட்சித் தலைவர் இதை விரும்பு கிறாரா? வெறுக்கிறாரா என்பதைப் புரிந்துகொள்ளலாம். ஆனால் இப்படிப்பட்ட வாசகங்கள் தி.மு.க. வின் ஆட்சி காலத்தில் மது விலக்கை ரத்து செய்தபோது இருந்ததா ? என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க கேட்டுக்கொள்கிறேன்.

மது விலக்கை, மதுவின் கொடுமையை வலியுறுத்தி மது விலக்கை ரத்துசெய்யவேண்டும் என்பதை தி.மு.க.வினர் வலியு றுத்திச் சொன்னார்கள். அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறேன், இந்த மதுவின் கொடுமையையும் தீமையையும் அறிந்த தி.மு.க. வினர் ஆட்சி பாண்டிச்சேரியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஏன் அங்கு மதுவிலக்கை அமல்படுத்த நடை முறைப்படுத்தவில்லை என்று தான் எனக்குத் தெரியவில்லை.

ஜனநாயக ஆட்சி என்பது மக்களால் மக்களுக்காக மக்களே நடத்துகின்ற ஆட்சிதான் என்ற தத்துவத்தின் அடிப்படையில் தான், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவரின் நல்லாட்சி தமிழகத்தில் நடந்துவருகிறது என்பதனை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். உதாரணமாக தமிழகத்தில் 'நுழைவு வரி' அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் மக்கள் நலன் கருதி அந்த நுழைவு வரியை ரத்துசெய்தது என்றால் கொண்டு வந்த வரியை மீண்டும் ரத்து செய்தது இந்தியாவிலேயே புரட்சித் தலைவரின் அரசு தான் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் மக்களின் நல்ல உள்ளங்களுக்கு மதிப்பளிப்பவர் எங்கள் புரட்சித் தலைவர் தான் என்பதை நினைவு கூரவே இதை நான் கூறுகிறேன். அதைப்போலவே நல்ல மனம் கொண்ட எங்கள் புரட்சித் தலைவர் எந்த நேரத்தில் எந்த வகையில் எந்த முறையில் மது விலக்கை அமலுக்கு கொண்டுவர முடியுமோ அதை உரிய நேரத்தில் செயல்படுத்துவார் என்பதை இந்த நேரத்தில் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல் இந்த மதுவிலக்கு திருத்தச் சட்டத்தை மாண்பு மிகு சட்ட அமைச்சர் அவர்கள் நல்ல முறையாக, செயல்பட வேண்டும் என்ற எண்ணத்திலே முறைப் படுத்தி இருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

(பிற்பகல் 12-30)

குறிப்பாகச் சொல்லப் போனால், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சீரிய பாதையில் எங்களின் புரட்சித் தலைவ ருடைய நல்லாட்சி. புனிதமான பொன்னான ஆட்சி இன்றைக்கு நடைபெற்று வருகிறது என்பதைச் சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

* திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண். 2, மாநில ஆயத் தீர்வை கோரிக்கை எண். 9—மாவட்ட ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்கின்ற துறையின் மீது என்னுடைய கருத்துக்களை நான் முன் வைக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய அனைத்து உறுப்பினர்களும் ஓரளவு தங்களுடைய கருத்துக்களை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். இதிலே, முஸ்லீம் லீக் கட்சியினுடைய தலைவராக இருக்கின்ற தலைவர் அப்துல் சமத் அவர்கள் பேசுகின்றபோது, ஒரு பாடலை எடுத்துச் சொன்னார்கள்.

'குடி கெடுத்த குடி ஒழிந்தது' அடிதடி சண்டை அதுவும் ஓய்ந்தது! ஆணும் பெண்ணும் புத்தி அறிந்தது இந்த நாட்டிலே அக்டோபர் 1-க்கு மேலே' என்று சொன்னார். ஆனால் நம்முடைய ஆயத் தீர்வைக் கணக்கு எப்போது ஆரம்பிக்கப் படுகின்றது என்று சொன்னால், அக்டோபர் 1 முதல், செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரையிலும், எந்தத் தேதியில் அது ஒழிக்கப் பட்டதாகப் பாடல் இருக்கின்றதோ, அதே தேதியில் தான் இது துவக்கப்பட்டிருக்கின்றது என்பதை நினைக்கின்றபோது ஒரு பக்கத்திலே வேதனையாக இருக்கின்றது.

எங்களைப் பொறுத்தமட்டிலும், எங்களுடைய கட்சியினுடைய கொள்கையை நாங்கள் எடுத்துச் சொல்கின்றோம். எங்களுடைய நிலையை விளக்குகின்றோம். அப்படி விளக்குகின்றபோது, அரசாங்கம் எடுக்கின்ற முடிவுகளிலே சில நேரங்களில் எங்களுக்கு இருக்கின்ற சந்தேகங்களை போக்கிக் கொள்வதற்காகவும், எங்களுக்குத் தெரிந்த, இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தவறுகளைச் சுட்டிக் காட்டுவதற்காகவும் பொறுப்பு இருக்கின்ற காரணத்தினால் நாங்கள் வேண்டாம் என்று நினைத்தாலும், இதிலே எங்களுடைய கருத்துக்களைச் சொல்கிறோம்.

உடனே நீங்கள் வேண்டாம் என்று சொல்கிறீர்களே இதற்கு மட்டும் உங்கள் கருத்தைச் சொல்கிறீர்களே என்று கேட்க வேண்டாம். அதே போல், இங்கே மட்டும் வேண்டாம் என்று சொல்கிறீர்களே; அகில இந்தியாவிலே உங்கள் கட்சி ஆளுகின்ற மாநிலங்களில் மற்ற இடங்களில் இவைகள் இருக்கின்றதே, ஆகவே அங்கேயும் நீங்கள் இந்தப் பிரசாரத்தைச் செய்வீர்களா என்று கேட்பீர்களேயானால், இது நீங்கள் கேட்டு நாங்கள் பதில் அளித்த ஒன்றாக இருந்தாலும், என்னைப் பொறுத்த வரையிலும் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

நான் அந்த மாமன்றத்திலே இருப்பேனேயானால், இந்தக் கருத்தினை நிச்சயம் அங்கேயும் வலியுறுத்துவேன். அதே போல் தான் இந்த மாமன்றத்தில் இருக்கின்றபோது, நான் தமிழகத்தில் இருக்கின்ற ஒரு மக்கள் பிரதிநிதி என்ற காரணத்தால் தமிழக





மக்களுடைய நலனுக்காக எது உகந்ததாக இருக்கிறதோ அதை நான் சுட்டிக் காட்ட வேண்டியது, என்னுடைய கடமை என்கின்ற ரீதியிலே தான் என்னுடைய கருத்துக்களை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

முதல்வர் அவர்கள் மதுவை ஒழிக்க வேண்டும் என்பதற்காக அவர் எடுத்துக் கொள்ளாத முயற்சியே கிடையாது என்று இந்த மன்றத்திலே பலர் கூறியதைப் போல, அனைவரும் அறிந்த ஒரு விஷயமாக இருக்கிறது. உண்மையிலே நான் நினைக்கின்றேன். அவரைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாகக் கூட இருக்கிறது.

காரணம் சகல வல்லமை படைத்த தமிழகத்தினுடைய முதல்வராக இருந்தும்கூட, அவருடைய குறைந்தபட்ச எண்ணம் கூட இந்த விவகாரத்திலே அவராலே நிறைவேற்றிக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றதே என்பதை நினைக்கின்றபோது, யாராக இருந்தாலும், எதை வேண்டுமானாலும் செய்து விட முடியும் என்ற நினைப்பு நிச்சயமாக இருக்க முடியாது என்பதைத் தான் நான் தெரிந்து கொள்ளுகிறேன்.

குறிப்பாகச் சொன்னால், இங்கே சில உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். அரசாங்கத்திற்கு 200 கோடி ரூபாய் வருமானம் வருகின்றது. டாக்டர் சமரசம் அவர்கள் கூடச் சொன்னார்கள். பணம் எப்படி வருகின்றது என்பது பிரச்சினை அல்ல. அந்தப் பணத்தை எப்படிச் செலவிடுகின்றோம் என்பது தான் பிரச்சினை என்றார்கள்.

மிக வருத்தத்தோடு நான் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். பணம் எப்படி வருகின்றது என்பது பிரச்சினை அல்ல என்று சொன்னால், பணம் எப்படி வேண்டுமானாலும் வரும். அதை தமிழகத்தினுடைய முதல்வரும், இந்த அரசும், இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்கிறார்களா என்று தான் தெரிந்து கொள்ள ஆசைப் படுகிறேன். பணம் என்ற ஒன்று எப்படியும் வரும். சாராயக் கடை வைத்து நடத்துவதால் மட்டும்தான் வருமானம் வரும் என்று சொல்ல முடியாது. எத்தனையோ சமூக விரோத காரியங்களைச் செய்தாலும்கூட பணம் வரும். எனவே, அப்படி வருகின்ற பணம் நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுவதாலேயே அது முறைப் படுத்தப்படுகிறதா, அந்தப் பணம் வந்த முறை சரி என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறதா என்பதைத்தான் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் நினைக்கிறேன், என்னைப் பொறுத்தவரையில், தமிழக முதல்வரவர்களின் எண்ணம் எப்படியிருக்கும் என்றால், வருமானம் வருகிறது என்று சிரித்தாலும்கூட, அந்த வருமானம் எதன் மூலம் வருகிறது என்று எண்ணிப் பார்த்து அழுது கொண்டுதான்

இருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, சிரித்துக்கொண்டே அழுகிறார் என்று தான் நினைக்கிறேன். அதைப்பார்த்து நாம், அதை எப்படி ஒழிப்பது என்பதற்குத் திட்டம் தீட்ட வேண்டுமே தவிர அதை விட்டுவிட்டு அதற்கு ஊதுகோலாக அமையக்கூடாது என்பதைத்தான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

வாணிபக் கழகத்திடம் இன்றைக்கு இந்தச் சாராய விற்பனையை விட இருக்கிறோம். உண்மையிலேயே சொல்ல வேண்டுமென்றால், முன்னாலே கடைகளிலே சென்று சாப்பிட்டார்கள். ஆனால் இப்போது அப்படி இல்லை. கால் பாட்டில், அரை பாட்டில், முக்கால் பாட்டில், முழு பாட்டில் என்று விற்கவிருக்கிறார்கள். அப்படி விற்கின்றபொழுது அதிகமான பாட்டில்கள் தேவைப்படும். பாட்டில்சள் இன்றைக்கு தனியார் நடத்திக் கொண்டு இருக்கின்ற மிகப் பெரிய தொழிற் சாலையில் இருக்கிறது என்று நினைக்கிறேன். அது உண்மையாக இருந்தால், அந்தத் தொழிற் சாலையைக்கூட அரசாங்கமே எடுத்து நடத்தினால் எத்தனையோ பேருக்கு நியாயமான அடிப்படையில் வேலை கிடைக்கும்; நியாயமான முறையில் சம்பளம் கிடைக்கும்; உண்மையான வருமானம் நமக்குக் கிடைக்கும் என்பதைதான் நான் குறிப்பிடுகிறேன். இதைச் சொல்வதால் நான் இந்தக் கொள்கையை வரவேற்கிறேன் என்பது அல்ல. என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். உள்ளபடியே, வசதி படைத்தவர்களாக தனியாரை உருவாக்குவதைவிட, அந்த வருமானம் அரசாங்கத்திற்கு வந்தால் அதன் மூலம் வருகின்ற வருமானம் இந்த அரசாங்கத்திற்குக் கிடைக்குமே என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வாணிபக் கழகத்திடம் விற்பனையை ஒப்படைக்கின்ற நேரத்தில், அதைத் தயாரிக்கின்ற அந்த நிலையையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டிருந்தால் தமிழகத்திற்கு மிகப் பெரிய இலாபத்தை அது உருவாக்கும். ஏனென்றால் சென்ற சட்டமன்றத் தொடரிலேயேகூட எரி சாராயம் சம்பந்தப்பட்ட ஒரு விவாதம் வருகின்றபொழுது ஒரு லிட்டர் எரி சாராயத்தில் பத்து லிட்டர் தண்ணீரைக் கலந்தால் 11 லிட்டர் சாராயம் உருவாகும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அப்படியென்றால், 11 லிட்டர் சாராயத்தை உருவாக்குவதற்கு ஒரு லிட்டர் எரி சாராயம்தான் செலவாகும். ஒரு லிட்டர் எரி சாராயத்தின் விலை எவ்வளவு என்று பார்க்கின்றபொழுது மிகக் குறைந்ததாக இருந்தாலும், ஒரு லிட்டர் எரி சாராயத்தில் பத்து லிட்டர் பச்சைத் தண்ணீரைக் கலந்து 11 லிட்டர் சாராயத்தை உருவாக்குகின்றபொழுது அதன் மூலமாக மிகப்பெரிய தொகை அரசாங்கத்திற்குக் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றபொழுது ஏன் அரசாங்கம் அந்த வருமானத்தை இழக்க வேண்டும் என்றுதான் கேட்கிறேன். அதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



கள்ளுக் கடைகளைப் பொறுத்தவரையில், 1982–83ஆம் ஆண்டில் 27.13 கோடி ரூபாய் வருமானம் வந்தது. 1983-84ஆம் ஆண்டில் 23.81 கோடிதான் வருமானம் கிடைத்திருக்கிறது. ஆகவே, 1982-83-ஆம் ஆண்டுக்கும் 1983-84ஆம் ஆண்டுக்கும் இடையில் கிட்டதட்ட நான்கு கோடி ரூபாய் குறைந்து விட்டது.

அதைப்போன்றே, 1984–85ஆம் ஆண்டில் 22 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. கிட்டதட்ட இரண்டு கோடி ரூபாய் குறைந்து விட்டது, ஆகவே, கள்ளுக் கடைகள் மூலமாக வரக்கூடிய வருமானம் குறைகிறதே தவிர உயரவில்லை. இதற்கு என்ன காரணத்தை அரசாங்கம் சொல்கிறது என்றால், சாராய விற்பனை அதிகரித்து இருப்பதால் கள் விற்பனை குறைந்திருக்கிறது என்று சொல்கிறது. அது மட்டுமல்லாமல் வறட்சி நிலை காரணமாகவும் இந்தக் கள்ளின் விற்பனை குறைந்து விட்டது என்றும் சொல்கிறார்கள். எனவே, கள்ளையும் வறட்சி விடவில்லை. இப்படி சாராயம் கள்ளைச் சாப்பிட்டிருச்கிற நிலையைத்தான் நாம் பார்க்கிறோம்.

1984-85ஆம் ஆண்டில் உரிமங்சுள் வழங்கப்பட வேண்டிய கள்ளுக் கடைகள் 9,124 என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் உரிமங்கள் அளிக்கப்பட்டிருப்பதோ 8,478 கடைகளுக்குத்தான்.

அதைப்போல, சாராயக் கடைகளைப் பொறுத்தவரையில், 1984-85ஆம் ஆண்டில் 6,772 சாராயச் சில்லரை விற்பனைக் கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் 6,335 கடைகளுக்குத்தான் உரிமங்கள் வழங்சப்பட்டன.

ஆகவே, நீங்கள் நினைத்த அளவிற்குக் கடைகளுக்கு உரிமங்கள் ஏன் கொடுக்க முடியவில்லை என்றால், வழக்குகள் காரணமாகவும், மற்ற இடங்களில் ஏலம் எடுப்பதற்கு ஆட்கள் வராததாலும் இன்றைக்கு அந்தக் கடைகளை அதிகரித்துக் கொடுக்க இயலவில்லை, கொடுக்க நினைத்த அளவிற்கு கடைகளுக்குக் கொடுக்க இயலாமற் போய்' விட்டது என்ற கருத்து அரசுத் தரப்பிலேயிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-40)

1983-84ஆம் ஆண்டில் சாராயம் மூலம் வருமானம் 88.92 கோடி ரூபாய். ஆனால், 1984-85-லே ரூ. 67.99 கோடி. 1983-84-லே அதிக வருமானம் வந்திருக்கிறது. ரூ. 88 கோடிக்கு மேல் வந்திருக்கிறது. கிட்டதட்ட ரூ. 89 கோடி வந்திருக்கிறது. 1984-85-லே ரூ. 68 கோடி என்றே வைத்துக் கொள்ளலாம். ஆகவே, சுமார் ரூ. 20 கோடி ஓராண்டு காலத்திற்குள்ளே வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது, அரசுக்கு வருமானம் குறைந்திருக்கிறது.

1983-84-ல் ஏலம் விட்டபொழுது, கிட்டத்தட்ட ரூ. 1 இலட்சம், ரூ. $1\frac{1}{2}$ இலட்சத்திற்கு எடுத்த கடைகளெல்லாம், 1984-85-லே ரூ. 5 இலட்சம், ரூ. 7 இலட்சம் என்று போனது சென்னை நகரிலே எல்லோருக்கும் தெரிந்த உண்மை. நான் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஹார்பரிலே, போர்ட் டிரஸ்டுக்கு எதிரிலே ஒரு கடை இருந்தது. அந்தக் கடை 1983-84-லே ரூ. $1\frac{1}{2}$ இலட்சத்திற்கு ஏலம் விடப்பட்ட கடை என்று சொன்னார்கள். அதே கடை, 1984-85-லே கிட்டத்தட்ட ரூ. $5\frac{1}{2}$ இலட்சம் போயிருக்கிறது என்றால், முந்தைய ஆண்டை விட ஏலத் தொகை அதிகமாக 3 பங்கு, 4 பங்கு உயர்ந்த அளவுக்கு ஏலம் எடுத்தும் கூட அரசாங்கத்தினுடைய வருமானம் குறைந்திருக்கிறது என்றால்' அதனுடைய உண்மை நிலையைக் கண்டறிய நீங்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதே நேரம் கருதி அதற்கு விடை அளித்து விடுவது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். 1983-84 ஆண்டிலே வருவாய் வந்ததற்குக் காரணம் அப்பொழுது கரும்புக் கசண்டு எல்லா இடங்களுக்கும் தாரளமாகக் கொடுக்க முடிந்தது, உற்பத்தியும் தாராளமாக இருந்தது. ஆனால், 1984-85-ல் அகில இந்தியா முழுவதும் 'மொலாசஸ்' என்று சொல்லப்படுகிற கருப்பு கசண்டு மிகவும் குறைந்து விட்டது; ஒரு சில மாநிலங்களிலே உற்பத்தியையே நிறுத்தி விட்டார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரை, இருக்கிற உற்பத்தியை வைத்துக் கொடுக்கும்போது, அவர்களுடைய தேவைக்கு ஏற்ற அளவுக்கு சப்ளை செய்ய முடியாத அளவு உற்பத்திக் குறைந்தது. அவர்கள் ஏலம் எடுத்தபொழுது அதிகத் தொகைக்கு எடுத்தார்கள், எடுத்த அளவுக்கு நீங்கள் கொடுக்கவில்லையே என்று உயர்நீதி மன்றத்திலே வழக்குகள் எல்லாம் தொடுத்தார்கள். வருமானம் குறைந்ததற்குக் காரணம் விநியோகிப்பது குறைந்தது; விநியோகிப்பது குறைந்ததற்குக் காரணம் உற்பத்திக் குறைவு; உற்பத்திக் குறைந்ததற்குக் காரணம் கரும்புக் கசண்டு இல்லாமை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலம் எடுத்ததற்கு உரிய சரக்கு நம்மாலே கொடுக்க முடியவில்லை; அதன் காராணமாக அது வழக்கு மன்றத்திலே இருக்கிறது; அதனாலே வருமானம் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தமட்டிலும் நான் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன், நம்மாலே சரக்கு கொடுக்க முடியவில்லை என்பது உண்மையாக இருந்தாலும் கடையிலே சரக்கு இல்லாமல் இல்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ள





வேண்டுமென்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். அந்தச் சரக்குகள் எல்லாம் எப்படி வந்தன? கள்ளச் சாரயத்தை ஒழிப்பதற்கு நல்ல சாராயம் வந்தது என்பது உண்மையாக இருக்குமானால் இந்தச் சாராயத் தட்டுப்பாடு வந்த நேரத்தில், அதை நிறைவுபடுத்தியது எந்தச் சாராயம் என்பதையும் நாம் அறிந்து கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்.

நான் உங்களுக்கு அதிகபட்சமாகச் சொல்லவில்லை, என்னுடைய தொகுதியிலே கூட, அதிகமான சாராயம் காய்ச்சப்படுகிறது! ஆனால் அரசாங்கத்திற்குச் சொந்தமானது அல்ல, அரசாங்கத்தாலே விநியோகிக்கப்படுவதும் அல்ல. ஆனால் சாராயம் விற்கப்படுகிறது. நீங்கள் சொல்கின்ற அந்த கரும்புக் கசண்டு அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கும்போது அந்த மொலாசஸ் அவர்களுக்குக் கிடைக்காமல் இருந்தாலும் மிகப் பெரிய சாராய பீப்பாய்கள் இருக்கத்தான் செய்கின்றன, காய்ச்சத் தான் படுகின்றன, விநியோகிக்கப்படத்தான் செய்கின்றன என்பதையும் உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

நம் கையிலே சரக்கு இல்லாத காரணத்தால், தனியார்கள்கூட அந்தச் சரக்கு உற்பத்தி செய்கின்றார்கள். அந்தச் சரக்கு இந்த நாட்டிலே இருந்து அகற்றப்பட. வேண்டுமென்று தான் இந்தச் சரக்கை நீங்கள் அறிமுகம் செய்தீர்கள். நம்மாலே நல்ல சரக்கு கொடுக்க முடியாத காரணத்தாலே அந்தக் கள்ளச் சாராயச் சரக்குப் பல இடங்களிலே நல்லதாக விநியோகிக்கப்படுகிறது.

இன்னுங்கூட, நேற்றைய தினம் ஒரு பத்திரிகையிலே பார்த்தேன். கள்ளச் சாராயம் முழுக்க, முழுக்க ஒழிக்கப்பட்டது என்று நம்முடைய இந்தக் கோரிக்கை விளக்கத்தினுடைய அடிப்படையிலே முதல்வர் அவர்கள் அறிவித்தாக ஒரு பத்திரிகையிலே செய்தி வந்தது. மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் செம்மலை அவர்கள் முழுக்க, முழுக்க கள்ளச் சாராயத்தை ஒழித்துவிட்டோம் என்று சொல்லிக் கொள்வதற்கு நான் வரவில்லை. ஓரளவுக்கு ஒழித்திருக்கிறோம் என்று சொன்னார். அது உண்மையும் கூட. ஓரளவுக்குக் கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டிருக்கிறது, நான் கூட ஒப்புக்கொள்கிறேன். ஆனால், முழுக்க கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டது என்று சொன்னால் நிச்சயமாக அதை எங்களால் ஒப்புக் கொள்ள முடியாது.

அபின் கடத்தல், கஞ்சா கடத்தல் போன்றவற்றைப் பார்க்கும் போது, தமிழ்நாடு குற்றப் புலனாய்வுத் துறை. குற்றப் பிரிவு போதைப் பொருள் குற்றத் தகவல் சேகரிப்புப் பிரிவு, 1984-ஆம் ஆண்டில் அபின் சட்டத்தின்படி சுமார் ரூ. 35,326 மதிப்புடைய 17.663 கிலோகிராம் அபினைக் கைப்பற்றியது. அது தொடர்பாக 6 வழக்குகளும், 20,20,136 ரூபாய் மதிப்புள்ள 2535.170 கிலோகிராம் கஞ்சாவைக் கைப்பற்றியது சம்பந்தமாக 71 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. உண்மையிலே இந்த கஞ்சா கடத்தலையும் அபின் கடத்தலையும் தடுத்து நிறுத்திவிட்டதாகச்

சொல்ல முடியாது. இன்றைக்கு பத்திரிகை வாயிலாகப் பார்க்கிறோம். போதைப் பொருள்களைப் பயன்படுத்தி பெண்களை வசியப்படுத்துவது, போதைப்பொருள்களைப் பயன்படுத்தி பெண்களை நிர்வாண சினிமா எடுப்பது, போதைப்பொருள்களைப் பயன்படுத்தி கற்பழிப்பு சம்பவங்கள் நடைபெறுவது, போதைப் பொருள்களைப் பயன்படுத்தி கொலைகள் நடைபெறுவது என்று பல்வேறு வகைகளில் சமுதாயத்திலே கொடுமையான காரியங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. அத்தகைய கொடுமைகளுக்கு இந்த போதைப்பொருளும் ஒரு காரணமாக இருக்கிறது என்று பார்க்கும்போது அதன் மீது நம்முடைய கண்ணோட்டம் மிக அதிகமாக இருக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். தமிழக முதல்வர் அவர்களுக்கு இருக்கிற எண்ணம் கூட நிச்சயமாக இந்த மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டுமென்பது தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. மதுவிலக்கை அமுல்படுத்தினால் குறைந்த பட்சம் 200 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. அதனால் இதை நிறைவேற்ற முடியவில்லை என்று சொன்னார்கள். எங்கள் தலைவர் இராஜாஜி அவர்கள் எப்படி மதுவிலக்குக் கொள்கையில் பிடிவாதமாக இருந்தார்களோ, பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் எப்படி இதை அமுல்படுத்துவதிலே அக்கறை காட்டினார்களோ, அதைப் போன்று மறைந்த தலைவர் அண்ணா அவர்கள் எப்படி மதுவிலக்குக் கொள்கையில் உயிர்மூச்சாக இருந்தார்களோ அதைப் போன்று இப்போது இருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அந்த இடத்தில் இருக்கவேண்டுமென்ற ஆசையின் காரணமாகத்தான் சொல்கிறேன். அவர்கள் இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளையாவது இதை நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நீங்கள் இந்தச் சாராயக் கடைகளைக் கொடுக்கும்போது சொல்கிறீர்கள். அதிலே நீங்கள் ஒரு கொள்கையை வகுத்திருக்கிறீர்கள். பஸ் ஸ்டாண்டுக்கு பக்கத்திலோ எதிரிலோ. கோவிலுக்குப் பக்கத்திலோ எதிரிலோ, பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலோ எதிரிலோ சாராயக் கடைகளைக் கொடுக்கக் கூடாது என்பது உங்களுடைய கொள்கை. இதுவரையில் நீங்கள் பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்திலோ எதிரிலோ சாராயக் கடை வைக்க அனுமதிக்கவில்லையா? கோவிலுக்குப் பக்கத்திலோ எதிரிலோ சாராயக் கடை வைக்க அனுமதிக்கவில்லையா? பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலோ எதிரிலோ சாராயக் கடை வைக்க அனுமதிக்கவில்லையா?

இங்கே உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமென்றால் எவரெஸ்ட் ஓட்டலுக்குப் பக்கத்தில், பெரியமேடு சென்னை மாநகராட்சிப் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலே சாராயக் கடை வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பக்கத்திலே எல்லம்மன்



கோவில் இருக்கிறது. மாநகராட்சிப் பள்ளிக்கூடத்திற்கும் எல்லம்மன் கோவிலுக்கும் இடையில் சாராயக் கடை இருக்கிறது. உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும் அது நீக்கப்படாமல் இருக்கிறது. இதைப் போன்று நிறைவேறாத ஆசைகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நானே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது.

அடுத்து, அருமைச் சகோதரர் செம்மலை அவர்கள் பேசும் போது ஒன்றைச் சொன்னார்கள். 200 கோடி ரூபாயை மத்திய அரசு தந்து, மதுவிலக்கை அமல்படுத்த உதவுமா என்று கேட்டார்கள். நான் உங்களைக் கேட்கிறேன். உங்கள் வாதம் சரியாக இருந்தால், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ''எரியும் தீப்பிழம்பினுள்ளே கொளுத்தப்படாத கற்பூரமாக தமிழ்நாட்டை எத்தனை நாள் காப்பாற்ற முடியும்'' என்று குறிப்பிட்டதை எடுத்துக்காட்டி.. அண்ணா தி.மு.க. சார்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து நீங்கள் கேட்கும்போது நான் உங்களை ஒன்று கேட்கிறேன். 200 கோடி ரூபாய் கொடுத்தால் எரியும் தீப்பிழம்பினுள் இருக்கும் கற்பூரம் பற்றாமல் இருக்குமா? பற்றுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகுமா? ஏதோ கூறவேண்டும் என்பதற்காகக் கூறாமல் இதற்கு என்ன மாற்று என்று சிந்திக்க வேண்டும். அப்படியே 200 கோடி ரூபாய் கொடுத்தால் கள்ளச்சாராயம் ஒழிந்துவிடுமா? கள்ளச்சாராயத்தை ஒழிக்கத்தானே நல்ல சாராயம் வந்திருக்கிறது. ஆகவே, இப்படி முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களைக் கூறாமல் இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

அதேபோல் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் பேசுகின்ற போது சொன்னார்கள், மதுவிலக்கைக் கொண்டு வந்து காங்கிரஸ்காரர்களும் மற்றவர்களும் இந்த நாட்டை குட்டிச் சுவராக ஆக்கிவிட்டார்கள் என்று நாங்கள் சொல்கிறோம் சாராயக் கடைகளைக் கொண்டுவந்ததன் காரணத்தால் இந்த நாடு குட்டிச்சுவர் ஆகிவிட்டது என்று. இப்படி மதுவிலக்கை அமல்படுத்தியதால் குட்டிச்சுவர் ஆகிவிட்டது என்று அவர்களும், சாராயக் கடைகளைத் திறந்ததால் குட்டிச்சுவர் ஆகிவிட்டது என்று நாங்களும் மாறி மாறிச் சொன்னாலும்கூட மொத்தத்தில் இந்த நாடு குட்டிச்சுவராக ஆகிக்கொண்டு வருகின்றது என்பதை என்னைப் பொறுத்தமட்டிலும் நான் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து கள்ளச்சாராயம் ஊக்குவிக்கப்பட்டதற்குக் காரணம் காவல் துறையினர் என்று குறிப்பிட்டார்கள். அதை நான் கூட ஒத்துக் கொள்கிறேன். தமிழக முதல்வர் அவர்கள் மிகக் கடுமையான ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதாவது சாராயம் குடிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் Non-bailable

செக்‌ஷன்களின் கீழ் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவார்கள்; நாடு கடத்தப்படுவார்கள் என்றெல்லாம் கூட மிக அருமையாகச் சொன்னார்கள். ஆனாலும் கூட அது நிறைவேற்றப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? சாராயம் விற்பவன் ஒருவன் என்றால் அதைக் குடிப்பவர்கள் ஆயிரம் பேர். குடிப்பவர்கள் ஆயிரம் பேரைப் பிடித்து உள்ளே போட்டுவிட்டாலும் விற்கின்ற ஒருவனுக்கு காவல் துறையினர் பாதுகாப்பாக இருப்பது என்ற நிலைமை இருந்த காரணத்தால்தான் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்தன. எனவே போலீஸ் துறையினரின் ஊக்குவிப்பு அவர்களுக்கு இருந்ததன் காரணத்தாலேதான் அந்த திட்டத்தை அமலாக்க முடியவில்லையே தவிர அவர்கள் மட்டும் வேகமாக முன்வந்து இந்தச் சமுதாயத்திற்கு நன்மை பயக்கக் கூடிய திட்டம் இது என்பதை உணர்ந்து இதற்கு உதவ முன் வந்தால், இந்தத் திட்டத்தினை நல்ல முறையில் அமல்படுத்த வேண்டும் என்று அவர்கள் எண்ணினால் அவர்களால் நிறைவேற்ற முடியாதது ஒன்றும் இல்லை என்றும் இந்தக் கள்ளச்சாராயத்தை ஒழித்துவிட முடியும் என்றும் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து மதுவின் தீமையை எடுத்துச் சொல்வதற்காக, பிரச்சாரம் செய்வதற்காக ஒரு கோடி ரூபாயை எப்போதோ ஒதுக்கினீர்கள். முதலிலே 1982-83 ஆம் ஆண்டிலே அவ்வாறு ஒதுக்கினீர்கள். அதற்குப் பிறகு அதை உயர்த்தவே இல்லை. அந்தப் பிரச்சாரத்திற்காக அதிகப்படியாக ஒதுக்கவேண்டும். மதுவின் மூலம் உங்களுக்கு 200 கோடி ரூபாய் வருமானம் வருகின்றது என்றால் அதிலே 10 கோடி ரூபாயையாவது அந்தப் பிரச்சாரத்திற்காக, அந்த மதுவின் தீமையை எல்லா இடங்களிலும் எடுத்துச் சொல்வதற்காக ஒதுக்கி அந்தத் தொகையை அதிகரிக்க வேண்டும்.

இறுதியாக எனது கருத்துக்களைச் சொல்கின்றபோது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். இந்தப் பேரவையிலே அதுபற்றிய என்னுடைய கருத்துக்களையும் கூறலாம் என்று நினைக்கிறேன். கவர்னர் என்பவர் ஆட்டுக்கு உள்ள தாடி போல். எனவே அவர்கள் தேவையற்றவர்கள் என்ற ரீதியில் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் என்ன கேட்கிறேன் என்றால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்ததற்குப் பிறகுதான் கவர்னர் என்ற ஒருவர் ஆட்டுக்குத் தாடியா? திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்தபோது அவர் ஆட்டுக்குத் தாடி இல்லையா? என்று கேட்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது ஆட்டுக்குத் தாடி என்று அவர்களால் சொல்லப்படுகின்ற கவர்னர், அவர்களுக்கு எந்த அளவுக்குத் தேவைப்பட்டார் என்பதை எல்லாம் வரி வரியாகச் சொன்னால் நேரம் இருக்காது என்பதால்........



திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபோதும் சரி அல்லது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி இப்போது இருக்கின்றபோதும் சரி, கவர்னர் பதவி என்பது, அந்தப் பதவி ஒழிக்கப்படுகின்ற வரையில் அந்தப் பதவிக்கு உட்பட்டுத்தான் காரியங்களைச் செய்ய முடியும்; அது ஒழிக்கப்படவேண்டும் என்பது வேறு என்ற வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோதே சொல்லியிருக்கின்றது. எப்படி ஜாதிகள் ஒழிக்கப்படவேண்டும் என்று சொன்னாலும் அந்த ஜாதிகள் இருக்கின்ற வரையில் அந்த ஜாதியின் மூலம் சலுகைகளும், வகுப்புவாத பிரதிநிதித்துவமும் இருக்கத்தான் செய்யும் என்பது போல்தானே தவிர வேறல்ல.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் எப்போது ஜாதிகள் ஒழிக்கப் படுகிறதோ அப்போதுதான் கவர்னர் பதவியும் ஒழிக்கப்படும் என்று சொல்கிறார் என்று நான் நினைக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்காக மன்னிக்கவேண்டும். பத்திரிகைக்காரர்கள் அப்படிப் போட்டுவிடுவார்கள் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. ஜாதிகள் ஒழிக்கப்படவேண்டும் என்பதுதான் எல்லோருடைய கொள்கையாகும். அதிலே எந்தவிதமான மாறுபாடும் இல்லை. ஜாதிகளை ஒழிக்கவே முடியாது என்ற முடிவுக்கு நாங்கள் வரவில்லை. ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று பாப்பாவுக்குச் சொல்லப்பட்டதன் காரணத்தால் பல பெரியவர்கள் இன்னும் அதை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் ஜாதிகள் என்பது இருக்கின்ற வரையில் பிற்பட்ட வகுப்பினருக்கு சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்ற வகையில் ஐயா பெரியார் அவர்களும் வலியுறுத்தினார்கள். எனவே திராவிட இயக்கத்தின் ஆரம்ப கட்டமான சுயமரியாதை இயக்கமும், நீதிக்கட்சியும்கூட அப்போது பல ஜி.ஓ.க்களைப் போட்டு அதனை அமல்படுத்தினார்கள். அதற்குப் பெயர் ஜாதி தேவை என்று அர்த்தமில்லை. கட்டிடம் கட்டுகின்ற வரையில் சாரம் இருந்துதான் ஆகவேண்டும். அதுபோல் ஜாதிகள் ஒழிக்கப்படுகின்ற வரையில் அந்தச் சலுகைகள், மற்றவைகள் இருந்துதான் ஆகவேண்டும் என்பது போல் கவர்னர் பதவி இருக்கின்ற வரையில் அந்தப் பதவிக்கு உட்பட்டுச் செயல்படுகிறோம் என்று சொன்னேனே தவிர வேறல்ல.

**திருமதி டி. யசோதா :** ஆக கவர்னர் பதவி ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலே அவர் காட்டுகிற அக்கறையை முன்னாலேயும் காட்டியிருப்பார்களேயானால், அதை இன்றைக்கு எடுத்துக் காட்டாகச் சொல்வதற்குக்கூட வாய்ப்பாக இருந்திருக்கும் என்பதைத்தான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அவர் ஒன்றைச் சொன்னார். கவர்னர் பதவி ஜனாதிபதியாலே நியமிக்கப்படக் கூடிய ஒரு நியமனப் பதவி, அவர் நினைத்தால் இந்த மாநிலத்தினுடைய சட்டமன்றத்தை கலைக்கக்கூடும் என்று சொன்னார்கள். நான் கூடச் சொல்கிறேன். ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிற கவர்னர்தான் அவர். ஆனாலும் ஜனாதிபதி என்கிறவர் இந்த நாட்டு மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

இன்றைக்கு இருக்கிற கவர்னர் நிச்சயமாக மாநில அரசுக்கும் மைய அரசுக்கும் ஒரு பாலமாக இருந்து செயல்படுகிறவர். அந்தச் சூழ்நிலையிலேதான் அவர் இருக்கிறாரே தவிர, அவர் சர்வாதிகார மனப்போக்கிலே செயல்படுவாரேயானால், அவரைத் திரும்பப் பெறுகின்ற உரிமையும்கூட மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதை உதாரணத்தோடு என்னால் சொல்லிக் கொள்ள முடியும். அது மட்டும் அல்ல; இன்றைக்கு கவர்னராக இருக்கின்றவர் மாநில அரசினுடைய கொள்கையைப் பிரதிபலிக்கின்ற ஒருவராகத்தான் இருக்கிறாரே தவிர, தனக்கென்று ஒரு கொள்கையை வைத்துக் கொண்டு அதைப் பிரதிபலிப்பவராகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, கவர்னருடைய உதவி எந்தெந்த சமயங்களிலே ஆளும் கட்சிக்குத் தேவைப்படுகிறதோ, அந்தந்தக் கட்டத்திலே அவர்களுக்கு உதவியவர்களாகத்தான் இருந்து வருகிறார்கள் கவர்னர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோதுகூட, ஒரு நாள் திடீர் என்று அன்பில் தர்மலிங்கம் அமைச்சராவார், திடீரென்று ஒரு நாள் பதவியிலேயிருந்து விலக்கப்படுவார். அடுத்த நாள் மறுபடியும் அமைச்சராக வருவார். அப்படி நியமிக்கின்ற அந்த நிலையும் கூட அன்றிருந்த கவர்னர் அவர்கள் கொடுத்த முழு ஒத்துழைப்பின் காரணமாகத்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதையும் மறந்து விடக் கூடாது என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல; கவர்னர் அவர்களைப் பொறுத்தமட்டிலும் அவர் சொன்னார், கட்டிடம் கட்டுகிற வரையில் சாரம் இருக்க வேண்டும், அப்படி, கவர்னர் என்பவர் ஒழிக்கப்படும் வரையில் கவர்னர் இருக்க வேண்டும், அதற்கு உட்பட்டுத்தான் காரியம் நடத்துகிறோம் என்று சொன்னார்கள். அதனுடைய அடிப்படையில்தான் சொன்னதாகச் சொன்னார்கள். கவர்னர் பதவியை ஒழிக்க வேண்டும் என்று முதலிலே சொல்லிவிட்டு, பின்னாலே கவர்னரைப் பார்க்க எங்களுக்கு உரிமை இல்லையா, கவர்னரைப்



பார்த்து நாங்கள் குறைகளைச் சொல்லக் கூடாதா, அவரைப் பார்த்து பெட்டிஷன்கள் கொடுக்கக் கூடாதா என்று கேட்கிறார். நிச்சயமாக நான் சொல்வேன். நீங்கள் கவர்னரைப் பார்த்து குறை கூறுங்கள், பெட்டிஷனும் கொடுங்கள். அதை வாங்கிக் கொள்வதற்கும் அவர் தயாராகவே இருக்கிறார். அதற்கு மத்திய அரசோ, மாநில அரசோ நிச்சயமாகத் தடையாக இருக்காது; ஆகவே நீங்கள் கவலைப்படத் தேவையில்லை, தைரியமாகக் கொடுங்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல டெல்லியில் இருக்கும் தமிழ்நாடு ஹவுஸ். அந்த தமிழ்நாடு ஹவுசிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அங்கே வேன்கள் இருக்கின்றன. கார்கள் இருக்கின்றன. லிப்ட் இருக்கிறது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த வசதியும் கிடைப்பதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் டெல்லிக்குப் போனால், இதிலே ரூம் இல்லை என்று சொல்லிவிட்டால் எங்கே போய் நிற்பது? டெல்லியிலே வெளியிலே போய் எந்த ஓட்டலில் கேட்டாலும் தங்குவதற்கு வாடகை ரூ. 500, 600, 800 என்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் இங்கே இருந்து அங்கே போகும் சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கே தங்குவது?

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நான் டெல்லிக்குப் போகிறபோது, 3 சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கே வருகிறார்கள் என தந்தி கொடுத்தேன். 3 சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கே வந்தார்கள். தமிழ்நாடு ஹவுசுக்குப் போய்க் கேட்டால், அங்கே இருக்கிற அதிகாரிகள் இடம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். பிறகு அந்த அதிகாரி மிகவும் பரிதாபப்பட்டு, பாவம் நீங்கள் ஒரு லேடி எம்.எல்.ஏ. வாக இருக்கிறீர்கள், உங்களுக்கு மட்டும் ரூம் தருகிறோம், அவர்கள் இரண்டு பேரையும் இன்றைக்கு மட்டும் வெளியிலே பார்த்துக் கொள்ளச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் கடைசி வரையில் அவர்களுக்கு அங்கே ரூம் கொடுக்கப்படவே இல்லை.

அந்தத் தமிழ்நாடு ஹவுசில் வேன்கள் இருக்கின்றன. கார்கள் இருக்கின்றன. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுப்பதில்லை. ரயிலுக்குப் போகிறோம், அல்லது ஏர் போர்ட்டிற்கு போகிறோம் என்றால் அப்போது மட்டும் ஏற்றிச் செல்வார்கள், உரிய கட்டணத்தை வாங்கிக் கொண்டு. ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் அங்கே வருகிற அதிகாரிகளுக்குத்தான் முன் உரிமைக் கொடுக்கப்படுகிறதே தவிர, எங்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. செயலாளர்களுக்கும், டைரக்டர்களுக்கும், அமைச்சர்களுக்கும் எப்படி அங்கே முன் உரிமை கொடுக்கப்படுகிறதோ அதுபோலவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முன்னுரிமை கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இங்கே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி டி. யசோதா] [1985 ஜூலை 3

காரணம் அங்கே போய் அவஸ்தைப்படுகிறவர்கள் நாங்கள். அங்கே போனால், அவர்களுக்கு வேண்டியவர்களுக்குத்தான் கொடுப்பார்கள். வேண்டாதவர்களுக்கு கொடுக்க மாட்டார்கள். கொடுத்தால் 3வது மாடியைக் கொடுத்துவிடுவார்கள். எப்படி அங்கேயிருந்து ஏறி இறங்குவது—லிப்ட் இருக்கிறது. ஆனால் அது அந்த நேரம் வேலை செய்யாது. நான் ஒரு முறை போயிருந்த போது அப்படித்தான்; நமது ஒட்டப்பிடாரம் எம். எல். ஏ. அவர்களும் வந்திருந்தார்கள். பாவம் வயதானவர். அவருக்கு 3 வது மாடியில் ரூம் கொடுத்து விட்டார்கள். அங்கே இருந்து கீழே இறங்கி வருவதற்கும் பிறகு மேலே ஏறிச் செல்வதற்கும் அவர் பட்ட கஷ்டத்தைப் பார்த்தால், எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. என் ரூமிலே கொஞ்ச நேரம் தங்கி ஓய்வு எடுத்து கொள்ளுங்கள் என்று சொல்லி சாவியைக் கொடுத்துவிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அது போன்ற நிலைமை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சர்வீஸ் செய்கிற நிலைமை சிறப்பாக இல்லையென்று இந்த நேரத்தில் கவனப்படுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 1—00)

அடுத்தபடியாக, டி.டி.சி. மீட்டிங்குகள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடந்து வருகின்றன. நீங்கள் எதிலும் ஒரு மாற்றத்தைச் செய்ய விரும்புகிறீர்கள் என்பதால் இதில் ஒரு மாற்றத்தைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறேன். எனக்கு முன்னாலேபேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு செம்மலைஅவர்கள் குறிப்பிட்டார்கள். டி.டி.சி. மீட்டிங்கிலே அந்தந்த மாவட்டத்தை சேர்ந்த அமைச்சர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். நான் அதைவிட அதிகமாகச் சொல்கிறேன். அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் டி. டி. சி. மீட்டிங்கிலே தலைமை ஏற்க வேண்டும். எங்களுடைய பிரச்னைகளை கலெக்டரை வைத்துக்கொண்டு அமைச்சரிடத்திலே நாங்கள் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாக வேண்டும். துணைத் தலைவர் இருக்கிறார்கள், தலைவர் இருக்கிறார்கள். அவர்கள் அந்தந்த மாவட்டங்களில் பேசுகிறபோது, ஒரு மாவட்டத்திலே இரண்டு, மூன்று மந்திரிகள் இருந்தால் ஒரு நேரத்திற்கு ஒரு மந்திரி தலைமை ஏற்கிற அளவிற்குச் செய்து, எங்கள் பிரச்னைகளைச் சொல்லி தீர்வு காண்பதற்கு வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூலை 3]

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் டி. டி. சி. மீட்டிங்கிற்குத் தலைமை ஏற்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து அமைச்சர்கள் யாரும் கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாங்கள் என்ன செய்வது என்பதை உறுப்பினர் கூறினால் நலமாக இருக்குமென்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆகவேதான் மந்திரிகளை வரவேண்டாம் என்று சொல்லி இருக்கிறோம்.

திருமதி டி. யசோதா : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் சிறிய மாவட்டமாக இருப்பதால், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் அங்கே தலைமை ஏற்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய குறைகளை அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்து, கலெக்டரை வைத்துக் கொண்டு அவைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்களுடைய செங்கல்பட்டு மாவட்டத்தில் திங்கட்கிழமையிலும், சனிக்கிழமையிலும் கலெக்டர், மக்கள் குறைகளை கேட்கும் நாளாக வைத்திருக்கிறார்கள். கலெக்டர் குறைகளைக் கேட்கிற அதே நேரத்தில், தலைமை பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகள் தலைமையிடத்தில் அந்த நாட்களில் தங்குவதில்லை; நாங்கள் மீட்டிங்கிற்கு போனால் கலெக்டர் மட்டும் தான் இருப்பார், மற்ற அதிகாரிகள் இருக்கமாட்டார்கள். ஆகவே திங்கட்கிழமை, சனிக்கிழமைகளில் கலெக்டர் குறை கேட்கிறபோது, தலைமைப் பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகள், உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் காவல் துறை, மற்ற துறைகளில் இருக்கிற அதிகாரிகள் தலைமை அலுவலகங்கள் இருக்கிற இடங்களில், ஹெட்குவார்ட்டர்சில் இருப்பார்களானால் நாங்கள் போய் சந்திப்பதற்கு வாய்ப்பு இருக்கும். அந்த வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அமைச்சர்களுக்கு நாங்கள் பல கடிதங்களை எழுதுகிறோம். அவைகள் அத்தனையும் மக்களுடைய பிரச்னைகள்தான். நான் இது குறித்து குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். டெல்லியில் இருக்கிற மந்திரிகள் யாருக்காவது நீங்கள் கடிதம் எழுதினால், உடனே அங்கேயிருந்து பதில் வரும். உங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றேன், சம்பந்தப்பட்ட இலாக்காவிற்கு அனுப்பி இருக்கிறேன் என்று பதில் எழுதுவார்கள். ஆனால் நம்முடைய அமைச்சரவையில் இருக்கிற அமைச்சர்களுக்கு நாங்கள் கடிதம் எழுதினால் அதற்கு பதில்

வருவதே கிடையாது. அதை நினைக்கிறபோது கடிதம் என்ன வாயிற்று என்றே தெரிவதில்லை. அதை அமைச்சர் அவர்கள் பார்த்தார்களா ? பார்க்கவில்லையா என்று தெரியாமல் இருப்பதால் அதன்மீது எந்த தொடர் முயற்சியும் எடுக்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தயவு செய்து கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர்களுக்கு நாங்கள் அனுப்புகிற கடிதங்களுக்கு, உங்கள் கடிதத்தைப் பார்த்தேன் என்ற அளவிலாவது பதில் கடிதம் போட்டால் எங்களை கவுரவப் படுத்துவதாக இருக்குமென்று கூட நான் சொல்லவில்லை; நாங்கள் சொல்கிற பிரச்னையை நீங்கள் பரிசீலிப்பீர்கள் என்ற நம்பிக்கை தோன்றும் அந்த நம்பிக்கையை முதலில் எங்களுக்கு தோற்றுவியுங்கள், அதை வைத்து நாங்கள் எங்களிடத்தில் வருபவர்களுக்கு, அமைச்சரிடத்திலிருந்து பதில் வந்திருக்கிறது, இதோ பாருங்கள் அந்தக் கடிதம் என்று காண்பிப்பதற்கு வாய்ப்பு இருக்கும். அந்த வாய்ப்பு இல்லாததால் மிகவும் சிரமமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். இறுதியாக நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கூட்டுக் கவுன்சில் சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் சொன்னார்கள். நாங்கள் இதிலே வித்தியாசப்பட்ட கருத்துக்கள் உடையவர்கள் அல்ல. எங்களைப் பொறுத்தவரையில் இது சம்பந்தமாக எந்த ஒத்துழைப்பைக் கேட்டாலும்' தருவதற்கு எங்கள் பேரியக்கம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், தமிழகத்தினுடைய நன்மையைக் கருதி ஒத்துழைப்பு தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்,

அடுத்து நான் கூறிக்கொள்ள விரும்புவது, என்ன இருந்தாலும் தமிழக முதல்வர் பழைய காங்கிரஸ்காரர். எங்கள் கொள்கை நிச்சயம் அவர்களுக்கும் இருக்கும். நாங்கள் ஆண்டபோதுகூட மாவட்டங்களுடைய தலைநகரங்களுக்கு எங்கள் தலைவர்களுடைய பெயரைச் சூட்டவில்லை. எங்களுக்கு இல்லாத தைரியத்தோடு அவர்கள் எங்கள் தலைவர்களுடைய பெயர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வைத்தார்கள். உண்மையிலே இதைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன். தில்லையாடி வள்ளியம்மை, வ.உ.சி., காமராஜர் மாவட்டம் என்று பெயர்களைச் சூட்டி, காங்கிரஸ் தலைவர்களைக் கௌரவித்தவர், தியாகிகள் தியாகத்தை மதித்து உதவி செய்யும் நேசக் கரத்திற்கு உரியவர், காங்கிரஸ் நூற்றாண்டு விழா நடக்கும் போது மதுவை ஒழிக்கும் அறிவிப்பை அறிவிக்க முன்வரவேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். பணம் என்ன பணம்? இந்த 200 கோடி வரவில்லை என்றால், ஆட்சி கவிழ்ந்தா போய்விடும்? அப்படிக் கவிழ்ந்தாலும் நல்லது செய்கின்ற மனம் இருக்கிற காரணத்தால் நல்ல காரியத்திற்காக நீங்கள் செய்த ஆட்சி கவிழ்ந்து போய்விட்டாலும், மீண்டும் நீங்கள் தானே வருவீர்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு, கம்சன் என்ற அரக்கனை





ஒழிக்க கண்ணன் பிறந்தான், மது என்ற அரக்கனை ஒழிக்க
எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவிலேயிருந்து திரும்பி வந்திருக்
கிறார்கள் என்பதை நிரூபிக்கவேண்டும் என்று கூறி என்னுடைய
கருத்தை முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத் தீர்வை
பற்றிய கோரிக்கை, மாநிலத் தலைவர், அமைச்சர்கள்
மற்றும் தலைமையிடப் பணியாளர்கள் பற்றி
மானியக் கோரிக்கை ஆகியவைகளைக் குறித்து
மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு, பல்
வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக
இந்த விவாதங்களில் மதுவிலக்குக் கொள்கை பற்றிய கருத்துக்கள்
தான் பெரிதும் ஆக்கம் பெற்று இருந்தன. மது அருந்துதல் ஏன்
கூடாது? அதனால் ஏற்படுகிற தீங்குகள் என்ன? ஏற்படும் இழப்
புக்கள் என்ன? மது அருந்தாமை என்ற கொள்கையை யார் யார்
ஆதரித்து வந்திருக்கிறார்கள்? அண்ணல் காந்தியடிகள், மூதறிஞர்
ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள், பேரறிஞர்
அண்ணா அவர்கள், காய்தே மில்லத் போன்ற தலைவர்கள் மது
அருந்தாமையை எப்படி எல்லாம் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்
பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் விரிவாக எடுத்துச்
சொன்னார்கள், தெளிவாகவும் எடுத்துச் சொன்னார்கள், நெஞ்
சுருகுகின்ற அளவிற்குச் சொன்னார்கள். ஆகவே, இந்த வகையிலே
மதுவிலக்குக் கொள்கையை இந்த மன்றத்திலே இருக்கிற எல்லாக்
கட்சிகளும் மது அருந்தாமை கொள்கையை ஆதரித்து
இருக்கிறார்கள். வற்புறுத்தியும் இருக்கிறார்கள். குடிப்
பழக்கம் உடையவர்களை, திருந்தச் செய்ய மாண்புமிகு உறுப்
பினர்கள் இந்த அவையிலே எடுத்துச் சொல்லிய இந்தக் கருத்
துக்கள் ஓரளவிற்குப் பயன்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.
மது அருந்துகின்ற பழக்கம் உடையவர்களுக்கு மாண்புமிகு உறுப்
பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்ற கருத்துக்கள், அவர்கள்
திருந்துவதற்கு மிகவும் பயன்படும் என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் விளக்
கங்கள் தந்து வேண்டுகோகளையும் விடுத்திருக்கிறார்கள். எனவே
சிறப்பாகவும் செம்மையாகவும் எடுத்துச் சொன்ன கருத்துக்களை
இந்த மானியக் கோரிக்கை விவாதத்தோடு விட்டுவிடாமல்
தமிழகத்தினுடைய எந்த எந்தப் பகுதிக்கு அவர்கள் போகிறார்
களோ எங்கெல்லாம் வாய்ப்புக்கள் ஏற்படுகிறதோ, அங்கெல்லாம்
இந்த மது அருந்துகின்ற கொள்கையை கடைப்பிடிப்பதன் காரண
மாக என்ன கேடுகள் விளைகின்றன என்பதைப் பற்றி எடுத்துச்
சொல்லி, அவர்களுடைய நிலையையும், நினைப்பையும், உழைப்
பையும், ஆர்வத்தையும், ஆற்றலையும் மிகவும் சிறப்பாகப் பயன்
படுத்தவேண்டும் என்று நான் அத்தனை பேர்களையும் கேட்டுக்
கொள்கிறேன். எதிர்பார்க்கவும் செய்கிறேன். ஆகவே இந்த மது
அருந்தாமையை இந்த அவையில் உள்ள அனைவருமே வரவேற்

கிறார்கள். அந்தக் கொள்கையை எல்லோரும் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தே நமக்கு மன நிறைவைத் தருகிறது. இந்த 234 உறுப்பினர்களும் மது அருந்தக் கூடாது என்ற கொள்கையை வலியுறுத்துகின்ற அளவிற்கு மிகத் தெளிவாகவும், திட்பமாகவும் இருக்கிறார்கள். எனவே இந்த 234 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டு இருக்கிற நோக்கையும் போக்கையும், அவர்கள் கொண்டிருக்கிற அழுத்தமான தன்மையையும், 234 தொகுதிகளிலேயும் நமக்கு எல்லாம் வாக்களித்த பெருங்குடி மக்களிலே, மது அருந்துகிறப் பழக்கம் உடையவர்கள் யார் யார் இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் பின்பற்றுவார்களானால், இந்த நாடு எவ்வளவோ திருந்தி, நல்லதொரு நிலைமைக்கு வரக்கூடும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்பார்க்கிற சூழ்நிலைகள் மிகச் சிறப்பாக வரும். பல்வேறு சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வேறு வழியில்லாமல், மதுக் கடைகளைத் திறக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டு இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் இந்த நிலை பாதிக்கக் கூடிய நிலையில் இல்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

(பிற்பகல் 1–10)

அதுமட்டும் அல்லாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் மது அருந்தக் கூடாது என்பதற்கு எடுத்து வைத்த காரண காரிய விளக்கங்கள் உள்ளபடியே வரவேற்கக்கூடியது. இதில் யாருக்கும் மாறுபாடான கருத்துக்கள் இல்லை. ஆனால் மது அருந்துவது ஒரு தீய பழக்கமா அல்லது கொடிய பழக்கமா அல்லது கொடிய குற்றமா என்று வருகிறபோதுதான் இதிலே ஒரு பிரச்சினை ஏற்படுகிறது.

மது அருந்துவது என்பது ஒரு கொடிய பழக்கம். அந்தப் பழக்கத்தை அறிவுரைகள் மூலமாக, அவர்களுடைய உள்ளத்தைத் தெளிவுப்படுத்துவதன் மூலமாகத் தான் தீர்க்க முடியும் என்ற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும், மார்க்சிஸ்டு கட்சி உறுப்பினர்களும் அந்த அடிப்படையில்தான் எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே மது அருந்துவது என்பது ஒரு கொடிய பழக்கம் என்று கொள்வதா? கொடிய குற்றம் என்று கொள்வதா என்கிறபோது மதுவிலக்கு சட்டம் கொண்டுவரும் போது அது குற்றமாக ஆக்கப்படுகிறது.

ஆகவே, ஒரு சமயத்திலே பார்க்கும்போது பாண்டிச்சேரிப் பகுதியில் மது இருந்து, தமிழ்நாட்டு பகுதியில் மது இல்லாதபோது பாண்டிச்சேரி பகுதியில் இருக்கும்போது அது கொடிய பழக்கமாக இருந்து அந்த எல்லையைத்தாண்டி திண்டிவனத்திற்கு



அவன் வந்து விடுவானானால் அவன் குற்றவாளியாக ஆகின்ற தன்மை அந்த எல்லைக்கோட்டைத் தாண்டுகிற போது ஏற்படுகிற சூழ்நிலையில் மது இருப்பதை நாம் காண்கிறோம்.

ஆகவே இதில் ஏற்படுகிற தன்மைகளைப் பொறுத்தவரையில், கொள்கையைப் பொறுத்தவரையில் யாருக்கும் மாறுபாடு கிடையாது. ஆனால் இந்தப் பழக்கம் கொடியது என்பதை உலகத்தில் இருக்கிற அத்தனை பேரும் எல்லாக்காலத்திலும் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

அண்ணல் காந்தி அடிகள், மூதறிஞர் இராஜாஜி அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் மட்டும் அல்லாமல் மகாவீரரே இது பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார். புத்தரே எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஏன், ஏசுநாதர் அவர்களே ஏராளமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வள்ளுவர் அவர்கள் மிக அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வள்ளலார் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு பேர் எடுத்துச் சொல்லியும் கூட மக்கள் சமுதாயத்தில் ஒரு பகுதி தான் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். மற்றைய பகுதியினர் அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் மீறிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆகவே அமெரிக்காவில் கூட சட்டத்தின் மூலமாக இந்தப் பழக்கத்தை நீக்கிவிடலாம் என்று முயன்று பார்த்து சட்டத்தின் மூலமாக இந்தப் பழக்கத்தை நீக்க முடியாது, விளைவுகள் வேறு வேறு வகையாக வருகிறது என்று கண்டதற்குப் பிறகு மது விலக்கை சட்டத்தின் மூலம் கொண்டுவந்து அது முடியாததற்குப் பிறகு அதை விட்டுவிடுகிற நிலைமை ஏற்பட்டது

அண்ணல் காந்தி அடிகள் இதை வற்புறுத்தி வந்தார்கள். இந்தக் கொள்கையைப் பொறுத்தவரையில் இந்த அவையில் இருக்கிற எந்தக் கட்சியினருக்கும் எந்த உறுப்பினருக்கும் மாறுபட்ட தன்மைகள் கிடையாது. ஆக மதுவை அருந்தக்கூடாது என்ற கொள்கையை அத்தனை பேரும் ஆதரிக்கிறார்கள். அத்தனை பேரும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

அண்ணல் காந்தி அடிகளும் தன்னுடைய நிர்மாணத் திட்டங்களில் 4–ல் ஒன்றாக 1921 ல் இருந்து நாடு எங்கும் போராடிக் கொண்டு வந்தார்கள். மக்களிடத்திலே பிரச்சாரம் செய்கின்ற வாய்ப்பினை அப்போது பெற்று இருந்தார்கள். இந்த நாடு விடுதலை பெற்ற பிறகு 1945, 1946 ல் தொடங்கி 1984 குள்ளாக எல்லா மாநிலங்களிலும் மது விலக்கு சட்டபூர்வமாக நடைமுறைக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்ற திட்டங்கள் இருந்தன. ஆனால் எல்லா மாநிலங்களிலும் இருந்தாலும் கூட

பெரும்பாலான காங்கிரஸ் மாநிலங்களில் 5, 6 ஆண்டுகள் நடைமுறை செய்த பிறகு கிட்டத்தட்ட 1956 ல் தொடங்கி 1956, 1957, 1958, 1959 குள்ளாகவே பெரும்பாலான காங்கிரஸ் மாநிலங்கள் இந்த மது விலக்குச் சட்டத்தை நடைமுறை செய்வதற்கு இயலாது போயிற்று. மாண்புமிகு உறுப்பினர் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர் அவர்கள் சொன்னது போல் இந்த மது விலக்கு கொள்கை தோல்வி அடைந்து விட்டது என்ற சூழ்நிலையினுடைய அடிப்படையில் பல்வேறு மாநிலங்களில் இந்த மது விலக்குச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்த மாநிலங்கள் இவற்றில் இருந்து விலகி மறுபடியும் புகுத்த வேண்டிய கட்டத்திற்கு வந்து விட்டன.

இப்போது உள்ள 22 மாநிலங்களில் குஜராத் மாநிலம் ஒன்றில் தான் இந்த மதுவிலக்கு சட்டமாகவே ஆக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. அண்ணல் காந்தி அடிகள் தோன்றி மாநிலம் என்பதற்காக அவர்கள் இன்னமும் பிடிவாதமாக பல்லைக் கடித்துக்கொண்டு அந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு வருகிறார்கள்.

ஆனால் அங்கிருந்து வருகின்ற அறிக்கைகளைப் பார்ப்போமேயானால், அம்மாநிலத்தில் மது விலக்குச் சட்டம் இருக்கிறதே தவிர, அதனுடைய நோக்கம் நிறைவேறிடவில்லை. அது தோல்வி அடைந்து விட்டது. எந்த நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்று குறிப்புக்கள் அங்கேயிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், இங்கே எடுத்துச் சொல்கிறபோது கூட ‘லிக்கர் மெனேஸ் இன் இந்தியா’ என்பதை தேக் சந்த் என்பவர் மிகத் தெளிவுபட இந்தியா முழுவதும் ஆராய்ந்து சொல்கிறபோது, பல்வேறு காங்கிரஸ் மாநிலங்கள் எல்லாம் தன்னுடைய கட்சியின் முக்கியமான நிர்மாணக் கொள்கைகளில், ஒன்றாகக் கொண்டு, அதையே அழுத்தந்திருத்தமாக 1921-ம் ஆண்டிலிருந்து 1947—வரை 26 ஆண்டுக் காலம் கடுமையான பிரச்சாரம் செய்து நாட்டிலே அந்தக் கொள்கையைக் காப்பாற்றுவதற்கு இன்றியமையாக் கடமை உடைய மாநிலங்களே கூட எந்த அளவுக்கு வந்து சேர்ந்தன என்று பார்க்கிறபோது இங்கே காணலாம்.

அவர்கள் சொல்கிறார்கள். 1968—வது ஆண்டிலேயே ஏப்ரல் திங்கள் 12 ஆம் நாள் அப்போது கர்நாடக மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்த நிஜலிங்கப்பா அவர்கள் சொல்லியதை ‘டெக்கான் க்ரானிக்கிள்’ என்ற பத்திரிகை வெளியிட்டு இருக்கிறது.





‘The Deccan Chronicle (12 April 1968) reported Shri Nijalingappa as having said that he was not at all sorry about scrapping of prohibition in Mysore, and that he had taken the plunge to do so after seeing that the prohibition policy had not succeeded.’ என்று நிஜலிங்கப்பா அவர்கள் 1968-இலேயே மது விலக்குக் கொள்கை வெற்றிகரமாக ஆகவில்லையானால், அந்த மதுவிலக்குச் சட்டத்தை எடுத்து விட்டோம் அப்படி எடுத்ததற்காக தாம் வருத்தப்படவில்லை என்று சொல்லி இருக்கிறார்.

எஸ். கே. பாட்டீல், பம்பாய் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர். அவர் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது சொல்கிறபோது, இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையிலே ஏப்ரல் 19, 1967-ல், ‘Shri S. K. Patil, the former Railway Minister was reported by the Hindustan Times, to have said in Bombay on 19 April 1967 that prohibition must go lock, stock and barrel.’ என்று அவருக்கே உரிய ஆங்கிலத்திலே மிகக் கடுமையாகத் தான் சொல்லியிருக்கிறார்.

இப்போது கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு ஹெக்டே அவர்கள், காங்கிரஸ் அமைச்சரவையிலே நிதி அமைச்சராகவும். திட்ட அமைச்சராகவும், ஆயத் தீர்வை அமைச்சராகவும் இருந்த நேரத்தில் அவர் சொல்லியிருக்கிறார்.

‘Loss of drink-revenue was the reason given by Shri Rama Krishna Hegde, Minister of Finance, Planning and Excise, for scrapping prohibition in that Congres ruled State.

காங்கிரஸ் ஆண்டு கொண்டிருந்த மாநிலத்தில், ஏன் இந்த மதுவிலக்குச் சட்டத்தை நீக்கி இருக்கிறோம் என்றால் அதற்கு காரணம், வருமான இழப்புத் தான். ஆகவே, அதைக் கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்.

‘The Congress Government of Rajasthan has gone back over its excise policy of 1968’.

1968-லேயே அங்கே அந்த நிலைமை வந்து விட்டது. The Congress Chief Minister Shri Bhagawat Dayal Sharma scrapped prohibition in Haryana’. அவர் அரியானா முதலமைச்சராக இருந்தபோது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதிலே நிறைய மாநிலங்களை, எல்லா மாநிலங்களைப் பற்றியும் சொல்லி இருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 3

ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் அவர்களுக்கெல்லாம் மதுவிலக்கு, மது அருந்தாமை என்ற கொள்கையில் பிடிப்பு இல்லையா என்றால் பிடிப்பு உண்டு. கொள்கையில் பற்று இல்லையா என்றால் பற்று உண்டு. ஆனால் அந்த நிலையிலே நடைமுறைப்படுத்த இயன்றதா என்று கேட்டால் காங்கிரஸ் மாநிலங்களிலேயே, கொள்கையில் பிடிவாதமாக வைத்திருக்கிற மாநிலங்களிலே கூட, முடியாமையின் காரணமாக அவற்றை கை விட வேண்டிய நெருக்கடிக்கு ஆளானார்கள் என்பதற்காக எடுத்துச் சொல்கிறேன்.

ஜனதா கட்சிக்குக் கூட அந்தக் கொள்கை இருக்கிறது. கொள்கை இருந்ததே தவிர, மத்திய ஆட்சியிலே $2\frac{1}{2}$ ஆண்டுக் காலம் ஆண்டபோது கூட அந்தக் கொள்கையைப் புகுத்த வேண்டும் என்ற அளவுக்கு நடைமுறைப்படுத்த முடியவில்லை.

ஜனதா கட்சியே 8, 9 மாநிலங்களில் ஆண்டபோது கூட அங்கேயும் கொண்டு வர முடியவில்லை. அவர்களுக்குக் கொள்கை இல்லை என்று சொல்ல வரவில்லை. மது அருந்தாமை என்ற கொள்கையில் பற்று இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நடைமுறைப்படுத்த முடியாது பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை காங்கிரசும் உணர்ந்து விட்டது. ஜனதாவும் உணர்ந்து விட்டது.

ஆனால், கம்யூனிஸ்டு ஆளுகிற மாநிலம் அந்தக் கொள்கை என்றைக்குமே வெற்றி பெற முடியாது, ஆகவே அதை விட்டு விட்டோம் என்று வெளிப்படையாகவே சொல்லி விட்டார்கள்.

அந்த நிலைமையிலே முஸ்லீம் லீக் கட்சியை எடுத்துக் கொண்டாலும்கூட, மாண்புமிகு அப்துல் சமத் அவர்கள் மிக உருக்கமாகத்தான் எடுத்துச் சொன்னார்கள். அந்த உருக்கத்தைக் கேட்டுத் தான் நாம் எல்லாம் கூட, மது அருந்துகின்ற தொழிலில் ஈடுபடாமல் இருந்து கொண்டு வருகிறோம். ஆகவே யாரும் அதை அருந்த வேண்டும் என்ற முடிவுக்கு வருவதும் இல்லை. அதிலே பிடிவாதமாக நா்' அத்தனை பேரும் இருக்கிறோம்.

(பிற்பகல் 1-20)

ஆகவே, நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதில் முஸ்லீம் லீக் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அவர்கள் சார்ந்திருக்கின்ற முஸ்லீம் லீக் கட்சி கேரளாவிலே கூட்டு அமைச்சரவை அமைத்த பொழுதுகூட மது குடிப்பதை நீக்கிவிட்டு மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றவில்லை. ஆகவே, கடைகள் திறக்கப்பட்டு இருக்கின்ற சூழ்நிலைதான் இருந்தது. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்



1985 ஜூலை 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முதலமைச்சராக இருந்தார், ஆகவே முடியவில்லை என்றாலும், முகமது கோயா அவர்கள் இரண்டாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தபொழுதுகூட அதை நிறைவேற்ற முடியவில்லை. இதனால் அவர்களுக்கு இந்தக் கொள்கை இல்லையா என்றால், கொள்கை உண்டு; சமயத்திலே அவருக்குப் பற்று இல்லையா என்று கேட்டால் உண்டு, மது அருந்துவது கூடாது என்ற கொள்கை உடையவரா என்று கேட்டால், ஆம். ஆனால் அவரால் முடிந்ததா என்றால் முடியவில்லை. முதலமைச்சராக இருந்தும் முடியவில்லை.

பாண்டிச்சேரியைப் பொறுத்தவரையில் பார்த்தோமேயானால், திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டு தடவை அங்கே ஆண்டது; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டு முறை ஆண்டது. ஆனால் காங்கிரஸ் கட்சி பல்லாண்டுக் காலம் ஆண்டது. இவ்வளவு பேரும் ஆண்டதற்குப் பிறகும் பாண்டிச் சேரியில் மதுவிலக்கை சட்டரீதியாகக் கொண்டு வருகின்ற கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகத்தினால் கடைப் பிடிக்க முடியவில்லை; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால் கடைப்பிடிக்க முடியவில்லை. காங்கிரஸ் கட்சியும் தொடர்ந்து ஆண்டு கொண்டு வருகிறது. இதிலே உள்ள ஒரு வேடிக்கை என்னவென்றால், 1980 ஆம் ஆண்டிலே நடந்த தேர்தலிலேகூட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து விட்டால் மது விலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்து விடுவார்கள் என்ற பயத்தைக் காட்டி பிரச்சாரம் செய்த காரணத்தினால் எங்களுக்கு ஒரு இடம்கூட வராமல் செய்கின்ற நிலைமையும் ஏற்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மது விலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்து விடுவோம் என்று சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வராமல் இருந்தால்தான் இந்த மது அருந்தும் வாய்ப்பு தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும் என்ற கருத்தும் சொல்லப் பட்டது. அந்தக் கொள்கையை வைத்தே அந்த மாநிலம் தொடர்ந்து பிடிவாதமாக இருந்து கொண்டு வந்திருக்கிறது.

நான் எதற்காக இதையெல்லாம் சொல்ல வருகிறேன் என்றால், கொள்கையைப் பொறுத்தவரையில் யாருக்கும் மாறுபாடு இல்லை. மாறுபாடு இல்லை என்பதோடு மட்டுமல்லாமல், அந்தத் தன்மைகளையெல்லாம் இங்கே சொன்னார்கள். இதைப்பற்றிச் சொல்ல வருகின்றபொழுது வள்ளுவர் மிகவும் அழகாகக் கூறுகிறார். மாண்புமிகு உறுப்பினர் பொன்முத்துராமலிங்கம் சொன்ன பொழுது, கொள்கையில் குழப்பம் கொண்டிருக்கிறீர்கள், ஆகவே மது கூடாது என்றும் சொல்கிறீர்கள், அதே சமயத்தில் மதுக் கடைகளையும் திறந்து விடுகிறீர்கள், உரிமம் வழங்குகிறீர்கள், இப்படி இரண்டும் மாறுபடுகிறது என்று சொன்னார்கள். வள்ளுவர் அழகாகச் சொல்கிறார், ''உண்ணற்க கள்ளை'' என்று

சொல்கிறார். மதுவை அருந்தாதீர்கள் என்று சொல்கிறார். பிறகு சொல்கிறார், ''உணில் உண்க'' என்கிறார். எப்படி ? ''சான்றோரான் எண்ணப் படவேண்டா தார்'' என்று சொல்கிறார். பெரியோர்களால் மதிக்கப்பட வேண்டாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டால் ''உண்க'' என்கிறார். முதலில் கள்ளை உண்ணக் கூடாது என்று சொன்னவர் பிறகு உண்க என்று சொன்ன காரணத்தினால் அந்த வள்ளுவருக்குக் குழப்பம் ஏற்பட்டு விட்டது என்றா சொல்ல முடியும்? வள்ளுவருக்குக் குழப்பம் என்று சொல்ல முடியாது. அவர் தெளிவாகச் சொல்கிறார் இன்னொரு பாடலின் மூலம்.

நாம் முயன்று பார்ப்பதற்கு மேல் வள்ளுவரும் முயன்று பார்த்து விட்டு அவரே தோற்றுப்போய் கடைசியில் வேறு வழியில்லாமல் சொல்கிறார், ''களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று'' என்று. குடித்துப் பழக்கப் பட்டு இருப்பவனைத் திருத்துகின்ற நல்ல நிலைமைகளில் முயற்சி செய்வது என்பது, எரிகின்ற தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டு தண்ணீரின் கீழே மூழ்கிப் போனவனைத் தேடினாற் போன்றது என்று சொல்கிறார். தண்ணீருக்கு உள்ளே போனவனை தீப்பந்தத்தோடு உள்ளே நுழைந்து தேடினால் எப்படி இருக்குமோ அதைப்போலத்தான், இவனைத் திருத்துவதும் இருக்கும் என்று சொல்கிறார் என்றால், இவனைத் திருத்த முடியவே முடியாது என்ற கருத்தில்தான் இரண்டாயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்பே கூறியிருக்கிறார். காரணம், அவனைத் திருத்தி நல்லவனாகக் கொண்டுவருவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அதற்குத்தான் உவமை சொல்கிறார், ''கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று'' என்று. நீரின்கீழ் மூழ்கியவனை எரிகின்ற தீப்பந்தத்தோடு தண்ணீருக்கு உள்ளே நுழைந்து தேடுதல் போல ஆகும் என்று சொல்லியிருக்கிறார்.

நான் ஏன் இதைச் சொல்ல வருகிறேன் என்றால், நடைமுறைப்படுத்தக் கூடாதா என்று கேட்டால், அம்மையார் அவர்கள்கூட மிகவும் உருக்கத்தோடு சொன்னார்கள், இந்த இடத்திலே இருப்பதால் செய்யலாம் என்றும் சொன்னார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, வள்ளுவருக்குக் கெட்ட பெயர் வந்துவிடக் கூடாது. வள்ளுவரே கள்ளை உண்ணச் சொன்னார், மதுவைக் குடிப்பதற்கு ஒத்த கருத்து உடையவராகத்தான் இருந்தார் என்ற கருத்து வந்து விடக்கூடாது. கள் உண்ணாமை குறித்து மிகத் திருத்தமாக இருந்தார், மிக அழுத்தமாகவும் இருந்தார். ஆனால், நாவலர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், ஏதோ வள்ளுவர் கள் உண்பதற்கு அனுமதி கொடுக்கிறார் என்ற பொருள்படச் சொல்கிறார்கள். அப்படி அல்ல. தெளிவாகச் சொல்கிறார், ''இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திருநீக்கப் பட்டார் தொடர்பு'' என்று; இருமனப் பெண்டிர் என்றும், கள் என்றும்,



சூது என்றும் சொல்கிறார். ஆகையால், எந்த இடத்திலும், மது விலக்குக் கொள்கையைக் கைவிட்டு, கள் உண்ணலாம் என்று அனுமதி கொடுத்ததாகத் தெரியவில்லை. உங்கள் நிலையை நியாயப்படுத்துவதற்காக வள்ளுவரைச் சிக்கலில் ஆழ்த்தி விடாதீர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, மாண்புமிகு ரகுமான்கான் அவர்களை விட, குறளிலே கொஞ்சம் பயிற்சி பெற்றுள்ளவன் நான் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் சொன்னது

'' உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார் ''

என்பதுதான். சான்றோர் மதிக்கவே வேண்டாம் என்ற முடிவுக்கு நீங்கள் வந்து விடுவீர்களானால் அவர்கள் உண்ணலாம். ஆனால் உண்ணக் கூடாது என்பதுதான் கொள்கை. தாராளமாகச் சாப்பிடுங்கள் என்று சொல்லவில்லை, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை நீங்கள் விரும்பினால் உண்ணுங்கள் என்றுதான் அர்த்தம். வள்ளுவர் வெறுக்கிறார் என்றுதான் அர்த்தம். நான் என்ன சொல்கிறேன் என்றால், கள் உண்ணக் கூடாது, மது அருந்தக் கூடாது என்றுதான்—சொல்கிறோம். ஆனால் சான்றோரால் வேண்டப்படாதவர்களாக இருப்பார்களானால், அவர்கள் வேண்டப்படாத ஒரு சூழ்நிலை ஏற்படும், அவர்களுடைய திறமை குறையும், பீடு குறையும், அவர்கள் மக்களால் பாராட்டப்படுகிற தன்மை எல்லாம் குறையும் என்ற தன்மையினுடைய அடிப்படையிலே உண்டாலும் உண்பர், உண்ணுகின்ற சூழ்நிலை ஏற்படும், அப்படி ஒரு இடம் உண்டு என்பதற்காக வள்ளுவர் சொல்லியிருக்கிறார் என்பதற்காக நான் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, குறள் கற்றவர் நம்முடைய நாவலர் அவர்கள் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. அவருடைய பேச்சுக்களை எல்லாம் கேட்டு நாங்கள் அரசியல் இயக்கத்திற்கு வந்தவர்கள். அதிலே மாறுபாடு கிடையாது. ஆனால், குறள் யாருடைய ஏகபோகமும் அல்ல. பரிமேலழகர் காலத்திலேயிருந்து பாரதிதாசன் வரைக்கும் ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வொரு வேறுபாடான பொருள் உண்டு.

' தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதுஎழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை '

என்ற குறளுக்குப் பரிமேலழகர் ஒரு அர்த்தம் சொல்கிறார், புலவர் குழந்தை பாரதிதாசன் ஒரு அர்த்தம் சொல்கிறார், எனவே, அறிவில் ஏகபோகம் ஒரு அர்த்தம் சொல்கிறார். ஆனால், நான் சொல்ல விரும்புவது, வள்ளுவர் கிடையாது. ஆனால், நான் சொல்ல விரும்புவது, வள்ளுவர் சொல்கின்ற சில இடங்களில், சான்றோர்கள் பழிக்கக்கூடிய

சூழ்நிலையில் அதைச் செய் எனச் சொன்னார் என்றால், செய்யாதே என்ற பொருளில்தான் அவர் மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார். ஆகவே, நாவலருடைய பேச்சிலே, வள்ளுவர் சில நேரங்களில் கள் உண்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு விடுமேயானால் அதை ஆதரிப்பது என்பது போன்ற ஒரு தோற்றம் ஏற்படுகிறது, அதைத்தான் சுட்டிக் காட்டினேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் தெளிவாகச் சொன்னேன், வள்ளுவர் அழுத்தந்திருத்தமாகக் கள் உண்ணாமையை 10 குறள்களில் ஆதரிக்கிறார். அவர், எப்படி ஒரு இக்கட்டான கட்டத்திற்கு வருகின்றபொழுது உண்க, அவன் எப்படிப்பட்ட பெருமையை விரும்பாவிட்டால் உண்க என்கிறார். உண்க என்பது முன்னிலை செயற்பாட்டு வினை. உண்க என்பது முன்னிலைப் படுத்துவது. நான் அதை உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன். அவ்வளவு பெரியவர்களும் முயன்று மக்களைத் திருத்தாதபொழுது, திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்லியோ, நெடுஞ்செழியன் சொல்லியோ, மக்கள் திருத்த மாட்டார்களே, திருந்துகிற நிலையில் இல்லை என்பதற்காகத்தான் இவ்வளவையும் எடுத்துச் சொல்கிறேன்.

இந்த நிலைமையைப் பொறுத்தவரையிலும் நடைமுறைப் படுத்துவதில் ஏற்பட்டிருக்கிற சிக்கல்களை வைத்துதான் அமெரிக்காவும் கைவிட வேண்டி வந்தது, இந்தியாவில் இருக்கிற அவ்வளவு மாநிலங்களும் கைவிட வேண்டி வந்தன நாமும் கைவிட வேண்டி வந்தது. 1971–வது ஆண்டு வரை மதுவிலக்குச் சட்டத்தைக் கைவிட வேண்டிய அவசியம் வந்த பொழுதுகூட, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் மதுவிலக்குச் சட்டத்தை நீக்க வேண்டாம், இருக்கட்டும் என்றுதான் சொன்னார்கள். அப்பொழுதுதான் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன மாதிரி, அப்பொழுதிருந்த நிதி நெருக்கடி நிலைமைகளையும் மாநிலத்தினுடைய நிதிப் பற்றாக்குறை நிலைமைகளையும் மத்திய அரசு அதற்கு நட்ட ஈடு தராத ஒரு சூழ்நிலையின் அடிப்படையில், அப்பொழுது முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் அதைத் தளர்த்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவரிடத்திலே எடுத்துத் தெரிவித்து, அப்பொழுதுதான் அந்த உதாரணமே சொன்னார், நடுவிலே கற்பூரத்தை எடுத்து வைத்துக்கொண்டு, சுற்றிலும் எரிகிற நெருப்புப் பிழம்பு இருக்கும்போது, நடுவிலே மட்டும் எவ்வளவு நாளைக்கு அந்தக் கற்பூரத்தை வைத்துக் கொண்டிருக்க முடியும்? வைத்தால் எல்லா இடங்களிலும் மது விலக்கு உண்டு என்ற ஒரு சட்டத்தை கொண்டுவந்து, எல்லா மாநிலங்களுக்கும் அதற்கான நட்ட ஈடு தருகின்ற பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். மத்திய அரசு அரசியலமைப்புச் சட்டத்திலே மதுவிலக்கை கொள்கையாக வைத்திருக்கிறது.





அந்தக் கொள்கையைக் கடைபிடிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசைச் சேர்ந்தது, கடைபிடிப்பதற்கான பொறுப்புகளை ஏற்கவேண்டியதும் மத்திய அரசைச் சேர்ந்தது. ஆகவே எல்லா மாநிலங்களுக்கும் அதனால் ஏற்படுகின்ற—ஹெக்டே அவர்கள் குறிப்பிடுகின்ற அளவுக்கு நட்டத்தை ஈடு கட்டுகிற அளவுக்கு மத்திய அரசு முன் வருமேயானால் எல்லா மாநிலங்களும் அதை நடைமுறைப்படுத்துவதற்குத் தயாராக இருக்கும். அப்பொழுது பக்கத்து மாநிலங்களிலும் நெருப்புப் பிழம்பு அணைந்துவிடும், அப்படி நெருப்புப் பிழம்பு அணையும்பொழுது இங்கேயிருக்கிற சூடும் சூடாகவே இருக்கும் என்ற கருத்திலே சொல்லத்தான் தளர்த்த வேண்டுமென்று சொன்ன பொழுது, தளர்த்துகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பதையும் நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள், இவ்வளவு நிலைமைகள் இருந்துங்கூட, கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள், எரி சாராயத்தை குறைவாக விநியோகிக்க வேண்டிய சூழ்நிலையிலே அரசு இருந்தாலும் எப்படி அங்கேயெல்லாம் சாராயம் வந்தது? அங்கே குடிக்கிறவர்கள் இருக்கிறார்களே என்று சொன்னார்கள். இவ்வளவு கடுமையான சட்டங்களை வைத்து, இவ்வளவு நடைமுறைகளை வைத்து, தாராளமாகவும் வெளியிலே கிடைக்கக்கூடிய அளவுக்கு வைத்து, திருட்டுத்தனமாக, கள்ளத்தனமாக, கடத்தல் முறையிலே பெறவேண்டிய அவசியம் இல்லாத சூழ்நிலை ஏற்படுத்தப் பட்டிருக்கும்போதே கள்ளத்தனமாகக் காய்ச்சி, கள்ளத்தனமாக விற்று, கள்ளத்தனமாக வாங்கி உண்கின்ற சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால், உள்ளபடியே மதுவிலக்கைக் கொண்டு வந்து, இந்தக் கடைகளே இல்லாமல் ஆக்கிவிட்டால் இந்த அளவைவிட இன்னும் பன்மடங்கு அதிகமாக ஆகிவிடும்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆக, காங்கிரஸ் ஆண்டுகொண்டிருந்தபோது இதை உணர்ந்துதான் அன்றைக்கு ஈரோட்டில் சப்-இன்ஸ்பெக்டராக இருந்த அர்ச்சுனன் அவர்கள் காவல் நிலைய ஆய்வாளர் உடையிலே வந்து தானே சாராயம் காய்ச்சுவதன் மூலம் சிறைத்தண்டனையை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லி, அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டு, வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் சொன்னார், இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் காவல் துறையில் இருக்கிற நல்லவர்கள் பலருக்கும் அவப்பெயர் ஏற்படுகிறது, ஆகவே எதிர்க்கிறேன் என்று சொன்னார். கடைசியில் ஊர்வலம் நடத்தி வருகிறபோது அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்கிற வரலாறு எல்லாம் நமக்குத் தெரியும்.

ஏன் இதை எல்லாம் கூறுகிறேன் என்றால், மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் கூறியதைப்போல, இங்கே பலரும் சுட்டிக்காட்டியதைப்போல மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு மதுவிலக்குக் கொள்கையை உள்ளபடியே நிறைவேற்றவேண்டும் என்பதில் கிஞ்சிற்றும் மாறுபட்ட எண்ணம் இல்லை. அதற்கான சூழ்நிலைகளை அவர்களே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே உறுப்பினர்கள் சொன்னமாதிரி செப்டம்பர் 15-ந் தேதி மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொல்லும்போது இந்த ஒரு வரியை மட்டும் வைத்து சொல்லவில்லை. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய கூற்றை தெளிவுபட குறிப்பிட்டார்கள். 21—6—84 அன்று பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திலும் முதல்வர் அவர்கள் நிருபர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்போது தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 21—6—84 மக்கள் குரல் பத்திரிகைச் செய்திப்படி பார்த்தால் சாராயக் கடைகள் மூலம் கிடைக்கிற வருமானம் வேறுவழியில் வருவதற்கு நடவடிக்கை எடுத்தபிறகு நிச்சயமாக மதுவிலக்கை அமுல்படுத்துவோம்: கள்ளச்சாராயத்தை அடியோடு ஒழிக்க மக்கள் எந்த அளவுக்கு ஒத்துழைப்புத் தருகிறார்களோ அந்த அளவுக்கு அமுல்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு கண்டிசன் கிளாஸ்போட்டு, நிபந்தனை போட்டு, மக்கள் ஒத்துழைப்பு கொடுத்தால்தான் கள்ளச்சாராயத்தை அடியோடு ஒழிக்க முடியும். கள்ளச்சாராயத்திற்கு வாய்ப்பு இல்லாமல் போகுமானால் மதுவிலக்கு பூரண வெற்றியடையும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் நிச்சயமாக மதுவிலக்கைக் கொண்டுவரலாம்.

ஆனால் சட்டத்தை மட்டும் வைத்துவிட்டு, பொதுமக்கள் ஒத்துழைப்பு இல்லை என்றால் சமுதாய விரோதிகள் அதிலே புகுந்துவிடுவார்கள், சட்டத்தை சரியாக அமுல்படுத்த முடியாது. ஆகவேதான் இரண்டு கண்டிஷன்கள் போட்டு தன் கருத்தை எடுத்து சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, கள்ளச்சாராயம் காய்ச்சுவது அடியோடு ஒழிக்கப்படவேண்டும்; அதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும். மற்றொன்று, இதன் மூலம் ஏற்படுகிற இழப்பை சரிக்கட்ட வேறு வகையில் ஏதாவது வாய்ப்பு இருக்கவேண்டும். அதன் பிறகுதான் இதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். 22—6—84 தேதியிட்ட 'இந்து' பத்திரிகையிலும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"The Tamil Nadu Chief Minister Mr. M.G. Ramachandran today said that he is firmly committed to Prohibition and was hopeful of re-introducing it in the State by September 15, 1985. He said in a Press Conference that it would however depend on





the extent of public co-operation in putting down the illicit distillation. His intention was that the dry law should be re-introduced after stamping out the illicit distillation, as otherwise the money due to State Exchequer would go into the hands of boot-leggers."

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் நாம் நடவடிக்கைகள் பலவற்றை எடுத்துவருகிறோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே கள்ளச்சாராயம், நல்ல சாராயம் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். கள்ளச்சாராயம் என்பதற்கு கள்ளத்தனமாகக் காய்ச்சப்படுகின்ற சாராயம் என்று பொருள். வேற்றுமை உருபு உடன் தொக்கத்தொகை என்று இலக்கணத்திலே வரும். அது முறையாக வராது, ப்ரொப்போர்ஷனேட்டாக இருக்காது. எதைச் எதை சேர்க்கவேண்டுமோ அதைச் சேர்த்திருக்கமாட்டார்கள். சேர்க்கக்கூடாததைச் சேர்த்திருப்பார்கள். அதனால் நச்சுத்தன்மை கலக்கும், உயிர்கள் பலியாகும். இரண்டாண்டுகளுக்கு முன்னால் கர்நாடகத்தில் பல நூற்றுக்கணக்கானவர்கள் இறந்துவிட்டார்கள். நம்முடைய மாநிலத்திலும் நச்சுத்தன்மை சேர்ந்து கடந்த ஆண்டுகளில் பலர் இறந்திருக்கிறார்கள். அந்த வகையிலே நல்ல சாராயம் என்று குறிப்பிடுவது, எல்லோரும் வாங்கிக் குடியுங்கள் என்று விளம்பரம செய்வது அல்ல. இந்தச் சாராயம் உடலுக்கு ஏற்றது, முறைப்படி தயாரிக்கப்பெற்றது, வழிமுறைப்படி செய்யப்பட்டது என்ற முறையிலே குறிப்பிடப்படுகிறதே தவிர வேறுவகையில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்போது நிலை இல்லாத ஒரு கொள்கையைக் கொண்டிருக்கின்றது இந்த அரசு என்று எடுத்துச் சொன்னார்கள். மதுவிலக்கு வேண்டும் என்பதில் நாம் நிலையாகத்தான் இருக்கிறோம். ஆனால் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் இருப்பதன் காரணமாக நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு மாற்றங்களை நாம் செய்து கொண்டு வருகிறோம். அதனை நடைமுறைப்படுத்துவதற்காகக் கடுமையான சட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதித்துப் பார்த்தார்கள். 6 மாதத் தண்டனை, ஒரு ஆண்டு தண்டனை என்றார்கள். பிடிபட்டவர்கள் கடுமையான அளவுக்குத் தண்டிக்கப்படக்கூடிய சூழ்நிலைக்கு வந்தார்கள். ஆனால் அவ்வளவு பேரும் பிடிபட்டார்கள் என்றும் நாம் சொல்ல முடியாது.

விடுபட்டவர்களும் பலர் இருக்கிறார்கள். விடுபடுகின்ற அளவுக்குச் சூழ்நிலை இருக்கின்றது என்பதையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ஒன்றும் இல்லாத ஏழை, எளிய பாட்டாளித் தொழிலாளி அவன் ஏதோ ஒரு காரணத்தால் தன்னுடைய உடல் நலிவு காரணமாக உற்சாகத்தை ஏற்படுத்த

வேண்டும் என்பதற்காகக் குடித்துவிட்டான் என்பதற்காக அவனைப் பிடித்து 6 மாதம், ஒரு வருஷம் சிறையிலே தள்ளுகிறோம் என்றால் அவனுடைய குடும்பம் பாழ்படுகின்றது. அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு யாரும் இல்லை என்ற சூழ்நிலை வருகிறது. எனவே கடுமையான சட்டங்களை நிறைவேற்றி மதுவிலக்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தலாமா என்று முயன்று பார்த்தோம். முடியவில்லை. மேலும் கடுமையான சட்டங்களை நிறைவேற்றுகின்றபோது என்ன சொன்னார்கள் என்று சொன்னால் கள்ளச்சாராயம் ஆறுபோல் ஓடுகின்றது, அருவியாக விழுகின்றது, ஓடையாக நின்று கொண்டிருக்கின்றது என்பதோடு மட்டுமல்லாமல் அது குடிசைக்கு குடிசை வந்து குடிசைத் தொழிலாகவும் மாறிவிட்டது என்று சொன்னதற்குப் பிறகு அதைக் கடுமையாக ஆக்குவதற்காக கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தபோது கடுமையாக ஆக்கக்கூடாது, ஏழை எளியவர்கள் என்ன ஆனார்கள் என்று கேட்கக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டது. அதாவது கழுதை தூக்கிய கதை ஒன்று உண்டு. தகப்பனும், மகனும் சேர்ந்து கழுதையை ஓட்டிக் கொண்டு போனார்கள் என்று சொல்லி, கழுதை சும்மா போகிறதே தகப்பன் ஏறி உட்காரக் கூடாதா என்று எவனோ சொன்னான் என்பதற்காக என்று சொல்லி அவன் ஏறி உட்கார்ந்து அதற்குப் பிறகு இன்னொருவன் பார்த்து சின்னப் பையனைக் கீழே விட்டுவிட்டு பெருங்கிழவன் ஏறிப் போகிறானே என்று அவன் சொல்லி, அவன் இறங்கிக் கொண்டு இவனை உட்கார வைத்து அதற்கப்புறம் சின்ன பையனுக்கு என்ன இவன் நடந்து வரலாமே, வயதானவன் தானே உட்காரவேண்டும் என்று ஒருவன் சொல்லி அதற்குப் பிறகு இரண்டுபேரும் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிறபோது இரண்டு பேரும் ஏறி உட்கார்ந்திருக்கிறார்களே இந்தக் கழுதை என்ன ஆகுமோ என்று ஒருவன் சொல்லி இப்படி யார் சொல்வதைத் தான் கேட்பது என்று ஒரு முடிவுக்கு வரமுடியாமல் திண்டாடிய கதை மாதிரி இருக்கின்றது.

எனவே நிலைமைக்கு ஏற்பச் சட்டங்களைக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்படுகிற காரணத்தால் வருகிறதே தவிர கொள்கையில் ஒன்றும் நிலையற்ற தன்மையில்லை. அவர்கள் அதற்காக ஒரு உதாரணத்தைக் கூட சொன்னார்கள். அது ஒரு பொருத்தமான உதாரணம்தான். தஞ்சாவூர் பொம்மை மாதிரி என்று சொன்னார்கள். தஞ்சாவூர் பொம்மை தானாக ஆடாது. யாராவது ஆட்டவேண்டும். ஆனால் அதில் என்ன புதுமை என்று கேட்டால் அதை யார் கவிழ்த்தாலும் கவிழ்ந்துவிடாது, நிமிர்ந்து நின்றுவிடும். அதுதான் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக்கு இருக்கின்ற இலக்கணமே தவிர வேறு ஒன்றும் இல்லை. அது தானாக ஆடாது. இன்னொருவன் ஆட்ட வேண்டும். அதைக் கவிழ்க்கவேண்டும் என்றெண்ணிக் கவிழ்த்தாலும்கூட நிமிர்ந்து உட்கார்ந்துவிடும். (சிரிப்பு) நிமிர்ந்து





உட்காரும்போது கொஞ்சம் ஆடும். 1980-லே கவிழ்த்தார்கள், 3 மாதம் ஆடியது. மறுபடியும் ஜூனிலே வந்து நின்றுவிட்டது. அந்த வகையிலேதானே தவிர வேறு ஒன்றும் கொள்கைப் பிடிப்பு இல்லை என்றில்லை. அதனை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதில்தான் அக்கறை கொண்டிருக்கிறோம்.

சாராயத்தை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை பற்றி எல்லாம் சொன்னார்கள். அவ்வளவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு ஏற்பட்டு வந்ததல்ல. ஈ.ஐ.டி. பாரி அண்ட் கம்பெனி லிமிடெட் 1845-ஆம் ஏற்பட்ட ஒன்று. திருச்சி டிஸ்டில்லரிஸ் 1966-லே ஏற்பட்டது. சக்தி சுகர்ஸ் டிஸ்ட்டில்லரிஸ் 1972-ஆம் ஆண்டிலே ஏற்பட்டது. அர்விந்த் டிஸ்டில்லரிஸ் 1972-ல் ஏற்பட்டது. ஓரியண்ட் கெமிக்கல்ஸ் இண்டஸ்டரீஸ் 1973-லே ஏற்பட்டது. சவுத் இண்டியா அக்ரோபியன் என்று முண்டியம்பாக்கத்திலே இருப்பது 1973-லே ஏற்பட்டது. கோயம்புத்தூர் ஆல்கஹால் கெமிக்கல்ஸ் லிமிட்டெட் 1978-ஆம் ஆண்டிலே ஏற்பட்டது. கெம்ப்ளாஸ்ட் மரியம்பள்ளி 1978-லே ஏற்பட்டது. ஆகவே உற்பத்தி செய்கின்ற தன்மையைப் பொறுத்தவரையில் எல்லா மாநிலங்களையும் பார்த்தால் தொடர்ந்து தனியார் கையிலே தான் இருந்து வருகின்றது. எனவே அந்தக் கலவையைப் பொறுத்தவரையில் அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் என்ன என்கிறார்கள். அதிலே இருக்கின்ற சிக்கல்களை மெல்ல, மெல்ல அரசாங்கம் தீர்த்துக் கொண்டு வருகின்றது ஒன்றன் பின் ஒன்றாக. ஏற்கெனவே சில்லரை வியாபாரத்தைத் தனியாருக்கு விற்றுக் கொண்டிருந்தது. இரண்டாண்டுகளுக்கு முன்பு சட்டமே கொண்டு வந்து இதற்காகத் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தை ஏற்படுத்தி அவர்களே அதை விநியோகிப்பார்கள் என்று கொண்டு வரப்பட்டது.

அதற்கடுத்த கட்டமாக தனிப்பட்டவர்களும் ஏலம் எடுத்து அந்த ஏலங்களின் மூலமாக கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள், வேறுபல வகைகளைச் செய்கிறார்கள், என்று சொல்லப்பட்டது. இவர்களுக்குக் கொடுக்கின்றபோதுதான விலை நிர்ணயிக்கப் படுகின்றதே தவிர, இவர்கள் விற்கின்ற விலை நிர்ணயிக்கப்பட வில்லை அதற்கு முன்னாலே ஏலம் எடுத்தவர்களைப் பொறுத்த வரையில். இப்போது கொண்டு வந்திருக்கின்ற முறையின்படி அந்தப் பொறுப்பையும் தமிழ்நாடு வாணிபக் கழகமே ஏற்றுக் கொண்டிருப்பதன் காரணத்தால் அடிமட்டத்தில் இருக்கின்ற விற்கின்ற விலை வரையிலும் கடைக்கு, கடை வேறுபட முடியாது 6,700 கடைகள் வருகின்றன என்று வைத்துக்கொண்டால் தமிழ்நாடு முழுவதும் கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரையில் எந்தப் பகுதியாக இருந்தாலும் விற்கிற விலை ஒரே விலையாகத் தான் இருக்கும் என்ற அளவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூலை 3

(பிற்பகல் 1–40)

அவரவர்கள் விருப்பப்படி கொள்ளை லாபம் அடிப்பதற்கான வழித்தடம் எல்லாம் இதன் மூலமாக இதிலே முறியடிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர், ஒரு கடையைத்தான் எடுத்துக் கொள்ளலாம் என்ற விதிமுறையும் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இதிலே யார் யார் எடுக்கிறார்கள் என்பது பற்றி இப்போது தெரியாது. அதை அப்படியே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு விட்டுவிடுவார்கள் என்பது சரியல்ல. அரசுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அமைச்சர்கள் யாரும் இதைக் கொடுப்பதில்லை. தமிழ்நாடு வாணிபக் கழகம் தான் இதற்கு முழு பொறுப்பும். அவர்கள் இதற்கு என்று பாரம் வைத்திருக்கிறார்கள், அதற்கென்று சில விதிமுறைகளையும் வைத்திருக்கிறார்கள். அதிலே ஒன்று அரசாங்கத்திற்கு எந்த பணமும் பாக்கியில்லாதவர்களாக இருக்க வேண்டும். வரி கட்டாமல் இருக்கக்கூடாது, என்று இப்படி பல்வேறு நிபந்தனைகளை வைத்து அதன்படிதான் எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

இவற்றையெல்லாம் நிரப்பித் தருபவர்களுக்கு, மாண்புமிகு உறுப்பினாகள் பலரும் எடுத்துச் சொல்லிய மாதிரி, அது கோவிலுக்குப் பக்கத்திலே இருக்கக் கூடாது, பள்ளிக் கூடத்திற்குப் பக்கத்திலே இருக்கக்கூடாது, மருத்துவ மனைக்குப் பக்கத்திலே இருக்கக் கூடாது, பொது மக்கள் புழங்கும் இடங்களுக்குப் பக்கத்திலே இருக்கக் கூடாது என்கிற பல நிபந்தனைகளின் அடிப்படையில்தான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த லைசன்ஸ் எடுக்கின்ற முறை, உரிமம் எடுக்கின்ற முறைப்படி சட்டத்திட்டத்தின்படிதான் ஒதுக்கப்பட இருக்கிறது. யார் வேண்டுமானாலும் எடுக்கலாம், எவர் வேண்டுமானாலும் எடுக்கலாம். இதிலே யாருக்கும் தடை கிடையாது. ஆனால் ஒரு குறிப்பிட்ட கட்சிக்குத்தான் இதைச் செய்வீர்கள் என்று கூறுவது முன் கூட்டியே எடுத்துக் கூறுகிற ஒரு சந்தேகத்தின் அடிப்படையில்தான் வருகிறது. எடுத்து முடித்தபிறகு வேண்டுமானால் அந்தப் பட்டியலில் எந்தந்தக் கட்சிகள், எங்கெங்கே எடுத்தார்கள் என்று வேண்டுமானால் எடுத்து தெளிவாகச் சொல்ல வாய்ப்பு ஏற்படும். அந்த வகையில் யார் யார் இதிலே முனைப்பாக இருந்தார்கள், எப்படி எந்த உணர்வோடு இருந்தார்கள் என்பதை பின்னால்தான் சொல்ல முடியுமே தவிர, இப்போது சொல்வதற்கு இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் குறிப்பிடுகிறபோது, சொன்னார்கள். இங்கே எரி சாராயக் கடத்தலைப் பற்றி எடுத்துச் சொல்கிறபோது, முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். டி. எஸ். அவர்கள் கூறியதாக சில குறிப்புகளை எடுத்துச் சொல்லி, இங்கே. அதைப்பற்றி விளக்கம் தரவேண்டும் என்ற முறையிலே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, அந்த நிலைமைகளையெல்லாம் எடுத்துச் சொல்கிறபோது ஒரு பத்திரிகையிலேயிருந்து சொன்னார்கள்.



1985 ஜூலை 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வழக்கமாகவே செய்திகளை திருத்தியும், மாற்றியும், புனைந்து திரித்துக் கூறியும் எழுதுகிற பழக்கத்தை சில பத்திரிகைகள் கொண்டிருக்கின்றன. நான் எல்லா ஏடுகளும் அப்படிப்பட்ட பழக்கத்தை கொண்டிருக்கின்றன என்று சொல்ல மாட்டேன். சில ஏடுகள் கொண்டிருக்கின்றன. அப்படி மாற்றி திரித்து பல வகைகளில் இட்டுகட்டி எடுத்துச் சொல்கிற பண்பை பழக்கப்படுத்தியிருக்கிற ஒரு ஏடு, அது இண்டியன் பிரஸ் கவுன்சிலின் மூலமாகவே இப்படி எழுதுவதற்காக 3, 4 தடவைகள் கண்டிக்கப்பட்ட ஒரு ஏடு. அந்த ஏடு எழுதியிருக்கிறது. 1—7—1985 ஆம் நாளன்று எரி சாராயக் கடத்தல் நடந்தது எப்படி? எம்.ஜி.ஆர். மோசடி. எஸ்.டி.எஸ். திடுக்கிடும் தகவல் என்று போட்டு, எஸ் டி.எஸ். சொன்னதாகப் போட்டிருக்கிறது. நான் ஊரிலே இல்லாத போது நான் கையெழுத்துப் போடாத, போட வேண்டிய பைலில் எம்.ஜி.ஆர். கையெழுத்துப் போட்டு உத்தரவு இடப்பட்டு விட்டதன் காரணம்தான் ரே கமிஷன் விசாரணைக்குக் காரணம் என்ற திடுக்கிடும் தகவல்களை முன்னாள் அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் அளித்தார் என்று தெரிகிறது. அந்தச் செய்தியை வைத்துத்தான் மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்....

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** தலைவர் அவர்களே, வேறு பத்திரிகையிலும் இந்தச் செய்தி வந்திருக்கிறது. நான் பார்த்த பத்திரிகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைப் போன்ற செய்தி இல்லை, ஆனால் கருத்து இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பத்திரிகையும் நான் சொன்ன அந்த வகையிலேயே சேர்க்க வேண்டும். திரு. எஸ். டி. எஸ். அவர்கள் சொல்லியிருக்கிறது—28 ஆம் தேதி நான் சென்னையில் இல்லை. 30 ஆம் தேதிதான் வருகிறேன். 29 ஆம் தேதி நான் கையெழுத்துப் போடவேண்டிய ஒரு கோப்பில் முதல்வர் அவர்கள் கையெழுத்து இட்டு உத்திரவு இடப்பட்டு விட்டது. அதுதான் ரே கமிஷன் வந்ததற்குக் காரணம் என்று முன்னாள் அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கேரளத்திற்கும், கர்நாடகத்திற்கும் எரி சாராயம் அனுப்ப எம். ஜி. ஆர். உத்திரவிட்டார். அதற்குப் பிறகு என் கை ஒப்பத்திற்காக கோப்பு வந்தபோது நான் கையெழுத்துப் போடவில்லை, மறுத்துவிட்டேன். நான் கையெழுத்துப் போட வேண்டிய பைலில், நான் இல்லாத நேரத்தில் நான் கையெழுத்துப் போட்டிருந்தால், என் மீது தான் அந்த ரே கமிஷன் விசாரணை வந்திருக்கும். ஆனால் இன்று எம். ஜி. ஆர். மீது அந்த விசாரணைக் கமிஷன் வந்திருக்கிறது. தலைக்கு மேல் அந்தக் கத்தி தொங்கும்வரை எம். ஜி. ஆர். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்க மாட்டார் என்று எஸ்.டி.எஸ். கூறியிருப்பதாக ஒரு செய்தி இருக்கிறது.

அந்தச் செய்தியை ஆதாரமாக வைத்துக் கொண்டு தான் பேசியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். வேறு பல பத்திரிகையிலும் வந்திருக்கிறது என்று சொன்னார்கள்.

இது பற்றிய தகவல்களைக் கேட்டபோது, கேரள அரசின் வருவாய் வாரியத்தின் உறுப்பினர், கேரள அரசின் சார்பாக வருவாய் வாரியத்தினுடைய ஒரு உறுப்பினர் 16–10–80 ஆம் நாளிட்ட கடிதத்தில் நமது அரசினுடைய உள் துறை செயலாளர் அவர்களுக்கு, கேரளாவில் சாராயம் தயாரிப்பதற்காக 16 லட்சம் சாராவியை தமிழ்நாட்டிலிருந்து அனுப்பக் கோரியிருக்கிறார்கள். அக்கோரிக்கை உள் துறையினால் ஆய்வு செய்யப்பட்டு, 25–10–1980 அன்று அக்கோப்பு சுற்றுக்கு அனுப்பப்பட்டது. 28, 30 ம் தேதி அல்ல. 25–10–80 அன்று கோப்பு சுற்று அனுப்டப்பட்டது. அதிலே முக்கியமான கொள்கை, அதாவது நடைமுறையில் உள்ள சாராவி ஏற்றுமதிக்கான தடையை விலக்கி கேரளாவிற்கு சாராவி அனுப்புவதென்று தான் முதலமைச்சருக்கு அன்று ஆயத்தீர்வை அமைச்சரான வருவாய்த்துறை அமைச்சர் மூலம் கோப்பு சுற்றனுப்பப்பட்டுள்ளது. ஆனால் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணத்தில் இருந்ததால், அவ்வாறு குறிப்பிட்டு 25–10–80 அன்று முதலமைச்சருக்கு கோப்பு அனுப்பப்பட்டது. ஆணை வெளியிட்ட பிறகு 30–10–80 அன்று வருவாய்த் துறை அமைச்சருக்கு கோப்பு சுற்றனுப்பப் பட்டது. அவரால் 1–11–1980 அன்று கோப்பு கையெழுத்திடப்பட்டது. இதிலிருந்து பத்திரிகை குறிப்பில் அவர்கள் கையெழுத்தே போடவில்லை என்று சொல்கிறார். ஆகவே 'ஆப்டர் இஷ்யூ' போடுவதென்பது நடைமுறையில் இருக்கிற ஒன்று தான்.

25 ம் தேதி அப்படி வந்தாலும் ஒரு அமைச்சர் போட்ட ஒரு உத்தரவை மாற்றவும் முதலமைச்சருக்கு உரிமை உண்டு. அதை ஏற்றுக்கொள்ளவும் உரிமை உண்டு. அல்லது மற்றவகையிலே அமைக்கவும் உரிமை உண்டு. ஆனால் 25 ம் தேதி அவர் ஊரில் இல்லாத காரணத்தால் முதலமைச்சர் கையெழுத்துப் போடுகிறார். அதற்குப் பிறகு மறுநாள் அவர் வருகிறார். அதற்கு ஆணை வெளியிட்ட பின் 30–10–1980ல் வருவாய்த் துறை அமைச்சருக்கு மறுபடியும் அனுப்பப்படுகிறது. அதிலே கையெழுத்துப் போடவில்லை என்று சொல்கிறார். ஆனால் எஸ். டி. எஸ். அவர்கள் 1–11–80 ல் அதிலே மாண்புமிகு முதல்வர் கையெழுத்திட்டதற்கு பிறகு பார்வையிட்டு, எந்தக் குறிப்பும் எழுதாமல், அவரால் ஏற்றுக் கொள்கிற முறையில் அதிலே கையெழுத்திடுகிறார்.

அதுமட்டுமல்லாமல், மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) முதலமைச்சர் கையெழுத்திட்டது 25-10-1980 அன்று அவர் ஊரில் இல்லை. ஆணை வெளியிடப்பட்டது. 30 ம் தேதி மறுபடியும் வருவாய்த் துறை அமைச்சருக்கு கோப்பு போகிறது. 1-11-1980 ல் அவர் கையெழுத்திடுகிறார்.





அதுமட்டுமல்லாமல், இது வெளியிட்ட பின் வந்தது. தொழில் நிறுவனங்களுக்கு அனுப்பியது. அப்போது தமிழகத்தில் இந்த மதுவிலக்குச் சட்டம் அமலில் இருக்கிறது. இங்கே சாராவியைப் பயன்படுத்தி மதுவகைகள் தயாரிக்கிற நிலைமைகள் இல்லை. அப்போது நம்மிடத்தில் உபரியாக இருந்ததை பிற மாநிலங்களுக்கு அங்கே இருக்கிற தொழிற்சாலைகளுக்கு இங்கே நம்முடைய தொழிற்சாலைகளுக்கு கொடுத்தது போக, மற்ற மற்ற மாநிலங்களுக்குத் தருகிற பழக்கம் இருந்தது. இப்போது வேறு மாநிலங்களுக்குக் கொடுப்பதற்கு நிலைமைகள் இல்லை. நமக்கே போதுமான அளவு இல்லையென்று சொல்கிற சூழ்நிலை இருக்கிறது. அப்போது அந்தச் சூழ்நிலை இருந்தபோது தொழில் நிறுவனங்களுக்காக, ஆந்திராவிற்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் லிட்டர், கேரளாவிற்கு 2 லட்சத்து 28 ஆயிரம் லிட்டர், கேரளாவிற்கு மறுபடியும் 7 லட்சத்து 75 ஆயிரம் லிட்டர், கோவாவிற்கு 2 லட்சத்து 28 ஆயிரம் லிட்டர், கர்நாடகாவிற்கு 10 லட்சம் லிட்டர் என்ற அளவில் அந்தந்த மாநிலங்களின் தொழில் நிறுவனங்களும், மாநில அரசும் கேட்டுக் கொண்டதற்கிணங்க 23 லட்சத்து 88 ஆயிரம் லிட்டர் வழங்கப்பட்டிருக்கிறது.

இதிலே எஸ்.டி.எஸ். அவர்கள் வந்து 19-8-1980-ல் கையெழுத்திட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டது 20-8-1980ல் இவைகளுக்கெல்லாம் தரலாம், போகலாம். என்று கையெழுத்திட்டது 19-8-1980-ல் எஸ்.டி.எஸ். அவர்கள். அதற்கு பிறகு தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20-ம் தேதி கையெழுத்திடுகிறார். பிறகு பிற மாநிலங்களுக்கு அனுப்புவதிலே தனக்கு சம்பந்தம் இல்லை, கையெழுத்துப் போடவில்லை, மறுத்துவிட்டேன் என்று சொல்வது என்பது உண்மையல்ல என்பதை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல கேரளா அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் 5 லட்சம் லிட்டர் சாராவியை அனுப்ப வருவாய்துறை அமைச்சராக இருந்த எஸ்.டி.எஸ். 1—11—1980-ல் கையெழுத்திடுகிறார். அவைகள் மேல் ஆணையிடுகிறபோது முதலமைச்சர் 3-11-1980ல் எஸ்.டி.எஸ். கையெழுத்திட்ட கோப்பில் அதற்கு பிறகு கையெழுத்திடுகிறார். ஆகவே கையெழுத்திட மறுத்துவிட்டேன் என்று சொல்வது இதிலேயும் பொருந்திவராது.

கோவாவிற்கு சாராவி 4 லட்சம் லிட்டர், ஹைதராபாத்திற்கு ஒரு லட்சம் லிட்டர், ஆகமொத்தம் 5 லட்சம் லிட்டர் அனுப்புகிற கோப்பில் 5—12—1980-ல் எஸ்.டி.எஸ். முதலில் கையெழுத்து இடுகிறார். அவர் பார்த்து அனுமதித்ததற்குப் பிறகு தான் முதல்வர் 5—12—1980-ல் கையெழுத்திடுகிறார். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் உண்மை நிலையை வைக்கவேண்டுமே தவிர, நாமாக எடுத்து யார் யாருக்கோ கொடுத்துவிட்டோம் என்பதல்ல. அந்தந்த மாநிலங்களுடைய அரசு அந்தந்த மாநிலங்களின் தொழிற்சாலைகளை காப்பாற்றுவதற்காக கேட்கிறபோது கொடுக்கவேண்டிய நிலைமைகள் வருகிற சூழ்நிலை இருக்கிறதே தவிர வேறல்ல.

உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட 'ரே கமிஷன்' 18—6—1981ல்
உள்துறை அமைச்சகத்தைச் சார்ந்த அறிவிக்கையினால் அமைக்
சப்பட்ட விசாரணைக் குழுவாகும். அதற்கு முன்னாலே
10—2—1981-ல் நம் மாநில அரசினுடைய உள்துறையால் வெளி
யிடப்பட்ட அறிவிக்கையில் 1980-ம் ஆண்டு அக்டோபர், நவம்பர்
மாதங்களில் நம் மாநிலத்திலிருந்து கேரளா மாநிலத்திலுள்ள
மன்னம்புற்று சர்க்கரை ஆலைக்கு சாராவி ஏற்றுமதி செய்வதற்கு
அளிக்கப்பட்ட அனுமதி, அதற்காக அனுமதிச் சீட்டுக்கள்
வழங்குதல், மேலும் உண்மையாக ஏற்றுமதி செய்யப்பட்ட
சாராவியின் அளவு ஆகியவற்றைப்பற்றி நீதிபதி பி.எஸ். கைலாசம்
அவர்கள் தலைமையில் தனி நபர் விசாரணைக் குழு அமைக்கப்
பட்டு, அதற்கு பதிலாக 30—5—1981 அன்று நீதிபதி
ஆர். சதாசிவம் அவர்கள் தனிநபர் விசாரணைக் குழுவாக
அமைக்கப்படுகிறார்கள். ஆகவே கைலாசத்தை நியமித்தது
12—2—1981 சதாசிவத்தை நியமித்தது 30—5—1981ல்;
ரே கமிஷன் அமைந்தது 18—6—1981. பிறகுதான் அதை அமைக்
கிறார்கள். அதற்கு முன்னால் இங்கே அமைக்கப்பட்டுவிட்டது.
இந்த விசாரணைக் குழு பற்றி வழக்கு இப்போது டெல்லியிலே
உள்ள உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதன் காரணமாக
விசாரணைக் குழு மேல்நடவடிக்கை எடுக்க முடியவில்லை. உச்ச
நீதிமன்றத்தில் இருந்து தீர்ப்பு வந்ததற்குப் பிறகுதான் இதற்கு
மேல்நடவடிக்கை எடுக்கவேண்டிவரும். விசாரணைக் குழு
இப்போது செயல்படாமல் இருந்துவருகிறது.

(பிற்பகல் 1-50)

மற்றொன்றை மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராம
லிங்கம் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 1984-ஆம் ஆண்டு ஜூலை
மாதம் 1-ஆம் தேதியிலிருந்து கள்ளுக்கடைகள், சாராயக்கடைகள்,
பிராந்திக் கடைகள் மாலை 6 மணிக்கு மேல் திறந்து வைக்கக்
கூடாது, விற்பனை செய்யக்கூடாது என்று 22—6—1984 அன்று
பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் அப்போது இருந்த தலைமைச்
செயலாளர் அவர்கள் அறிவித்தார்கள், அது ஒரு ஆணையாக
பிறப்பிக்கப்படவில்லை. பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் அறிவிக்
கப்பட்ட ஒன்று. அது எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது
அன்று. கள்ளுக் கடைகள் காலை 8 மணி முதல் இரவு 9 மணிவரை
யிலும், சாராயக்கடைகள் காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணி
வரையிலும் செயல்படவேண்டும் என்று விதிகளிலே ஏற்கனவே
இருந்தது. இந்த நேரங்கள் ஏலம் விடும் நிபந்தனைகளிலே குறிப்
பிடப்பட்டு, கள், சாராயக் கடைகளின் ஏலங்கள் 1983—84-ல்
ஆயத்தீர்வை ஆணையாளரால் நடத்தப்பட்டு இருக்கின்றன.
அந்த நிபந்தனைகளின் அடிப்படையிலேதான் ஏலங்கள் விடப்
பட்டது. ஏலமும் எடுத்து இருக்கிறார்கள். கள் மற்றும் சாராயக்
கடை ஏலதாரர்கள், தங்கள் கடையை இரவு 11 மணி வரை
யிலும், கடைகள் இயங்கும் வகையில் நீடிக்கவேண்டும் என்று
மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையைக் கேட்டுக்கொண்
டார்கள்.





இந்தக் கோரிக்கையை ஆய்ந்து, கள்ளுக் கடைகள் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரையிலும், சாராயக் கடைகள் காலை 9 மணி முதல் இரவு 10 மணிவரையிலும் செயல்படலாம் என்று ஆணையாளர் அளித்த பரிந்துரைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு விதிகள் அவ்வாறு 16—3—1984-ல் திருத்தப்பட்டு இருந்தது. இந்த நிலையில் கடைகள் இயங்குகிறபோது, நாம் மாலை 6 மணி வரையில்தான் வைக்கவேண்டும் என்று மாற்றுவோமானால், ஏலம் எடுத்தவர்கள் பிறகு வழக்கு மன்றத்திற்குச் செல்வார்கள். ஏலம் விடும்போது என்ன நிபந்தனை இருந்ததோ, அதைத்தான் கோர்ட் ஏற்றுக்கொள்ளுமே தவிர, 6 மணி என்று நாம் பின்னாலே வைப்பது அடுத்த முறையில் ஏலம் விடும்போது வேண்டுமானால் அந்த நிபந்தனைகளை வைத்துக்கொள்ளலாம், அதைப் பின்பு மாற்றுவதுதான் சரியாக இருக்குமே தவிர, வேறு எந்த நிலையும் இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காலம் அதிகமாகிவிட்ட காரணத்தாலே, வேறு பல பிரச்சனைகள் இருந்தாலும் சில்லறை வியாபாரத்திலே முகவர்களை நியமிப்பது பற்றி இங்கே எடுத்துச்சொன்னார்கள். கள்ளத்தனமாக ஜின்ஜர் பெர்ரி விற்பனைபற்றி மாண்புமிகு உறுப்பினர் எஸ்.என். இராமசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். தூத்துக்குடியிலே கள்ளத்தனமாக ஜின்ஜர் பெர்ரி விற்பனை அதிகமாக இருக்கிறது என்றும், அதைக் கண்காணிக்கவேண்டும் என்றும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு மனுக்கள் வந்தன. ஆகவே மதுவிலக்கு அமுல் பிரிவின் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு நடவடிக்கைக்காக அது அனுப்பப்பட்டது. இது குறித்து துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள் விசாரித்து அறிக்கை தந்தார்கள். தூத்துக்குடியில் ஜின்ஜர் பெர்ரி விற்பனைக்கு உரிமம் பெற்ற மீனாட்சி மெடிக்கல்ஸ் என்ற மருந்துக்கடை தவறாக நடந்துகொண்டதால், அந்தக் கடை மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. சாராய விலை ஏற்றத்தின் காரணமாக ஹைதராபாத்திலுள்ள ஒரு போலி நிறுவனம் தவறாக தகவல் கொடுத்து, தென்னக ரயில்வே மூலமாக கள்ளத்தனமாக ஜின்ஜர் பெர்ரியை இங்கே இறக்குமதி செய்துள்ளது. இந்த நிறுவனத்தின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இந்த மாதிரி கள்ளத்தனமாக வியாபாரம் செய்வதைத் தடுக்கும் பொருட்டு, ஜாமின் முறையில் சில திருத்தங்கள் செய்யவேண்டியிருந்தது. அதற்காக செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுமாதிரி தயாரிப்பு செய்தவர்களில் இருவர் நீலகிரி மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு, குண்டர்கள் சட்டத்தின்படி ஓர் ஆண்டுக்காலம் தண்டனை கொடுக்கப்பட்டு, அவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு உள்ளனர். அவர்களுடைய உரிமங்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன. இதுபற்றி எங்கெங்கு தகவல்கள் கிடைக்கிறதோ, அதைப்பற்றி தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதையும் நான் இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொன்னாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எடுத்துச் சொல்லுகிறபோது இந்த ராமபிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை வந்த போது இந்த அவையில் அதை முழுவதும் ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சடித்து வந்ததற்குப் பிறகு அவையில் வைக்கப்படும். அவையில் வைத்தப் பிறகு அது பற்றி நாம் விவாதம் நடத்தலாம் என்று நான் சென்ற சட்டமன்றத் தொடரின் கூட்டத்தில் எடுத்துச் சொன்னேன். அதற்கு பிறகு அதனுடைய பிரதிகள் எல்லா உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்கள் எல்லோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றன. அதைப் பற்றி ஒரு நாள் விவாதம் வைக்க வேண்டும் என்றால் அதை வைப்பதற்கும் இந்த அரசு ஆயத்த மாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பார்த்து எல்லோரையும் கலந்து கொண்டு ஒரு நாள் ஒதுக்குவார்களானால் அது பற்றி விவாதித்து உள்ள நிலைமைகளை தெரிந்து கொள்ளலாம்.

ஒன்றை மட்டும் கடைசியாகச் சொல்ல விரும்புகிறேன். மற்ற வைகளை எல்லாம் சொல்வதற்கு நேரம் இல்லை என்றாலும் நான் முதலில் சொன்னது போல் முதல்வருடைய மருத்துவ சிகிச்சை செலவுபற்றி அந்த விவரங்களைச் சொல்லவிரும்புகிறேன். உள்ளபடியே ஒரு முதலமைச்சருக்கோ, அமைச்சருக்கோ குடியரசு தலைவருக்கோ, பிரதமருக்கோ, மற்றவர்களுக்கோ நோய் ஏற்பட்டு அல்லது இங்கேயோ அல்லது வெளி நாடுகளிலோ சிகிச்சை தருகின்ற சூழ்நிலை ஏற்படுமானால் அந்த அந்த மாநில அல்லது மத்திய அரசிற்கு அந்தப் பொறுப்பு இருக்கிறது. அதற்கான செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்ளுவது என்பது ஒரு மரபாகும், நியதி ஆகும். தொடர்ந்து கையாளப்பட்டு வருகிற ஒன்று தான். ஆக அரசே செலவழிப்பது என்பது மாறு பட்ட கருத்து ஒன்று அல்ல, பல்வேறு மாநில முதலமைச்சர்களும் மத்திய அமைச்சர்களிலே சிலரும், குடியரசு தலைவரும் மற்றும் பலரும் போய்விட்டு வருகிறார்கள். அந்த எல்லாம் அந்த அந்த அரசு ஏற்றுக் கொள்வது என்பது நியாயமான ஒன்று தான். இதில் ஒரு தவறும் இல்லை.

ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்தபோது அவர்கள் நோய்வாய்ப்பட்டு அமெரிக்காவில் சிகிச்சைப் பெறுவதற்காக சென்று அவர்கள் திரும்பி வந்த போது சில லட்ச ரூபாய்கள் அது குறித்து செலவு ஏற்பட்டது. இங்கே வந்த உடனே அவர்கள் எவ்வளவு செலவு ஆகியது என்று கேட்டபோது, இதை அரசுக்கு சுமையாக வைக்க நாம் விரும்பவில்லை; என்னைப் பொறுத்து ஏற்பட்ட இந்த செலவு அரசின் சுமையாக அமைய வேண்டாம் என்றும் இதை என்னுடைய தம்பிமார்களே திரட்டித் தந்து விடுவார்கள் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவுபட கூறியதற்கு இணங்க அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த





உறுப்பினர்களும், ஆதரவாளர்களும், அமைச்சர்களும் அத்தனை பேரும் சேர்ந்து அந்த நிதியைத் திரட்டி எவ்வளவு செலவு ஆகியதோ அதை அரசுக்குக் கொடுக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அந்த முறையிலே தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அவர்களைப் பின்பற்றி வருகிற சூழ்நிலையை ஒட்டி இங்கே வந்த உடனே எவ்வளவு செலவு ஆகியது என்ற போது அன்று ஏற்பட்ட செலவையும் கணக்கிட்டுச் சொன்னோம், அதற்கு பிறகு பில்கள் வந்து கொண்டு இருக்கும்போது அந்த செலவுகளும் வளர்ந்து கொண்டு இருக்கின்றன. கடைசியாக ஜூன் மாதம் 25 ஆம் தேதி வரையில் இந்த அரசுக்கு ஏற்பட்ட செலவுகளை மட்டும் நாங்கள் கணக்கிட்டு வந்து இருக்கிறோம்.

இதற்கு பிறகு எங்கிருந்தாவது தப்பி தவறி—பெரும்பாலும் வராது என்று நான் கருகிறேன்—வந்தாலும்கூட அந்தச் செலவை யும் ஏற்றுக் கொள்ளுகிற நிலையில் தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. இப்போது 25 ஆம் தேதி வரையில் ஆன செலவு என்று அரசுக்கு வந்து இருக்கிற கணக்கின்படி எடுத்துச் சொன்னால் 96 லட்சத்து தொண்ணூறு ஆயிரத்து முன்னூற்று எழுபத்தி ஆறு ரூபாய் ஐந்து காசுகள் ஆகும்.

ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர் களே, மக்கள் என்னிடத்தில் காட்டுகின்ற பரிவின் அடையாளமாக அவர் அடிக்கடி எடுத்துச் சொல்லுவது போன்று தன்னுடைய ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகள் இதனுடைய பணத்தை திரட்டித் தருவார்கள் என்று எடுத்துச் சொன்னதற்கு இணங்க கழக தோழர்களும் சரி, கழக ஆதாரவாளர்களும் சரி, கழகத்திற்கு அப்பாற் பட்டு இருக்கிற பொது மக்களும் சரி, மற்றவர்களும் சரி தாராளமாக மனம் உவந்து நிதிகளை தந்தார்கள். அந்த நிதிகளுடைய அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களே நிதி அமைச்சர் என்ற முறையில் என்னிடம் அதற்கான காசோலையை தொண்ணுத்து ஆறு லட்சத்து தொண்ணூறு ஆயிரத்து முன்னூற்று எழுபத்தி ஆறு ரூபாய் ஐந்து காசுக்கான காசோலையை அரசுக்கு தரும்படி கொடுத்து இருக்கிறார்கள். அரசுக்கு செலுத்துகின்ற நிலைமை இருக்கிறது. அதனுடைய தன்மைகளைப் பற்றி பல்வேறு பத்திரிகைகளில் பல்வேறு நிலைமைகள் வருவதன் காரணமாக விளக்கி விடுவது நல்லது தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எழுப்பியதுபோல் இருக்கின்ற நிலைமைகளை உள்ள நிலைமைகளை தெளிவுப்படுத்தி விடுவது சந்தேகத்திற்கு அல்லது வேறு வகைகளுக்கு இடம் இருக்க முடியாது. எனவே இவ்வளவு செலவா? அவ்வளவு செலவா என்று கேட்டும் எழுதியவர்களும் கூட உண்டு. ஆனால் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது இது வரையில் ஏற்பட்ட செலவு தொண்ணூத்து ஆறு லட்சத்து தொண்ணூறு ஆயிரத்து மூன்னூற்று எழுபத்தி ஆறு ரூபாய் ஐந்து காசுகள் தான்.

இதிலே அப்போலோ மருத்துவ மனையில் சிகிச்சைக்காக மட்டும் அங்கே எடுத்துக் கொண்ட ரூம்களுக்கு தொலைபேசி செலவு, மருந்து செலவு இந்த ஒரு மாதத்திற்கு மேல் பயன் படுத்திய வகையில் ஏற்பட்ட செலவு 1 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் தான். அப்போலோவைப் பொறுத்த வரையில் இந்த ஒரு மாத காலம் அங்கு இருந்ததன் காரணமாக ஏற்பட்ட செலவு ஒரு லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் தான். ஏதோ பல லட்சம். பல கோடி என்று பல பேர் பத்திரிகையில் எழுதி யிருக்கிறார்கள்.

அமெரிக்க மருத்துவ சிகிச்சையாக டாக்டர்கள் அங்கு இருந்து வந்தது, முதன் முறையாக வந்தது, அதற்கு பிறகு இங்கிருந்து மாண்புமிகு முதலமைச்சரோடு பல டாக்டர்கள் சென்றது, பல டாக்டர்களில் சில பேர் திரும்ப வந்து, மறுபடியும் சென்றது; மறுபடியும் டாக்டர் கானு அவர்கள் ஜப்பானிலிருந்து இங்கே வந்தது; முதன் முறையாக வந்தது; மற்றும் இரண்டாம் முறை யாக வந்தது; அவரும் இன்னொரு டாக்டரும் சேர்ந்து வந்தது; டாக்டர்களைப் பொறுத்த வரையில், சிகிச்சை செய்தவர்களைப் பொறுத்த வரையில், நர்சுகளைப் பொறுத்த வரையில், உடன் சென்றவர்களைப் பொறுத்த வரையில்; ஏற்பட்ட செலவுகளைப் பொறுத்த வரையில், டாக்டர்கள், அமெரிக்க டாக்டர்கள்; ஜப்பான் டாக்டர்கள் அவர்களைப் பொறுத்து வந்தது; இங்கே தங்க வைத்தது; அங்கே நம்முடைய டாக்டர்கள் போய் கிட்டத் தட்ட 3 மாத காலம் அதாவது நவம்பர் 5ஆம் தேதி இங்கிருந்து சென்றார்கள், பிப்ரவரி மாதம் 4 ஆம் தேதி இங்கே திரும்பி னார்கள்; அவ்வளவு காலம் அங்கே இருந்தார்கள். அதற்கான செலவு எல்லாம் சேர்த்து மொத்தத்திலே எல்லாவற்றிற்கும் சேர்த்து ஆனது 31 லட்சத்து 41 ஆயிரம் ரூபாய்.

(பிற்பகல் 2·00)

அமெரிக்க டாக்டர்கள், ஜப்பான் டாக்டர்கள் வந்து போக மட்டும், ஏற்பட்ட-விமானத்தின் மூலம் ஏற்பட்ட செலவு 5 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய். அமெரிக்காவிலே இருக்கிற ப்ருக்ளின் மருத்துவமனையிலே ஏற்பட்ட மருத்துவச் செலவு மட்டும் 31 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய். இந்த 31 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் அமெரிக்க மருத்துவ மனையிலிருந்து மருத்துவ அறைகளுடைய வாடகை, மருந்து, சிகிச்சை, அதற்கான செலவு தான் 31 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய்; 5 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் தான் அமெரிக்கா, ஜப்பான் டாக்டர்கள் வந்து போக ஏற்பட்ட செலவு.

இந்திய டாக்டர்கள் முதல்வருக்கு உதவியாகப் போக, வர அமெரிக்காவில் தங்க ஏற்பட்ட செலவு 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய்; ஜப்பான் டாக்டர்களை சிங்கப்பூரிலிருந்து அழைத்து வர தனி விமானம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் காரணமாக,





அதற்கு கானு என்ற டாக்டரையும், அவருக்கு உதவியாக இருந்த டாக்டர்களையும் இங்கே கூட்டிக் கொண்டு வருவதற்கு கிட்டத் தட்ட 300 பேருக்கு மேல் உட்காரக்கூடிய விமானம்—ஆனால் அவர்கள் இரண்டு பேரை மட்டும் உடனடியாக காலை 6 மணிக்குள் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் பேரில், இந்திய அரசு பேருதவி புரிந்து, இந்திய வெளிநாட்டுத் துறை அமைச்சரும் அதற்குப் பேருதவி புரிந்து, அங்கே இருக்கின்ற வெளிநாட்டினுடைய உறவுக்கு ஆலோசனையாக இருக்கிற ஜி. பார்த்தசாரதி அவர்களும் பேருதவி புரிந்து, இரவு 3½ மணி வரையிலும் விழித்திருந்து, ஏற்பாடு செய்து, தனி விமானம் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதற்கான செலவு 10 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய். முதல்வர் அமெரிக்கா போக, தனி விமானம் ஏற்பாடு செய்யப் பட்டு, அதிலே வைக்கப்பட்டிருக்கிற கருவிகள், படுக்கை மற்ற எல்லாம் சேர்ந்து, அமெரிக்காவுக்கு போய்ச் சேருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய 31 இலட்சம் ரூபாய்.

அந்தத் தனி விமானம் இங்கேயிருந்து பலரையும் ஏற்றிக் கொண்டு அமெரிக்காவுக்குப் போய்த் திரும்புவதற்கு ஏற்பட்ட செலவு. கடைசியிலே பம்பாயிலிருந்து அவர்கள் திரும்பி வரும் போது, பம்பாய் வரையிலும் தான் ஏர் இந்தியா விமானம் வரும். ஏர் இந்தியா விமானத்திலே அவர்கள் வந்ததன் காரணமாக, அவர்களைக் கீழே இறக்கி, வேறு ஒரு விமானத்தில் ஏற்றி, எல்லோரும் வருகிற விமானத்தில் கொண்டு வருவதில் சங்கடம் ஏற்படும் என்ற காரணத்தால், பம்பாய் வரையிலும் ஏர் இந்தியா விமானம் வந்தது. அந்த ஏர் இந்தியா விமானத்திற்குரிய கட்ட ணத்தைச் செலுத்தித்தான் அத்தனை பேரும் வந்தார்கள்.

ஆனால் பம்பாயிலிருந்து சென்னைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மட்டும், அவர்களைச் சேர்ந்தவர்கள் மட்டும் அழைத்துக் கொண்டு வரப்பட்டதன் காரணமாக, அந்த தனி விமானத்திற்கு 12 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவு,

அதைத் தவிர, இங்கே வந்த டாக்டர்கள் மற்றவர்களுக்கு அவ்வப்போது நினைவுப் பரிசுகளாக வழங்கிய செலவு 33 ஆயிரம், இவைகள் எல்லாம் சேர்த்து, 96 இலட்சத்து 90 ஆயிரத்து 376 ரூபாய் ஆகியிருக்கிறது.

ஆகவே, இவை முழுவதையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பொதுமக்களும், கழகத் தோழர்களும், கழகத்திற்கு அப்பாற்பட்டவர்களும், மற்றவர் களும் பொதுவாகவே தந்திருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்; நன்றி தெரிவிக்கப்பட வேண்டியவர்கள்.

அந்த வகையிலே இந்த அரசுக்கு செலுத்தப்பட்டிருக்கிறது. இனி இதைப் பொறுத்து, அவரைப் பொறுத்து, மருத்துவ சிகிச்சையைப் பொறுத்து, ஏதேனும் அதிகச் செலவு வருமானால், அதையும் செலுத்திவிடலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

அந்த வகையிலே இந்தச் செலவினங்கள் ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டுத்தான் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி நேரம் ஆகிவிட்டதன் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல்வேறு யோசனைகள், மற்றவைகளுக்கெல்லாம் அந்தந்தத் துறையினர் தனிக் கவனம் செலுத்தி, அவற்றை நடைமுறைப்படுத்தி, நிலைமைகளை சீராக்குவதற்கான முயற்சியை மேற்கொள்வார்கள் என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை வெட்டாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது : இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 2. மாநில ஆயத்தீர்வைத் துறை.

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், கோ. வீரய்யன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

''மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,35,27,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மானியக் கோரிக்கை எண்: 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ள பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ;





''மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ், ரூ. 28,10,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 4-7-1985 காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்,

பின்னர், பேரவை பிற்பகல் 2·05 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

238. தர்மபுரி மாவட்டத்தில் மாம்பழங்கள் கொள்முதல் செய்வதை கட்டுப்படுத்துவது குறித்து, வேளாண்மைத் துறையின் 18-1-1985ஆம் நாளிட்ட 58ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1959ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

239. 1974ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்ட நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்திற்குச் சொந்தமான வண்டிகளுக்கு வரி விதிப்பு குறித்து உள் (போ.1) துறையின் 16-4-1985 ஆம் நாளிட்ட 932-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 11/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

240. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

144. கோரிக்கை எண். 9-நிதி நிறுவனங்கள் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

145. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முதலாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

146. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1978-79-ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை (தமிழ்)

147. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் தொழில் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறு வனங்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை (தமிழ்).

148. 1985-ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசா ரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்டமுன்வடிவு, (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1985).

149. தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் பின் இணைப்பு 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் பட்டியல் குறித்த அறிவிக்கையில் திருத்தங்கள் (5-6-1985ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.)

சென்னை 600 
136412

V2:1 ,31 N85
N85 . 1.31